ஓம்

திருவருள் முன்னிற்க.

சமரசஞானதீபம்

இஃது

திருநெல்வேலி பிரமசமாஜத்தலைவர்

P. M. கைலாசம்பிள்ளை

அவர்களால்

இயற்றப்பெற்றது.

திருநெல்வேலி டவுண்

ஆரியப்பிரகாசினி அச்சாபீசில்

பதிப்பிக்கப்பெற்றது.

1921

இதன்விலை அணா 8.

முகவுரை.

இத்திருநெல்வேலி நகரின் கண்ணே, 1905-ம் ௵ செப்டெம்பர்மீ 13உ 'பிர்மசமாஜம்' என்னும் தேவோபாசனசபை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இச்சபை ஏற்பட்டு இப்பொழுது 16 ஆண்டுகளாயின. இதற்கிடையில் பிரம சபைக் கொள்கைகளை அறிய விரும்பிய சிலர், "இக்கொள்கைகளை விளக்கிக்காட்டும் புஸ்தகம் தமிழில் இருந்தால் தருக" வென்று கேட்டார்கள். அத்தகைய புத்தகம் தமிழில் இல்லாததால் அக்குறையை நிறைவேற்றும்பொருட்டு இவ்வுரை நூல் இயற்றப்படலாயிற்று.

இந்நூலில் கண்ட விஷயங்களில் இரண்டாவது அதிகாரத்தில் உள்ள விஷயம் பிர்ம சமாஜத்தின் ஓர் ஆண்டு நிறைவிழாக் கூட்டத்தில் என்னால் உபந்நியசிக்கப்பட்டு பின்னால் துண்டுப் பத்திரிகையில் அச்சிடப்பெற்றிருந்தது. 3-வது அதிகாரத்தில் பிர்மசபைக் கொள்கைகள் இவையெனக் குறிக்கப்பட்டிருக்கின்றன. 4-வது 5-வது அதிகாரங்களிலுள்ள விஷயங்களும் துண்டுப் பத்திரிகைகளில் அச்சிடப்பெற்றிருந்தன. 6-முதல் 11-வரை உள்ள அதிகாரங்களில் கண்ட விஷயங்கள் இந்நூலின் முற்றுப்பேறு கருதியே எழுதப்பட்டன. இவற்றுள் சில ௸ சபையின் ஆண்டு நிறைவிழாக்களில் வாசிக்கப்பட்டன. 12-வது அதிகாரத்தில் கண்ட விஷயமும் பிர்ம சபையின் ஆண்டு நிறைவிழாவொன்றில் வாசிக்கப்பட்டது. சபையில் வாசித்தபடியே இதில் அச்சிடப்பெற்றிருக்கிறது.

முதலாவது அதிகாரத்தில் கண்ட பிர்மசமய வரலாறானது இந்நூலுக்கு முகமாக முன்வைக்கும்பொருட்டே, எனது நண்பரும் திருநெல்வேலி பிர்மசமாஜத்தின் ஓர் அங்கத்தினருமான திருத்தருப்பூண்டி தமிழ்ப்பண்டிதர் S. ரத்தினம்பிள்ளையவர்களால் எழுதப்பட்டு ௸ சபை ஆண்டு நிறைவிழாவொன்றில் வாசிக்கப்பெற்றது. இப்பண்டிதரவர்களுக்கு எனது நன்றியறிவு கடமைப்பட்டுள்ளது.

இனி இந்நூல் முழுவதும், எனது நண்பரும் ஷை சமாஜத்தில்ஒருவருமாகிய முன்னீர்ப்பள்ளம பொ.ஈசுரமூர்த்தியாபிள்ளையவர்களால் பார்வையிடப்பட்டு வேண்டும் சீர்திருத்தங்கள் செய்யப்பெற்றிருக்கின்றன. இவர்களுக்கு எனது நன்றியுணர்வு உரியதாயிருக்கின்றது.

இவ்வாறு பலதருணங்க்ளில் எழுதப்பட்டிருந்த பல விஷயங்களையும் ஒன்றாகச்சேர்த்து "சமரச ஞானதீபம்" என்னும் பெயரிட்டு ஒரு புத்தகமாக அச்சிட்டு வெளியிடலுற்றேன். இந்நூலை வாசிப்போர், குற்றங்களைந்து குறைபெய்து வாசித்து குணங்களைக கொள்ளுமாறு எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

திருநெல்வேலி
1921-நவம்பர்.

P. M. கைலாசம்பிள்ளை.

பொருள் அடக்கம்.

அதிகாரம்.	பொருள்.	பக்கம்.
1	பிரம சமய வரலாறு	1
2	அரும்பு, மலர், காய், கனி.	16
3	பிரம சமயக் கொள்கை.	23
4	கடவுள்.	25
5	மக்கள் உயிர்.	39
6	கடவுள் வழிபாடு பாகம் I.	52
7	கடவுள் வழிபாடு பாகம் II.	61
8	சமய நூல்.	121
9	முத்திநெறி.	130
10	கடவுள் நீதியுடையவர்.	137
11	முத்தி நிலை.	142
12	தேவோபாசனை.	150

பிழை திருத்தம்.

பக்கம்	வரி.	பிழை.	திருத்தம்.
2	6	அறிவானிகள்	அறிவாளிகள்
3	24	அனையில்	அறையில்
5	5	தேவந்திரர்	தேவேந்திரர்
5	6	ஒல்காவளர் பிறையாயது	ஒல்கா ஏ்ளர்பிறை யாயது
10	18	மூழுவதும்	முழுவதும்
12	3	சைத்தனியர்	சைதன்னியர்
12	19	கொண்வடும்	கொண்டும்
15	14	பிரதிக்கியை	பிரதிக்ஞை
30	1	பழுக்கழுண்டாகி	புழுக்களுண்டாகி
36	7	கடவுளிருது	கடவுளிருந்து
39	24	கண்டபடில	கண்படில்
42	27	வெருந்தேக	வெறுந்தேக
45	3	விருத்திபாகி	விருத்தியாகி
45	32	ரசதவா	ரசவாத
47	10	பள்னிக்கூடம்	பள்ளிக்கூடம்
49	15	மேற்சொல்லாது	மேற்செல்லாது
52	11	இவ்வுவுலகில்	இவ்வுலகில்
69	27	உபாசனோ	உபாசனை
73	29	வைத்து மட்டும்	மட்டும் வைத்து
74	24	உடம்மை	உடம்பை
76	8	உட்பட்டு	உட்படுத்தி
77	9	வயோதிகளான	வயோதிகரான
93	8	ஜலத்தை விட்டுமட்டும்	ஜலத்தை மட்டும்விட்டு
96	8	ஒப்பிக்கிறதென்றும்	ஒப்பிக்கிறதென்னும்
96	33	நினைக்க	நம்ப
111	16	செய்தமாந்திருக்கும வாறுபோல்	செய்தமர்ந்திருக்கும் ஆறு போல்
111	22	நட்டகல்லு பேசுமோ	நட்டகல்லுப் பேசுமோ
118	2	நின்ருள்வடிவாகுமே	நின்னருள் வடிவாகுமே
123	20	சிருஷ்டிக்கப்பட்டன எனவும்	சிருஷ்டிக்கப்பட்டன எனவும் சில்நூல்கள் அநாதிஎனவும்
124	27	கடவுளே ஒரு......	கடவுளே மானிடவடிவு எடுத்து நின்று ஒரு........
128	5	அருளப்பெற்ற	அருளப்பெற்று
128	6	இச்சமப	இச்சமய
132	9	போஷீப்பு	போஷிப்பு

பக்கம்	வரி.	பிழை.	திருத்தம்.
138	17	வருகிருள்	வருகிருன்
145	13	போதாதானுல்	போதாதானுல்
146	2	மயங்கிச் கொள்கிற	மயங்கிக்கொள்கிற
147	29	பழகிபடழகிப்	பழகிப்பழகி
147	31	பிள்ளேகளரக	பிள்ளேகளாக
149	20	முதிர்ந்த்	முதிர்ந்த
155	23	சிலா	சிலர்
163	24	செய்பவேண்டியது	செய்பவேண்டிய
165	31	நிறுத்தவேணும்	நிறுத்தவேண்டும்
167	19	படிக்கிறதென்றும்	படிக்கின்றனவென்றும்

இதில் அவசியமான திருத்தங்கள் மட்டும் செய்யப்பெற்றுள்ளன. குறியிடுகளில் தவறுதலான குறை மிகை, சில மெய்ப்புள்ளியின்மை முதலியபிழைகள் திருத்தப்படுவதில் அத்துணைப் பயன் எய்தாமை நோக்கி விடப்பட்டன.

ஓம்.

திருவருள் முன்னிற்க.

அதிகாரம் 1.

பிரம சமய வரலாறு.

"இவ்விய லுலகே யெண்குண நிலையம்
செவ்விய வகமே சிவமுறை பீடம்
பழியறு வாய்மை யழிவுறாப் பதிநூல்
உழுவ லன்பே யுறுதிகொட் டுணையே
தன்னய மறுப்பே பன்னுவை ராக்கியம்
இறைவனோ டிணங்கி யிருத்தலே முத்தி
நம்புமின்! நலவழி நாடுமின்!! என்ன
அம்புவி மாந்தர்க் கறைந்தனர் நன்னூல்
அறிந்துயர் பிரமத் தனுகியோர் மன்னே"

இன்னில வுலகத்திற பண்டைக் காலமுதல் அறிவின் விர்த்திக்குத் தக்கவாறு பலவகைச் சமயங்களுமத தத்தம் கொள்கைகளில் பெரிதும் மாறுபட்டுக்கொண்டு வருகின்றன வென்பதை யுலகசரித்திரங்கள் முறையிட்டுக்கொண்டுவருகின்றன. அங்ஙனே நம் நாட்டிலும் பண்டைய இருஷிகளாலும் கூறப்பட்டிராத விக்கிரகாராதனை முதலிய போலிவணக்கங்களை மறுத்து புத்தர், நானக்கர், சைத்தன்னியர், கண்ணுடைய வள்ளல், முதலிய வான்றோர் தத்தம் கொள்கைகளை நிலைநாட்டியுள்ளார். ஆயினும் அறியாமையாலோ மற்றெவ்வித காரணத்தாலோ பின்னர் பிறழ்ந்தன. தற்காலத்தில் ஆரிய சமாஜம் பிர்மஞான சங்கம் (Theosophy) போன்ற சில் சங்கங்கள் நம் இந்துமதத்தை சீர்திருத்தி வருகின்றன. இவை போதாதெனத் திருவுளம் குறிப்பித்தாங்கு இராஜரிஷியெனப் பெயர்பெற்ற இராஜா இராம மோகன இராயர் என்

னும் மஹானால் உண்மை நெறியைப் பிரவசனஞ்செய்ய தற்காலத்தில் இப்பிரம சமயமும் வெளியாயிற்று. இவ்வாற்றால் தற்காலம் பெரிய மாறுதலையும் அறிவு விளக்கத்தையுங் காண்கின்றோம். இதற்கு முன் எக்காலத்தும் காணுதற்கரிதாய மத, ஜனாசார, இராஜாங்க, கைத்தொழின்முறைகள் பெரிதும் சீர்திருத்தப்பட்டு விளங்குகின்றன. முன்னாளிலேயே அறிவாளிகளால் யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க சமயம் ஒன்று ஏற்படுத்த வேண்டிய முயற்சிசெய்தும் பயன்பெறாதிருப்பவும் திருவருளால் இச்சமயம் ஒன்றே யாவரையும் ஒன்று படுத்தி வருகின்றது. கீழ்த்திசையினின்றும் மேல்த் திசையினின்றும் வருகின்ற நாகரீகம் என்னும் இரு பெருநதிகள் இமயச்சாரலில் ஒன்றாயதுபோல இச்சமயம் ஒன்றே ஜன சமூகத்திற்கு உண்மையும் பரிசுத்தமும் நிறைவும் பெற்ற நாகரீகத்தை யுண்டாக்கி ஜாதி, மதம், அந்தஸ்து, முதலிய வற்றால் கட்டப்பட்ட அஸ்திவாரமில்லாத அரண்களைத் தகர்த்து, எல்லாத் தேசங்களிலுமுள்ள ஆண் மக்களும் பெண் மக்களும் வித்தியாசமின்றி சிருஷ்டிகர்த்தாவும் பொதுத் தந்தையும் ஆய ஒன்றான மெய்க்கடவுளை மான சீகமாகவணங்க வெல்லா மதங்களினுடைய உண்மைகளையும் வெளிப்படுத்தி நம் இராஜா இராம மோகன இராயர் சற்குரு அல்லது தீர்க்கதரிசியெனப் பெரும் புகழ்பெற்றனர்.

இவர், வங்கநாட்டில் இராதா நகரத்து ஜமீன்தாரும், வைஷ்ணவப் பிராமண குலதிலகரும், இருஷி பரம்பரையிற் சார்ந்தவருமான இராமகண்ட ராயருக்கும் தாரணிதேவியாருக்கும் திருப்புதல்வராய் 1774-ம் வருஷத்தில் அவதரித்து, இளம் பிராயத்தே, மகமதிய நூலாராய்ச்சியைப் பெற்றனர். பின்னர் கிருஸ்துவரின் விவிலிய முதனூலையாராய கிரேக், ஹீப்ரு, முதலிய பாஷைகளைக் கற்றும், காசிசென்று நான்கு வேதங்களை ஆராய்ந்தும் விக்கிரகாராதனை முதலிய சில சடங்குகள் பயனில் சாதனங்களென்வுணர்ந்து அவை ஒழித்து ஒழுகியதால் தாய்தந்தையரால் வெறுக்கப்பட்டு உண்மையையே தன் இலக்ஷியமாய்க்கொண்டு இடையே சூழ்ந்த பெருந்துன்பங்களையுங் கவனியாது 16 பிராயத்திலேயே

வீட்டைவிட்டு வெளியேறி திபெத்துச்சென்று ஆங்கு புத்தமதத்தைக் கற்றுணர்ந்து வல்லவராயினர். இங்ஙனமே மதவிஷயமாய்ப் பன்னாடுகளுஞ் சுற்றியதால் ஹிந்து, மகமதிய, யூத, கிருஸ்தவ, புத்த, மதங்களில் வல்லவராயினர். பதினாறு பாஷைகளிற் பண்டிதராய் விளங்கினர். பின்னர் 1814ம் வருஷம் நாற்பதாவது வயதில், தான் ஆராய்ந்தறிந்த உண்மைக்கொள்கைகளை உலகத்தாருக்கு அறிவுறுத்த, வருமானம், காலம், தேகசுகம், முதலியவைகளைக் கவனியாது கல்கத்தாவில் பதினாலு வருஷங்கள் தங்கி, பத்திரிகைகள் மூலமாயும், பிரசங்கங்கள் வாயிலாயும் வெளிப்படுத்தினர். இவனை யறியாது, வலிய போருக்கிழுத்த இந்து கிருஸ்துவ சகோதரர்களுக்கு அவரவர்களின் வேத கிரந்தங்களின் மூலமாய் உண்மையைத் தெளிவுறுத்தி, மிக்க பிரயாசையால் "மக்கள் (ஜனசமூகம்) ஒன்றே, பதியும் ஒன்றே" எனவும் ஜாதி, சமயம், முதலிய அற்று கடவுளை வணங்கவேண்டுமெனவும் வற்புறுத்தி, அங்ஙனம், வணங்குதற்கு, கல்கத்தாவின் வட பாகத்தில் ஓர் ஆலயம் சமைப்பித்து, 1828௵ ஆகஸ்டுமீ 22உ பிரம சமாஜம் என்னும் சபையையும் ஸ்தாபித்தார். அச்சபையே யின்னும் "ஆதி பிர்ம சமாஜம்" என்னும் பெயருடன் வழங்கிவருகிறது. ஈண்டு பிரதி வாரங்களிலும் ஜாதி, மத, வித்தி பாசங்களின்றி கடவுளை வணங்குதற்கு ஜனங்கள் ஏராளமாய்க் கூடினார்கள். உபநிடதங்களிலிருந்து சில பாகங்கள் வாசிப்பதும் பக்தி பெருக்கும்படியான பாட்டுகள் பாடுவதும், மத உபந்நியாசங்கள் செய்யப்படுவதுமே வழக்கமாயிருந்தது. இவ்வுபாசனைக்கு முன், பிற்பாகத்திலுள்ள அறையில் பிராமணர்களைக்கொண்டு வேதங்கள் ஓதப்பட்டன. அவ்விடத்து, பிராமணர் மாத்திரமே செல்லவிடப்பட்டனர்.

1830௵ ஆகஸ்டுமீ த்தில் (1) தன் பிரேரணையின்பேரில் விலக்கப்பட்ட உடன்கட்டை யேறுதல் அவசியமென்றும், வேத உபநிஷத்துக்களால் ஆமோதிக்கப்பெற்றிருக்கிறதென்றும் கூறி, பிரிவிக்கவுன்சிலுக்கு செய்யப்பட்டிருந்த விண்ணப்பத்தை மறுத்தற்கும் (2) பிரபுக்களின் சபையில் இந்தியாவின் அபிவிருத்தி

விஷயமாய்க் கூறுதற்கும் (3) இங்கிலாந்து தேசத்தாரின் மதக் கொள்கை, நடை, உடை, பாவனைகளை நேரில் அறிவதற்கும் (4) இராஜா என்னும் பட்டத்தை தந்த டில்லி பாக்ஷாவின் விஷயங்களைக் கூறுதற்கும், இங்கிலாந்து சென்று பெரும்புகழ் பெற்று, தன் நோக்கங்களை முடித்து, அன்னாட்டிலும் பிரான்சிலும் மதபோதகஞ்செய்து, இங்கு திரும்புமுன் திருவருட்செயலால் ஜுரத்தால் பீடிக்கப்பட்டு 1833வரு செப்டெம்பர்மீ 27உ பிரீஸ்டல் நகரில் பரமபதமடைந்தனர். அக்காலத்து இச்சமாஜம் இராமச்சந்திர வித்தியாவாகீசரின் ஆதரணையிலிருந்தது. நம் மஹானைப் போன்று, மனங்களைக்கவரும் வேறு மகான் இல்லாததினால் அங்கு வருவதை ஜனங்கள் நிறுத்திவிட்டனர். ஆயினும் வித்தியாவாகீசரோ அங்ஙனம் நில்லாது நாயகன் வரவை நோக்கி நிற்கும் கற்புடை மகளிரைப்போன்று ஏழு வருஷங்கள் தனித்தே உபாசனை செய்துவந்தனர். இடையிடையே சில காலங்களில் ஜனங்கள் கூடுவது தவிர அனேகமாய் தனித்தே உபாசனை செய்துள்ளார். முடிவில் திருவருளால் இவர்க்கு எதிர்பாராத ஒரு உதவிவந்தது. நம் இராஜ ரிஷியின் நேசரும் உடனுளியுமான துவாரகநாத்தாகூரின் திருப்புதல்வர் மகரிஷி தேவேந்திர நாத் தாகூர் அவர்கள் இளம்பிராயத்தே நம் தலைவரின் அன்பிற்கிலக்காக இவர் தன் கொள்கைக்குற்ற துணையாவாரென்பதை நம் தலைவர் முன்னரே தெரிந்துகூறியுள்ளார். ஆயினும் தேவேந்திரர்க்கு வயதுமுதிர்ந்தும் யாதொரு மதப்பற்றுதலுங் காணவில்லை. பிற தனவந்தர்களின் குமாரர்களைப்போன்றே யிவரின் இளம்பிராயமும் கழிந்தது. ஆனால் 1838வரு இவரின் பிதாமஹியின் சடலத்தை எரியிலிட்டபொழுது யாக்கை நிலையாமையையுணர்ந்து கடவுளின் திருவருளை உணர்ந்தார். செல்வம் முதலிய புறப்பொருள்களும் நீர்க்குமிழி யென்றுணர்ந்தனர். அந்நாள்முதல் இவரின் கொள்கைகள் வேறு திரும்பின. அனேக நாள்வரை தியானத்திற்கழித்தனர். தாங்கள் செய்யும் விக்கிரக வணக்கங்கள் உண்மைச் சாதனமல்லவென்றும், ஐம்புலன்களாலும் கடவுள் அறிதரப்படார் என்றும் தெரிந்து, அக்காலத்து, இராஜரிஷியைப் பற்றி வினவி, அவரின் மரணத்திற்காகப் பெரிதும் துக்கித்து,

பிரம சபையின் ஆசாரியராயிருந்த வித்தியாவாகிசரை அழைத்து, அவரின் துணையால் உபநிடதங்களைக் கற்று "தத்துவபோதினி" சபையை ஸ்தாபித்து, இந்துமத பூர்விக கிரந்தங்களை ஆராய்ந்து வந்தனர்.

இத்தேவந்திரரின் உறவினரைக்கொண்டாக்கிய இச்சபை ஒல்காவளர் பிறையாய்து. இராமச்சந்திர வித்தியாவாகிசரை ஆசாரியராகக்கொண்டு அதுமுதல் நிறைவிழாமிக்க விமர்சையாய் நடந்தேறியது. பின்னர் பிரமசபை, தத்துவபோதினி சபையும் தன் அங்கத்தினர்களுடன் சேர்க்கப்பெற்று உபாசனைகள் தவறாது நடைபெற்று கடவுளின் திருவருளாலும் தன் உண்மை நிலையாலும் மிக்கவிர்த்தியடைந்துகொண்டு வந்தது. இராமச்சந்திர வித்தியாவாகிசரும் தன் பிரார்த்தனைகள் ஈடேற்றப்பட்டதென்று களித்தனர்.

இவ்விதம் பிரமசபை, செல்வத்திலும், பக்தியிலும் நிறைந்த தேவேந்திரநாதரின் ஆதரவைப்பெற்றது. இவரின் பக்தி பிரசங்கங்களின் உணர்ச்சியால் அனேகர் இச்சபையின் அங்கத்தினராயினர். இவரும் இச்சபையின் அபிவிர்த்தியை நோக்கி வங்காள மானவ சமூகத்தார்க்கு நல்லறிவு கொளுத்திய "தத்துவ போதினி" பத்திரிகையை பிரமசமயப்பிரசாரகனாக வெளிப்படுத்தினர். மகரிஷி சேருங்காலம் வரையில் இப்பிரம சபையில் சம்ஸ்கிருத நூல் விசாரணையும் வேதசுலோகங்கள் பாடுவதும், உபந்நியாசம் செய்வதுமே வழக்கமாயிருந்தது. தர்மானுஷ்டானபத்திர (Trust-deed)த்தில் ஜாதிவித்தியாசங்களை மறுத்திருப்பினும் வேதபடனகாலங்களில் பிரர்மணர்களோடிருக்க மற்றவர்கள் விடப்படவில்லை. பின்னர் இக்குறைவுகள் சீர்திருத்தப்பெற்று பரிசுத்த ஆஸ்திக சமயமாகவே ஓங்கிவளர்ந்தது. ஆங்கு வழிபாட்டுக்கு வருவோர் ஒரேவிதமான நோக்கங்களைக் கொள்ளாது, குடும்பங்களில் பிரதிமா ஆராதனைக்காரராயுமிருப்பது கண்டு, விக்ரகாராதனை முதலியவற்றை அறவே யொழித்தல்வேண்டி ஓர் சத்தியப் பத்திரம் தயாரித்து, 1843ஆு டிசம்பர்மீ தேவேந்

திரர் இருபது பெயர்களுடன் வித்தியாவாகீசரால் தீக்ஷை செய்விக்கப்பட்டனர். இக்காலமே பிர்மசமயவெழுச்சியாம். நான்கு வருஷங்கட்குப்பின் 1847ம்வூ 767 பிர்மோக்களுடன் சமயம் ஓங்கியது.

தன் மதப்பிரசங்கங்களில் இராஜா இராம மோகனராயர் ஹிந்துக்களுக்கு உபநிஷத்துக்களின் மூலமாய்த் தம்மதத்தை உறுதிப்படுத்தியும் கிருஸ்துவர்களுக்கு விவிலிய நூற்களால் உறுதிபடுத்தியதுமல்லாது நம் சாஸ்திரங்கள் விக்கிரகாராதனையைச் சிறிதும் குறிக்கவில்லையென்பதை வெளிக்காட்ட சில உபநிஷத்துக்களை மூலபாஷையாகிய சம்ஸ்கிருதத்திலும் ஆங்கில வங்காள பாஷைகளில் மொழிபெயர்த்தும் வெளிப்படுத்தியுள்ளார். இதனாற் சிலர் இவர் வேதோபநிஷத்துக்களை தெய்வகிருதமெனக் கொண்டு வேதாந்தத்தை வெளியிட்டுள்ளதாக நினைத்தனர். பின் வேதோப நிஷத்துக்களைப்பற்றி வாதநிகழ இதனை நன்குணருதற்கு தேவேந்திரநாதர் நான்கு சம்ஸ்கிருத பண்டிதர்களை நான்கு வேதங்களை ஆராயுமாறு காசிக்கு அனுப்பி தானும் அங்கு சென்று பண்டிதர்களோடு வாதம் செய்து எல்லா நூல்களும் மனுஷ்ய கிருதமேயெனக்கண்டு அவ்வுண்மையை 1848வூ வெளிப்படுத்தினர். பின்னர் பிர்மசமயக் கொள்கைகள் தெளிவுற "பிர்மதருமம்" என்னும் நூலையும் பிரசுரித்தனர்.

மகரிஷியும் சுற்றுப்பக்கங்களுக்குச் சென்று பல கிளைச் சபைகளை ஸ்தாபித்தும் பல பண்டிதர்களை வெளியூர்களுக்குச் சென்று பிரசங்கிக்குமாறும் அனுப்பினர். இதன் பின்னர் இச்சங்கம் யாதொரு இடையூறுகளுமின்றி ஓங்கிவளர்ந்தது. 1857-ம் வூத்தில் எல்லாம் வல்ல முழுமுதலை உணர்ந்து தியானித்து தன் வாணாளைத் தனித்துக் கழிக்குமாறு மகரிஷி இமயமலைச்சாரலுக்குச் சென்றனர். ஓராண்டு கழிந்தபின்னர் மறுபடியும் பிரம சமயத்திற்குழைக்குப்படி கடவுள் ஆக்கினை எழுந்ததினால், இதை நிறைவேற்றற்பொருட்டு திரும்பிவந்து மிக்க உழைத்தனர்.

இவ்வுபாசனாலயத்தில் செய்யும் பக்திமார்க்கப் பிரசங்கங் கட்கிடுபட்டு அனேகர் அதைச் சார்ந்துழைத்தனர். இவர்களில் பிரசங்க சண்டமாருதமென்னும் பெரும்புகழ் பெற்ற கேசவ சந்திர சேனரும் ஒருவர். இவர் தன் கொள்கைகளை அவலம்பித் தல் கண்டு மகரிஷி அன்புகூர்ந்து தன்பிள்ளையைப் போன்று ஆதரித்துவந்தனர். இவ்விருமகான்களும் ஒன்றுகூட இக்குவ லயமுழுதும் பிரமசமய உணர்ச்சி யெழுந்தோங்கியது. இவர்க ளின் உபந்நியாசங்களால் அனேக ஆயிரவர்கள் இவரைப் பின்பற் றலாயினர். இச்சமய முன்னேற்றத்திற்காய் அனேகர் படிப்பாளி களாயும் பொருள் சம்பாதிக்கக்கூடியவர்களாயுமிருந்தும் சுய நலங்கருதாது போதகர்களாகி தத்தம் உயிரையுங்கொடுக்கச் சித் தமாயிருந்தனர். இங்ஙனம் இவர்கள் ஒவ்வோர் கிராமங்களிலும் பிரம சபைகளை ஸ்தாபித்து பிரம சமய வொளியைப் பரப்பினர். 1864வ௵ கேசவர் சென்னையிலும் பம்பாயிலும் வந்ததின்பயனாக வேதசமாஜமும், பிரார்த்தனா சமாஜமும் முறையே எழுந்தன. வேதசமாஜம் பின்னர் பலமாறுதல் களடைந்து தென்னிந்தியா பிர்ம சமாஜமென்ன சென்னையில் விளங்குகிறது.

கேசவர் பிரமசபையைச் சாரும்வரை பிரமசமயிகள் விக்கிர காராதனையை அறவேயொழித்தாராயினும் ஜாதிவித்தியாசத்தை ஒழிக்கமுடியாதவர்களாயிருந்தனர். கல்யாணம், மரணம், சிரார் த்தம் முதலிய காலங்களிலும் விக்கிரகாராதனை சடங்குகளைக் கைக்கொண்டு வந்தனர். இதுகண்டு கேசவர் வெறுப்புற்று இவைகளை அறவே யொழித்தல்வேண்டுமென வற்புறுத்த, அங் ஙனமே, முதலில் மகரிஷியும் தன் தந்தையின் மரணக் கிரியை களை தன் உறவினரின் நோக்கங்ளையும் கவனியாது பிர்மவிதிப் படி செய்து வழிகாட்டினர். பிறரும் இதைப் பின்பற்றுதிருத்தல் கண்டும் கேசவரும் மற்றுள்ள வாலிப சமூகத்தாரும் இவ்வூக்கம் கொண்டிருத்தல் கண்டு களித்து அவர்களின் எண்ணத்தை அனு சரித்து முதலில் தன் பூணூலை அறுத்தெறிந்து அவர்களை உற்சா கப்படுத்தினர். 1880வ௵ மகரிஷி தன் பெண்ணின் மணத்தை பிர்மவிதிப்படி நடத்தினர். இதன் பின்னா மற்ற பிர்ம விவா ஹங்களும் நடந்தேறிவந்தன.

அனேக நாள்கள்வரை யிச்சபையின் முன்னேற்றம் துரித மாயும் விரிவாயும் இருந்தது. ஆனால் ஆசாரியர்களிற் சிலர் பூணூல் தரித்திருந்ததினால், அவர்களை நீக்கவேண்டுமென்று கேசவர் வற்புறுத்த அவர்கள் வெகுகாலமாயுழைத்து வருவதால் நீக்குதல் கூடாதென்று மகரிஷி மறுக்கவும். வாலிப சமூகத்தார் ஒன்றுகூடி முறையிட்டதினால் நீக்கி, அவர்களுக்கு பதிலாக ஜாதி முதலியவற்றை முழுதும் நீக்கிப் இருவர்களை ஆசாரியர் களாக நியமித்தார். இந்நாளில் தான் வாலிப சமூகத்தார் மறு ஜாதி மணம்புரிய ஆரம்பித்தனர். இதனால் மகரிஷிக்கு மிக்க பயமுண்டாகி, பழைய ஆசாரியர்களையே மறுபடியும் ஆசாரியர் களாக்கினர். இதைக் கேசவர் மறுக்கவும் கேளாது, தாமே பிரம சபையின் அதிகாரியாயும் அச்சொத்துக்களுக்கு உரியராயு மிருந்ததினால், இவர்கள் வசம் விடப்பட்டிருந்த உத்தியோகங்க ளையும் தத்துவ போதினிப் பத்திரிகையின் விசாரணையையும் பிடுங்கிக்கொண்டனர். பின்னர் கேசவரும மற்றுமுள்ள சமூகத் தாரும் பிரமசபையொன்றேற்படுத்தி மகரிஷியோடு ஒன்றாக இணைந்தாரேனும் பயன்படாது 1866ஆ பாரத வருஷ பிர்மசமா ஜம் என்னும் பெயருடன் ஒரு புதுச்சபையை ஸ்தாபித்து, மிகுந்த ஊக்கத்துடனும் தைரியத்துடனும் வளர்த்து, இந்துமதச் சீர்திருத்தத்தையே முக்கிய லக்ஷியமாய்க்கொண்டிருந்தார்கள். இச்சமய அபிவிர்த்திக்காக துண்டு பிரசுரங்களும் புத்தகங்களும் ஏராளமாய் வெளியிட்டனர். 1870ஆ கேசவர் சில சிநேகிதர் களுடன் இங்கிலாந்து சென்று பிரபுக்களால் மரியாதையுடன் வரவேற்கப்பெற்று இவ்வுணர்ச்சியை ஆங்கும் பரவச்செய்தனர். இச்சபையும் இடையே பல கொடிய அவஸ்தைகளைப் பெற்றதாயி னும் எம்மத அறிஞரும் ஒப்ப விளங்கிற்று. தேவேந்திரரின் சபையோ இந்து சமய ஆராய்ச்சியையே செய்துவந்தது. கேச வரோ எல்லா மதங்களையும் சமரசப்படுத்துமாறு எல்லா மதங்க ளிலுமுள்ள உண்மைகளை ஆராய்ந்து ஒரு நூல் வெளியிட்டும், சமஸ்கிருத வரிவடிவிலுள்ள பிர்மசமய நூல்களை வங்காள வரிவ டிவில் உருவகப்படுத்தியும் உதவினர். பிரார்த்தனையின் அவசிய மும் பயனும் யாவரும் உணரும்படி செய்து குடும்ப ஜெபமும்

தனி ஜெபமும் செய்து உய்யுமாறு உணர்த்தினர். பிர்ம விவாஹம் நியாயம் என்பதையும் மணமகளுக்கு 14 வயதிற்கும் மணமகனுக்கு 18 வயதிற்கும் குறைந்து விவாஹம் செய்யக் கூடாதென்பதையும் வற்புறுத்தி மிக்க பிரயாசையால் 1872ஆு 3வது ஆக்டை கவர்மெண்டாரிடமிருந்து பெற்றனர்.

இச்சமாஜத்திலும் சில அமிதவாதிகள் தோன்றி கேசவரிடத்துண்டாகிய சில குற்றங்களை வெளிப்படுத்திக்கொண்டிருந்தனர். அக்காலத்து 1878ம்ஆு பிர்ம சமூகத்தார் முழுதும் ஆச்சரியப்படும்படி கேசவரின் மூத்தமகளுக்கும் கூச்பிகார்தேசத்து ராஜகுமாரனுக்கும் கல்யாணவேற்பாடுகள் நடந்தேறிவந்தன. கேசவரினல் கொண்டுவரப்பட்டு பிர்மசமயிகளால் ஆமோதிக்கப்பட்ட விதிக்கு குறைந்த வயதினர்களாகவே மணமகனும் மணமகளும் இருந்தனர். அன்றியும் மணமகன் பிர்மசமயத்தைச் சார்ந்தவனுமல்லன். மணமும் அவ்விராஜாங்கத்திற்குரிய விக்கிரகாராதன சடங்குகளின்படி நடத்த வேற்பாடாயிருந்தது. இது பிர்மசமயக் கொள்கைக்கு விரோதமென்பதையும் இதை நிறுத்த வேண்டியது அவசியமென்பதையும் வற்புறுத்தி பல சமாஜங்களிலிருந்தும் அறிவாளிகளிடத்திலிருந்தும் கடிதங்கள் சொரிந்தன. இவையொன்றையும் பொருட்படுத்தாது கூச்பீகாருக்கு சென்று மணமுடித்து வந்தனர். இவர் திரும்பியதின்பின் இம்மணத்தால் எழுந்த தங்கள் வருத்தத்தை வெளிப்படுத்தவும், முன்னுள்ள அவரின் குற்றங்களை வெளிப்படுத்தவும். இவரை ஆசாரியரினின்றும் விலக்கவும் பாரதவருஷ பிர்மசமாஜத்திலேயே ஓர் சபை கூட்ட அமிதவாதிகள் ஏற்பாடுசெய்தனர். கேசவரோ ஆங்கு அச்சபை கூட்டப்படாதபடி தடுத்தனராயினும் கேசவரை ஆசாரியரினின்றும் விலக்கியதாக ஓர் முடிவுசெய்துவிட்டனர். இவர்களின் முடிவை ஓர் பொருட்படுத்தாது போலீஸாரின் உதவி கொண்டு தன் பீடத்தைக் கைக்கொண்டனர். இதனல் மற்றவர்கள் கோபமுண்டு இவரை வெறுத்து சாதாரண பிர்மசமாஜம் என்ற ஓர் சபையை ஸ்தாபித்து எக்காலத்தும் யாதொரு கெடுதலும் உண்டாகாதபடி ஏற்பாடு செய்தனர்.

1878ஹு மேமீ கல்கத்தா டவுன் ஹாலிலே அனேக சபையாரின் உதவியால் இச்சாதாரண பிர்மசமாஜம் ஸ்தாபிக்கப்பட்டது இச்சபை ஒருவரின் ஆளுகைக்குட்படக் கூடாதென்பதை யோஜித்து பிரதிநிதிச்சபையாரின் ஆளுகைக்குட்படவேண்டுமெனவும் வெளியூர்ச் சபைகளின் பிரதிநிதிகளும் அங்கத்தினர்களாயிருக்கவேண்டுமெனவும் ஏற்பாடுசெய்துகொள்ளப்பட்டது. இச்சமாஜம் ஒன்றே ஆஸ்திகக் கொள்கைகளை யாதொரு இடையூறுமின்றி வெளிப்படுத்தத்தக்க சபையாகத் திருவருள் உதவி புரிந்தது. 1880ஹு இச்சமாஜத்தின் உபாசனமண்டபம் கல்கத்தாவின் நடுவில் ஸ்தாபிக்கப்பட்டது. கேசவரும் அவரைச் சார்ந்தோரும் இதனால் தளர்வுறாது முன்னிலும் பன்மடங்கதிகமாக ஊக்கங்கொண்டிந்நாட்டின் எல்லாப் பாகங்கட்கும் பிரசாரகர்களை அனுப்பினர், தங்கள் லெளகீக வழக்கங்களில் அனேக வினோத விழாக்களைக்கைக்கொண்டனர். 1880ஹு தன் ஆலயத்தின் பேரை மாற்றி "நவவிதானம்" என்னும் பேர் சூட்டி 12 பிரசாரகர்களைத் தன் சபையின் வேதபாரகர்களாக (Apostles) பெயர்சூட்டி ஒழுங்குசெய்தனர். எக்காரணத்தாலோ திருவருள் இவர்பால் தன் ஆக்ஞையை முழுவதும் செலுத்தாது 1884-ம்ஹு ஜனவரிமீ அழைத்துக்கொண்டது. அவர் ஏற்படுத்திய முறைகள் ஒருவாறு தவறினதுபோல் காணப்படினும் அச்சபையின் அங்கத்தினர் ஒவ்வொருவரும் காட்டும்ஊக்கத்தினால்நடைபெற்றுவருகின்றது. இம்மகான்பேரில் எவ்வளவு குற்றங்களை சுமத்தியபோதிலும் இச்சமயத்தை இவ்வளவு நிலைமையில் ஆக்கினதற்காக ஒவ்வொருவரும் என்னாளும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள்.

சாதாரண பிர்மசமாஜமோ ஜீவகாருண்யத்தையே தன் இலக்காய்க்கொண்டு உழைக்கின்றது. இதனால் இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு சபையும் அதன்பால் அன்புபாராட்டித் தாயகமாய்க் கொள்ளுமாறு, மதச் சீர்திருத்தத்திலும் ஆசாரச் சீர்திருத்தத்திலும் முதன்மையாக இன்னாள் விளங்குகிறது. இப்போதுதான் இச்சமயம் என்றும் அழிவுறாத உன்னத நிலைமை அடைந்துவருகின்றது. தற்காலம் விசேஷமாய் வங்காளம், பம்பாய், வடசர்க்கார் முதலிய வட்டாரங்களில் விசேஷமாய் பரவிவருகிறது.

சென்னையில் நடந்த காங்கிரஸில் தலைமை வகித்த ஸ்ரீ ஆனந்த மோகன் போஸ், சீமை யிந்தியா சபஸ்தான சபையில் அங்கத்தினராயிருந்த ஸ்ரீசர், கிஷ்ண கோவிந்தகுப்தர், இந்தியா கவர்ன்மெண்டு சிரேஷ்ட தேசாதிபதியவர்களுடைய சபையில் ஓர் அங்கத்தினராயிருந்தவரும், தற்சமயம் பீஹார்ஒரிசா கவர்னராயிருக்கிறவரும் ஆகிய ஸ்ரீ S. P. சின்ஹா, ஸ்காந்த சக்தி சாஸ்திரத்தில் பூலோகத்தில் சிறந்த பண்டிதராகிய ஜெகதீச சந்திர பாஸ், இரசாயன சாத்திரத்தில் நிபுணரான பிரபுலாசந்திரராய், பிரபல கவிவாணரும், நாடகாசிரியருமான ரவீந்திர நாததாகூர், பம்பாய் ஹைகோர்ட் நீதிமான்களான மகாதேவகோவிந்தரானடே, ஸ்ரீசர் கணேச நாருயண சந்திரவர்க்கர் K. C. S., ஸ்ரீசர் Dr. ராமகிஷ்ணகோபால பந்தர்க்கர், K. C. S., கூச்பிகார் தேசமன்னர், பீட்டாபூர் மகாராஜர், ஸ்ரீமகாராஜா கோடே நாருயண கஜபதிராவ், ராவ்பகதூர் வீரேசலிங்கம் பந்துலு. ஸ்ரீமான் ருஜகோபாலசாரியார், பாரிஸ்டர் இராமசாமி ராஜு. நாடகாசிரியரும் நீதிமானுமாகிய ஸ்ரீமான்சைதை—காசிவிஸ்வநாத முதலியார், பண்டித சிவநாத சாஸ்திரியார் M. A. ஹேம்சந்திர சர்க்கார் M. A. போன்ற பிரபல பட்டங்களைப் பெற்ற பல நம்நாட்டு அறிஞர்கள் இச்சமயத்தைச் சார்ந்து உழைத்து வருகின்றனர். மேலும் ஐரோப்பா அமெரிக்கா முதலிய மேல்நாட்டு அறிஞர் பலர் ஏகேசுர கிறிஸ்தவரா (Unitarian Christians) யிருக்கின்றனர். அவர்களின் சமயக்கொள்கையும், பிரமசமயக்கொள்கையும் ஒன்றேயாம். இச்சமயம், கடவுளால் நேரில் சொல்லப்பட்டதாகக் கூறுகிற எந்த சமய நூல்களையும் ஏக ஆதாரமாகக் கொள்ளாது, கடவுள் நமது உயிர்க்குயிராயும் அறிவுக்கறிவாயும் நின்று, அவர் நமக்கருளியிருக்கிற அறிவு (Intellect) மனச்சாக்ஷி (Conscience) அன்பு (Affection) ஞானக்கண் (Religious sense) ஆகிய நான்கு அகக்கண்கள்வாயிலாக உணர்த்தும் உணர்ச்சியாகிய சகஜ ஞானத்தை ஆதாரமாகக்கொண்டு, தேசபேதம், சமயபேதம், பாராட்டாது சகல நூல்களிலுமுள்ள உண்மைகளையும் கைக்கொள்ளுகிறது. சிலர், இச்சமயம், இராஜா இராம மோகன இராய

னால் ஸ்தாபிக்கப்பட்ட நூதனமதமாகக் கொள்ளுகிறார்கள். அந்தோ! ஈதறியாமையே!! அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் போன்ற சைவாசாரியர்களும், இராமானுஜர், சைதன்யர்போன்ற வைஷ்ணவாசாரியர்களும், கிருஸ்து, மகமமது ஜோராஸ்தர் போன்ற பல சமயாசாரிகளும் தத்தம்மத சித்தாந்தமாகக்கொள்ளுகிற "கடவுள் ஒருவரே, அவரே யுலகத்தைப் படைத்துக் காத்து வருபவர், அவரே யாவர்க்கும் பொதுத்தந்தை" என்பதையே தன் சித்தாந்தமாயுங்கொண்டு, அதனால் பெறப்படுகிற, மானவசமூகத்தார் சகோதரர், என்பதையும், சாதிசமயங்கள் கூடாதென்பதையும், கடவுளை உள்ளன்போடும் உண்மையோடும் வணங்கல்வேண்டுமென்பதையுங்கூறி, அங்ஙனம், இச்சமயம் ஒழுகும்படி செய்கிறது. இதன் மற்றக்கொள்கைகளும் இதிலிருந்தே பெறப்படுகின்றன. அதுவுமல்லாது; பதிநிச்சயம் என்னும் உளதோ, அன்றேல் சமயமுமுளதாதலின், இந்துமதத்தில் இடையே அறியாமையாலோ, வஞ்சத்தாலோ, புகுத்தப்பட்ட தீயகொள்கைகளை நீக்கி ஒழுகவேண்டுமென்பதே, இதை ஸ்தாபித்தோரின் நோக்கமென்பதை அவரின் பிரமாணங்களைக் கொண்டும், மற்றும் அறிவாளிகளின் அபிப்பிராயங்களைக்கொண்டும் இனிதுகாட்டுவாம்.

இராஜா இராம மோகன ராயர்:—

எனது விவாதத்திற்கு ஆதாரமாகக்கொண்ட பிரமாணங்களெல்லாம், பிராமணருடைய மதத்துக்கு விரோதமானதல்லாமல் அதற்கு விரோதமாக நடத்தும் தற்கால குச்சிதக்கொள்கைகளைப் பற்றியேயாம். பிராமணர்கள் செய்யும் விக்கிரகாராதனை யானது அவர்களுடைய பிதுராதி பெரியோர்களுடைய அனுஷ்டானத்திற்கும், அவர்கள் மகா பரிசுத்தமெனவெண்ணிக் கொண்டாடி வரும் புராதன கிரந்தங்களுக்கும் சத்பிரமாணங்கட்கும் விரோதமானவைகளென்றும் எடுத்துக்காட்ட வந்ததேயன்றி வேறல்ல. (Raja's works P. 481) நான் பதிப்பித்த எந்த கிரந்தங்களிலும் நான் செய்த சர்ச்சைகளிலும், நமது இந்து மதத்திலில்லாத

ஏதோ ஒரு புதுமையான ஏகீஸ்வரமதத்தை ஸ்தாபிக்கவந்தவ னென்றும் அல்லது சீர்திருத்துவோ னென்றும் சொன்னதே யில்லை. அன்றியும் நான் இதுவரையில் பதிப்பித்த கிரந்தங்களில் நம் முன்னோர்களாகிய இந்துக்களுடையஉண்மையான மதமானது ஏகீஸ்வர மதமென்று பிரபல பிரமாணங்களினால் தெரிவித்திருக் கிறேன். இந்த உண்மை தற்கால படிப்பாளிகளான பிராமணர் களுக்கு ஸ்பஷ்டமாகத் தெரிந்த விஷயம். (A Defence of the Theism P. 106).

மகரிஷி தேவேந்திரநாத தாகூர்:—

1. பிர்மம் ஒன்றே ஆதியிலிருந்தது, வேறொன்றும் இல்லை

2. அது நித்யமாயும், ஞான ஸ்வரூபமாயும், அந்த மற்ற தாயும், மங்கள ஸ்வரூபமாயும், சுதந்தரமுள்ளதாயும், உருவற்ற தாயும், இரண்டற்று ஏகமானதாயும், சர்வ வியாபியாயும், சர்வ நியந்தாவாயும், சகலத்திற்கும் ஆதாரமாயும், சர்வஞ்ஞத்வமாயும் சர்வ சக்தியுடையதாயும், துருவமானதாயும், பூரணமானதாயும், இணையற்றதாயும் இருக்கிறது.

3. அந்த ஏகபரமாத்மாவை உபாசிப்பதினாலேயே இகபர சுகத்தையடையலாம்.

4. அதனிடத்தில் அன்பு வைப்பதும், அதற்கு பிரியமான காரியங்களைச் செய்துவருவதும், அதை உபாஸிப்பதாகும்.

மேலேகாட்டிய பிரம சமய சித்தாந்தத்தின் முக்கிய நான்கு பிரமாணங்களை, வேதோபநிஷத்துக்களை ஆராய்ந்து தெளிந்து, நம்பி, அதை என்து சமயக்கொள்கையாயங்கீகரிக் கிறேன். (பிர்மதர்ம க்ரஹணம்)

இராஜ நாராயணபோஸ்:—

பிர்ம சமயத்தாருடைய ஆஸ்திகமானது, சாக்ஷாத் ஜெகதீஸ் வரன் ஒருவனையே நேரில் வணங்கவேண்டுமென்னும் ஆரியவேத

உபநிஷத்துக்களில் கண்ட பிரமாணங்களைக்கொண்டே ஸ்தாபிக்கப் பெற்றது. (Adi Brahmo Samaj P. 4)

பிர்ம சமாஜமானது ஆதி இந்து ஆஸ்திகமத சித்தாந்தம். அது இந்து சமயத்தில் மத்தியகாலத்தில் நூதனமாக நுழைகக்கப்பட்ட குத்சித கொள்கைகளைக் கண்டித்து நமது இந்துமதத்தைச் சீர்திருத்துவதே அதன் நோக்கம். (Adi Brahmo Samaj P.15)

பிர்மானந்த கேசவ சந்திரசேனர்:—

ஓ! இந்துக்களே!! சந்தோஷமடையுங்கள்!!!

ஏனெனில், நீங்கள் பல்லாண்டுகளாக விட்டுப்பிரிந்த பரமபிதா மறுபடியும் வருகிறார். அப்பரமாத்மாவை அடையும் வழி நமது பலபுராண இதிகாசங்களுக்கிடையே சுத்தமாயும் சூக்ஷமமாயும் இருக்கிறது. இந்துக்களுடைய கட்டுக்கதைகளென்னும் இருட்டில் புதைக்கப்பட்டிருக்கும் தத்வார்த்தங்களில் மறைந்திருக்கும் ஈஸ்வரனின் சத்யம் வெளியாகி ஆச்சரியமடைகின்றோம். (Life & Teachings of K. C Sen P. 377)

பண்டித சிவநாத சாஸ்திரியார். M. A:—

பிர்ம சமாஜத்தை ஒரு புதுமதமாகவும், ஒரு புது சித்தாந்தமாகவும், நடைபெற்றுவர வேண்டுமென்ற எண்ணம் இராமமோகனர் கொண்டவரல்லர். பரமபிதாவாகிய ஜகதீஸ்வரனை சகலரும் சமரசமாகத் தொழவேண்டுமென்பதே அவர் கருத்து (The New Dispensation & Sadarn Brahmo Samaj P. 3.) பரமேஸ்வரனிடத்து வைக்கும் பூரண அன்பாகிய பக்தி மார்க்கத்தில் நாங்கள் நானக், கபீர், துக்காராம், சைதனியர், முதலிய சாதுக்களுடைய சமயத்தைச் சார்ந்தவர்களாவோம். (Indian Messegr January 1906 P, 7.)

பண்டித சீதாநாத தத்துவபூஷணர்:—

பிர்மசமயமானது எல்லாமதங்களிலும் சுருதி யுக்திக்கேற்ற மதமாக இருப்பதோடு நமது தேசத்தின் பலமதங்களிலும் சிறந்த

தேசாசாரமதம். இதுவே நமது நாட்டின் சமரசவேத சன்மார்க்கம் (Indian Messenger August 1906 P. 12).

Hon. Dr இராமகிஷ்ணகோபால பந்தார்க்கர்:—

பிர்மசமயமானது வேதோபநிஷத்துக்களிலும் பகவத்கீதையிலும் சொல்லியிருக்கும உத்தம உத்கிருஷ்ட சித்தாந்தமே (Position of Prarthna Samajams P. 5)

சென்னை வேதசமாஜஸ்தாபகரான ஸ்ரீமான் இராஜகோபாலாசாரியார்.

முதலில் நாங்கள் யாரெனில்:—உங்கள் பிர்மத்தையே எங்கள் தெய்வமாயும், உங்கள் வேதத்தையே எங்கள் சுருதியாயும், உங்கள் தேசத்தையே எங்கள் தாயாயும், உங்கள் வேஷபாஷாதிகளையே எங்கள் சுவரூபசின்னங்களாயும், பெற்று அவைகளின் கௌரவத்தைக் காக்கவேண்டியதை எங்கள் கடமையாக நம்பி, அதற்கு தக்கபடி நடக்கவும், நடப்பிக்கவும், பிரதிக்கினை செய்து கொண்டவர்களே நாங்கள் (Thatwabodini Vol. I. P. 1.)

இன்னும் இதைப்போன்ற சத்பிரமாணங்கள் ஏராளமாயிருப்பினும் விரிப்பின் பெருகுமென அஞ்சி இத்துடன் நிறுத்துவாம்.

அதிகாரம் 2.

அரும்பு, மலர், காய், கனி.

1. ஆன்மபக்குவம் திடீரென்று எய்தல் அரிது. படிப்படியாய்த்தான் செல்லல்வேண்டும். ஆகையால் ஆன்மபக்குவம் அடைதற்கு ஒவ்வொரு சமயத்திலும் வெவ்வேறு வழிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. உலகவிஷயமான தொழில்களிற் பயின்று தேர்ச்சியடைய எத்தனையோ வருஷங்கள் வேண்டியிருக்கின்றன. அப்படியானால் பேரின்ப நிலையைப்பெற எவ்வளவு நீடித்தகாலம் வேண்டியதாகும். படிப்படியாய்த்தான் செல்லுதல் கூடும். எத்தனையோ காலம் செல்லும்.

2. சைவசித்தாந்த சாஸ்திரங்களில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பாதங்கள் கூறப்பட்டிருக்கின்றன. முதற்பாதத்தில் புறத்தொழிலால் வழிபடும் வகையும்; இரண்டாம் பாதத்தில் புறத்தொழிலாலும் அகத்தொழிலாலும் வழிபடும் வகையும்; மூன்றும் பாதத்தில் அகத்தொழிலால் வழிபடும் வகையும்; நான்காவது பாதத்தில் கடவுளுடைய குணங்களையும் அவருக்கும் நமக்கும் உள்ள சம்பந்தத்தையும் உள்ளவாறு அறிந்துதெளிந்து வழிபடும் வகையும் கூறப்பட்டிருக்கின்றன.

முதலிற் குறிப்பிட்ட மூன்று பாதங்களின்படி கடவுளை வழிபட்டு அப்படி வழிபடுதலின் பயனாக.

“ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்
டன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே”

என்று மெய்கண்டதேவர் கூறியிருக்கிறபடி, கடவுள்தானே குருவாக நின்று நமக்கு அவர் பிதாவென்றும அவருக்கு நாம்

பிள்ளைகளென்றும் நம்முடைய உன்னதமான நிலைமையை நமக்கு அறிவிக்க நாம் அறிந்து இவ்வித உணர்ச்சியோடு தெளிந்து வழி படுதலே நாலாவது பாதம். இவ்வித வழிபாட்டின் பயன் அரன் கழல் செல்லல்: அதாவது முத்திநிலையடைதல்

3. விக்கிரகாராதனை சரியன்றென்று நினைக்கிறவர்களுக்கு முத்திநிலை அடைதற்பொருட்டுச் சைவசித்தாந்த சாஸ்திரங்களிற் சொல்லுகிற வழிகள் பொருந்தாது. ஆயினும் வேத சாஸ்திரங் களிற் கூறியபடி முதலில் புறத்தொழிலாலும் பின்பு புறத்தொழி லாலும் அகத்தொழிலாலும் அப்பால் அகத்தொழிலாலும் வழி பட்டு பின்பு கடவுளுக்கும் நமக்கும் உள்ள உண்மையான சம் பந்தமின்னதெனத் தெளிந்து வழிபட்டுத்தான் முத்திநிலை யெய் தல்வேண்டும் என்பது யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்கதேயாம்.

4. கிறிஸ்து சமயம், மகம்மதிய மார்க்கம், புத்தசமயம் முதலிய பற்பல சமயங்களில் முத்தியடைதற்குக் கடவுளால் அரு ளப்பட்டதாகப் பலவழிகள் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றிற் சில ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாமலும், மாறாகவும் இருக் கின்றன. ஒவ்வொரு சமயத்திலும் அதனில் கூறியிருக்கிறபடி நடந்தாலொழிய முத்திநிலை கிட்டாதென்றும் சொல்லப்பட்டிருக் கின்றது. உயிர்க்குயிராய்த் தழைத்து நிற்கின்ற பரம்பொருள் ஒன்றுக்கொன்று நேர்விரோதமாயுள்ள பல வழிகளை ஏற்படுத்தி யிருப்பாரா?

5. எச்சமயத்தோர் எக்கொள்கையைக் கைப்பற்றினும் நீதிவிதிகள்சம்பந்தப்பட்டமட்டில் அவர்களுக்குள் மாறுபாடில்லை. "ஒருவரையொருவர்நேசித்து அன்புபாராட்டல்வேண்டும்;சத்திய மாய் நடக்கவேண்டும். கெடுதல்செய்கிறவர்களை ஆசீர்வதிக்க வேண்டும்; இன்னா செய்தாருக்கு அவர் நாண நன்னயம் செய்து விடவேண்டும்" இவ்வித நீதிவிதிகள் சகலசமயத்தோர்களுக்கும் பொதுவிதிகளாக இருக்கின்றன. ஏன் அப்படியிருக்கின்றன? அங்கிங்கென்னாதபடி யெங்கும் பிரகாசமாய் ஆனந்தபூர்த்தியாகி உயிர்க்குயிராய்த் தழைத்து நின்கின்ற பரம்பொருள் மனச்சாட்சி

வாயிலாக இவ்விதிகளை நமக்கு உணர்த்துதலினாலல்லவா? இவ்வி தம் உணர்த்துகிற கடவுள் முத்திநெறியையும் எல்லாருக்கும் பொதுவாக வகுத்துணர்த்தாரா?

"இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதானென்றும்"
"அடிநாயேனைத்தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப்பன்று"
என்றும் மாணிக்கவாசக சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியிருக் கிறார்கள். இவ்விதமாகக் கடவுள் உயிர்க்குயிராராய்த் தழைத்து நின்று இமைப்பொழுதும் நம்மைவிட்டு நீங்காதிருத்தலின் நமக்கு வேண்டியவற்றை நமக்குஉணர்த்திக்கொண்டேயிருக்கிறாரென்பது புலப்படவில்லையா?

நமக்குத் தேகத்தைக் கொடுத்து அத்தேகத்துக்கு வேண்டி யவற்றுள் ஒரு விநாடி நேரமாவது இன்றியமையாத பொருளாகிய காற்றை எங்கும் தாராளமாயிருக்கும்படி கடவுள் செய்திருக்கி றார். இதறகடுத்த அவசியப்பொருளாகிய தண்ணீரை ஏராளமாய் அமைத்துவைத்திருக்கிறார். நமக்கு இடையிடையே வேண்டிய தாயிருக்கிற உணவுக்கும வஸ்திரமுதலியவற்றிற்கும் நாம் வேலை செய்து பெற்றுக்கொள்ளும்படி செய்திருக்கிறார். அவற்றை நம்முயற்சியன்னியில் நமக்குக் கிடைக்கும்படி செய்தல் நினைத்த மாத்திரத்தில் அவருக்கு முடியும். ஏன் அப்படிச்செய்யவில்லை? நம்முடைய ஆன்மகுணங்களாகிய அறிவு, அன்பு, சத்தி யுத்தி இவைகளை நாம் அபிவிர்த்தி செய்யவேண்டுமென்பது அவர் கருத்து. அதற்குரியவிதமாக இவ்வுலகை அமைத்து நாம் முயற் சிசெய்து அபிவிர்த்தியாகும்படி செய்திருக்கிறார். இந்த உலகம் ஒரு பெரிய பள்ளிக்கூடம்.

"அன்பீனும் ஆர்வமுடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு"

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரவர்கள் கூறி யிருக்கிறார்கள். தொடர்புபற்றி இவ்வுலகில் அமைத்துவைத்தி ருக்கிற அன்பு, உலகத்தார் எல்லோர்மீதும் சகோதர வாஞ்சை

யென்று சொல்லப்பட்ட நண்பென்னும் நாடாச்சிறப்பைப் பெறு தற்கு ஏதுவாயிருக்கிறது. முயற்சிசெய்து அறிவை விர்த்தி செய்து, அன்பை வளர்த்துச் சத்தியமாய் நடந்து, ஆன்மபக்கு வத்தை விர்த்திசெய்து கொண்டுவரவேண்டியது நமது கடமை. அதற்கு இந்த உலகம் ஏற்ற பள்ளிக்கூடமாயிருக்கிறது. இவ்வித மாக இவ்வுலகத்தை அமைத்துவைத்திருப்பதையும், நீதிவிதிகளை மாறுபடுதலின்றி யாவரும்ஒப்புக்கொள்ளத்தக்கவிதமாக நமக்குப் புலப்படுத்திக் கொண்டிருப்பதையும் பார்க்கும்பொழுது இமைப் பொழுதும்நம்மைவிட்டுநீங்காதுஉயிர்க்குயிராய்த்தழைத்துநின்று அவ்வவ்வான்மாக்கள்பக்குவத்துக்குத்தக்கபடி அறிவித்துக்கொண டிருக்கிறபரம்பொருள் முத்திநிலை பெறுதற்குரியபாதங்களை யாவ ரும் ஒப்புக்கொள்ளத்தக்கவிதமாக ஏற்படுத்தி நமக்குப்புலப்படுத் தாதிருப்பாரா? ஒன்றுக்கொன்று நேர்விரோதமாயும், கைப்பற்று வோரைத்தவிர, அதைக் கைப்பற்றாதிருக்கின்ற மற்றவர்களின் அறிவுக்குப் பொருத்தமில்லாததாயும் உள்ள பலவழிகளில் ஒன் றைக் கைப்பற்றி முத்தியடையவேண்டுமென்பது அவர் திருவு ளக்கருத்தாயிருக்குமா? நீதிவிதிகளுக்கொப்பந்தம் யரவராலும் ஒப்புக்கொள்ளத்தக்க விதமாக முத்தியடைதற்குரிய வழிகள் ஏற்பட்டுக் கடவுளால் நமக்கு உணர்த்தப்பட்டுவரவில்லையா? இவ் விதம் ஆராய்ச்சிசெய்யின் சந்தேகத்துக்கு இடமின்றி அறிவுக் குப் பொருத்தமாயுள்ள நான்கு பாதங்கள் ஏற்பட்டு அவைகள் நமக்குப் புலப்படுமாறு கிடக்கின்றனவென்று தெளிவாய் விளங் கும்.

1-வது பாதம்:—நீதிவிதிகளின்படி நடத்தலே முதற்பாதம். ஆஸ்திகர்களும், சந்தேகிகளும், நாஸ்திகர்களும் சன்மார்க்க விதி களின்படி நடக்கக் கடமைப்பட்டிருப்பதாக உணருகிறார்கள். அவ்வித உணர்ச்சிக்குக்காரணம் இன்னதென்று யோசியாமலே மதக்கொள்கைகள் விஷயமாய் அபிப்பிராயம் எப்படியிருக்கினும் நீதிவிதிகளின்படி நடத்தல்வேண்டும். இவ்விஷயத்தில் அபிப் பிராய வேறுபாடில்லை. மனிதனென்றிருந்தால் நல்லொழுக்கமி ருக்கவேண்டும். நல்லொழுக்கமில்லாதவன் மனித வர்க்கத்தைச்

சேர்ந்த தேகத்தை அடைந்திருப்பினும் மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவனுகான். ஆதலால் மதவிஷயமான கொள்கைகள் சம்பந் தப்பட்டமட்டில் அறிவுநிகழ்ச்சி இருந்தாலும் அறிவுநிகழ்ச்சி இல்லாவிட்டாலும் அது சம்பந்தமான விஷயங்களில் நமது அபிப் பிராயம் எப்படியிருந்தபோதிலும், நீதிவிதிகளின்படி நடத்தல் வேண்டுமென்கிற உணர்ச்சி ஒவ்வொருவருக்கும் இருக்கிறபடியா லும், இதுவிஷயமாய் யாதொருவிதமான அபிப்பிராய பேதமில் லாதபடியாலும், இவ்வித உணர்ச்சி மதவிஷயமான கொள்கை களுக்கெல்லாம முற்பட்ட உணர்ச்சியாயிருப்பதாலும், இவ்வித உணர்ச்சியின்படி நடத்தலே முதறபாதம்.

2-வது பாதம்:—நீதிவிதிகளின்படி ஒழுகிவருகையில் ஏன் அப்படி ஒழுகல்வேண்டும்? என ஆசங்கை நிகழும். மனச்சாக்ஷி ஒருபக்கம் தூண்ட, மனம் ஒருபக்கமிழுக்கும். இதில் சுயசௌ கரியத்துக்குக் குறைவு நேரிடும. இவ்விதமாக முரணுதல் நேரி டும்காலங்களில், மனம்போன போக்கிற் போகாமல் மனச்சாட்சி யின்படியே தைரியமாய் நடக்க முயலுகையில், மேற்கண்ட ஆசங்கை நிகழும். மனச்சாட்சி எவ்விதமாய் வந்தது? நாமே, உண்டுபண்ணினேமா? மனச்சாட்சிக்கு ஒவ்வாத ஒரு செய்கை யைச் சுயநயம் கருதி ஒருவருக்கும் தெரியாமலும், தெரியக் கூடாதவிதமாகவும் செய்தபோதிலும் சமாதானமின்மையும், வருத்தமும், சுயவெட்கமும் உண்டாவானேன்? என இவ்விதமாக யோசிக்கும்படி நேரிடுகிறது. அப்படி யோஜிக்கையில் நமக்கு மேலான பரம்பொருளால், நீதிவிதிகள் மனச்சாட்சிவாயிலாக நமக்குக் கொடுக்கப்பட்டவைகளென அறிகிறோம். பஞ்சேந்தி ரியங்களால் வெளிப்பொருள்களை எவ்வளவு நிக்ஷயமாய் அறிகி றோமோ, அவ்வளவு நிச்சயமாகக் கடவுளிருப்பையும் அவர் நமக்குக் கொடுக்கும் நீதிவிதிகளையும், மனச்சாட்சி வாயிலாக் அறிகிறோம். ருஜுவில் வித்தியாசமில்லவேயில்லை. வெளிப் பொருள்களின் இருப்பையும் குணங்களையும்பற்றி நமக்குச் சந் தேகமில்லை. அதுபோலவே கடவுளிருப்பையும் அவர்தான் நீதிவிதிகளை நமக்குக் கொடுக்கிறுர் என்பதையும்பற்றிச் சந்தேக மிருக்கவேண்டியதில்லை. இந்த ருஜுவின் தன்மையைப்பற்றி

4-வது அதிகாரத்தில் விவரித்துக் காட்டுவோம். ஆகவே நீதிவிதி களின்படி நடக்க முயலுகையில், அவ்விதிகள் கடவுளால் நமக்குக் கொடுக்கப்பட்ட விதிகளென நாம் அறிகிறோம். அறிவுநிகழ்ச்சி யின்றிக் காரணம் தெரியாமலும், காரணத்தைப்பற்றி யோசியாம லும், நீதிவிதிகளின்படி நடந்துவந்த ஒருவன் இவ்விதிகள் கடவு ளாற் கொடுக்கப்பட்டவையென அறிந்ததும் அவ்வித உணர்ச்சி யோடும், மன ஊக்கத்துடனும், மனச் சமாதானத்துடனும், "நன்மை வெல்லும், தீயன அழிந்துபோகு"மென நம்பிக்கையுட னும் இவ்விதிகளின்படி நடக்க முயலுகிறான். இப்படியொழுகு தலே இரண்டாவது பாதம். முதற்பாதத்தில் அரும்புபோலிருந்த நமதொழுக்கம், இப்பாதத்தில் மலர்போல் விரிந்து நிற்கும்.

3-வது பாதம்:—இரண்டாவது பாதத்திற் குறிப்பிட்டபடி யொழுகி வருகையில் கடவுளுடைய குணங்களைப்பற்றியறியவும் கடவுளுக்கும் நமக்கும் உண்டாகிய சம்பந்தமின்னதெனத் தெரிய வும் விருப்பமுண்டாகும். கடவுளுடைய லட்சணங்களென்ன? கடவுளுக்கும் நமக்குமுண்டாகிய சம்பந்தமென்ன? கடவுள் சர்வ வல்லமையும் சர்வகாருண்யமும் உடையவரா? அப்படியானால் உலகின்கண் நிகழும் துன்பங்களுக்குக் காரணமென்ன? கப்பல் முழுகிப்போவதாலும், பூமியதிர்ச்சியாலும், இன்னும் இவ்வித போன்ற பல காரணங்களாலும், கொடிய துன்பங்களும், உயிர்ச் சேதங்களும், நேரிடுவானேன்? இவ்வுலகத்துக்கு நாம் எதற்காக வந்திருக்கிறோம்? உலகவாழ்வின் பயனென்ன? இவ்வித வினாக்கள் தோன்றி அவைகளுக்குத் திருப்திகரமான சமாதானத்தைத் தேட அறிவு முயலும்; இவ்வித வினாக்கள் தோன்ற அவைகளுக்குத் திருப்திகரமான சமாதானம் வெளிப்படும்வரை திபான்த்திலேயே இருந்துகொண்டிருக்கும்படி நேரிடும். இவ்வினாக்கள் விஷய மாய்ச் சிந்தனைசெய்துகொண்டு அவ்விஷயங்களை யோசிக்குங்கால் நிகழும் மயக்கத்தினால் மனதைப் பதறவிடாமலும், மன அமைதி யின்மைக்கு இடங்கொடாமலும், கடவுளிடத்தில் பூரண விசுவா சம்வைத்து எல்லாம் ஈசன்செயல், நம் நன்மையின்பொருட்டே சகல காரியங்களும் ஈஸ்வரனாற் கூட்டிவைக்கப்படுகின்றன என்ற

நம்பிக்கையுடன், நீதிவிதிகளின்படி ஒழுகலே 3-வது பாதம். மலராய் விரிந்துநின்ற நமதொழுக்கம் பலன்கொடுக்க ஆரம்பித்து, இப்பருவத்தில் காயாய் மாறிவிடுகிறது.

4-வது பாதம்:—மூன்றாவது பாதத்திற்கண்டபடி தியானம் செய்துகொண்டொழுகிவருகையில், இதன் 3-வது அதிகாரத்தில் கண்ட உண்மைக்கொள்கைகள் வெளிப்படும்.

மேற்கண்ட மெய்ஞ்ஞானம் வெளிப்பட்டுக் கடவுளை மெய்யுணர்வாலும் உள்ளன்பினாலும் வழிபட்டு அவர் நமக்கு உணர்த்திபவாறு ஒழுகி அவரையே பற்றிக்கிடந்து, அவரிடத்துப் பிதுர் பத்தியும் மனிதர்களிடத்துச் சகோதர வாஞ்சையும் காட்டி, நமக்கு வரும் துன்பம் நம்மைச் சீர்திருத்துதற்கு வேண்டப்படும் அம்மாத்திரையேயன்றி வரைபறையின்றி நிகழ்வதன்று என, நன்குணர்ந்து, நம் குற்றத்தையுணர்ந்து, வருந்தி, அறவே கைவிட்டு, அறிவிலும் நற்குணத்திலும் தூய்மையிலும் கடவுளோடு ஒன்றுபட்டு ஒழுகுதலே நாலாவது பாதம். இவ்வித ஒழுக்கம், முற்றுப்பெறல் முத்திநிலையாம். 3-வது பாதத்தில் பலன்பட ஆரம்பித்துக் காயாய் நின்ற நமது ஒழுக்கம் இப்பாதத்தில் பழுத்துக் கனியாய் முத்திநிலையைப் பெறும்படி செய்துவிடுகிறது. முதலில் நீதிவிதிகளின்படி நடந்து பின்பு அவைகள் கடவுளாற் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றுணர்ந்து அவ்வுணர்ச்சியோடு நல்லொழுக்கத்திற பழகிப் பின்பு கடவுளுடைய திவ்விய குணங்களையும் அவருக்குநமக்கும் உண்டாகியசம்பந்தத்தையும் அறிய முயன்று அவ்வித முயற்சியில் நிகழக்கூடிய மயக்கத்தினால் மன அமைதி குறையாமல், சன்மார்க்க விதிகளை அனுசரித்தொழுகிப் பின்பு தெளிந்து கடவுளோடு ஒன்றுபட்டு நடத்தலே முத்திநிலையைக் கிட்டும்படி செய்யும் என்பதில் ஐயமுண்டோ? இவ்விதமாய்ப் படிப்படியாய்ச் சென்றாலொழிய முத்திநிலைக்கேற்ற ஆன்மபக்குவம் சித்தித்தல் அரிது. இஃது எல்லாருக்கும் ஒப்பமுடிந்த முறையாம். இம்முத்திநெறியை எல்லாரும் எளிதினுணர்ந்து முத்திநிலையைப் பெறுமாறு கடவுள் கிருபை செய்வாராக.

அதிகாரம் 3.

பிரம சமயக்கொள்கை.

1. கடவுள் ஒருவரே. அவரே உலகத்தைப் படைப்பவர்; அவரே உலகத்தைக் காப்பவர்; அவரே உலகத்துக்கு அருள்பவர்; அவர் ஆன்ம சுவரூபி. அவர் அளவில்லாத ஆற்றலும், அறிவும், அன்பும், நடுவு நிலைமையும், தூய்மையும் உடையவர். அவர் எங்கும் உள்ளவர், என்றும் உள்ளவர், இன்பம் நிறைந்தவர்.

2. மக்கள் உயிர் என்றுமே அழிவில்லாதது; மேன்மேலும் அபிவிர்த்தி அடைந்துகொண்டே செல்லவல்லது; தன் செய்கைகட்கெல்லாம் தானே, கடவுட்கு உத்தரவாதியாயிருப்பது.

3. கடவுளை மெய்யுணர்வாலும் உள்ளன்பாலும் வழிபடல் வேண்டும். கடவுள் வழிபாடு, உண்மையான மன அமைதிக்கும், பேரின்பத்திற்கும் இன்றியமையாதது.

4. கடவுளிடத்தே நாம் செய்யத்தகும் உண்மைவழிபாடாவது, நாம் அவர்க்கு அன்புசெய்தலும், அவர் நமக்கு உணர்த்திய வாறு ஒழுகி வாழ்தலுமேயாம்.

5. கடவுளைக் குறையிரத்தலும், அவரையே பற்றிக்கிடத்தலும், நம் உயிர்க்குயிராய் நம்மோடு அவர் உடனுறைதலை நமக்கு நாமே உணர்ந்து அநுபவித்தலுமே ஆன்ம வளர்ச்சிக்குரிய சாதனங்களாம்.

6. படைப்புப்பொருள் எதுவுமே, கடவுளாகக்கண்டு வழிபடுதற்கு உரியதன்று. அம்மட்டோ! மக்களில், குற்றம் ஒரு சிறிதும் இல்லாதவர் ஒருவருமே இலர்; நூல்களும் அது.. ஆதலால் மக்களில் எவரையும், நூலுள் எதனையும் முத்திபெறுதற்கு ஏற்கும் ஏகசாதனமாகக் கொள்ளலாகாது. ஆனால் யாவர் எது போதிக்கினும், எந்நூல் எதுகூறினும், அவற்றிற் காணப்படும்

மெய்ப்பொருள்களைத் தேசபேதம் சமயபேதம் பாராட்டாது, மிக்க பத்தி சிரத்தையோடு ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

7. கடவுளிடத்தே செய்யப்படும் பிதுர்பத்தியும், மனிதர்களிடத்தே காட்டப்படும் சகோதரவாஞ்சையும், ஜீவகாருண்யமுமே சற்சமய சாரமாம்.

8. கடவுள், நல்வினைக்கேற்ப இன்பத்தையும், தீவினைக்கேற்பத் துன்பத்தையும் அருள்கின்றார்; துன்பந்தருவது நம்மைச் சீர்திருத்துதற்கு வேண்டப்படும் அம்மாத்திரையேயன்றி, வரையறை யின்றி நிகழ்வதன்று.

9. ஒருவர், தம் குற்றத்தைத் தமக்குத்தாமே உணர்ந்து, உண்மையாகவே மனம் வருந்தி, அக்குற்றத்தை அறவே கைவிட்டொழிதலே அக்குற்றத்திற்குக் கழுவாயாம். அறிவினாலும், நற்குணத்தினாலும், தூய்மையினாலும் கடவுளோடு ஒன்றுபடுதலே முத்தியாம். கழுவாய் = பிராயச்சித்தம்.

அதிகாரம் 4.

கடவுள்.

"கடவுள் ஒருவரே. அவரே உலகத்தைப் படைப்பவர். அவரே உலகத்தைக் காப்பவர். அவரே உலகத்துக்கு அருள்பவர். அவர் ஆன்ம சுவரூபி. அவர் அளவில்லாத ஆற்றலும், அறிவும், அன்பும் நடுவு நிலைமையும், தூய்மையும் உடையவர். அவர் எங்கும் உள்ளவர், என்றும் உள்ளவர், இன்பம் நிறைந்தவர்."—பிரம சமயக் கொள்கை.

கடவுள் என்னும் ஒரு பொருள் உளதோ இலதோ என சிலர் சந்தேகிக்கின்றனர். ஆதலின், இவ்விஷயத்தைப்பற்றி முதலில் ஆராய்ச்சி செய்யவேண்டியது அவசியமாகின்றது. வித்தில்லாமல் முளையுண்டாகாது. காரணமில்லாமல் காரியமுண்டாகாது. அவன், அவள் அதுவெனும் மூவினைச் செயலையுடைய இப் பிரபஞ்சம் நடைபெற்று வருகிறதைச் சந்தேகிப்பார் ஒருவருமிலர். இப் பிரபஞ்சமாகிய காரியம் எவ்வித முண்டாயிற்று. இதற்கு ஒரு மூலகாரணம் வேண்டுமென்பது ஆஸ்திகர்களுக்கும் நாஸ்திகர்களுக்கும் உடன்பாடு. இப் பிரபஞ்சமாகிய காரியம் அதற்கு முன்னதாகிய ஒரு காரியத்திலிருந்தும், அது அதற்கு முன்னதாகிய ஒரு காரியத்திலிருந்தும் இப்படியே ஒவ்வொரு முன்னதாகிய காரியமும் அதற்கு முன்னதாகியகாரியத்திலிருந்தும் உண்டாயிற்றென ஆராய்ந்துகொண்டே செல்லுகையில் முடிவுபெறுமல் முன்னொரு காரியத்திலிருந்து காரியப்படாமல் தானாகவே, யாதொருவராலும் காரியப்படுத்தப்படாமல் அனாதியாய் அமைந்துள்ள ஒரு முதற்காரணப்பொருள் இருக்கவேண்டுமென்பது வெளிப்படை. இது ஆட்சேபிக்கத் தக்கதன்று. இவ்வித ஒரு மூலகாரணப்பொருள் உண்டென்று ஆஸ்திகர்களும் நாஸ்திகர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

கடவுள் என்றால் அறிவு முதலிய ஆன்ம குணங்களுள்ள பொருளென நாம் நம்புகிறோம். ஆகவே இந்தப் பிரபஞ்சத்திற்குக் காரணமாகிய முதற்பொருள் கடவுளென்று சொல்லப்படுகிற அறிவு முதலிய குணங்களுள்ள பொருளா? அல்லது அறிவு முதலிய ஆன்ம குணங்களில்லாத ஜடப்பொருளா? என்பதுதான் நாம் ஆராய்ந்து முடிவுசெய்யவேண்டிய விஷயம். இந்த விஷயத்தை ஆராயுமுன் மானிட தேகமாகிய ஒரு அற்புத இயந்திரத்திற்குள் இயங்கிக்கொண்டிருக்கின்றவனாகிய மனிதனென்னும் அறிவுப் பொருளின் குணங்களைப்பற்றி கொஞ்சம் விசாரிப்போம்.

“தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான்” என்ற ஆன்றோர் வாக்கியத்தின்படி மக்களுயிரின் குணங்களைக் கொஞ்சம் ஆராய்ந்துபார்த்தால் இந்தப் பிரபஞ்சத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்ற சக்தி, அல்லது பொருளின்தன்மை நன்கு விளங்கல்கூடும். மக்களுயிராகிய ஜீவாத்மாவின் குணங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்கையில் மனிதனுக்கு அறிவு, (Intelligence) அன்பு (Love) நன்மை தீமை இன்னதென அறியும் பகுத்தறிவு (Conscience) தொழிற்படுத்துஞ் சக்தி (Will power) முதலிய குணங்கள் இருப்பதாக வெளிப்படுகின்றன. இக்குணங்களில் தொழிற்படுத்துஞ் சக்தி (Will power) என்பதைப்பற்றிக் கொஞ்சம் ஆராய்வோம்.

முதல்நாள் முற்றத்திற்கிடந்த ஒரு செங்கல் மறுநாள் மேடையின்மேல் கிடக்கிறது. முதல்நாள் கீழே வைக்கப்பட்டிருந்த ஒரு ஜன்னல் மறுநாள் சுவரில்வைத்துக் கட்டப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. களிமண்ணாகக் காணப்பட்டிருந்த கொஞ்ச மண் கொஞ்ச நேரத்திற்குப்பின் ஒரு குடமாக அமையப்பெற்றிருக்கிறது. ஒரு பக்கத்தில் காலியிடமாகவும் மற்றப் பக்கங்களில் சுண்ணாம்பாகவும், மணலாகவும், செங்கல்களாகவும், கட்டைகளாகவும் கிடந்துகொண்டிருந்ததைப்பார்த்துச் சில காலத்திற்குப்பின் நாம் முதலிற்பார்த்த காலியிடத்தில் நாம் வசிக்கத்தக்க ஒரு வீடு அமையப்பெற்றிருக்கிறதைப் பார்க்கிறோம். இவ்வித காரியங்கள் எவ்வித முண்டாயின. முற்றத்தில் கிடந்த செங்கல் மேடைக்குத்

தானகவே போயிற்ரு? கீழே கிடந்த ஜன்னல் சுவரில் தானகவே போய் அமைந்திருந்துகொண்டதா? களிமண் தானகவே குடமாக அமைந்துகொண்டதா? பலவிதமாய்க்கிடந்த சாமான்கள் தாங்களாகவே நாம் குடியிருக்கத்தக்க வீடாக அமைந்து கொண்டனவா? மேற்கண்ட காரியப்பொருட்கள் தாங்கள் தாங்களாகவே அப்படி அமைந்துகொண்டனவென்று சொல்லுவார் ஒருவருமிலர். முத்தத்திற்கிடந்த செங்கலை ஒரு மனிதனே பேழையிற்கொண்டு போட்டிருக்கவேண்டும். கீழேகிடந்த ஜன்னலை ஒரு மனிதனே சுவரில் வைத்துக்கட்டியிருக்கவேண்டும். களிமண்ணை ஒரு மனிதனே குடமாக அமைத்திருக்கவேண்டும். செங்கல் முதலிய பலவித சாமான்களை மனிதனே ஒரு வீடாகக் கட்டியிருக்க வேண்டும்.

ஆகவே ஒருவிதமாயிருந்த சாமான்களை வேறுவிதமாக மாற்றும்படியான சக்திமனிதனுக்குஉளது. அந்தசக்தியையே தொழிற்படுத்துஞ் சக்தி (Will power) என்று நாம் சொல்லுகிரும். அந்த சக்தியே ஒருவிதமாயிருந்த சாமான் வேறுவிதமாய் மாறுவதற்கு காரணமாயிருக்கிறது. இந்த சக்தியைப்பற்றி இன்னும் சிறிது ஆராய்வோம். மேற்சொல்லிய திருஷ்டாந்தங்களில் வீடு கட்டுவதைப்பற்றி யெடுத்துக்கொள்வோம். வீடு கட்டுவதில் வீட்டை இன்னவிதமாய்க் கட்டவேணுமென்று வீடுகட்டு முன்னமே மனிதன் மனதில் தீர்மானிக்கிருன். அப்பால் வீடுகட்டுவதற்கு உபயோகமாயுள்ள பலவகைச் சாமான்களில் இன்னின்ன சாமான்கள் வேணுமென்று தெரிந்துகொள்ளுகிருன். அதாவது பனங்கட்டை தேக்கங்கட்டை முதலிய பலவகைக் கட்டைகளுள் இன்னின்னவிதமான கட்டைகள் வேணுமென்றும் அப்படியே ஒவ்வொருவகைச் சாமான்களுள் இன்னின்னவிதமான சாமான்கள் வேணுமென்றும் தெரிந்தெடுக்கிருன். அப்பால் இந்தச் சாமான்களைச் சேர்த்துக் கட்டிடமாக அமைக்கிருன். அப்படி அமைப்பதில் படிப்படியாக முதலிற் சுவர்களைக் கட்டிக்கொண்டு அவைகளிற் ஜன்னல்கள் அமைத்து அப்பால் கட்டைகள் பரப்பி இவ்விதமாய்ப் படிப்படியாய்ச் செய்துமுடிக்கிருன். ஆகவே இந்

தத் தொழிற்படுத்துஞ் சக்தியில் ஒரு பொருளைத்தான் செய்யக் கூடிய பலவித மாறுதல்களுக்குள் இன்னவிதமாய் மாறுதல் செய்வதென்று தீர்மானிக்கிறதாகிய அறிவு நிகழ்ச்சியிருக்கிறது. அவ்விதம் நிறைவேற்றும்படியான சக்தியுமிருக்கிறது. ஆகவே நாம் சம்பந்தப்பட்டுத் தொழிற்படுத்தும் காரியங்களுக்கெல்லாம் அறிவு நிகழ்ச்சி சம்பந்தமான சக்தியே காரணமென்று நாம் தெளிவாய் அறிகிறோம். இதைத்தவிர வேறுகாரணத்தைப்பற்றிய அநுபோகம் நமக்கு இல்லவேயில்லை. எந்தக்காரியமும் காரியப்படவேணுமானல் இன்னவிதமாய்க் காரியப்படுத்தவேணுமென்று ஒரு கர்த்தா நினைத்து அந்த நினைப்பின்படி செய்கிற சக்தியே அந்தக்காரியம் காரியப்படுவதற்குக் காரணமாகும். இதைத்தவிர வேறு எந்தச்செயலும் காரணமாகமாட்டாது. முத்தத்திலகிடந்த செங்கல் இன்னேரிடத்திறகுத்தானகவே போகமாட்டாது. அப்படிப்போகுமானலும் குறிப்பிட்ட ஓர் இடத்திற்குப் போகமாட்டாது. ஆகவே முத்தத்திற கிடக்கிற அநேக செங்கல்களில் அல்லது பலவித சாமான்களில் ஒரு குறிப்பிட்ட செங்கலைத் தெரிந்தெடுத்து அதைக் கொண்டுபோய் வைக்கக்கூடிய பலவித இடங்களில் ஒரு குறிப்பிட்ட இடத்துக்குக் கொண்டுபோய் வைக்கும்படியான சக்தியே அந்தக் குறிப்பிட்ட செங்கல் அந்தக் குறிப்பிட்ட இடத்திற்குப் போவதற்குக் காரணமாகிறது. இவ்விதமாய் இன்னவிதமான மாறுதல் செய்யவேணுமென்று தீர்மானஞ்செய்கிற அறிவு நிகழ்ச்சி சம்பந்தமான சக்தியே நாம் அறிந்தமட்டில் எந்தக்காரியத்துக்கும் காரணமாகிறது. இவ்வித ஆராய்ச்சியினல் நமக்குக்கிடைத்திருக்கிற அநுபோகத்தைக்கொண்டு இந்தப் பிரபஞ்சத்தை நாம் ஆராயுங்கால் அறிவு நிகழ்ச்சி சம்பந்தமான சக்தியே (Will power) இந்தப் பிரபஞ்சத்திற்குக் காரணமென்று வெகு தெளிவாய் விளங்கும்.

இந்தப் பிரபஞ்சம் எத்தனையோ விதங்களாகக் காரியப்பட்டிருக்கலாம். அப்பேர்ப்பட்ட அநேக வகைகளுள் இப்பொழுது இருக்கிற ஸ்திதியில் காரியப்படுத்தவேணுமென்று முன்னமே தீர்மானித்து அவ்விதம் நிறைவேற்றியதாக தெளிவாய்த் துலங்

குகிறது. விடுகட்டும் விஷயத்துக்கும் தொழிற்படுத்துஞ் சக்திக்கும் (Will power) உண்டாகிய சம்பந்தத்தை நாம் ஆராய்கையில் தெரிந்தெடுத்தல் (Selection) சேர்க்கை (Combination) படிப்படியாய் நிறைவேற்றல் (Gradation) என்னும் அறிவு நிகழ்ச்சிக் குணங்கள் மேற்படி தொழிலோடு சம்பந்தப்பட்டிருப்பதாக அறிந்தோம். இவ்விதமாகவே இந்தப்பிரபஞ்சமாகிய காரியப் பொருளினும் தெரிந்தெடுத்தல் சேர்க்கை, படிப்படியாய் நிறைவேற்றல் ஆகிய மூன்று அறிவு நிகழ்ச்சிக்குணங்களும் வெகு தெளிவாய் விளங்குகின்றன. இந்த முகாந்தரத்தைத்தான் கடவுள் இருப்பை ருசுப்படுத்துவதற்கு இப்பிரபஞ்சத்தில், குறிப்பிட்ட நோக்கம் வெளிப்படுகிற விவகாரம் (Design Argument) என்று சொல்லுகிறது.

இந்தப் பிரபஞ்சமாகிய காரியப்பொருள் அமைதற்கு உரிய பொருளைக்கொண்டு எத்தனையோவிதமாக மாறுதல்செய்யக்கூடியதில் இன்னவிதமாக இந்தப் பிரபஞ்சத்தைக் காரியப்படுத்தவேணுமென்று முன்னமே தீர்மானித்து அதற்குத்தக்கபடி ஷெ பொருட்களைச் சேர்த்து படிப்படியாய் இந்த அற்புதப் பிரபஞ்சம் காரியப்படுத்தப்பட்டிருக்கிறதென்பதில் ஐயமேயில்லை.

நாம் வசிக்கிற இந்தப்பூமியின் தன்மையைப்பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிற சாஸ்திரிகள் சூரியமண்டலமும் அதைச்சுற்றிவருகிற இந்தப்பூமியும் மற்றக் கிரகங்களும் ஆதியில் அணுக்கூட்டங்களாகவிருந்து ஒன்றுசேர்ந்து சூரியனாகிய ஒரே மண்டலமாக தன்னைத்தானே சுற்றிச்சுழன்றுகொண்டிருந்ததாயும் அப்படிச் சுழன்றுகொண்டிருக்கையில் சிலதுண்டுகள் பிரிவுபட்டு தங்களைத் தாங்களே சுற்றிக்கொண்டும் சூரியனைச் சுற்றிக்கொண்டும் வந்ததாயும் இன்னும் அந்தத் துண்டுகள் சூரியனைச்சேர்ந்த கிரகங்களாகி அப்படியே சுற்றிக்கொண்டுவருகிறதாகவும் அப்பேர்ப்பட்ட கிரகங்களில் இந்தப்பூமி ஒன்றென்றும் இந்தப்பூமி சூரியனைவிட்டுப் பிரிவுபடுங்காலத்தில் அக்கினி கோளமாயிருந்ததாயும் பின்பு வரவரக் குளிர்ந்து சிலபாகம் தரையாகவும், சிலபாகம் தண்ணீராக

வும் மாறி புற்பூண்டுகள் உண்டாகி, பின்பு புழுக்களுண்டாகி, பின்பு உயர்ந்த ஜீவஜந்துக்களுண்டாகி, கடைசியாக மனிதனுண்டானானென்றும், மனிதனுடைய தேகவளர்ச்சிக்கும் ஆன்மவளர்ச்சிக்கும் தகுந்தவிதமாக, இந்தப் பூமி அமைந்திருக்கிறதென்றும் இப்படியே இந்தப் பிரபஞ்சத்திலுள்ள பொருள்களெல்லாம் குறிப்பிட்ட நோக்கம் வெளிப்படும்படியான விதமாக அமைந்திருப்பதாயும் நிர்ணயஞ்செய்திருக்கிறார்கள். இந்த உலகத்துக்கு ஆதாரமாயிருந்த அணுக்கள் ஒன்றுசேர்க்கப்பட்டு முதலிற் புற்பூண்டுகளுண்டாகிப் பின்பு அதற்கு மேலான ஜீவஜந்துக்கள் உண்டாகி கடைசியாக அறிவு, பகுத்தறிவு முதலிய குணங்களுள்ள ஜீவாத்மா வசிக்கும்படியான விதமாக இந்தப்பூமி அமையப்பெற்றிருப்பதைப் பார்த்தால் இந்தப் பூமிக்கு மூலகாரணம் அறிவுப்பொருளாகவே யிருக்கவேண்டுமென்றும் கேவலம் அறிவில்லாத ஜடவஸ்துவாயிருக்க முடியாதென்றும் வெகு தெளிவாய்த் துலங்குகிறது. இன்னும் இந்த உலகத்திலுள்ள பொருட்களை உற்றுப்பார்க்கின் அதற்குக் காரணமாயுள்ள பொருள் அறிவுப் பொருளென்பது பட்டப்பகல்போல் தெளிவாகும். மனித தேகமாகிய அற்புத இயந்திரத்தின் தன்மையைப்பற்றி சற்று யோஜிப்போம்.

இந்தத் தேகமானது மாமிசம், தசை, நரம்பு, கொழுப்பு, எலும்பு முதலியவற்றால் அமையப்பெற்றிருக்கிறது. இந்தத் தேகம் வளருவதற்கும் நிலை நிற்பதற்கும், தேகத்துக்கு வெளியே உள்ள பொருட்கள் உட்கொள்ளப்பட்டு நரம்பாகவும் எலும்பாகவும், மாமிசமாகவும் இன்னும் இந்த தேகத்தில் அடங்கிய பலவிதப்பொருட்களாகவும் மாறவேண்டியதாயிருக்கிறது. இந்தத் தேகத்தில் உட்கொள்ளும் வஸ்துக்கள் இரத்தமாகமாறி அடிக்கடி காற்றினால் சுத்திசெய்யப்பட்டு தேகத்துக்கு வேண்டிய வஸ்துக்களைக் கொடுக்கிறது. இரத்தம் சுத்திசெய்யப்படவேண்டியதற்காக காற்று அவசியம் வேண்டியிருக்கிறது. இந்தக் காற்றை உட்கொண்டு இரத்தத்தைச் சுத்திசெய்யவேண்டியதற்காக இந்தத் தேகத்தில் சுவாசப்பை அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காற்று எது இடைவிடாது வேண்டியிருக்கிறது. அதற்காக நாம்

காற்றுக்குள் வைத்து வசிக்கும்படி இந்த உலகமானது காற்றுப் போர்வையினால் மூடப்பட்டிருக்கிறது. இரத்தம், தேகத்திலுள்ள பல இடங்களுக்கும் செல்லுவதற்காக நீர் கலந்திருக்கவேண்டிய தாயிருக்கிறது. இதற்கும் தேகத்தைச் சுத்திசெய்யவும் தண்ணீர் அடிக்கடி வேண்டியிருக்கிறது. அவ்வித அவசியத்தை உத்தேசித்து தண்ணீர் ஏராளமாய்க் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

நாம் உட்கொண்டு வெளியிடுங் காற்றானது நம்முடைய தேகத்திலுள்ள விஷங்கலந்த காற்றாயிருக்கிறது. இந்தக் காற்று வேறுவிதமாய்ச் சுத்தப்படுத்தப்படாவிட்டால் இந்தக் காற்றே நம்முடைய தேகத்துக்குக் கெடுதலையுண்டாக்கி தேகம்வளர மார்க்கமில்லாது தடுத்துவிடும். இந்த விஷக்காற்றானது புல்பூண்டு முதலியவைகளுக்கு ஆகாரமாக அமைக்கப்பட்டு காற்று நமக்கு வேண்டியவிதமாகச்சுத்தப்படும்படி பலஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. வெளியிலுள்ள ஆகாரங்கள் தேகத்திலடங்கிய தசை, மாமிசம் முதலியனவாக மாறும்படி வெகு அற்புதமாய் இந்தத் தேகம் அமைக்கப்பட்டிருக்கிறது. வெளியிலுள்ள ஆகாரம் உள்ளே செல்வதற்கு முதலில் வாயும் அந்த ஆகாரத்தைமென்று மாப்போலாக்க வாயிற்பல்லும் அந்த ஆகாரத்தை தேகத்துக்கு வேண்டிய சாமான்களாகப் பிரிக்கும்படிக்குள்ள ஓர்வித உமிழ்நீர் ஊறுவதற்கு நாக்கும் அவ்விதம் மாவாக்கப்பட்ட ஆகாரம் இரைப்பைக்குட்செல்ல ஓர்வழியாகிய தொண்டையும் அந்த ஆகாரத்தை ஏற்றுககொண்டு அதை அரைப்பதற்கும் அந்த ஆகாரத்தைப் பிரிப்பதற்கும் ஏற்ற புளிப்புநீர் உண்டாவதற்கும் ஏற்ற ஓர் இரைப்பையும் இவ்விதமாகவே ஷ ஆகாரமானது இரத்தமாகும்வரை இரத்தமாகப் பக்குவப்படுத்தத்தக்க உறுப்புகளும் நாம் உட்கொள்ளும் ஆகாரத்தில் தேகத்துக்கு வேண்டாத சாமான்களை வெளியே போக்கத்தக்க உறுப்புகளும் அமையப்பெற்றிருக்கின்றன. இவ்விதமாகவே இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளையும் பார்த்தால் அந்தந்தவிதமாக அந்தந்தப்பொருட்களை அமைக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் ஒருபலனைக் கருதி

அமைக்கப்பட்டதாக விளங்குகின்றது. இவ்விதமாகவே இந்தப் பிரபஞ்ச முழுவதும் அமைக்கப்பட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது. ஆதலின் இந்தப் பிரபஞ்சத்திற்குக் காரணம் அநாதியாயுள்ள ஜடப்பொருளல்லவென்றும் அறிவு நிகழ்ச்சியுடன் தொழிற்படுத்துஞ் சக்தி (Will power) உடைய கடவுளாகிய அறிவுப்பொருளென்றும் வெகு தெளிவாய் விளங்குகிறது.

இது நிற்க, இந்தப்பிரபஞ்சத்திலுள்ள ஜடப்பொருட்களை நாம் நேராகப் பார்க்கிறோம். கடவுளை நாம் நேராகப் பார்க்கவில்லை. ஆதலின் கடவுள் இருப்பைப்பற்றி நம்புவதற்கு போதுமான ஏது இல்லையென்று சிலர் சொல்லுகிறார்கள். நாம் கண்ணுறகாணாத எத்தனையோ விஷயத்தை நாம் நம்புகிறோம். பூமியின் கவர்ச்சி (Force of Gravity) என்னுஞ்சக்தியை கண்ணுற்பாராதிருந்தும் நாம் நம்புகிறோம்.

ஈதர் (Ether) என்னும் ஒரு பொருளை நாம் கண்ணுற்பாராதிருந்தும் அது பிரபஞ்சம் முழுவதும் பரவியிருப்பதாக நம்புகிறோம். வெளியிலுண்டாகிற சத்தம் காற்று அசைவதினால் நமக்குள் எப்படிச்செல்லுகிறதோ அதுபோலவே ஈதர் (Ether) என்னும் பொருள் அசைவதினால் ஒளி நமக்குப் புலப்படுகிறதென்று சாஸ்திரிகள் நிர்ணயித்திருக்கிறார்கள். ஆகவே நாம் காணாதபொருளை நாம் நம்புகிறதில்லையென்பதுதவறு. வாஸ்தவத்தில் ஜடப்பொருளையாவது நாம் பார்க்கிறோமா வென்னும் விஷயத்தைப்பற்றி நாம் ஆராயுங்கால் ஜடப்பொருளைப்பற்றிய அறிவு அனுமான அறிவேயன்றி உண்மையில் பிரத்தியக்ஷ பார்வை யறிவில்லை யென்று ஏற்படும். அநேகர் இவ்விதம் ஆராய்ந்து ஜடப்பிரபஞ்சமேகிடையாதென்கின்றனர். சிலர் இதைப் பற்றிச் சந்தேகிக்கின்றனர். அவர்கள் அபிப்பிராயத்தின் உண்மை எப்படியிருந்தபோதிலும் ஜடப்பிரபஞ்சத்தின் அறிவு அனுமான அறிவைத்தவிர வேறில்லையென்று வெகு தெளிவாய்த் துலங்கும்.

இதைப்பற்றிச் சற்று ஆராய்வோம். ஒருபொருளைப் பார்க்கிறதென்றுலென்னவென்று கவனித்துப்பார்ப்போம்:—

நம்மெதிரே ஒரு பொருளிருக்கிறது. நமது கண் குருடாயிருந்தாலும் நாம் அந்தப்பொருளைப் பார்க்கமுடியாது. வெளியில் வெளிசசமில்லாவிட்டாலும் நாம் அந்தப்பொருளைப் பார்க்கமுடியாது. ஆகவே சுகமாயுள்ள கண்ணும் வெளியொளியும் ஒரு பொருளைப் பார்க்கிறதற்கு அவசியம் வேண்டியிருக்கின்றன! இனி எவ்விதம் பார்க்கிறோமென்று கவனிப்போம்.

வெளியொளியானது நம் மெதிரேயிருக்கிற பொருளின் பேரில் பட்டு நமது கண்ணிற்ருக்குகிறது. உடனே கண்ணிற்குள்ளே ரெட்டிஞ (Retina) என்னும் ஒரு பாகத்தில் அந்தப் பொருளைப்போல ஒரு படம் உண்டாகிறது. உடனே நம்முடைய கண்ணுக்கும் மூளைக்கும் சம்மந்தமாயுள்ள ஒரு நரம்பு அசைகிறது. இந்த நரம்பு அசைந்து மூளையைத் தாக்கினவுடனே மூளையிலுள்ள வஸ்துக்கள் அசைகின்றன. உடனே ஒரு பொருளைப் பார்த்ததாக நமக்கு ஓர் உணர்ச்சியுண்டாகிறது. நரம்பசைதலும் மூளை வஸ்துக்கள் அசைதலும் வெளிப்பொருளாகுமா. நாம் அறிகிறதெல்லாம் நம்மனதிற்தோன்றிய உணர்ச்சிதான். இதைத்தவிர வேறில்லை.

இதைவைத்து இந்த உணர்ச்சிக்குக் காரணமாகிய வெளிப்பொருளிருப்பதாக அனுமான உணர்ச்சியுணடாகிறது. இது போலவே மறறப்பொறிகளின் வாயிலாகவும் வெளிப்பொருள்களின் தன்மையைப்பற்றி சிற்சில உணர்ச்சிகளுண்டாகிறது. ஆகவே பொறிகளின் வாயிலாக உண்டாகிற வுணர்ச்சிகளெல்லாம் மன உணர்ச்சிகளே தவிர வேறில்லை. இந்த உணர்ச்சிகளை வைத்து நமக்கு வேருன ஜடப்பொருளின் இருப்பைப்பற்றி தீர்மானமாய் நம்புகிறோம். இதைச் சிலர் விவகாரமாய்ச் சந்தேகிக்கினும் நமக்கு வேருயுள்ள ஜடப்பொருளென்பது நமது மனதின் உணர்ச்சியேதவிர வேறில்லையென்று நமக்கெதிரேயுள்ள சுவரின்மேல் போய் முட்டுவார் ஒருவருமிலர். ஆதலின் வெளிப்பொருளுண்மைக்கு ஆதாரம் நமது மனதின் உணர்ச்சியேயாயினும் அந்த உணர்ச்சி போதுமான ஆதாரமெனப் புலப்படுகிறது.

வெளிப்பொருளைப் பிரத்தியக்ஷமாக நாம் பார்ப்பதாக எண்ணுகிறோம். இதுபோலவே கடவுளுடைய இருப்பைப்பற்றி நமக்கு பிரத்தியக்ஷ ஆதாரமிருக்கிறது. நமக்கு வேறாயுள்ள ஜடப்பொருளின் உண்மையைப்பற்றி நாம் நிர்ச்சந்தேகமாய் நம்பலாமானால் கடவுள் இருப்பைப்பற்றியும் நாம் நிர்ச்சந்தேகமாய் நம்பவேண்டியதுதான். இரண்டுக்கும் ருஜு ஒரே மாதிரியாகத்தானிருக்கிறது. கடவுளின் இருப்பைப்பற்றி அப்பேர்ப்பட்ட ருஜு நம்து மனச்சாக்ஷி வாயிலாக நமக்குக்கிடைக்கிறது. இதைப்பற்றி நாம் கொஞ்சம் ஆராய்வோம்.

நன்மை-யின்னது தீமை-யின்னது என்கிற பகுத்தறிவு நமக்கு எவ்விதமுண்டாயிற்று? பொய், கொலை, கள், களவு, காம முதலிய தொழிற்கள், பாதகத்தொழிற்களென்றும், மெய்யுரைத்தல், பரோபகார முதலிய தொழிற்கள், நன்மையான தொழிற்களென்றும், நமக்குண்டாகிற உணர்ச்சிகட்கு காரணமென்ன? சில தொழில்கள் நல்லவையென்று நமக்கு உணர்ச்சியுண்டாவதோடு அந்தத் தொழில்களைச்செய்ய நாம் கடமைப்பட்டிருக்கிறோமென்றும், சில பாதகத்தொழில்களென்று, உணர்ச்சியுண்டாவதுடன், அத்தொழில்களை நாம் செய்யாது விட்டொழிக்கவேணுமென்றும், நமக்கு அன்னியமாக வேறொருவர் இருந்து கட்டளையிட்ட மாதிரி நமக்கு உணர்ச்சியுண்டாவானேன்? ஒருவன் தன் சுயப்பிரயோஜனத்தைக் கருதி மற்றொருவனை வஞ்சிக்கும்போது அந்த வஞ்சகத்தொழிலை பிறர் பாராதிருந்தும பிறர் பார்க்கக்கூடியதாய் இல்லாதிருந்தும் அத்தொழிலை தன் சுயபிரயோஜனத்தைக்கருதி செய்யத்துணிந்தபோதிலும் தான் செய்கிறது தவறு என்ற உணர்ச்சியும், வெட்கமும், திருப்திக்குறைவும் ஏதோ ஒரு கட்டளையை மீறிநடந்ததுபோல் ஒரு உணர்ச்சியும் உண்டாவானேன்? ஓர் நல்ல தொழிலைச் செயயுங்காலத்தில், அது தன் சுயபிரயோஜனத்திற்கு விரோதமாயிருப்பினும் தான் செய்தது சரியென்ற உணர்ச்சியும் சந்தோஷமும் திருப்தியும் உண்டாவனேன்? இப்பேர்ப்பட்ட உணர்ச்சியையும் பகுத்தறிவையும் நாமே உண்டாக்கிக்கொண்டோமா? நமக்கு விரோதமாக அந்த உணர்ச்சி நம்மை

வாட்டுவானேன்? ஒரு செயல் நமது பிரயோஜனத்திற்கு விரோதமாயிருப்பினும் நமக்குச் சந்தோஷத்தையும் திருப்தியையும் கொடுப்பானேன்? இந்த ஆராய்ச்சியை விரிக்கில் பெருகும்.

நன்மை தீமை யென்கிற பகுத்தறிவுணர்ச்சியில் நமக்கு மேலான பரம்பொருள் ஒன்றிருப்பதாகவும், நன்மை-யின்னது தீமை-யின்னது என்பதை அந்த மேலான பரம்பொருளே நமக்கு உணர்த்துகிறதாகவும் அப்படியுணர்த்துவது மாத்திரமன்றி நன்மையைச்செய்யவேணுமென்றும், தீமையை விலக்கவேணுமென்றும், அந்த மேலான பரம்பொருள் நமக்குக் கட்டளை கொடுக்கிறதாகவும், நாம் உணரவில்லையா? பகுத்தறிவுணர்ச்சியில் இவ்வளவும் அடங்கியிருக்கவில்லையா? நரம்பசைதல் காரணமாக நம்முடைய பொறிகளாலுண்டாகிய உணர்ச்சியைமட்டும் வைத்து ஜடப்பொருள்களின் இருப்பைப்பற்றி நிர்ச்சந்தேகமாய் நாம் நம்பலாமானால் நன்மை தீமை யென்ற பகுத்தறிவுணர்ச்சியால் நமக்குத் தெளிவாய் விளங்குகிற பரம்பொருளின் இருப்பைப்பற்றி நாம் ஏன் நிர்ச்சந்தேகமாய் நம்பக்கூடாது? இரண்டுக்கும் ருஜுவில் என்னபேதம்? பொறிகளினுணர்ச்சிமூலமாய் ஜடப்பொருளின் உண்மையை எவ்வளவு நிச்சயமாய் அறிகிறோமோ அவ்வளவு நிச்சயமாக கடவுளின் உண்மையை பகுத்தறிவுணர்ச்சிமூலமாய் அறிகிறோம். ஆகவே ஜடப்பொருள்களை எவ்வளவு பிரத்தியக்ஷமாய் அறிகிறோமோ அவ்வளவு பிரத்தியக்ஷமாகக் கடவுளையும் நாம் அறிகிறோமென்பதில் ஐயமேயில்லை. பகுத்தறிவுணர்ச்சிக்குக் காரணமாயுள்ள கடவுள் தானும் பகுத்தறிவுடையவராகவே யிருக்கவேண்டும். வெறுஞ்சடப்பொருளாகிய மூலகாரணப்பொருள் இவ்வித பகுத்தறிவுணர்ச்சியை நமக்குக் கொடுக்க முடியாதென்பதில் ஐயமுண்டோ?

மேற்கண்ட ஆராய்ச்சியினால் இந்தப் பிரபஞ்சத்திற்குக் காரணமாயுள்ள அநாதி முதற் காரணப்பொருள் ஜடப்பொருளல்லவென்றும் கடவுளென்று சொல்லப்படுகிற தொழிற்படுத்துஞ் சக்தி (Will power) பகுத்தறிவு, முதலிய குணங்களுள்ள பொருளென்றும் வெகு தெளிவாய் ஏற்படுகிறது.

இனி கடவுள் ஒருவரா? பலரா? என்னும் விஷயத்தை ஆராயின் கடவுள் பலரென்று ஆன்றோர் ஒருவருஞ் சொல்லுவாரிலர். இந்தப் பிரபஞ்சத்தின் தன்மையை ஆராயுங்கால் அதற்குக் காரணமாயுள்ள கடவுளின் உண்மை வெளிப்படுகிறபடியால் ஒரு காரணம் போதியதாயிருக்கிறபொழுது பல காரணங்களைக் கொள்ளுதல் சரியன்று. மேலும் இந்தப் பிரபஞ்ச ஆராய்ச்சியில் பல கடவுளிருந்து தொழிற்படுத்துவதாக ஏற்படவுமில்லை; சைவசமய ஆசிரியர்களாகிய மணிவாசகப்பெருமான் முதலிய ஞானிகளும், கிறிஸ்துமத ஸ்தாபகராகிய கிறிஸ்துநாதரும், மகமதியமதஸ்தாபகராகிய நூகமத் பிரபுவும் இன்னும் ஆன்றோர்கள் சகலரும் கடவுள் ஒருவரேயென்று முறையிடுகின்றனர். ஆதலின் இதைப் பற்றி விரித்து ஆராய்ச்சிசெய்ய வேண்டியது அவசியமில்லை.

இது நிற்க, இந்தப் பிரபஞ்சத்திற்குக் காரணமென்னவென்று ஆராய்ச்சிசெய்து அறிவுப்பொருளாகிய கடவுள் காரணமென்று தெரிந்துகொண்டோம். ஆனால் ஷெடி பிரபஞ்சத்தைக் கடவுள் எதிலிருந்து உண்டாக்கினர்; தனக்கு வேறாகிய அனாதிப் பொருளிலிருந்து உண்டாக்கினரா, தன்னுடைய சக்தியிலிருந்தே உண்டாக்கினரா, என்று யோசிக்குங்கால அது நமது மனதுக்கும் வாக்குக்கும் எட்டாத விஷயமாயிருக்கிறது. இவ்விதந்தான் செய்திருப்பாரென்று வரையறுத்துக் கூறும்படி போதுமான ஏதுக்கள் இருப்பதாகவும் தெரியவில்லை. ஆதலால் இவ்விஷயத்தில் அபிப்பிராய பேதமிருக்ககூடியதுதான். ஆயினும் கடவுள் தன் சக்தியிலிருந்தே இந்தப் பிரபஞ்சத்தை சிருஷ்டித்திருக்கக் கூடும் என்ற ஒரு முகாந்திரம் போதியதாயிருக்கும்பொழுது கடவுளைத்தவிர வேறு அனாதிப்பொருள் இருப்பதாகக் கொள்ள வேண்டியது அவசியமில்லையென்று தோன்றுகிறது.

இது எப்படியிருந்தபோதிலும் கடவுள் இந்தப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாயிருப்பது மாத்திரமல்லாமல் இதை ஓர் நிலையில் நிறுத்தாது இடைவிடாது காரியப்படுத்திக்கொண்டே வருகிறபடியால் கடவுள் இந்த உலகத்தை சிருஷ்டித்தது மாத்திரமன்றி இதை இடைவிடாது பாதுகாத்துவருகிறாரென்றும் ஏற்படுகிறது.

ஆதியில் அணுக்களாயிருந்த இந்தப் பிரபஞ்சம் வரவர ஒன்றுக்கொன்று உயர்ந்த நிலைமையைப் படிப்படியாய் அடைந்து நடைபெற்று வருகிறபடியாலும் அப்படி நடைபெற்றுவருவது ஓர் நோக்கம்பற்றியே நடைபெற்றுவருகிறதாக வெளிப்படுகிறபடியாலும் இந்த உலகத்தில் இப்பொழுது மேலான பொருளாயிருக்கிற மக்களுயிராகிய ஜீவாத்மா வரவர நல்லொழுக்கத்தைக் கைக்கொண்டு அறிவில் முதிர்ந்து அன்பிற்பெருகி வளருகிறபடியாலும் இந்த ஆன்ம இலட்சணங்கள் அபிவிருத்தியாகி மக்களுயிராகிய ஜீவாத்மா பேரின்ப நிலையை அடையும்படியே கடவுள் மக்களுயிரை வளர்த்துவருகிறாரென்று தெரியவருகிறது. ஆதலின் கடவுள் அருள்பவர் ஆகிறார். இந்தப் பிரபஞ்சமே அவராயில்லாமல் இந்தப் பிரபஞ்சத்தை இயக்கிக்கொண்டிருக்கிறவராயும், நமது அறிவுக்கறிவாய் நின்று உணர்த்துகிறவராயும் எப்பொருளினும் உள்ளும் புறமுமாய் வியாபித்திருக்கின்றவராயும் கடவுள் இருக்கிறபடியால் அவர் ஆன்மஸ்வரூபி. நமக்கு வெளிச்சங்கொடுக்கிற சூரியனென பெரிய அண்டத்தையும் நாம் வசிக்கிற இந்தப்பூமி உள்பட அதைச்சுற்றுகிற கிரகங்களையும் இதைப்போலவே இந்தச் சூரியனுக்கும் அதிக பிரமாண்டமான (நக்ஷத்திரங்களென்று சொல்லப்படுகிற) எத்தனையோகோடி சூரியன்களையும் அவைகளைச் சுற்றுகிற கிரகங்களையும் இன்னும் மனதிற்கும் வாக்குக்கும் எட்டாத தூரத்தில் ஆகாயத்திலுள்ள சகல அண்டங்களையும் இவ்வித அண்டங்களடங்கிய இந்தப் பிரபஞ்சத்திலுள்ள சகல ஜீவபிராணிகளையும் கடவுள் சிருஷ்டித்து அவைகளைத்தன் ஆக்கினையின்படி நடக்கும்படிசெய்து பாதுகாத்துவருகிறபடியால் அவர் அளவில்லாத ஆற்றலும் அறிவும் உடையவராயிருக்கிறாரென்று ஏற்படுகிறது.

கடவுள் மக்களுயிராகிய ஜீவாத்மாவை நடத்திவருகிற தன்மையை ஆராயுங்கால ஜீவாத்மாக்கள் மேற்சொல்லியபடி நல்லொழுக்கத்தைக் கைக்கொண்டு அறிவில் முதிர்ந்து அன்பிற்பெருகி பேரின்ப வீட்டுக்குத் தகுதியாகும்படி வளர்த்துவருகிறதாய் வெளியாகிறபடியால் அவர் அளவில்லாத அன்பும் நடுவுநிலைமையும்

தூய்மையும் உடையவரென்று ஏற்படுகிறது. அவர் யாவராலும் சிருஷ்டிக்கப்படாமல் தானகவேயுள்ள முதற்காரணப்பொருளாயிருப்பதாலும், இந்தப் பிரபஞ்சமுழுவதும் உண்ணின்று இயக்கிக் கொண்டிருக்கிறபடியாலும், "அன்பே சிவம்" என்று சொல்லும் படியான விதமாக ஜீவாத்மாக்களை அவர்கள்மீதுள்ள கருணைபற்றி பேரின்ப நிலைக்குக் கொண்டுவருவதே தனக்குத் தொழிலாக வைத்துக்கொண்டு சகல பொருள்களையும் இயக்கிக்கொண்டிருப்பதாலும் அவர் எங்கும் உள்ளவர் என்றும் உள்ளவர் இன்பம் நிறைந்தவர் என்றும் ஏற்படுகிறது.

மேற்கூறியவற்றுல் "கடவுள் ஒருவரே. அவரே உலகத்தைப் படைப்பவர்; அவரே உலகத்தைக் காப்பவர்; அவரே உலகத்துக்கு அருள்பவர்; அவர் ஆன்ம ஸ்வரூபி; அவர் அளவில்லாத ஆற்றலும், அறிவும், அன்பும், நடுவுநிலைமையும், தூய்மையும் உடையவர். அவர் எங்கும் உள்ளவர், என்றும் உள்ளவர், இன்பம் நிறைந்தவர்". என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் வெகு தெளிவாய் விளங்குகிறது.

அதிகாரம் 5.

மக்களுயிர்.

"மக்களுயிரென்றுமே அழிவில்லாதது. மேன்மேலும் அபிவிர்த்தியடைந்துகொண்டே செல்லவல்லது. தன் செய்கைகட்கெல்லாம் தானே கடவுட்கு உத்திரவாதியாயிருப்பது." பிரம சமயக் கொள்கை.

மக்களுயிரென்னும் விஷயத்தைப்பற்றி யோஜிக்குங்கால், அது உளதோ இலதோ என்று சிலர்பால் சந்தேகம் நிகழ்கிறதென்பது யாவருமறிந்த விஷயமே. அப்படிச் சந்தேகம் நிகழக்கூடியதாயிருப்பதினால் மக்களுயிர் உளதென அறிதற்குரிய ஏதுக்களைத் தெரிந்து இதுவிஷயமாய் உறுதியான நம்பிக்கையோடிருக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. இது விஷயமாய் யோஜித்துத் தெளிந்த ஆன்றோர்களிலொருவரான மெய்கண்டதேவர் தாமருளிச்செய்த சிவஞானபோதம் மூன்றாஞ்சூத்திரத்தில் ஆன்மா உளதென்றற்குரிய ஏதுக்களைத் தெளிவாய்க் கூறியிருக்கின்றனர்.

அச்சூத்திரம்:—

"உளதிலதென்றலி னெனதுடலென்றலி
னைம்புலனொடுக்கமறிதலிற் கண்படி
லுண்டிவினையின்மையி னுணர்த்தவுணர்தலின்
மாயாவியந்திர தனுவினுளான்மா."

இச்சூத்திரத்தில் ஆன்மா இலதென்றலின் அது உளதென்றும், ஆன்மா சம்பந்தப்பட்டுள்ள உடலை ஆன்மா எனது உடலென்றலின் அது உளதென்றும், ஆன்மா ஐம்புலனறிதலின் அது உளதென்றும், ஆன்மா ஒடுக்கமறிதலின் அது உளதென்றும், கண்டபடி லுண்டிவினையின்மையின் அது உளதென்றும், உணர்த்த உணர்தலினது உளதென்றும், மாயாவியந்திர தனுவினுளான்மா உளதென்றும், ஏழு ஏதுக்கள் கூறப்பட்டிருக்கின்றன.

ஆன்மா உளதென்பதற்குரிய ஏதுக்களை ஷை சூத்திரத்தில் மெய்கண்ட தேவர் வெகுதெளிவாய் எடுத்துக்காட்டியிருக்கின்றனர். சூத்திரப்பாவைபோன்ற இவ்வுடல் ஜடவஸ்துத்தானே? ஜடவஸ்துவில் அறிவு நிகழ்வதெங்ஙனம்? ஜடப்பொருளுக்கு அறிவுகிடையாதே? ஜடப்பொருளிலிருந்து அறிவு உண்டாகுமா? ஜடப்பொருளின் தன்மையைப்பற்றி யோஜிக்கும் ஆன்றோர்களெல்லோரும் ஜடப்பொருளிலிருந்து அறிவுப்பொருள் உண்டாதல் கூடாதென்கின்றனர். ஸ்பென்சர் (Spencer) முதலிய வித்துவான்கள் கடவுளிருப்பைப்பற்றியும் ஆன்மாவின் தன்மையைப் பற்றியும் தீர்மானமான அபிப்பிராயமில்லாமலிருந்தபோதிலும் ஜடவஸ்துவிலிருந்து அறிவுப்பொருள் வராதென்கின்றனர். ஜடவஸ்துவிலிருந்து அறிவுப்பொருளுண்டாக்க எவ்வளவோ முயன்றும் முடியாமற் பிரமித்து நிற்கின்றனர். ஆதலின் நாம் பார்க்கிற அளவில் அறிவுப்பொருள் தேகத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிறதென்கிற ஒரு முகாந்திரத்தை வைத்து தேகத்தின் நடிப்பே அறிவென்று சொல்லுதல் அறியாமையே. இரண்டு பொருள்களின் தன்மையையும் நன்றாய் ஆராயின் தேகமாகிய ஜடப்பொருள் ஆன்மாவாகமாட்டாதென்றும் மாயாவியந்திரதனுவினுள் அதை நடத்திவைக்கின்ற ஆன்மா உளதென்றும் புலப்படும். இத்தேகமே ஆன்மாவாயின் ஆன்மா தான் சம்பந்தப்பட்டுள்ள உடலை எனதுடலென்றதெங்ஙனம்? என்னுடைய வீடு என்னுடைய புஸ்தகம் என்று சொல்லும்போது, சொல்லுகிற அறிவுப்பொருள் வேறாயும் புஸ்தகமும் வீடும் வேறாயுமிருப்பதுபோல என்னுடலென்று சொல்லுவதினால், எனதெனச்சொல்லும் ஆன்மாவேறு தன்னுடையதென்று சொல்லப்படுகிற உடல் வேறு என்று தெளிவாய்த் தோன்றவில்லையா? ஆன்மா இலதென்று சொல்லுவதினாலேயே அப்படிச் சொல்லுகிற அறிவுப்பொருள் உண்டென்று புலப்படுகிறது. ஆன்மா இலதாயின் சூனியப்பொருளாகும். சூனியப்பொருளாகிய தன்னை சூனியமாகிய அது இலதென்று சொல்லலெங்ஙனம்? இப்படிச்சொல்லுதல் முயற்கோடில்லையென்னுமேதுவால் அது உண்டெனச் சாதித்தலோடொக்குமென்று ஆன்மா இலதென்போர் சொல்லுவாராயின்,

முயற்கோடாகிய இல்பொருள் தானே தன்னை இல்லதென்று சொல்லுகிறதில்லை. முயற்கோடில்லையென்று சொல்லுவது உள் பொருளாகிய ஒரு அறிவுப்பொருளல்லவா? ஆதலின் ஆன்மா இலதென்று சொல்லுகிற ஆன்மாவுளதென்று புலப்படுகிறது. இந்த உடலின்கண் இயங்கும் பஞ்சேந்திரியங்களுள் இந்திரியங்கட்கு வேறாகிய ஆன்மா இலதாயின் ஒரு இந்திரியம் அறிந்ததனை மற்றோரிந்திரியமறிவதெப்படி? நான் கண்டேன் நான் கேட்டேனென ஒவ்வோரிந்திரியத்தின் வாயிலாகத் தெரியக்கூடியவெல்லாவற்றையும் நானேயறிகிறேனென ஒருபொருளே அறிகிறபடியால், அவ்விந்திரியங்களுக்கு வேறாக அறிவுப்பொருளாகிய ஒரு ஆன்மா உளதென்பதில ஐயமுண்டோ? ஐம்புலன்களும் ஒடுங்கிச் சொற்பனஸ்தானத்தில் நிகழ்ந்தவற்றையும் சொற்பனஸ்தானம் நீங்கினபின், தானே அறிந்தேனென்று சொல்லும் பொருள் எது? அஃது இத்தேகத்திற்கு வேறாகிய அறிவுப்பொருளன்றோ!

இத்தேகமே ஆன்மாவாயின், இத்தேகத்தினுடைய கருவிகள் அயர்ந்து நித்திரைசெய்யும்பொழுது ஷெ கருவிகள் உண்டிவினையில்லாதிருத்தல்போல அறிவுநிகழ்ச்சியும் இல்லாதிருத்தல் வேண்டும். அப்படிக்கன்றி அச்சமயத்தில் அறிவுநிகழ்ச்சி இருப்பதாக ஆன்றோர்கள் வற்புறுத்திச் சொல்லுகின்றனர். இதற்கு இரண்டோர் திருஷ்டாந்தங்கள் கூறல்கூடும். அயர்ந்து நித்திரை செய்யுங்காலத்தில் சர்ப்பம் நகர்தல், கன்னக்களவுமுதலிய சில கெடுதலான காரியங்கள் நேரிடும்போது தட்டியெழுப்பினுமெழுந்திராத மனிதன் எழுந்துவிடுகிறான். ஒருகாரியத்தைக் குறிப்பிட்ட மணிநேரத்தில் செய்யவேண்டுமென்றெண்ணிக்கொண்டு தூங்குகிறவன் அந்த மணிநேரத்தில் எழுந்துவிடுகிறான். அயர்ந்த நித்திரையில் திடீரென்று ஒருவனை எழுப்பிவிட்டால் அப்படியெழுந்திருக்கும்போது அச்சமயத்தில் ஏதோ சங்கதியை யோஜித்துக்கொண்டிருந்ததாகத் தோன்றுகிறது. ஆதலின் அயர்ந்த நித்திரை காலத்திலும் அறிவுநிகழ்ச்சியுண்டெனப் புலப்படுகின்றது. துயின்றெழுந்தபின்னர் சுகமாகத் துயின்றேனென்று சொல்லுமறிவாலும், அயர்ந்தநித்திரைகாலத்தில் இன்ப

துன்ப நுகர்ச்சியுண்டெனப் புலப்படுகிறது. இவ்வித அறிவுப் பொருளாகிய ஆன்மா உளதென்பது திண்ணம். சித்துப்பொருளாகிய ஆன்மாவின் தன்மையையும் ஜடப்பொருளாகிய உடலின் தன்மையையும்பற்றி இன்னும் சற்று யோசிப்போம். இத்தேகமே ஆன்மாவாயின், இத்தேகத்தின் நடிப்பே அறிவாயின், இத்தேகத்திலுள்ள கருவிகள் நிகழும் அளவுக்குத் தக்கபடியே அறிவினளவுமிருக்கவேண்டும்; அப்படிக்கின்றி தேகத்தின் கருவிகள் நிகழ்ச்சிக்கும் அறிவுச்செயலுக்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கின்றது. ஒரு மனிதன் தன்னுடைய ஆபீசில அலுவல் பார்த்துக்கொண்டிருக்கிற சமயத்தில் ஒரு சேவகனையனுப்பி உடலில் கொஞ்சம் சூடுகொண்டிருந்த தன் பிள்ளையினுடம்பு ஸ்திதியைக் கேட்டுவரச்சொல்ல அந்தச் சேவகன் பிள்ளை சுகமாயிருக்கிறதென்று சொல்ல ஒன்றும் நடவாததுபோல ஆபீசலுவலைப் பார்த்துக்கொண்டிருக்கிறான். அந்தச்சேவகன் பிள்ளைக்குக் காய்ச்சல் (105) நூற்றைந்து டிக்கிரியென்று சொல்லிவிட்டால் உடனே திடீரென்றெழுந்து ஆபீசலுவலைக் கவனியாது உடனே வைத்தியனைக் கூட்டிக்கொண்டுபோய் வீடுசேர்ந்து பிள்ளை குணப்படுகிறதற்கு வேண்டிய காரியங்களைப் பார்க்கிறான். குணமாயிருக்கிறதென்கிறபோது தேகததிலுள்ள கருவிகள நிகழ்ச்சிக்கும் 105 என்கிறபோது தேகத்தின் கருவிகள் நிகழ்ச்சிக்கும் என்ன வித்தியாசம்? ஒன்றுசொல்லும்பொது சும்மாவிருந்தவன் மற்றொன்று சொல்லும்போது ஏனிவ்வளவு வேலை செய்கிறான்? உணர்த்த உணர்தலினாலல்லவா? அவனுடைய தேகம் அவனுடைய அறிவுநிகழ்ச்சியின்படி செய்யக் கருவியாயிருந்ததேயன்றி ஒன்றுசொல்லுங்கால் சும்மாவிருந்ததும் மற்றொன்று சொல்லுங்கால் எவ்வளவோ வேலைகள் செய்ததும் வெறுந்தேகக் கருவிகளின் நடிப்பாகுமா? அறிவுநிகழ்ச்சியினாலல்லவோ அவன் அப்படிச்செய்தது? எத்தனையோ சங்கதி நமக்குத் தெரியாமலிருக்க அதை உணர்த்த நாமறிவதெப்படி? தேகக்கருவிகள் அப்படி உணர்த்த அறியுமா? ஆன்மா என்பது இல்லையாயின் உணர்த்த உணர்தல் கூடுமோ? மெய்கண்டதேவர் கூறிய மேற்கண்ட ஏதுக்களால் ஆன்மா உளதென்பது பட்டப்பகற்

போல் தெளிவாய்விளங்கவில்லையா? ஆன்மா உளதென்பதற்கு இவ்வேதுக்கள் தவிர வேறேதுக்களும் வேண்டுமோ? வேண்டுவ தில்லையென்றே தோன்றுகிறது. ஆயினும் இன்னும் ஓரேது எடுத்துக்காட்டல்கூடும். இத்தேகமானது ஏழு வருஷங்களுக் கொருமுறை முற்றிலும் மாறிவிடுகிறதென்று தேகத்தின் தன் மையையுணர்ந்த சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். இப்பொழுது நம் தேகத்திலுள்ள ஒரு அணுவாவது இன்னும் ஏழுவருஷங் களுக்குப்பின்னிருக்கமாட்டாது. இத்தேகத்தின் அணுக்கள் நாளா ரம்பமாய்க் கெட்டுக்கொண்டும் கெட்டுப்போன அணுக்களுக்குப் பதிலணுக்கள் சேர்ந்துகொண்டும் வருகிறது. அப்படி வருகை யில் சிலவருஷங்களுக்குப்பின் முன்னிருந்த எல்லாவணுக்களும் போய் புதிய வேறணுக்களால் இத்தேகஞ் சேர்க்கப்படுகிறது. ஆகவே மனுஷனுடைய தேகமானது அடிக்கடி பூராவாக மாறிக் கொண்டு புதுப்புதுத் தேகமாகிக்கொண்டிருக்கிறதென்பது தெளிவு. அறிவு தேகத்தின் நடிப்பேயாயின், ஒரு தேகம் நடித்த நடிப்பை அது மாறினபின்னுண்டாகிய புதுத்தேகமறிவ தெங்ஙனம்? எத்தனையோ தடவல் தேகம் மாறியிருந்தபோதிலும் நான்தான் சிறுபையனாகவிருந்தேன், நான்தான் வாலிபனாகவிருந் தேன், நான்தான் 25 வயதுள்ள யௌவன புருஷனாக இருந் தேன், நான்தான் 45 வயதில் வியாதியிற்படுத்து அழுந்தினேன், நான்தான் இப்போது 60 வயதுடையவனாய் இந்தத் தேகம் நீங் குங்காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன் என்று சொல் லும் பொருளெது? தேகத்தின் தன்மை எவ்விதம் மாறிமாறிவரி னும் அந்த மாறுதல்களையெல்லாமறிந்து அந்தத்தேகத்திற்கு அந்நியமாகிய ஒரு அறிவுப்பொருள் தேகத்தைத் தனக்குக் கரு வியாகவைத்துக்கொண்டு நடத்திவருகிறதென்பது விளங்கவில் லையா? இதுவே ஆன்மா. தேகத்திற்கன்னியமாகிய மக்களுயிர் உண்டென்பது மேற்கூறியவேதுக்களால் தெளிவாய்ப் புலப்படு கிறது. இனி மக்களுயிர் எப்பொழுதாவது அழியுமா அல்லது என்றுமே அழிவில்லாத பொருளா என்பதைப்பற்றிச் சற்று விசாரிப்போம். இவ்வுலகத்தில் அழிவுள்ள பொருள்களெல்லாம் தோன்றினகாலமுதல் சிலகாலம் வளர்ந்துவந்து பின்பு வளர்ச்சி

நின்று அப்படிச் சிலகாலஞ்சென்றபின்னர் பலவீனப்பட ஆரம்பித்து வரவரத் தளர்ந்து கடைசியாய் அழிந்துபோகின்றன. திருஷ்டாந்தமாக, ஒரு மரமானது வித்தினின்று அல்லது வேறு விதமாய் உண்டாகி, சிலகாலம் வளர்ந்து, அப்படி வளர்ந்த ஸ்திதியில் சிலகாலம் திடமாய்நின்று, பின்பு பலவீனப்படவாரம்பித்து, வரவரக் கெட்டுப் பின்பு அழிந்துபோகிறது. நம்முடைய தேகமும் கருப்பையிலிருந்து சிசுவா யுற்பத்தியாகி இந்த உலகத்தில் ஜெனித்து சிலகாலம வளர்ந்துவந்து பின்பு சிலகாலம் பலமுடனிருந்து பின்பு தளரவாரம்பித்து நாளடைவிற்றளர்ந்து பின்பு அழிந்துவிடுகிறது. யாதொரு வியாதியுமன்னியில் திடகாத்திர குழந்தையாய்ப் பிறந்து யாதொரு வியாதியுமின்றியே நீடித்த காலம்வரை இருந்தபோதிலும், அந்தத் தேகமானது முதலில் வளர்ந்து அப்பாற் சிலகாலம் திடமுடனிருந்து அப்பாற்றளர ஆரம்பித்து வரவரத் தளர்ந்து இயற்கைச் சுபாவத்தினாலேயே அழிந்துபோகும். இதுபோலவே ஒவ்வொரு அழியும் வஸ்துவும் வளர்ந்து தளர்ந்து அழிந்துபோய் விடுகின்றது. ஆதலின் அழிந்துபோகும் வஸ்துக்களை அவை வளர்ந்து தளரும் தன்மையினாலேயே அவைகள் அழிந்துபோகிறவையெனத் தீர்மானித்தல்கூடும். மக்களுயிரோவென்றால் அத் தன்மையுடையதன்று. வரவர வளர்ந்துகொண்டிருக்கும் தன்மையுடையதேயன்றித் தளர்ந்து எந்தக்காலத்திலும் வளர்ச்சி குன்றி அழியுந்தன்மையுடையதாயில்லை. வயதில் முதிர முதிர ஆன்ம இலக்ஷணங்கள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. இவைகளுக்குத் தளர்ச்சியாவது முடிவாவது காணவில்லை. தேகத்தோடு நமதான்மா சம்பந்தப்பட்டிருக்கிறபடியாலும் தேகத்தைக் கருவியாக வைத்துத் தன் செயல்களைக் காட்டவேண்டியதாயிருப்பதாலும், தேர்ந்த ஒரு வேலைக்காரன் தனது ஆயுதங்கள் கெட்டுப்போனவிடத்தில் தன் வேலையைச் சரியாய்ப் பார்க்கமுடியாததுபோல நமது தேகந் தளர்ந்தவிடத்து மக்களுயிர் தன் குணங்களை வெளிப்படுத்துவதில் சில சமயங் கஷ்டப்படுகிறதே தவிர, அதன் குணங்கள் வரவர வளர்ந்துகொண்டேதான் வருகின்றன, என்பதிற் சந்தேகம் சற்றுமில்லை. வைத்தியசாஸ்திரத்தில்

தேர்ந்த ஒருவனுக்கு அவனுடைய அநுபவம் அதிகப்பட அதிகப்பட அவனுடைய வைத்திய அறிவு அவன் தேகம் தளரினும் விருத்தியாகிக்கொண்டே வருகிறது. வானசாஸ்திரியினறிவு ஷை சாஸ்திரவிஷயமாய் அவனுடைய அநுபவம் அதிகப்பட அதிகப்பட புது உலகங்களைக் கண்டுபிடிக்கும்படியானவிதமாய் தேர்ச்சியடைந்து கொண்டுவருகிறது. அன்பிற் பழகப்பழக பிறரை நேசிக்கும்படியான தன்மை அதிகரித்துக்கொண்டேவருகிறது. நல்லொழுக்கத்தில் தளராமல் நின்றுகொண்டுவருபவனுக்கு வரவர நல்லொழுக்கம் திடப்பட்டுக்கொண்டேவருகிறது. இவ்விதமாக ஆன்மகுணங்கள் எக்காலத்திலுந் தளர்ச்சியின்றி வரவர வளர்ந்துகொண்டேவருகின்றன. ஆதலின் மக்களுயிர் அழியுந்தன்மையுடைய தன்றென்பது தெளிவாய்ப் புலப்படுகிறது. மேலும் மக்களுயிரின் அபிவிருத்தியின் தன்மையை யோஜிக்கும்போது இந்த உலகவாழ்வுக்குமட்டுமேற்பட்டதாகத் தோன்றவில்லை. எத்தனையோ கோடானுகோடி ஜீவபிராணிகள் நாளை வருகிறது இன்னதென யோஜிக்குந்தன்மையில்லாமல் எவ்வளவோ சந்தோஷமாக ஜீவிக்கின்றன. அவற்றிற்கெல்லாம் நம்முடைய பரமபிதா அவற்றின் போஷிப்புக்குவேண்டிய ஏற்பாடு போதுமானபடி செய்திருக்கிறார். மனிதனுக்கு இடைவிடாது வேண்டிய காற்றை அவன் செல்லுமிடமெங்கும் பரவியிருக்கும்படி செய்திருக்கிறார். ஒளியையும் அப்படியே எங்கும் பரவியிருக்கும்படி செய்திருக்கிறார். அடுத்த அவசியப்பொருளாகிய தண்ணீரை அவன் முயற்சியின்றி ஏராளமாயமைத்துவைத்து இடையிடையேயும், அதிகச் சொற்பமாயும்வேண்டிய உணவுக்கும், வஸ்திரத்துக்கும் மட்டும் வேலைசெய்து பெற்றுக்கொள்ளும்படி கடவுள் இந்த உலகத்தை அமைத்துவைத்திருக்கிறார் ஒருவனுக்கு "உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்" என்று ஆன்றோர் சொல்லியிருக்கிறபடி இந்தத்தேகத்திற்கு வேண்டிய வஸ்திரமும் உணவும் வெகு சொற்பமாயிருக்கின்றன. அதை மனுஷன் வெகு எளிதில் சம்பாதித்தல்கூடும். ஆனால் மனிதனுடைய ஆசைக்கோ அளவில்லை அகிலமெலாங்கட்டியாளினும் கடல்மீது ஆணைசெல நினைக்கின்றனன். குபேரனுக்குச் சமமான பொருளிருந்தபோதிலும் ரசதவா

வித்தைக்கு அலைந்திடுகின்றனன். நெடுநாளிருந்தபோதிலும் நிலையாகவே இருத்தற்கு காயகற்பந் தேடுகின்றனன். இவ்விதமாகச் செல்லும் மனிதனுடைய ஆசையின் தன்மையை யோஜிக்கும்போது சிலநாளிருந்து அழிந்துபோகுந் தன்மையையுடைய தாயில்லாமல் நிலைத்திருக்கின்ற அளவுகடந்த ஆசையுடைய பொருளாய் மக்களுயிர் இருப்பதாகத் தோன்றுகிறது. மனிதன் தன் தேகவளர்ச்சிக்குக் கொஞ்சமேனுஞ் சம்பந்தமில்லாத ர்ாகக்கியான முதலியவற்றில் எவ்வளவோ பாடுபட்டுழைத்துத் தேர்ச்சியடைந்து அவ்விதத் தேர்ச்சியிலும் திர்ப்தியற்று மேலுந்தேர்ச்சியடைய விரும்புகிறான். இந்த உலகத்திலுள்ள பொருள்கள் சம்பந்தமாய் (Geology Botany) பூகற்பசாஸ்திரம் தாபரநூல் முதலிய சாஸ்திரங்களில் தேர்ச்சியடைய வெகு பிரயாசப்பட்டுத் தேர்ச்சியடைந்து அவ்விதத் தேர்ச்சியிலும் திர்ப்தியடையாமல் அந்தோ ! நம்முடைய அறிவு எத்தனை சிறியது இன்னும் அறிய வேண்டியன எவ்வளவோ இருக்கின்றனவே என்று ஏங்குகிறான்.

இம்மட்டோ ! இவ்வுலகப்பொருளோடு நில்லாமல் கண்ணுக்கும் மனதுக்கும் எட்டாமல் ஆகாயத்தில் உலாவிக்கொண்டிருக்கின்ற அண்டகோடிகள் எத்தன்மையுடையனவென்றறிய ஊணுறக்கமின்றி வாழ்நாள் முழுதும் வேலைசெய்து புதுப்புது அண்டங்களைக் கண்டுபிடிக்கிறான். அறிவிலுன்னத ஸ்தானத்தையடைந்த ஸர் ஐசக்நியூட்டன் முதலிய அறிவாளிகள் அந்தோ! நாம் கற்றதெவ்வளவு அறிவென்னுமசமுத்திரம் நம் முன் கர்ச்சித்துக்கொண்டிருக்க அச்சமுத்திரக் கரையில் கிடக்கின்ற சிப்பிகளை நாம் பொறுக்கிக்கொண்டிருக்கின்றோம் என்றலறுகிறார்கள். ஆன்மகுணங்களாகிய அறிவு, அன்பு, நல்லொழுக்கம் இவைகளை விருத்திசெய்வதில் தேகத்தை மனிதன் ஒரு சிறிதும்பாராட்டுகிறதில்லை. அன்பு தூண்ட எத்தனையோ பெரியோர்கள் தங்கள் சௌக்கியத்தைச் சிறிதும் பாராட்டாது வியாதிஸ்தலங்களுக்குப் போய் பிறருடைய துன்பங்களை நிவர்த்திக்க எவ்வளவோ பிரயத்தனங்கள் செய்கின்றனர். உலகசம்பத்தைக் கொஞ்சமேனுங் கவனியாது ஒழுக்கக்குறைவும் சத்தியநிலைதவறுதலும் நேரிடா

வண்ணம் எத்தனையோபேர்கள் தங்கள் உயிர்களை விடுகின்றனர். இவ்வுலக இன்பத்தை ஒருசிறிதும் கவனியாது வளர்கிறதும், இந்த உலகத்தைவிட்டு நீங்குகிற சந்தர்ப்பத்தில் அதின் உன்னத நிலையிலிருக்கிறதுமான ஆன்மா இவ்வுலகத்தோடு நின்றுபோகுமா? அதினுடைய வளர்ச்சியின் தன்மையையும் அவ்வித வளர்ச்சியிலுள்ள மக்களுயிரின் அவாவையும் யோஜிக்கும்போது மக்களுயிரென்றுமே அழிவில்லாததேன்று புலப்படவில்லையா? இது நிற்க, சர்வகாருண்யமும் சர்வசக்தியுமுள்ள நம்முடைய பரமபிதா மக்களுயிரின் அபிவிருத்திக்கேற்ற விதமாக இந்த உலகத்தை ஒருபெரிய பள்ளிக்கூடமாகச் சிருஷ்டித்து மேற்சொல்லியவிதம் பேரவாவுடன் ஆன்மகுணங்களை விருத்திசெய்யும்படி தூண்டி மக்களுயிரை வளர்த்துவருவதால் இந்த மக்களுயிர் என்றுமே அழிவில்லாத தென்பது பிரத்தியக்ஷமாய் விளங்கவில்லையா? மக்களுயிர் அழிவில்லாததென்பதற்கு கடவுளுடைய சர்வகாருண்யமும் அளவிறந்த ஆற்றலுமே போதுமான ஆதாரமன்றோ? மக்களுயிரைக் கடவுள் அழியவிடுவாரா? ஒருநாளும் அழியவிடார். ஆதலின் மக்களுயிர் என்றுமே அழிவில்லாதது. இனி மக்களுயிரின் அபிவிருத்திக்கு எல்லையுளதோவென்பதைப் பற்றிச் சற்று யோஜிப்போம். எல்லையில்லையெனின் முத்திநிலையென்பது இல்லாததுபோலவும் எப்பொழுதும் அபிவிருத்தியடைந்துகொண்டே செல்லுமானால் பேரின்ப நுகர்ச்சி ஒருநாளுங்கிட்டாமல் இன்பதுன்பங்கலந்த கஷ்டதிசையிலேயே மக்களுயிர் இருந்துவருமென்பதுபோலவும் சிலர் நினைக்கிறார்கள். பேரின்பநுகர்ச்சிக்குரிய முத்திநிலையை மக்களுயிர் அடைவதே ஆன்மவளர்ச்சிகாலத்தில் நிகழுங் கஷ்டத்திற்குப் பலனாகையாலும், அவ்வாறு முத்திநிலையடையுமென்பது ஒருவாறு முத்திநிலையை சுவாநுபவத்திற் கண்டறிந்த ஆன்றோர்கள் கொள்கையாதலாலும், முத்திநிலையடைதலே மக்களுயிரின் அபிவிருத்திக்கு எல்லையென்றும் அப்பால் பேரின்ப நுகர்ச்சியில் ஆன்மாவானது மூழ்கியிருக்குமென்றும், அதற்குப்பின் அபிவிருத்தியென்பது கிடையாதென்றும் அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஆகவே, முத்திநிலை யென்பதென்ன? ஆன்ம அபிவிருத்திக்கும், பேரின்ப நுகர்ச்சிக்கும், பொருத்தமின்மையுண்டோ? என்பதைப்பற்றி யோஜிக்கவேண்டிய தவசியமாகிறது. ஒரு பொருளைச் சம்பாதிக்கவேண்டுமென்று முயல்கிறவர்களுக்கு சம்பாதிக்குங் காலத்திலுண்டாகிய இன்பம் சம்பாதித்து அவர்கள் நோக்கியபொருள் அவர்கள் கைக்குவந்தபின் இல்லையென்பது அனுபவத்தால் தெரியும். ஒரு உண்மையைத் தங்கள் சுயமுயற்சியைக்கொண்டு கண்டுபிடித்தவர்களுக்கு அந்த முயற்சிகாலத்திலிருந்த சந்தோஷம் கண்டுபிடித்தபின் இல்லையென்பதும் யாதொரு முயற்சியுமன்னியில் அவ்வுண்மையைப் பிறராற் சொல்லித் தெரிந்தவர்கட்கு அவ்வித சந்தோஷமில்லையென்பதும் அனுபவத்தாற் றெரியும். ஆன்றோர்களெல்லோரும் தாங்கள் ஒரு நோக்கத்துடன் முயற்சிசெய்கிறகாலத்தில் தங்களுக்கு நிகழ்கிற இன்பம் தங்கள் நோக்கம் நிறைவேறின பின்னில்லையென்று ஒருமிக்க முறையிடுகின்றார்கள்.

“ஆசைக்கோரளவில்லை” என்று தாயுமானஸ்வாமிகளும் “பெற்ற சிறுகப்பெறாத பெரிதுள்ளும் சிற்றுயிர்” என்று குமரகுருபர ஸ்வாமிகளும் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றார்கள் தாங்கள் இச்சித்த காரியங்கிட்டுகிறவரையில் உள்ள இன்பம் அந்தக்காரியம் கிட்டினபின் குறைந்து அல்லது இல்லாமற்போய் ஆசைநிகழ்ச்சிக்குத்தகுந்த வேறுகாரியத்தில் மனஞ்செல்கிறதென்பது ஷை வாக்குகளாற் புலப்படுகிறது. ஆதலின ஒரு காரியத்தை உத்தேசித்துச் செய்கிற முயற்சிக்கும இன்பநுகர்ச்சிக்கும் பொருத்தமில்லையென்பது கிடையாது. முயற்சியே இன்ப நுகர்ச்சியாய் முடியும். முயற்சியில்லாதிருத்தலே துன்பமாய் முடியும். ஆன்ம அபிவிருத்திக்கும் பேரின்பநுகர்ச்சிக்கும் பொருத்தக்குறைவொன்றுமில்லை. மக்களுயிர் அறிவு, அன்பு முதலிய நற்குணங்களையுடையதாய் அக்குணங்களில் அபிவிருத்தியடைந்துகொண்டுவருவதில் எந்தக்காலத்திலாவது கடவுளுடைய திவ்விய குணங்களாகிய முற்றறிவு, சர்வசக்தி, சர்வகாருண்ய முதலிய குணங்களை கடவுளிடத்திலிருப்பதுபோல நிறை

வுபெற அடையுமா? எவ்வளவுதூரம் அபிவிருத்தியடைந்தபோதி லும் கடவுளுடைய பூரண நற்குணங்களை எட்டமுடியுமா? கடவு ளுக்கும் நமக்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்குமல்லவா? எவ் வளவுதூரம் நாம் விருத்தியடைந்தபோதிலும் மக்களுயிர் கட வுளை நோக்கச் சிற்றறிவுடையதாயும் அற்ப சக்தியுடையதாயும் இவ்விதமாகவே மற்றக் குணங்களிலும் கடவுளுக்கு எவ்வளவோ குறைவுள்ளதாயுமிருக்குமல்லவா? ஆகவே அறிவுமுதலிய நற்கு ணங்களில் எவ்வளவுதூரம் நாம் தேர்ச்சியடைந்தபோதிலும் அதற்கு மேற்படி யிருந்துகொண்டேயிருக்குமல்லவா? அந்த மேற்படியும் நாம்தேர்ச்சியடைய அடைய மேல்நோக்கிச்சென்று கொண்டேயிருக்குமல்லவா? ஆகவே மக்களுயிர் அறிவு காருண்ய முதலிய நற்குணங்களில் தேர்ச்சியடையஅடைய, தான் அப்போ தப்போதிருக்கும் நிலைமைக்கு உயர்வாகக் காணப்படுகிற நிலையை அடைய விரும்புமல்லவா? மேற்படியிருக்கக் கீழ்ப்படியில் திருப் தியடைந்து மேற்சொல்லாதுநிற்குமா? அப்படிநின்றால் அப்படி நிற்றலே குறைவாய்ப் பேரின்பநுகர்ச்சி குறைவுபடுமல்லவா? ஆதலின் மக்களுயிர் மேன்மேலும் அபிவிருத்தியடைந்து கொண்டே செல்லவல்லதென்பது தெளிவாய்ப் புலப்படுகிறது. அப்படியானால் முத்திநிலை யென்பதென்ன?

அது நாம் ஒருநாளும் அடையக்கூடாத நிலையா? அடையக் கூடியதுதான். கடவுள் கிருபையால் நாம் அதைத் திட்டமாயடை வோம். நாம் இப்போதிருக்கும் பந்ததிசையில் அறிவுவாயிலாக வும் மனச்சாக்ஷிவாயிலாகவும் கடவுள் நமக்கு எவ்வளவோ அறி வுறுத்தியும் கடவுளுடைய கட்டளைக்கு நாம் இணங்கி நடக்கிறோ மில்லை. மனச்சாக்ஷி ஒருவிதம் தூண்ட நாம் வேறுவிதம் செய்து வருகிறோம். நாம் சதமில்லாதவற்றைச் சதமென்று நினைத்து நம்முடைய உண்மையான நன்மையின்னதென்று தெரியாத அறி விலிகளாயிருக்கிறோம், கடவுளோடு நாம் எப்போதும் போராடிக் கொண்டிருக்கிறோம்.

"அறிவிலாத வெனைப்புகுந் தாண்டுகொண்டறிவதை யருளிமே
னெறியெலாம் புலமாக்கிய வெந்தையைப் பந்தனை யறுப்பானைப்
பிரிவிலாத வின்னருள்கள் பெறறிருந்து மாறுடுதிபிணநெஞ்சே"

என்று மாணிக்கவாசக ஸ்வாமிகள் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறபடி நாமிந்தப் பந்ததிசையில் அறியவேண்டியதைக் கடவுள் நமக்கு அருளியும் நெறியெலாம் புலமாக்கியும் நம்முயிர்க்குயிராய்ப் பிரிவில்லாமல் தழைத்து நின்றுகொண்டுமிருக்க, நாம் அவரோடு மாறுடிக்கொண்டிருக்கிறோம். இவ்விதம் நாம் மாறுடுவதினாற்றான் கஷ்டமும் துன்பமும் நமக்கு நேரிடுகிறது. பேரின்ப நுகர்ச்சி கிட்டுகிறதில்லை. இந்த மாறுட்டம நிற்றலே முத்திநிலை. கடவுளுடைய கட்டளைக்கு முரணுதலின்றி யிணங்கி அறிவிலும், நற்குணத்திலும், தூய்மையிலும், கடவுளோடொன்றுபட்டு ஒழுகுதலே முக்திநிலை. இந்த நிலையில் கடவுளுடைய நற்குணங்களுக்கும் நம்முடைய குணங்களுக்கும் அளவிறந்த வித்தியாசமிருப்பினும் தன்மையிலொன்றுபட்டிருக்கும். முரணுதல் கிடையாது. எது சரியென்று கடவுள் நமக்குஉணர்த்துகிறுரோ அந்த உணர்ச்சியின்படியே யாதொரு முரணுதலுமின்றி நாம் நடப்போம். நமக்குள் தோன்றுகிற பற்பல நோக்கங்கட்குள்ளும் பூரண ஒற்றுமையிருக்கும். ஒன்று ஒருபக்கந்தூண்ட மற்றென்று இன்னொரு பக்கமிழுக்க என்பதுகிடையாது. இத்திசையடைந்த பின் கடவுள் நாம் இன்னும் அபிவிருத்தியடைந்துகொண்டுவர அறிவு உணர்த்திக்கொண்டு வருவாரேதவிர, கண்டித்தலென்பது கிடையாது. நமக்கு உயிர்க்குயிராய் நின்று சந்தோஷமாய் நம்மை ஊக்குவித்துக்கொண்டே வருவர். இத்திசையே முத்திநிலை. இதுவே பேரின்ப நுகர்ச்சி. இவ்வித பேரின்பநுகர்ச்சியுடன் மக்களுயிர் தன்னுடைய நற்குணங்களில் அபிவிருத்தியடைந்துகொண்டேவரும். அவ்விதம் கடவுளோடு யாதொருமுரணுதலுமின்றி அபிவிருத்தி. யடைந்து கொண்டுவருவதே பேரின்ப நுகர்ச்சியாய் முடியும் ஆதலின் மக்களுயிர் மேன்மேலும் அபிவிருத்தியடைந்து:கொண்டே செல்லவல்லது. இவ்விதம் மக்களுயிர்க்குக் கடவுள் அறிவதையருளி நெறியெலாம் புலமாக்கி உயிர்க்குயிராய்த் தழைத்து நின்று மேல்நோக்கிச்செல்லும்படி தூண்டுதல்செய்துகொண்டே வருகிறபடியாலும், ஒவ்வொரு ஆன்மாவும் அதத்ற்குத்தகுந்த பக்குவம் வந்தாலொழிய முத்திநிலைபெற்றுப் பேரின்ப நுகர்ச்சிக்குத் தகுதியுள்ளதாக இருக்க மாட்டாதாதலாலும், ஒவ்வொரு

மக்களுயிரையும் கடவுள் அததன் பக்குவத்திற்குத்தகுந்தபடி உணர்த்தவேண்டியதை உணர்த்தி அப்படி நடக்கும்படி தூண்டு கிறராகையாலும், மக்களுயிர் தன்செய்கைகட்கெல்லாம் தானே கடவுட்கு உத்திரவாதியாயிருக்குந் தன்மையுடையது. தன்தன் குற்றத்தைத் தானேயுணர்ந்து அக்குற்றத்தை அறவே கைவிடக் கடமைப்பட்டுள்ளது. தன் குற்றத்திற்காகப் பிறரை வருத்துதலி னாலாவது, பிறர் வருந்துதலினாலாவது, கடவுள் உணர்த்தியபடி நடந்தன்னியில் குற்றத்திற்கு வேறு பரிகாரமும், முக்திநிலை யடைய தன் சுயபக்குவம் அன்னியில் வேறுஉபாயமும் தேடுதலி னாலாவது, யாதொரு பிரயோஜனமுமில்லை. தன் செய்கைகட் கெல்லாம் தானே கடவுட்கு உத்திரவாதியாயிருந்து கடவுள் உணர்த்தியவாறு நடந்து நம்முடைய ஆன்ம குணங்களை வளர்த்து முக்திநெறிக்குத்தக்க பக்குவம் அடைய முயலவேண்டும். இவ் விதமன்னியில் வேறுவிதஉபாயந்தேடுதல் மதியீனம். மேற்கூறிய வற்றால் "மக்களுயிர் என்றுமே அழிவில்லாதது. மேன்மேலும் அபிவிருத்தியடைந்துகொண்டே செல்லவல்லது. தன்செய்கைகட் கெல்லாம் தானே கடவுட்கு உத்திரவாதியாயிருப்பது" என்று தெளிவாய்ப் புலப்படுகிறது.

அதிகாரம் 6.

கடவுள் வழிபாடு.

பாகம் I.

"கடவுளை மெய்யுணர்வாலும் உள்ளன்பாலும் வழிபடல் வேண்டும். கடவுள் வழிபாடு உண்மையான மன அமைதிக்கும் பேரின்பத்திற்கும் இன்றியமையாதது."

"கடவுளிடத்தே நாம் செய்யத்தகும் உண்மை வழிபாடாவது நாம் அவருக்கு அன்பு செய்தலும் அவர் நமக்கு உணர்த்தியவாறு ஒழுகி வாழ்தலுமேயாம்."

"கடவுளைக் குறையிரத்தலும், அவரையே பற்றிக்கிடத்தலும், நம்முயிர்க்குயிராய் நம்மோடு அவர் உடனுறைதலை நமக்கு நாமே உணர்ந்து அநுபவித்தலுமே ஆன்ம வளர்ச்சிக்குரிய சாதனங்களாம்." (பிரம சமயக் கொள்கைகள்.)

இவ்வுலகில் அநேக சமயங்கள் உள. அவைகளுள் இந்து சமயம், கிறிஸ்துமதம், மகமதிய மார்க்கம், புத்த சமயம், இவை நான்கும் முக்கியமானவை.

இவை நான்கும் ஆசியாக்கண்டத்திலேயே பிறந்தன. இவை நான்குள் கிறிஸ்துமதம் சின்ன ஆசியா என்னும் தேசத்திலும், மகமதிய மார்க்கம் அரேபியா தேசத்திலும், இந்து சமயமும் புத்த சமயமும் நம்முடைய தேசமாகிய இந்தியா தேசத்திலும் பிறந்தன.

இந்நான்கு சமயங்களின் கொள்கைகளில் ஒன்றுக்கொன்று ஒற்றுமையில்லை. புத்த சமயத்தை ஆஸ்திகமதமென்று தானும் சொல்வதற்கு இடமில்லை. ஆயினும் இந்நான்கு சமயங்களுள் இந்து சமயந்தவிர மற்ற மூன்று சமயங்களிலும் ஒவ்வொரு

சமயத்திலும் பல பிரிவுகள் இருப்பினும் முக்கியமான விஷயங்களில் அந்தந்தச் சமயத்தைக் கைக்கொள்வோர் எல்லோரும் அனுசரிக்கும் பொதுக்கொள்கைகள் உண்டு. கிறிஸ்து சமயத்தில் அதைச்சேர்ந்த பல பிரிவினர்களும் கடவுள் ஆதியில் ஆதாம் ஏவாளை சிருஷ்டித்ததாகவும் அவர்கள் கடவுள் கட்டளைக்கு இணங்கி நடக்காமல் பாவிகளாய்ப்போனதாகவும் அந்தப்பாவம் அவர்களோடு நில்லாது அவர்கள் சந்ததிகளாகிய—மானிடர் யாவரையும் ஜன்மப்பாவிகளாக்கிற்றென்றும், ஆகவே மானிடர் யாவரும் பாவிகளென்றும், அந்தப்பாவத்திலிருந்தும் நிவர்த்திசெய்து கொள்ள மனிதர்களுக்குச் சக்தி இல்லையென்றும், ஆதலின் கடவுளாகிய கிறிஸ்துநாதர் பூமியில்மனிதனாய்ப்பிறந்து மனிதருடைய பாவத்தை தான் ஏற்றுக்கொண்டு அதற்காகச் சிலுவையில் அறையப்பெற்று மரணமாகிய தண்டனை அடைந்தாரென்றும், அதினால் பாவ விமோசனமாகி கிறிஸ்துவை நம்பி பாவமன்னிப்புக் கேட்கிறவர்களெல்லாம் பேரின்பவீடு அடைவார்களென்றும், நம்புகிறார்கள். மேற்கண்டவை அவர்களுடைய பொதுக்கொள்கைகள்.

மகமதியர்களில் அவர்களைச்சேர்ந்த பல பிரிவினர்களும் கடவுள் ஒருவரே என்றும் அவர் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு அறுதியாயுள்ள சமயநூலாகிய "கொரான்" என்னும் வேத புஸ்தகத்தில் அடங்கியவற்றை மகமதுநபிமூலமாய் வெளிப்படுத்தினாரென்றும், மகமது நபி உலகத்தில் ஜனித்த நபிகளிலெல்லாம் சிறந்த நபியென்றும் அவர்களுடைய கொரானாகிய வேதப்புஸ்தகத்திற் சொல்லியபடி நடந்து மகமதுநபியை முதன்மையான நபியாகக் கைக்கொண்டு கடவுளை வழிபடுகிறவர்கள் பரலோக இன்பத்திற்கு உரித்தாவார்கள் என்றும் நம்புகிறார்கள்.

புத்த சமயத்தைச்சேர்ந்த பல பிரிவினர்களும் பௌத்த மகரிஷியாகிய ஞானியே உலகத்திற்பிறந்த ஞானிகளுள் உயர்ந்த ஞானியென்றும், அவர் வெளியிட்ட உண்மைகளைக்கைக்கொண்டு நடக்கவேண்டுமென்றும், கடவுள் ஒருவர் உண்டோ இல்லையோ என்கிற விஷயத்தைப்பற்றி பௌத்தமகரிஷி ஒன்றும் சொல்ல

இல்லையென்றும் ஆதலின் அதைப்பற்றி நாம் ஒன்றும் நினையாமல் ஜீவகாருண்ணிய முதலிய நல்லொழுக்கங்களைக்கைக்கொண்டு ஒழுகவேண்டுமென்றும அவ்விதம் நடந்தால் "நிர்வாணு" என்னும் பந்த விடுதலையாகிய இன்பநிலை கிட்டுமென்றும் நம்புகிறார்கள்.

இந்து சமயத்திலோ வென்றால் அதைச்சேர்ந்த பல பிரிவினர்களும் முக்கியமான விஷயங்களில் அநுசரிக்கிற பொதுக் கொள்கைகள் இருக்கிறதாகத் தெரியவில்லை. அவர்களில் ஒரு சாரராகிய "கேவலாத்வைதிகள்" பரமாத்மாவாகிய ஒரே உண்மைப் பொருள்தான் உண்டென்றும், அதைத்தவிர வேறு பொருள் கிடையாதென்றும், ஜீவாத்மாக்களென்று சொல்லப்படுகிற பொருள்கள் பொருள்களேயல்லவென்றும் சொல்லுகிறார்கள். சுத்தாத்வைதிகளாகிய சைவசித்தாந்திகள் பதி, பசு, பாசம், என்னும் முப்பொருள்கள் இருப்பதாகவும், இம்முப்பொருள்களும் அநாதிப் பொருள்களென்றும், இப்பொருள்கள் வெவ்வேறு பொருள்களாயினும் ஜீவாத்மா தனித்து நின்று தொழிற்செய்யும் தன்மை யுடையதாய் இல்லாமல் முதலில் பாசத்தோடும், பின்பு பதியோடும், சார்ந்து நிற்குந்தன்மையுடையதென்றும் சொல்லுகிறார்கள். இன்னும் இவைகளுக்கு வேறுபாடான கொள்கைகளை யனுசரிக்கிற அநேக பிரிவினர்களும் இருக்கிறார்கள்.

ஆகவே இந்து சமயத்தைச்சேர்ந்த பல பிரிவினர்களுக்குள் உள்பொருள்கள் எவை என்னும் விஷயத்திலும், பதி இலக்ஷணம், ஆன்ம இலக்ஷணம், முதலிய விஷயங்களிலும் பொதுக் கொள்கைகள் இல்லாதிருப்பினும் கடவுள் வழிபாடு வேண்டியது அவசியமென்று யாவரும் வற்புறுத்துகின்றனர். கடவுளை எவ்வாறு வழிபடல் வேண்டுமென்பதைப்பற்றிச் சிந்திக்குமுன் கடவுள் வழிபாடு எதற்கென சற்று ஆராய்வோம்.

கடவுள் வழிபாடு நம் பொருட்டா? அல்லது கடவுள் பொருட்டா?—நம் பிரயோஜனத்தைக் கருதியா! அல்லது கடவுள் பிரயோஜனத்தைக் கருதியா? கடவுள் பேராற்றல், முற்றறிவு, சர்வ காருண்யம் உடையவர். பேரின்பம் நிறைந்தவர். நாம் வழி

படாவிட்டால் அவருக்குக் குறைவென்ன ? நாம் வழிபடாவிட்டால் அவருடைய பேரின்பத்திற்குக் குறைவுண்டாகுமோ? அற்ப அறிவுடையவர்களாகிய நாம் சர்வ காருண்யராகிய பேரின்பம் நிறைந்த முற்றறிவுப்பொருளாகிய பரமாத்மாவை வழிபடாவிட்டால் அவர் ஒரு சிறிதேனும் சலனப்படுவாரோ ? கடவுளுக்குக் கோபந்தானுண்டோ ? பேரின்பம் நிறைந்த முற்றறிவுப்பொருளாகிய பரமாத்மாவுக்கு எவ்வகையானும் சலனமாவது, இன்பக் குறைவாவது, கோபமாவது, உண்டாகாதென்பது திண்ணம். ஆகவே கடவுள் வழிபாடு அவர் பொருட்டன்று. நம்பொருட்டேயாம். கடவுள் வழிபாடு நம்முடைய ஆன்ம வளர்ச்சிக்கு முக்கிய சாதனமாம்.

ஜீவாத்மாக்களாகிய நமக்கு அறிவு, அன்பு, மனச்சாட்சி தொழிற்படுத்தும் சக்தி (will power) ஞானக்கண் (Religious sense) ஆகிய இவ்வைந்தும் முக்கிய குணங்களாக இருக்கின்றன. இவ்வைந்து குணங்களும் வரவர வளருதலே ஜீவான்ம வளர்ச்சியாகும். இவ்வான்ம வளர்ச்சி எவ்விதம் உண்டாகின்றது ? எவ்விதம் உண்டாகுமென்பதை இந்தப் பிரபஞ்சத்தில் கடவுள் நம்மை எவ்விதம் நடத்திவருகிறார், எவ்விதம் வளர்த்து வருகிறார் என்று ஆராய்ந்து தெரிந்துகொள்ளல்வேண்டும்.

கடவுள் இருக்கின்றார், கடவுளுக்கும் நமக்கும் உண்டாகிய சம்பந்தம் இன்னது, என்கிற விஷயங்களைப்பற்றி ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே அறியும்படியான விதமாக அவனுடைய குணங்கள் அமையப் பெற்றிருந்தாலொழிய இவ்விஷயங்களைப் பற்றி அவனுக்கு ஏதாவது அறிவுண்டாகுமா ? மிருகங்களிடத்திற்போய் கடவுள் இருக்கிறார், கடவுளை வழிபடல் வேண்டும், என்று சொன்னால் அவைகளுக்கு ஏதாவது தெரியுமா ? இந்தப் பிரபஞ்சத்தில் நடைபெறுஞ் செயல்களெல்லாம் ஒரு அறிவுப் பொருளாற்றான் காரியப்படுத்தப்பட்டு நடைபெறுகிறதென்றும் நன்மைதீமை இன்னதென்று நமக்கு அறிவித்து நன்மையைச்செய்யும்படி தூண்டுகிற ஒரு பரம்பொருள் இருக்கிறதென்றும் அறியும்படியான அறிவு, மனச்சாட்சி, ஞானக்கண் முதலிய கருவிகள்

நமக்கு இருத்தலினாற்றான் இந்தப் பிரபஞ்சத்துக்கு மூலகாரணமாகிய பொருள் முற்றறிவு பேராற்றல் முதலிய குணங்கள் நிறைந்த கடவுளொன்றும் கடவுளுக்கும் நமக்கும் உண்டாகிய சம்பந்தம் இன்னதென்றும் அறிந்து கடவுளை வழிபடும்படியான பாக்கியம் நமக்குக் கிடைத்திருக்கிறது.

நம்முடைய மானிட தேக வளர்ச்சிக்கும் பாது காப்புக்கும் இன்றியமையாத காற்று, ஒளி, ஜலம், முதலியவற்றை நம்மைக் கேளாமலே நம்முடைய பிரார்த்தனையும் முயற்சியும் இன்றியே கடவுள் ஏராளமாய் இந்தப் பிரபஞ்சத்தில் அமைத்து வைத்திருக்கிறார்.

இந்தமானிட தேகத்துக்கு சொற்பமாய் வேண்டிய உணவுக்கும் உடைக்கும் நாம் முயறசிசெய்யும்படிக்கும் இந்த உலகத்தில் மானிடர்கள் ஒருவரோடொருவர் சம்பந்தப்பட்டு ஒருவருக்கொருவர் உதவிபுரிந்து வாழும் படிக்கும் கடவுள் ஏற்பாடு செய்திருக்கின்றார்.

இவ்வித ஏற்பாடு ஏன் செய்திருக்கின்றாரென்று ஆராயுங்கால் அவ்வித ஏற்பாடு நமது அறிவு விருத்திக்கும், அன்பின் பெருக்கத்திற்கும், நல்லொழுக்கத்திற் பழகுங்குணம் அதிகரித்தற்கும் தொழிப்படுத்தும் சக்தி பலப்படுவதற்கும் இன்றியமையாததாய் இருக்கிறதென்பது தெளிவாய் விளங்கும். ஆகவே இந்த உலகத்தில் நாம் முயற்சிசெய்து ஒருவரோடொருவர் சம்பந்தப்பட்டு உதவிபுரிந்து ஐக்கியப்பட்டு நம்முடைய ஆன்ம குணங்களாகிய அறிவு, அன்பு, நல்லொழுக்கம் முதலிய குணங்களை விருத்திசெய்து பேரின்பத்திற்கு நாம் தகுதியுடையவர்களாக வேண்டுமென்பதே கடவுள் இந்த உலகத்தில் நம்மை வளர்த்து வரும் கருத்தென பிரத்தியக்ஷமாய் வெளியாகிறது.

இப்படி நாம் விருத்தியடைந்து வருவதற்கு நம்மிலும் மேலான அறிவுடையவர்களிடத்தில் பழகி அவர்கள் சொல்லுகிறபடி பயின்றால் அறிவுவிருத்திக்கு இடமாகும். நம்மிலும்மேலான அன்பும் நல்லொழுக்கமும் உடையவர்களுடன் நாம் பழகி அவர்

கள் நடக்கிறபடி நாம் நடக்க முயன்றால் நம்முடைய அன்பும் நல்லொழுக்கமும் விருத்தியடையும்.

சித்திரவேலை தெரிந்துகொள்ள முயலுகிறவன் சித்திரவேலையில் தேர்ந்த பெரியவர்களுடைய சித்திரவேலையைக் கவனித்துப் பார்த்தும், அவர்களுடன் பழகியும் அவர்களுடைய போதனைப்படி முயன்றும், சித்திரவேலையிற்பழகி அபிவிருத்தியடையலாமே தவிர மற்றப்படி அபிவிருத்தியடைதல் சாத்தியமன்று.

இதுபோலவே நம்மிடத்திலுள்ள எந்தக்குணத்தையாவது, எவ்வித அறிவையாவது, நடையையாவது, விருத்திசெய்ய நினைத்தால், நமக்கு மேலானவர்களுடன் பழகி, அவர்களுடைய குணங்களின் தன்மையை நன்றாய் அறிந்து அவர்கள் போதனைப்படி நடக்க முயலவேண்டியது அத்தியாவசியம்.

ஆகவே நம்முடைய ஆன்மகுணங்களாகிய அறிவு, அன்பு, நல்லொழுக்கம் முதலிய குணங்கள் விருத்தியடைவதற்கு இக்குணங்களில் நம்மிலும் மேம்பாடுடைய நம்முடைய சகோதரர்களுடன் நாம் பழகி நம்முடைய ஆன்ம குணங்களை அபிவிருத்தி செய்யவேண்டும். அப்படி அபிவிருத்தி செய்வதில் நம்மிலும் மேம்பாடுடைய சகோதரர்கள் அனேகர் இருப்பினும் கடவுளை நோக்க அவர்களுடைய அறிவெல்லாம் சிற்றறிவாகவும், அவர்களுடைய மற்றக்குணங்களெல்லாம் குறைவுபட்டனவாகவும் இருக்குமாகையால் நம்முடைய ஆன்ம குணங்கள் எல்லாவற்றிலும் எவ்வித குறைவும் குற்றமுமின்றி பரிபூரணமாய் நிறைந்துள்ள முற்றறிவும் சர்வ காருண்யமும், பேராற்றலும், பூரண பரிசுத்தமுமுள்ள நமது பரமபிதாவாகிய பகவானுடைய திவ்விய கலியாண குணங்களைப்பற்றி சிந்திக்கச் சிந்திக்க, அறிவு, அன்பு முதலிய குணங்கள் குறைவும் குற்றமுமற்ற நிலையில் இத்தன்மையதென நமக்கு நன்றாய் விளங்கும்.

ஆகவே கடவுளுடைய திவ்விய கலியாண குணங்களைப்பற்றிச் சிந்திக்கவேண்டியது நம்முடைய ஆன்ம வளர்ச்சிக்கு அத்தியாவசியமாய் இருக்கிறது. அப்படி சிந்திப்பதில் நம்முடைய மனதில் யாதொருவிதமான கபடமும் களங்கமும் சந்தேகமுமின்றி

கடவுளிடத்தில் பூரண அன்புவைத்து பூர்ணமனதோடும் விசுவாசத்தோடும் சிந்தித்தல் வேண்டும். அப்படிக்கின்றிச் சிந்தனைசெய்தால் கடவுளுடைய குணங்கள் நமக்கு விபரீதமாகவே படும். நம்முடைய நன்மையின் பொருட்டு நமக்கு நேரிடும் துன்பங்களை வைத்து கடவுள் நம்மை அனுவசியமாகக் கஷ்டப்படுத்துகிறாரென்று நினைக்கும்படி நேரிடும். இவ்விதமாகவே பலபல விபரீதக் கொள்கைகள் உண்டாகவும் ஏதுவாகும்.

கடவுளுடைய திவ்விய கலியாண குணங்களைப்பற்றிச் சிந்தித்தால்மட்டும் போதாது. ஒரு குணத்தின் தன்மை இன்னதென்று தெரிவது அந்தக்குணத்தை நம்முடைய குணமாக்குவதற்கு முதற்படியே தவிர தெரிந்துகொண்டதினால் மட்டும் அந்தக் குணம் நம்முடைய குணமாகமாட்டாது. அந்தக்குணம் நம்மிடத்தில் விருத்தியடைவதற்கு அந்தக்குணத்தில் நாம் பயில்வேண்டும். ஆதலின் கடவுளுடைய திவ்விய கல்யாண குணங்களைப்பற்றி மெய்யுணர்வோடும், உள்ளன்போடும் சிந்தித்து அவருடைய குணத்தின் தன்மை இன்னதென்று தெரிந்து அவ்விதம் ஒழுகல் வேண்டும். கடவுள் இந்த உலகத்தில் நம்மை முயற்சி செய்யும்படி செய்து நன்மை இன்னது தீமை இன்னது என்பதைத்தெரிவித்து மானிடர்கள் ஒருவரோடொருவர் இவ்விதமாய் நடக்கவேண்டுமென்று இடைவிடாது தூண்டிக்கொண்டே வருகிறாராகையால் அவருக்கு நாம் அன்புசெய்து அவர் நமக்கு உணர்த்தியவாறு ஒழுகி ஆன்ம குணங்களின் அபிவிருத்திக்கேற்ற நடைகளில் நாம் பழகவேண்டும்.

இவ்விதம் பழகுவதில் நமக்கு இடையிடையே கஷ்டம் சம்பவிக்கக்கூடியதாயும் நமக்கு வேண்டியவற்றில் குறைவுகள் நேரிடக்கூடியதாயும் இருத்தலால் கடவுளுடைய திவ்விய கலியாண குணங்களை நாம் திட்டமாய் அறிந்து கடவுள் நமக்குப்பிதாவென்பதையும் அவருக்கு நாம் பிள்ளைகளென்பதையும் உணர்ந்து நம்முடைய ஆன்மவளர்ச்சிக்கேற்ற சௌகரியங்கள் ஏதாவது குறைவுபடினும் அக்குறை நீங்கக் கடவுளை நாம் பிரார்த்தித்தல் வேண்டும்.

பிரார்த்தித்தல் என்றால் வாயினால் கடவுளிடத்தில் விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டுமென்பது கருத்தல்ல. நமது குறைவுகள் நாம் சொல்லாமலே கடவுளுக்குத் தெரியும். நமக்கு இவ்வித குறைவு உள்ளதென்பதையும் அக்குறைவை கடவுள்தான் நிவர்த்திக்கக்கூடுமென்பதையும் நாம் உணர்ந்து அக்குறைவுநீங்க வேண்டுமென்று கடவுளை நாடி நிற்றலே பிரார்த்தனையாம்.

இவ்விதம் நாடி நில்லாமலே நம்முடைய குறைவுகளில் எத்தனையோ குறைவுகளை கடவுள் நிவர்த்திக்கிறார். ஆயினும் கடவுளை நாம் வேண்டாது கிடைக்கிற நன்மைகளை உணராமல் அதினால் உண்டாகிய பிரயோஜனத்தை நாம் நழுவவிடுதல்கூடும்.

ஒரு மனிதன் தனக்கு வியாதி இருக்கிறதென்றும் அவ்வியாதியை ஒரு குறிப்பிட்ட வைத்தியன் தீர்க்கக்கூடுமென்றும் நம்பி அவ்வைத்தியனிடத்திற்சென்று வைத்தியம் செய்துகொண்டால் அவன் சொற்படி நடந்து பூரண பயன் அடைவான். அல்லாது, தன்னில் வியாதி இல்லையென்று நினைத்தாலாவது அப்படி நினைத்தவிடத்து அந்த வைத்தியனிடத்தில் நம்பிக்கை இல்லாவிட்டாலாவது அந்த வைத்தியன் வலியச்செய்யும் வைத்தியத்தினால் யாதொரு விதமான பிரயோஜனமும் உண்டாகமாட்டாது. மருந்துகொடுத்தால் கொட்டிவிடுவான். வைத்தியன் சொல்லுகிற பத்தியபாகங்களை அனுசரிக்கமாட்டான்.

இதுபோல நம்முடைய ஆன்ம வளர்ச்சிக்கேற்ற சாதனங்களில் குறைவுபட்டவிடத்தில் அக்குறைவை உணர்ந்து கடவுளை குறையிரந்து அந்தக்குறைபாடு அவன் அருளால் நீங்கி அப்படி நீங்கியதென்று நாம் உணர்ந்தால் நமக்கு மிகுந்த பலனுண்டாகும். இவ்விதம் குறையிரத்தலில் நம்முடைய குறைவு நீங்காமற் போனாலும் போகும். அவ்விதம் நீங்காமற்போனால் மனம்வருந்துதல் கூடாது. நம்முடைய குறைவு இன்னதென்பது கடவுள் ஒருவருக்கே நன்றாய்த் தெரியும். நமக்குக் குறைபாடென்று நாம் நினைப்பது நமக்குக் குறைபாடாக இல்லாமலிருக்கலாம். அல்லது அந்தச் சமயத்தில் நீங்குவதில் நமக்குப்பிரயோஜனம் இல்லாமலிருக்கலாம்.

ஆதலின் நமக்கு எவ்வித குறைபாடு நேரினும் கடவுள் நம்முயிர்க்குயிராய் நம்மோடு உடன் உறைதலை உணர்ந்து அவரையே பற்றிக்கிடத்தல் வேண்டும்.

ஆகவே கடவுளுடைய திவ்விய கலியாண குணங்களை உண்மையான முழு மனதோடு சிந்தித்து கடவுளிடத்தில் பூரண அன்பு செலுத்தி அவர் உணர்த்தியவாறு ஒழுகி அவரைக்குறையிரந்து அவரையே பற்றிக்கிடந்து அவர் நம்முயிர்க்குயிராய் உடனுறைதலை உணர்தலே நம்முடைய ஆன்ம வளர்ச்சிக்கு ஏற்ற சாதனங்கள். அவ்விதம் செய்தலே உண்மையான கடவுள் வழிபாடு. இது பற்றியே ஆன்றோர்கள் "கடவுளை மெய்யுணர்வாலும் உள்ளன்பாலும் வழிபடல் வேண்டும். கடவுள் வழிபாடு உண்மையான மன அமைதிக்கும், பேரின்பத்திற்கும் இன்றியமையாதது. கடவுளிடத்தே நாம் செய்யத்தகும் உண்மை வழிபாடாவது நாம் அவர்க்கு அன்பு செய்தலும் அவர் நமக்கு உணர்த்தியவாறு ஒழுகி வாழ்தலுமேயாம். கடவுளைக் குறையிரத்தலும் அவரையே பற்றிக்கிடத்தலும் நம்முயிர்க்குயிராய் நம்மோடு அவர் உடனுறைதலை நமக்கு நாமே உணர்ந்து அநுபவித்தலுமே ஆன்ம வளர்ச்சிக்குரிய சாதனங்கள்" என்று சொல்லியிருக்கின்றனர்.

அதிகாரம் 7.

கடவுள் வழிபாடு.

பாகம் II.

விக்கிரக ஆராதனை.

"படைப்புப்பொருள் எதுவுமே கடவுளாகக்கண்டு வழிபடுதற்கு உரியதன்று" (பிரம சமயக் கொள்கை).

இந்து சமயத்திலும் அதைச்சேர்ந்த பல பிரிவினர்களும் கடவுளை வழிபடுதற்கு உருவத்திருமேனி அவசியம் வேண்டற்பாலது என்று சொல்லுகிறபடியால் அதைப்பற்றிச் சற்று ஆராய்வாம். கடவுளுடைய திவ்விய கலியாண குணங்களைச் சிந்திப்பதற்கு எவ்வித உருவத்திருமேனியாவது அவசியமா? அவசியமில்லையா? என்னும்விவகாரத்தை யோசியாமலே விவகாரரீதியாய் எவ்வித உருவத்திருமேனி யாவது வேண்டுமென்றே வைத்துக் கொள்வோம். அப்படி வைத்துக்கொண்டாலும் கடவுளுடைய திவ்விய கலியாண குணங்கள் விளங்கக்கூடிய ஏதாவது ஒரு உருவக்குறியை முன்னிலையாக வைத்துக்கொண்டு சிந்தித்தால் மட்டும் பயன்படுமே தவிர கடவுளுடைய குணங்கள் விளங்கப் பெருததும் விளங்கப்பெற்றாலும் மனதுக்குப்படாத விதமாக வெகு சிறிதாய் விளங்கப்பெறும் உருவக்குறியை முன்னிலையாக வைத்துத்தியானிப்பதால் யாதுபயன்?

இந்தப் பிரபஞ்சம் முழுவதும் கடவுளுடைய திருமேனியாகவே இருக்கின்றது. ஜீவான்மாக்களெல்லாம் கடவுளுடைய திருமேனிகளாயிருக்கின்ருர்கள். கடவுள் பேராற்றலுடையவரென்றும் சர்வ காருண்யரென்றும், பூரணபரிசுத்தரென்றும், நாம் அறிந்தது எப்படி? இந்த ஜடப்பிரபஞ்சத்திலும் ஜீவான்மாக்களிடத்திலும் அவர் நடத்துகிற செயல்களாலன்ருே? அவ்வித செயல்கள் ஒருகாலத்தில் நடந்து இன்னொருகாலத்தில் நின்று போய் விட்டதென சொல்லுகிறதற்கிடமில்லையே! எப்பொழுதும் நடந்து கொண்டேயிருக்கின்றனவல்லவோ! நமக்கு எட்டியமட்

டில் கடவுளுடைய திருவருட் செயல்கள் எங்கும் ஒரேவிதமாய் விளங்குகின்றதோ? கடவுளுடைய திவ்விய கலியாணகுணங்களை எங்கும் ஒரேவிதமாய் கிரகிக்கும்படி இருக்கின்றதோ?

மணிவாசகப்பெருமான், திருநாவுக்கரசு ஸ்வாமிகள், கிறிஸ்துநாதர் முதலிய மகான்களிடத்தில் கடவுள்எவ்விதமாய் விளங்குகின்றாரோ அதுபோல குடிகாரர்களிடத்திலும் உலக இன்பமே பெரிதென மூழ்கிக்கிடக்கும் சிறியர்களிடத்திலும் விளங்குகின்றாரா? பிரமாண்டமான அண்டங்களை முன்னிலையாக வைத்து கடவுளுடைய கலியாண குணங்களை அறியக்கூடியதுபோல் களிமண்ணின் சிலபாகத்தை முன்னிலையாகவைத்து அறியக்கூடுமோ?

திருநாவுக்கரசு ஸ்வாமிகள்

"விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே."

என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கிறபடி கடவுள் சர்வவியாபியாயிருப்பினும் மறைந்து நின்று தன்னுடைய திருவருட்செயல்களை நடத்துகின்றவராயிருக்கிறபடியால் இந்தப் பிரபஞ்ச ஜடப்பொருளிலும் ஜீவான்மாக்களிடத்திலும் எந்தெந்தப்பொருள்களில், எந்தெந்த ஜீவான்மாக்களிடத்தில் நம்முடைய சிற்றறிவுக்குப் புலப்படும்படி கடவுளுடைய திவ்விய கலியாண குணங்கள் விளங்குகின்றதோ அந்தந்தப் பொருள்களை அந்தந்த ஜீவான்மாக்களை முன்னிலையாக வைத்து அன்பென்னும் கோலைநாட்டி அறிவென்னும் கயிற்றால் முறுகவாங்கிக் கடைந்தாலொழிய கடவுளுடைய திவ்விய கலியாண குணங்கள் நமக்கு வெளிப்படுமா?

காலையில் தங்கமயமாய் ஒளிவீசி பிரகாசித்து எழுகின்ற சூரியனைப்பார்த்தவுடன் அந்தச்சூரியனை உருவக்குறியாக வைத்துக்கொண்டு கடவுளைத்தியானஞ் செய்யலாகாதா? இந்தப்பூமியினின்றும் சுமார் 10கோடி மைலுக்கப்பாலுள்ள சூரிய அண்டத்

தைச் சிருஷ்டித்ததும் கடவுளே! இந்தச் சூரிய அண்டத்தை நமது பூமி முதலிய அநேக கிரகங்கள் சுற்றிவரும்படி செய்கிறதும் கடவுளே! அப்படிச்சுற்றி வருவதில் கடவுளுடைய ஆக்கினைக்குக் கொஞ்சமும தவருது அந்தந்த கிரகங்கள் அததற்குக் குறிப்பிட்ட வழியாக அததற்குக் குறிப்பிட்ட காலத்திற்குள் சுற்றி வரும்படி செய்கிறதும் கடவுளே! ஒவ்வொரு கிரகத்தினின்றும் சூரியனுனது எத்தனையோ கோடி மைல்களுக்கப்பாலிருந்தும் அதைச்சுற்றிவரும் கிரகங்களுக்கெல்லாம் உஷ்ணத்தையும் ஒளியையும் கொடுக்கும்படியான விதமாகச் சூரியனை சிருஷ்டித்ததும் கடவுளே! சூரிய வெப்பமாவது ஒளியாவது இல்லாவிட்டால் புல் பூண்டுகளாவது ஜீவப்பிராணிகளாவது உண்டாகவும் மாட்டா! வளரவு மாட்டா.

"விசும்பிற் றுளிவீழினல்லால் மற்றாங்கே பசும் புற்றலை காண்பரிது" என நாயனர் அருளியிருக்கின்றனர். மழை இல்லாவிட்டால் நாம் ஜீவிக்கவே முடியாது. அப்படி மழை பெய்வதும் சூரிய வெப்பத்தினுலேயே. சமுத்திரத்தில் ஏராளமான ஜலத்தை அமைத்து அந்த ஜலமானது சூரிய வெப்பத்தால் ஆவியாகமாறி மேகமாகத்திரண்டு பலவிடங்களுக்குச்சென்று மழையாய்ப் பெய்யும்படி மழைக்குச் சூரியனைக்காரணமாகச்செய்ததும் கடவுளே!

இவ்விதமாக சூரியனை அறிகுறியாக வைத்துக்கொண்டு கடவுளுடைய கலியாண குணங்களைச் சிந்திக்குங்கால்கடவுளுடைய பேராற்றலும், சர்வ காருண்யமும், முற்றறிவும் விளங்குவதற்கு ஏதுவாய் இருக்கிறதல்லவா? இதுபற்றியே இந்தச்சூரியனையும் இந்தச் சூரியனைப்போலொத்த மற்ற அண்டங்களையும் சிருஷ்டித்து அந்தந்த அண்டங்கள் அததற்கு இட்ட ஆக்கினைப்படி நடைபெறும்படிசெய்தது கடவுளேயென்று பொருள்படும்படி அண்டகோடிகள் அந்தரத்தில் தாழாமல் நிலை நிற்க விலையோ? என்று தாயுமான ஸ்வாமிகள் அண்டங்களைக்குறிகளாக வைத்து கடவுளுடைய குணங்களைப்பற்றி தியானஞ்செய்திருக்கிறுர்கள் அல்லவோ! ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய ஜீவிய சரித்திரத்தில்

கடவுள் தன்னை எவ்விதமாக நடத்துகிறாரென்றும் பிற ஆன்மாக்களை என்ன விதமாய் நடத்திவருகிறாரென்றும் யோசித்துப்பார்த்தால் ஜீவான்மாக்களை கடவுள் தனக்குத் திருமேனிகளாகக் கொண்டு அவர் செய்துவரும் திருவருட்செயல்கள் நிமிஷந்தோறும் விளங்கும்.

சின்ன ஆசியாவில் பெத்லேம் என்னும் ஊரில் ஒருமாட்டுத் தொழுவில் பிறந்த ஒரு சிறு குழந்தையை 33 வயதுக்குள் தெய்வ பக்தியிலும் பரோபகாரத்திலும் முதிர்ச்சியடையும்படி வளர்த்து அக்குழந்தைக்கு பருவம் வந்தபின் கடவுளுடைய திவ்விய கலியாண குணங்களைப்பற்றியும் நாம் நடக்கவேண்டிய விதத்தைப்பற்றியும் பிரசங்கஞ்செய்து வருங்காலத்தில் சிலர் அவர் பேரில் பகைகொண்டு அவரைச் சிலுவையில் அறைய அப்படிச் சிலுவையிற்கிடந்து கஷ்டப்படுங்காலத்தில் "பிதாவே என்னை இவ்விதம் துன்பப்படுத்துகிறவர்களை மன்னியும். அவர்கள் அறியாமையால் இவ்விதம் செய்கிறார்கள்", என அவரைத் துன்பஞ் செய்தவர்களை மன்னிக்கும்படி கடவுளைப் பிரார்த்திக்கும்படியான பக்குவத்தை அடையும்படி செய்ததும் கடவுளல்லவோ!

"முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனை
பத்திநெறி யறிவித்து பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமல மறுவித்து சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே"

என்று மனமுவந்து ஸ்தோத்திரம் செய்யும்படியானவிதமாக மணிவாசகப்பெருமானை பக்குவப்படுத்தியதும் திருவருளல்லவோ!

"பாராதி தனிலுள்ள செயலெலாம்
முடிவிலே; பார்க்கின் நின்செய லல்லவோ;
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற;
பரிபூரணா னந்தமே."

என்று தாயுமான ஸ்வாமிகள் ஸ்தோத்திரம் செய்திருக்கிறபடி கடவுளுடைய திருவருட் செயல் இந்தப்பிரபஞ்சம் முழுவதும் விளங்கிக்கொண்டிருக்க வில்லையோ!

இவ்விதமாக கடவுளுடைய திருவருட்செயலும் அவருடைய திவ்விய கலியாண குணங்களும் இந்த ஜடப்பிரபஞ்சத்திலும் ஜீவான்மாக்களிடத்திலும் விளங்கிக்கொண்டிருப்பதால் அவருடைய குணங்கள் எங்கெங்கே எந்தெந்தச் செயல்கள் மூலமாக வெளிப்படுகின்றனவோ அந்தந்தப்பொருளை அந்தந்தச்செயலை முன்னிலையாக வைத்துக்கொண்டு கடவுளைத் தியானஞ்செய்தால் மனது ஒர்மைப்படாதா ? அந்தந்தச் செயலின் மூலமாய் வெளிப்படுகிற குணங்கள் நமக்குப்புலப்படாதா ? இவ்விதமன்றி கடவுளுடைய குணங்கள் புலப்படுவதற்கு வேறுவழியுமுண்டோ !

சித்திரவேலையில் தேர்ந்த ஒருவனுடைய பெருமையை அறிய வேண்டுமானல் அவனுடைய உயர்ந்த சித்திரவேலைகளைப் பார்த்தும் அவனோடு சித்திரவேலையைப்பற்றிச் சம்பாஷித்தும் அவன் சித்திர வேலையைப்பற்றிச் சொல்லுகிற பிரசங்கங்களைக் கேட்டும் அவன் சித்திரவேலையைப்பற்றி எழுதியிருக்கிற புஸ்தகங்களை வாசித்தும் அவனது பெருமையை அறியலாமே தவிர அவனுடைய தேகத்தைப்பார்த்தால்மட்டும் அல்லது அவனுடைய தேகத்தின் ஒருபாகமாகிய விரல் அல்லது விரலின் நகத்தைப் பார்த்தால்மட்டும் அவனது பெருமை விளங்குமோ ? அவனது செயலை ஒரு சிறிதும் விளக்கக்கூடிய தன்மையில்லாத அவனது தேகத்தின் பாகமாகிய ஒரு சிறுவிரலை முன்னிலையாகவைத்து எவ்வளவுதூரம் சிந்தித்தாலும் அவனது பெருமை விளங்குமோ ?

விக்கிரக ஆராதனம் செய்பவர்கள் விக்கிரகத்தைத் தாங்கள் வணங்கவில்லை யென்றும் விக்கிரக வாயிலாக தாங்கள் வணங்குவதாகவும் சொல்லுகிறார்கள். கல்லினாலோ செம்பினாலோ செய்யப்பட்ட விக்கிரகத்தில் கடவுளுடைய எந்தக் கலியாணகுணம் பிரகாசிக்கின்றது. கடவுள் பேராற்றல், முற்றறிவு, சர்வகாருண்யம், முதலிய எண் குணங்களுடையவரென ஆன்றோர்கள் சொல்லுகின்றனர். விக்கிரகத்தில் கடவுளுடைய பேராற்றல் விளங்குகிறதா ? முற்றறிவு விளங்குகிறதா ? சர்வ காருண்யம் விளங்குகிறதா ? மற்றெந்தக் குணம் விளங்குகின்றது ?

இமய பர்வதத்துக்கு அருகில்போன ஒருவனுக்கு அந்த இமய பர்வதம் முழுவதும் காட்டமுடியாதாகையால் இமய பர்வதத்தின் ஒருபாகமாகிய சில இடத்தைக்காண்பித்து இதுதான் இமய பர்வதமென்று சொன்னால் அவன் திருப்தியடைவது போல பிரபஞ்ச முழுவதும் கடவுளுடைய உருவத்திருமேனியானாலும் அதை முழுவதும் அறிய மனதாவது பொறிகளாவது எட்டாதாகையால் பிரபஞ்சத்தின் ஒருபகுதியாகிய விக்கிரகத்தை வைத்து கடவுளைத் தியானிப்பது சரியான வழிதானென்று சில ஆன்றோர்கள் சொல்லுகின்றனர்.

இமய பர்வதத்துக்கு வெகுதூரத்துக்கப்பால் சில பாறைகள் தோன்றும். அந்தப்பாறையைமட்டும் பார்த்து இதுதான் இமய பர்வதமென்று திருப்தியடைவார் ஒருவருமிலர். அதற்கப்பால் சில சில குன்றுகள் தோன்றும் அந்தக்குன்றுகளைப்பார்த்து இது தான் இமய பர்வதமென்று திருப்தியடைவார் ஒருவருமிலர். இமய பர்வதத்தின் உண்மையான அடிவாரத்திற் சென்று அந்த இமய பர்வதம் ஓங்கிவளர்ந்து நிற்பதையும் அந்த மலைச்சாரல்களிலெல்லாம் மரங்கள் அடர்ந்து வளர்ந்து செழித்திருப்பதையும் கண்டு ஒருவன் ஒருவாறுதிருப்தியடையலாம். இதற்குமேல் சென்று பார்ப்பாருமுளர். பூராவாகப் பார்க்கமுடியாதவிடத்து எவ்வளவு தூரம் எட்டிப்பார்க்கமுடியுமோ அவ்வளவு தூரம் எட்டிப்பார்த்து பார்ககப்படும் பொருளின் தன்மையை அறிய முயல்வதுதான் முறையே தவிர அந்தப்பொருளின் ஏதோ சிறிது பாகத்தைப் பிரத்தியேகப்படுத்திவைத்து அந்தப்பொருளின் தன்மையை அறிய முயல்வது முறையன்று.

இமய பர்வதத்தின் பக்கத்திலுள்ள ஒருசிறுகல்லை திருநெல்வேலிக்குக்கொண்டுவந்து ஓர் இடத்தில்வைத்து இதுதான் இமய மலை, இமயமலையின் பாகமாகிய இந்தச் சிறுகல்லைவைத்து இமய மலையின் சொரூபத்தை இன்னதென நீ அறிந்து கொள்ளென ஒருவன் சொல்வானானால் அப்படிச் சொல்பவனை அறிவுடையவனென ஒருவரும் ஒப்புக்கொள்ளார்.

இந்தப்பிரபஞ்சப் பொருள்களில் கடவுளுடைய இலட்சணங்களை ஒரு சிறிதும் காட்டாததும் அப்படிக்காட்டினாலும் மனதுக்குப் புலப்படாதவிதமாக வெகு சொற்பமாய்க்காட்டுகிறதுமான கல்லையோ செம்பையோ எடுத்து விக்கிரகமாக வார்த்து அதைப் பிரத்தியேகப்படுத்திவைத்து இந்த விக்கிரகவாயிலாகக் கடவுளை வழிபடு என்று சொன்னால் என்ன விதமாய் வழிபடுகிறது? கடவுளுடைய எந்த இலட்சணங்களை அந்த விக்கிரகமூலமாய் அறியக்கூடும்?

இப்படி வழிபடுதல் இமயமலைச்சாரலிலுள்ள ஒரு கல்லைப் பிரத்தியேகப்படுத்தி இன்னோர் ஊருக்குக்கொண்டுபோயவைத்து இதைவைத்து இமயமலையின் சொரூபம் இதுவென அறிந்து கொள்ளென்று சொல்வதற்கொப்பேயாகும்.

விருதை சிவஞான யோகிகள் அன்புடன் எழுதி அச்சிட்டிருக்கிற தேவோபாசனதீபம் என்னும் புஸ்தகத்தில் பரமேசுரனுக்கு அங்கங்கள் கற்பித்து வணங்குவதைப்பற்றிக் கூறுமிடத்தில் "மனிதனுக்குப்போல கைகால் முதலியவாக நினைத்துத் தியானிக்கக்கூடாது" என்றும், "ஞானமே சிகை, சர்வ வியாபகத்துவமே முகம், இச்சா ஞானக்கிரியா சக்திகளே முக்கண்கள், வேதாந்தப் பொருளாதலே பூணூல், நான்கு வேதங்களே நாற்கால்மான், முத்தொழில் செய்பவர்க்கு மூலம் ஆதலே திரிசூலம், எல்லாம் அறியும் அறிவே சந்திரன், தருமமே இடபம், ஆகத்தியானிக்கும்படி ஆகமங்கள் விதித்திருக்கின்றன" என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

அந்தோ! இதுவென்ன விபரீதம்! மணிவாசகப்பெருமான் அறிவு, சிவ பக்தி, ஜீவகாருண்யம் நிறைந்த மகான் என்பதை ஒருவன் அறியவேண்டுமானால், மணிவாசகப்பெருமான் அருளிய திருவாசகத்தைப்படித்தும் கேட்டும் சிந்தித்தும் தெளிந்தாலொழிய அறிதல் கூடுமோ? ஒரு ஓலை நறுக்கை எடுத்து அதில் மூன்றுகோடு போட்டு அவைகளில் முதல்கோடு மணிவாசகப் பெருமானுடைய அறிவு, இரண்டாவது கோடு அவருடைய சிவ பக்தி, மூன்றாவதுகோடு அவருடைய ஜீவகாருண்யம், என்று

பாவித்துச் சிந்தித்தால் மணிவாசகப்பெருமானுடைய உயர்ந்த குணங்கள் தெரிதற்பாலதோ? ஒரு விக்கிரகத்திலுள்ள சிகைக்கும் கடவுளுடைய சர்வ ஞானத்துக்கும் பொருத்தமென்னை? மூன்று அங்குலநீளமும் இரண்டு அங்குல அகலமுமுள்ள கண்டப்பொருளாகிய முகம் கடவுளுடைய சர்வ வியாபகத்துவத்தை எப்படி விளக்குதல் கூடும்.

சுயம்பிரகாசமின்றி சூரியன்ஒளிபெற்று பிரகாசிக்கிற அசேதனப்பொருளாகிய சந்திரன் கடவுளுடைய முற்றறிவுக்கு எவ்விதம் அறிகுறியாகும. இன்னும் மேற்குறிப்பிட்ட மற்ற அவயவங்கள் அவைகளால் குறிப்பிடப்படுகிறதாகச் சொல்லப்படுகிற குணங்களை எவ்விதம அறிவுறுத்தும்.

கடவுளுடைய திவ்விய கலியாண குணங்களை அறியவேண்டுமானல் கடவுளால் அருளிய சேதன அசேதனப்பொருளடங்கிய பிரபஞ்சமாகிய புஸ்தகத்தை நன்றாய் வாசித்து கடவுளுடைய திவ்விய கலியாண குணங்கள் எவ்வெவ்விடத்து வெளியாகுமோ அவ்வவ்விடத்தில் மனதைச்செலுத்தி உரவுகோல்நட்டு உணர்வு கயிற்றினல் முறுகவாங்கிக் கடைந்தால்மட்டும் அக்குணங்கள் வெளிப்படுமேயல்லது வேறு விதமாய் வெளிப்படுதல் கூடுமோ?

"ஒரு விருக்ஷத்தின் தன்மை அதன் பழத்தினல் தெரியும்" என்று ஓர் பழமொழியுண்டு. விக்கிரகத்திலுள்ள அவயவங்கள் மேற்கூறியவாறு கடவுளுடைய குணங்களைப்பற்றிச் சிந்திப்பதற்குச் சாதனமாயிருக்கிறதா என்று விக்கிரகவாயிலாக வணக்கஞ்செய்கிறவர்கள் அவ்வித பயன் அடைகிறர்களாவென்றும் தெரிய விரும்பி, "மேற்குறிப்பிட்ட அவயவங்களை வைத்து வழிபடும் பயனென்ன? அவ்வவயவங்கள் கடவுளுடைய எந்தக்குணங்களை யாவது குறிப்பிடுகிறதா? என்று இந்த பிரம சமாஜத்தைச்சேர்ந்த ஒருவர் சிவாலயத்துக்குத் தினசரிபோய் மூன்றுமணி நேரத்துக்குக்குறையாமல் தெரிசனஞ் செய்துவருகிற இரண்டு பக்தர்களிடத்திலும் சைவ சித்தாந்தத்தில் மிகப்பற்றுதலுள்ள இரண்டு தமிழ்ப்பண்டிதர்களிடத்திலும், சைவசித்தாந்தத்தையும், சைவ

சமயத்தையும்பற்றி அடிக்கடி பிரசங்கஞ்செய்கிற ஒருபெரியவரிடத்திலும், இன்னும் பல சைவர்களிடத்திலும் கேட்டதில் ஒருவரும் ஷெ அவயவங்கள் இன்னவித பயனைக் கொடுக்கிறதென்றாவது இன்ன இன்ன அவயவங்கள் இன்ன இன்ன குணங்களைக் காட்டுகின்றனவென்றாவது சொல்லத்தெரியாதென்று விடை கூறினார்கள். மேற்குறிப்பிட்டவர்கள் அல்லாத வேறொருவர்மட்டும் சிகை ஞானத்தைக் குறிப்பிடுகிறதென்று விடைபகர்ந்தனர். அவருக்கு மற்ற அவயவங்களின் குறிப்புகளும் தெரியக்கூடுமென்று மற்றவைகளைப்பற்றி அவரிடத்தில் கேட்கவில்லை. இவ்விதமாக விக்கிரகத்தில் அமைக்கப்பட்ட அவயவங்களின் நோக்கம் இன்னதென்பது சிவஞான யோகிகளைப்போலொத்த சில யோகிகளுக்கும் சில பண்டிதர்களுக்கும் மட்டும் தெரிந்திருக்கக்கூடுமேதவிர விக்கிரகவாயிலாக வழிபடுகிறவர்களில் பதினாயிரத்தில் ஒன்பதினாயிரத்துத் தொளாயிரத்துத்தொண்ணூற்றொன்பது பேருக்குத் தெரியாதென்பது திண்ணம். அப்படியானால் இவ்வித வணக்கத்தின் பிரயோஜனமென்ன?

மேற்கண்டவிதம் தெரியாதிருப்பது தெரிந்துகொள்ளாத குற்றமேதவிர விக்கிரக வணக்க ஏற்பாட்டின் குற்றமல்லவென்று சிலர் சொல்லலாம். மேற்கூறியபடி குறிப்பிட்ட அவயவங்களுக்கும் அவைகளினால் குறிப்பிடப்படும் கடவுளுடைய குணங்களுக்கும் பொருத்தம் காணப்படாமையாலும் விக்கிரகவணக்கஞ் செய்பவர்களில் பெரும்பாலார் தெரியாமலிருப்பதாலும் விக்கிரக வணக்கம் ஏற்பாடாகி ஆயிரக்கணக்கான வருஷங்களாகியும் ஷெ வணக்கஞ் செய்வோர் இந்த ஸ்திதியில் இருப்பதாலும் ஷெ குற்றம் ஷெ ஏற்பாட்டின் குற்றமென்றே சொல்லத்துணியவேண்டியதாயிருக்கின்றது. ஆரிய கண்ட வாசிகள் செய்து போதரும் உபாசனை விக்கிரக ஆராதனை அல்லவென்றும் அது சகளோபாசனையென்றும் விக்கிர ஆராதனையைக் கண்டிக்கிறவர்கள் விக்கிரக ஆராதனைக்கும் சகளோபாசனைக்கும் இலக்கணம் உணராது அவை இரண்டினையும் ஒன்றெனக்கொண்டு இகழுதல் பொருந்தாதென்றும் சிலர் சொல்லுகின்றனர்.

விக்கிரக ஆராதனம் என்னும் பெயரை வைத்து பேட்டை த. ஆறுமுகநயினார்பிள்ளையவர்கள் இயற்றிய புஸ்தகத்தில் "எல்லாம் வல்ல இறைவர் தாமே தமது உண்மையை வெளிப்படுத்தி அறிஞரைத் தடுத்தாட்கொண்ட அனுக்கிரகத் திருமேனியின் பிரதிமாரூபமே ஆலயங்களிற் காணப்படுவதாம்" என்று சொல்லி யிருக்கிறார்கள்.

ஞானசாகரம் என்னும் பத்திரிகையில் சகளோபாசனையென்னும் விஷயத்தைப்பற்றி வெகு விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் "ஆரிய கண்டவாசிகளாகிய யாமெல்லாம் செய்து போதரும் சகளோபாசனை ஈஸ்வரன் ஓரோர்காலத்து ஓரோர் அன்பர்க்கு அனுக்கிரகிக்கும்பொருட்டு கருணையே திருமேனியாகக்கொண்டு எழுந்தருளிவந்த திருக்கோலக் குறிப்பு விளங்க அமைத்து நிறுத்திய ஆலய வழிபாடாய் அவ்வழிபாடு வாயிலாகவே எம்முணர்வை இழுத்துச்சென்று ஈஸ்வரன்மாட்டு பதிய வைக்கும் சருவியா" மென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆலயங்களில் அமையப்பெற்றிருக்கும் விக்கிரகங்கள், ஈஸ்வரன் அன்பர்க்கு அனுக்கிரகிக்கும்பொருட்டு கருணையே திருமேனியாகக்கொண்டு எழுந்தருளிவந்த திருமேனிகளின் பிரதிமாரூபங்களாயின் அவ்விதப் பிரதிமாரூபங்களை ஆலயங்களில் அமைத்து அவை வாயிலாகக் கடவுளைத் தியானஞ்செய்வது ஒருவாறு ஆன்மவளர்ச்சிக்கு அனுகூலமாகலாம்.

இவ்விதமான சகளோபாசனையின் தன்மையை ஆராயுமுன் எல்லாம் வல்ல ஈஸ்வரன் கருணையே அவ்விதத் திருமேனியாகக் கொண்டு எழுந்தருளிவந்து அன்பர்க்கு அனுக்கிரகித்ததாய்ச் சொல்லுகிறபடி நடந்திருக்கக்கூடுமா வென்பதைப்பற்றியும் ஆலயங்களிலுள்ள விக்கிரகங்களெல்லாம் அவ்விதப் பிரதிமாரூபங்கள் தானா என்பதைப்பற்றியும் ஆராயவேண்டியதாயிருக்கிறது.

ஆலயங்களிலுள்ள வடிவங்கள் அவ்விதப் பிரதிமாரூபங்களாயின் சகளோபாசனை மேற்கண்டபடி அன்பர்களுக்கு அனுக்கிர

கித்தபின்னர் ஏற்பட்டிருத்தல்வேண்டும். மேற்குறித்த அன்பர்கள் சகளோபாசனை அன்னியிலேயே கடவுளை உபாசனை செய்திருத்தல்வேண்டும். ஆலயவடிவங்களைப்பற்றிக் கூறும் ஆகமங்கள் மேற்குறித்த மெய்யடியார்கள் காலத்திற்குப்பின்னர் பிறந்திருக்க வேண்டும்.

இவ்விஷயமாயுள்ள சந்தேகத்தை நிவிர்த்திக்கும்பொருட்டு சிவபக்தியில் சிறந்த ஒரு அன்பரைக் கேட்டதில் "ஆலயங்களிலுள்ள எல்லா வடிவங்களும் வேதங்களில் பொதுவாயும் சிவாகமங்களில் விவரமாயும் கூறப்பட்டுள்ளன. அவ்வடிவங்களின் துணைகொண்டு கடவுளை உபாசித்தவருக்கு அவர் காட்டிய பிரசன்ன வடிவங்களையே இதிஹாஸ புராணங்கள் கூறுகின்றன. இவ்வடிவங்கள்தான் ஆலயங்களில் அமைக்கப்பட்டுள்ள வடிவங்கள். அவ்வாறு அமைத்தது வேதாகமங்களில் கூறியபடியேயன்றி புராண இதிஹாஸங்களில் கூறியபடியன்று. என்றாலும் புராண இதிஹாஸங்களில் கூறிய வடிவங்களும் வேதாகமங்களில் கூறிய வடிவங்களும் ஒன்றேயென்பதிலும் தடையில்லை". என்று சொல்லுகின்றனர்,

மேற்குறித்த அன்பர் சொல்லுகிறபடி ஆலயங்களிலுள்ள வடிவங்கள் ஈஸ்வரன் மெய்யடியார்களுக்கு கருணையே திருமேனியாகக்கொண்டு எழுந்தருளிவந்ததாகச்சொல்லும் காலத்துக்குமுன்னரே வேதாகமங்களில கூறப்பட்டுள்ளனவாக ஏற்படுகின்றது. வேதாகமங்களில் அவ்வித வடிவங்கள் ஆன்றோர்களால் சில அடையாளக் குறிகளுடன் ஏற்படுத்தப்பட்டிருக்கலாமா? என்னும் ஐயத்தை நீக்கும்பொருட்டு மேற்குறித்த அன்பர் "ஆலயங்களிலுள்ள வடிவங்கள் ஆன்றோர்களால் சில அடையாளக்குறிகளுடன் ஏற்படுத்தப்பட்டிருக்கலாமென்று சொல்வது பொருத்தமல்ல. கடவுள்தாகத்தன் அடையாளக்குறியினை உணர்த்தினால் அதுகொண்டு அவனை உணரலாமேயன்றி எத்தகைய ஆன்றோர் ஏற்படுத்திய அடையாளக்குறிகொண்டும் கடவுளை உணர ஒருசிறிதும் முடியாது. அவ்வாறு உணரும் பொருட்டே கடவுள் தன் அடை

யாளக் குறிகளை வேதாகமங்களில் கூறியுள்ளார்” என்று சொல்லுகின்றனர்.

ஆகவே கடவுளரே தன் அடையாளக்குறிகளைக் கூறினுலொழிய எத்தகைய ஆன்றோர்கள் கூறும் அடையாளக்குறிகொண்டும் கடவுளை உணர்தல் ஒரு சிறிதும் முடியாதென்று ஏற்படுகிறது. ஆகவே சகளோபாசனை அல்லது விக்கிரக ஆராதனை செய்யுமுன்னர் ஆலயங்களிலுள்ள வடிவங்கள் தன்னுடைய வடிவங்களென கடவுளரே நேரில் கூறியிருக்கிருரென நம்பவேண்டியதாயிருக்கிறது.

கடவுள் தன் வடிவங்கள் இன்னதென ஆகமங்களில் நேரே கூறியிருக்கிருர் என்பதும், கடவுள் கருணையே உருவத்திருமேனியாகக்கொண்டு எழுந்தருளிவந்து அன்பர்க்கு அனுக்கிரகித்திருக்கிருர் என்பதும் போதுமான ருசுவின்றி நம்பக்கூடாமல் ஆட்சேபனைக்கு இடந்தரக்கூடியதாயிருப்பதால் இதற்கு ருசு என்னவென்று ஷெ நண்பனைக் கேட்டதில் “என்ன ருசு நான் காட்ட, நம் தேசத்தில் சரித்திரம் கிடையாது என்பது தாங்கள் அறிவீர்கள். கடவுளை உருவத்திருமேனியோடு கண்டு களித்தவர்கள் இப்போது இருக்கில் அவர்களைக்கொண்டு ருசுக்கொடுப்பேன். அவர்கள் இருப்பினும் எனக்குக் காட்டு என்றுல் அவர்கள்தான் என்செய்வர். நான்தான் என்செய்வேன்” என்று சொல்லுகின்றனர்.

ஆகமங்களில் கடவுளுடைய வடிவங்கள் கூறப்பட்டுள்ளன, என்னும் முகாந்தரத்தைக்கொண்டு கடவுளே அவ்விதம் கூறியிருக்கிருரென்றும் இதிஹாஸ புராணங்களில் கடவுள் கருணையே உருவத்திருமேனியாகக்கொண்டு எழுந்தருளிவந்து அன்பர்க்கு அனுக்கிரகித்திருக்கிருர் என்று சொல்லுகிறதை வைத்து கடவுள் அவ்விதம் அனுக்கிரகித்திருக்கிருரென்றும் நம்பி வழிபடுவதுதான் மெய்யுணர்ச்சியே யன்றி அவைகளைப்பற்றிச் சந்தேகித்தல் விசுவாசக்குறை என்றும் சொன்னுல் கிறிஸ்தவர் சொல்லுகிறபடி கிறிஸ்தவ வேதத்தையும் மகமதியர் சொல்லுகிறபடி

கோரானையும் மற்ற மதஸ்தர் சொல்லுகிறபடி அவர் அவர் வேதங்களையும் விசுவாசித்து வழிபடுதலும் மெய்யுணர்தலாகுமன்றோ!

ஆனால் உலகங்களிலுள்ள பல சமய வேதப் புஸ்தகங்களும் ஒன்றுக்கொன்று முரணுவதாலும் கடவுளுடைய குணங்களை ஒன்றுக்கொன்று மாறுபட்டுக் கூறுவதாலும் பொருத்தமில்லாத பலகொள்கைகளை எல்லாம் சரியென நம்பி வழிபடுதல முடியாத காரியம். ஆகையால் தக்கவாறு வழிபடும் முறையைப் பலவற்றுளும் ஆராய்ந்து உள்ளபடி உணர்ந்து தெளிந்து வழிபடுதலே சரியான முறையாம்.

கடவுள் நம்மைத் தாய்தகப்பனற்ற பிள்ளைபோல் நம்மனம் போனபோக்கில் போகும்படி யாதொருவிதமான ஆதரவுமின்றி விட்டுவிடவில்லை. கடவுள் நம்மிடத்தில் உயிர்க்குயிராய்த் தழைத்துநின்று அறிவு, மனச்சாக்ஷி, அன்பு, முதலிய அகக்கண்களைக் கொடுத்து அக்கண்கள் வாயிலாக அறிவிலாத நமக்கு அறிவை ஊட்டி மேலான நெறிகளையெல்லாம் புலமாக்கி எப்பொழுதும் இடைவிடாது நம்முடனின்று நம்மை வளர்த்து வருகிறார். மனச்சாக்ஷி வாயிலாக நன்மையின்னது தீமை இன்னது என்று அவர் நமக்கு உணர்த்திவருகிறபோது நீதிநெறிவிஷயமாய் மனிதர்களுக்குள் போராட்டமில்லை. அதுபோலவே கடவுள் நேருக்குநேர் உணர்த்தும் வழிபாடு விஷயமாக போராடுதல் இருக்கவேண்டியதில்லை. ஆதலின் அறிவு அன்பு, மனச்சாக்ஷி முதலிய அகக்கண்களால் உணர்த்தப்படும் உணர்ச்சிக்குப் பொருத்தமான வழிபாடே உண்மையான வழிபாடென ஏற்படுமென்று தோன்றுகிறது.

ஆதலின் விக்கிரக ஆராதனை அல்லது சகளோபாசனையென்று சொல்லும் வழிபாடு அறிவு, மனச்சாக்ஷி, அன்பு முதலிய அகக்கண்கள் உணர்த்தும் உணர்வுக்குப் பொருத்தமாயும் ஆன்மவளர்ச்சிக்குச் சாதனமுள்ளதாயும் இருந்தாலொழிய ஏதோ சில புஸ்தகங்களில் சொல்லப்பட்டிருக்கிறது என்ற முகாந்தரத்தை வைத்துமட்டும் அவ்விதம் வழிபடுதல் முறையன்றெனத்தோன்றுகிறது.

புஸ்தகங்கள் உண்டாகிற விதமும் அவைகளில் அடங்கிய கொள்கைகள் உண்டாகிற விதமும் யோசிக்குங்கால் யார்க்கும் நன்ருய்த்தெரியும். கடவுள் ஒருவரே மாசில்லாதவர். அவர் ஒருவரே முற்றறிவுடையவர். மனிதர்களில் குற்றம் ஒருசிறிதும் இல்லாதவர் ஒருவருமிலர். கடவுள் ஒவ்வொரு ஆன்மாவுக்கும் உடனின்று அவ்வவ்வான்மாவுக்கு வேண்டிய அறிவையும் மேலான நெறியையும் உணர்த்திக்கொண்டிருக்கிருர்.

ஆகையால், சிலகொள்கைகள், பழமையான நூல்களில் எழுதப்பட்டிருக்கின்றன என்ற காரணத்தை முன்னிட்டு, அந்நூலகள் ஆன்ருேர்களால் அருளப்பட்டதெனக் கூறப்படினும் அக்கொள்கைகள் ஆன்மவளர்ச்சிக்குரிய காரியங்களில் புத்திக்கும் அனுபவத்திற்கும் பொருந்தாதிருப்பின் அவைகளைச் சரியென நம்பி அவ்வாறு வழிபடுதல் முறையன்று.

இதுநிற்க. மேற்குறித்த ஞானசாகரத்தில் சகளோபாசனை என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசுகையில் கடவுள் கருணையே திருமேனியாகக்கொண்டு எழுந்தருளி வந்த திருக்கோலக் காக்ஷிகள் உண்மையென்பதை ஸ்தாபிக்க சில ருஜுக்கள் கூறப்பட்டிருக்கின்றன.

கடவுளாலும் பெரியோர்களாலும் நிகழ்த்திய அற்புதங்கள் உலக இயற்கைக்கு மாறுபடுதல் இல்லையென்றும் திருஷ்டாந்தமாக "ஞானசம்பந்தப் பிள்ளையார் திருமைலாப்பூருக்கு எழுந்தருளினகாலத்தே சிவநேசரென்பார் ஒருவர் வளர்த்த அரியபெண் பாம்பு கடித்து இறக்க அப்பெண்ணின் தந்தையானவர் அவளுடம்மைத் தீயிலிட்டுக் கொளுத்தி எலும்புகளையெல்லாம் ஓர் குடத்தில் பெய்து பொதிந்து பிள்ளையார் திருமுன்பே கொண்டுவந்து அவர்க்கு அர்ப்பணஞ்செய்ய பிள்ளையார் அவ்வன்பர்க்கு மிக இரங்கி கபாலீஸ்வரர் திருவாலயத்துட்புகுந்து

"மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரமமர்ந்தா
ஞெட்டிட்ட பண்பி னுருத்திரப்பல் கணத்தார்க்
கட்டிட்டல் காணுதே போதியோ பூம்பாவாய்"

என்னும் திருப்பதிகம் கட்டளையிட்டருளினர் என்றும், அருளா லும் அப்பிண்டம் அழகிய பெண்வடிவாய்க் குடத்தினின்றும் எழுந்ததென்றும் இவ்வற்புதம் உலக இயற்கையோடு இணங்கு மாறுகாட்டுதல் கூடுமென்றும் அந்தப் பெண்ணின்சரீரம் சூக்கும அணுரூபங்களாகப் பிரிந்து அழிய, அங்ஙனம் அழிந்த அதனைத் திரும்பவும் முன்னைத் தூலசரீரமாகும்படி இறைவன் திருவருட் சக்திகொண்டு ஞானசம்பந்தர் செய்வித்திட்டாரென்றும், ஒரு தாய் வயிற்றில் கருவை உற்பத்திசெய்து அதனைச் சிலகாலத்தில் புறப்படுத்தி வளர்த்து அழிக்கின்ற ஈஸ்வரன் திருவருட்செயல் அச்செயல் முறை திரும்பி இடையொருகாலத்து அழிந்ததோர் உருவை பெயர்த்தும் படைத்திடுதல் பொருந்துமோவெனின் அற்றன்று அழியும் பருவமன்றாகிய காலத்தே அழிந்துபட்ட அவ்விளம்பெண்ணை பெயர்த்துத் தந்து கருணை செய்ததாதலின் அது இழுக்கன்றெனவும், அளவிறந்த அண்டங்களையும் அவ் வண்டங்களில் பலவேறு வகைப்பட்ட ஆன்ம சரீரங்களையும் படைத்து ஆன்மாக்களுக்கு போகம் நுகர்விக்கின்ற எல்லாம் வல்ல இறைவன் பாதந்திரமுடைய நம்மைப்போலல்லாது சுதந் திரமுடைய முழுமுதலாதலின் அவனுடைய கருணைக்கும் செய லுக்கும் அளவில்லையென்றும் "விதியும் விலக்குங்கடந்தார்க்கு விதியாதொன்றை விதிப்பாரார்'! என்றும் கூறியிருக்கின்றது.

இவ்வித ருசுப்போதுமானதுதானா? என்று ஆராய்தல்வேண் டும். கடவுளுடைய கருணைக்கும் செயலுக்கும் அளவில்லையாயி னும் இப்பிரபஞ்சத்தை அவரே சில விதிகளை ஏற்படுத்தி அவ் விதிகளுக்கு உட்பட்டு நடத்திவருகின்றார். அழியும்பருவமன்றி அழிந்துபட்ட இளம்பெண்களும் இளம்பையன்களும் உலகில் எத்தனையோ கோடி உண்டு. அவ்விதம் அழிபடும்படி செய்வது கடவுள் கருணைக்கு இழுக்கென்று சொலவார் ஒருவரும் இலர் கடவுள் இவ்வுலகத்தில் ஆன்மவளர்ச்சியே பிரதானமாகக் கொண்டு அவ்வித ஆன்மவளர்ச்சியைக் கருதி சிசுவாயிருக்கும் காலத்திலும் இளமபிராயத்திலும் முதிர்ந்த வயதிலும் வயது வரம்பின்றி ஆன்மாக்களை அவர்களுடைய தூல சரீரங்களைவிட்டுப்

பிரித்துவிடுகின்றார். அவ்விதம் பிரித்தலும் கருணையேயாதலின் அக்கருணைச் செயலைத்தான் ஏற்படுத்திய விதிக்கு விரோதமாய் மாற்றுதல் பொருந்தாது. மேற்குறித்த சிவனேசர் இளம்பெண்ணை திரும்பத்தந்தது கருணையானால் எத்தனையோ கோடி இளம் பெண்களையும் சிறு பையன்களையும் தூல சரீரங்களைவிட்டுப் பிரித்தலும் திரும்பத் தாராதிருத்தலும் கருணையற்ற செயலென்று தானே சொல்லவேண்டும். கடவுள் இந்தப் பிரபஞ்சத்தைதான் இயற்றிய சில விதிகளுக்கு உட்பட்டு நடத்துகின்றார். ஆதலின் விதிக்குமாறாய் நடந்து கருணைசெய்தார் என்று சொல்லுங்கால் விதியின்படியே நடந்து கருணைபுரிதற்குப் போதுமான ஆற்றலும் அறிவும் அவருக்கு இல்லையென்றும் விதிகரு விலகி நடந்துதான் சில சமயங்களில் கருணைசெய்யவேண்டியதாய் இருக்கிறதென்றும் சொல்லும்படி நேரிடும். ஆதலின் மேற்குறித்த அற்புதமும் இதுபோன்ற மற்ற அற்புதங்களும் கடவுளுடைய பேராற்றலுக்கும் முற்றறிவுக்கும் இழுக்காய் முடியுமென்று தோன்றுகிறது.

ஆதலின் இவ்வித அற்புதங்கள் நடந்ததாய்ச் சொல்வது கடவுளுடைய பேராற்றலுக்கும் முற்றறிவுக்கும் பொருந்தாதென்க. ஒவ்வொரு சமயத்தாரும் இவ்வித அற்புதங்கள் நடந்ததாகக் கூறுகின்றனர். ஒன்றுக்கேனும் போதுமான ருசு இருப்பதாகத் தெரியவில்லை. இது நிற்க. கடவுள் அன்பர்கள் பொருட்டு கருணையே திருமேனியாகக்கொண்டு எழுந்தருளிவந்து காக்ஷிகொடுத்தாரென்று சொல்லுகிற சில சரிதைகளைப்பற்றி ஆராய்வோம். மேலே பிரஸ்தாபித்திருக்கிறபடி நம் தேசத்திலோ சரித்திரம் கிடையாது. இருக்கிற ஸ்திதியில் மேற்கண்ட சரிதைகளிற் சிலவற்றிற்கு ருசு என்னவிதமாய் இருக்கிறது என்று பார்ப்போம்.

முதலில் திருநீலகண்டநாயனார் சரிதையைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். சிதம்பரத்தில் குயவர் குலத்திலே பிறந்து சிவபக்தி அடியார் பக்திகளில் சிறந்தவராகிய திருநீலகண்டநாயனார்

ஒருநாள் அவ்வூரிலே ஒரு வேசியிடத்திற் சென்று வீட்டுக்குத் திரும்ப, கற்பிலே சிறந்த அவர் மனைவியார் அதையறிந்து தன் நாயகர் தன்னைத் தீண்டும்படி சென்றபோது நீர் எம்மைத் தீண்டுவீராகில் திருநீலகண்டம் என்று ஆணையிட்டாரென்றும் அதைக் கேட்ட நாயகர் பரமசிவனுடைய திருநீலகண்டத்திலே தாம் வைத்த பக்தி குன்றுவண்ணம் எம்மை என்று பன்மையாகத் தன் மனைவி சொன்னதால் அவளை மாத்திரமேயன்றி மற்றப் பெண்களையும் தன் மனதினால் நினைத்தல் செய்யாது அவ்வாணையைப் பேணிக்கொண்டு யௌவனம் நீங்கி வயோதிகளானதாகவும் இப்படியிருக்குங்காலத்திலே காருண்ய ஸ்வரூபியாகிய பரமசிவன் அவ்வடியாருடைய மகிமையை உலகத்தவர்கள் ஐயந்திரிபறவறிந்து அவருடைய தொண்டை அனுசரித்து உய்யும்பொருட்டு ஒரு சிவயோகி வடிவங்கொண்டு அவ்வடியார் வீட்டுக்குச் செல்ல அவ்வடியார் அவரை ஆசனத்திலிருத்தி பூசை செய்து அடியேன் தேவரீருக்குச் செய்யவேண்டிய குற்றேவல் யாது என்று கேட்க ஒரு திருவோட்டை அவர் கையில் கொடுத்து நான் திரும்பக்கேட்கும் காலத்தில் கொடு என்று சொல்லிவிட்டுப்போய் நெடுநாட்கள் கழிந்து வந்து கேட்க அவ்வடியார் அந்த ஓட்டைத் தேடிப்பார்த்ததில் காணுமல் திகைத்து அந்தத் திருவோட்டைக் காணவில்லையென்றும் புதிதாகிய வேறொரு திருவோடு தருவதாகவும் சொன்னதில் சிவயோகியார் கோபித்து காணவில்லையென்று உன் மனைவியைக் கைப்பிடித்து முழுகி சத்தியம்பண்ணித்தாவென்றுசொல்ல அவ்வடியார் மனைவியாரை அழைத்துக்கொண்டு வந்து திருக்குளத்திலே போய் ஓர் மூங்கில் தண்டை ஒருபுறத்திலே மனைவியார்பிடிக்க மற்றப்புறத்திலே தாம் பிடித்துக்கொண்டு இறங்கினதாகவும் அதைக்கண்ட சிவயோகியார் உன் மனைவியைக் கைப்பிடித்துக்கொண்டு மூழ்குவாய் என்று சொன்னதாகவும் திருநீலகண்டநாயனார் அப்படிச்செய்யக் கூடாமையை உலகத்தார் அறியும்படி சொல்லிக்குளத்தில் முழுகினதாகவும் முழுகிக் கரையிலேறிய திருநீலகண்டநாயனாரும் மனைவியாரும் மூப்புப்பருவம் நீங்கி இளமைப்பருவமுடையவர்களாய்ப் பிரகாசித்ததாகவும் சிவயோகியார் உடனே மறைந்துவிட்

டதாகவும் சிவபெருமான் உடனே பார்வதியாரோடு இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றியருளினதாகவும் சேக்கிழார் நாயனார் அருளிச்செய்த பெரிய புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இச்சரிதையினால் திருநீலகண்டநாயனாராகிய அன்பர்க்கு அனுக்கிரகிக்கும்பொருட்டு பரமசிவன் முதலில் சிவயோகி வடிவங்கொண்டும் பின்னர் பார்வதிதேவியாரோடு இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றியும் அருளினரென்றும் பெறப்படுகிறது. திருநீலகண்டநாயனார் சேக்கிழார் நாயனார் காலத்துக்கு வெகு காலத்துக்குமுன் இருந்தவராகத் தெரியவருகிறது. இவருடைய சரிதை சேக்கிழார் நாயனாருக்கு எவ்விதம் தெரியவந்தது. சேக்கிழார் நாயனார் புராணத்துககு முதல் நூலாகிய சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் அருளிச்செய்த திருத்தொண்டத்தொகையில் திருநீலகண்டத்துக்குயவனார்க்கடியேன் என்றுமட்டும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தோத்திரத்தினால் திருநீலகண்டருடைய சரிதையைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லை. இதற்கு வெகு காலத்திற்குப்பின்னர் நம்பியாண்டார் நம்பி அருளிச்செய்த திருத்தொண்டர் திருவந்தாதியில்

"சொல்லச்சிவன்றிருவாணை தன்றாமொழிதோணசையை
யொல்லைத்துறந்துரு மூத்ததற் பின்னுமைகோனருளால்
வில்லைப்புரை நுதலா ளொடிளமை பெற்றின்பமிக்கான்
றில்லைத்திருநீல கண்டக்குயவனுஞ்செய்தவனே."

என்றுமட்டும் சொல்லியிருக்கிறார். சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் ஸ்தோத்திரத்தில் திருநீலகண்டத்துக் குயவனாரைப்பற்றி ஒன்றுஞ்சொல்லாதிருக்க, இந்தப்பாட்டில் தன் மனைவி சிவன் திருவாணை சொல்ல அவள் தோள் நசையைத் துறந்து மூத்ததற்பின் உமைகோனருளால் வில்லைப்புரை நுதலாளோடு இளமைபெற்று திருநீலகண்டன் இன்பமிக்கானயினன் என்று சேர்த்திருக்கிறது. இளமைபெற்று இன்பமிக்கானயினன் என்பதற்கு வயதுமுதிர்ந்த காலத்திலும் உமைகோனருளால் இளமைப்பருவத்திலுள்ள இன்பத்தை அநுபவிக்கும்படியான பலம் அவர்களுக்கு

இருந்ததென்று அருத்தங்கொள்ளினும் கொள்ளலாம். இந்தப் பாட்டில் அற்புதச் செயல் ஒன்றும் சுட்டப்படவில்லை. சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் ஸ்தோத்திரத்தில் காணுமல் இந்தப்பாட்டில் கண்டிருக்கிற சங்கதிகளின் உண்மை எப்படியிருக்கினும் ஈஸ்வரன் திருநீலகண்டருக்கு அனுக்கிரகிக்கும்பொருட்டு சிவயோகி வடிவமாக வந்ததாகவாவது பார்வதிதேவியாரோடு இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றியருளினதாயாவது ஒன்றுஞ்சொல்லவில்லை. ஆதலின் சேக்கிழார் நாயனுர் சொல்லியிருக்கிறபடி ஈஸ்வரன் மேற்கண்ட வடிவங்கள் கொண்டு எழுந்தருளிவந்ததற்கு ஆதாரம் ஒன்றும் காணவில்லை. அப்படியிருக்க இவ்வித அற்புதம் நடந்ததென்பதை நம்புவதெப்படி?

இது நிற்க. சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் அருளிச்செய்த ஸ்தோத்திரத்தில் திருநீலகண்டத்துக்குயவனுருக்குப்பின் குறிப்பிட்டிருக்கிற இயற்பகை நாயனுர் சரிதையைப்பற்றிச் சிறிது விசாரிப்போம்.

காவிரிப்பூம் பட்டணத்தில் வைசியகுலத்தில் இயற்பகையாரென்று ஒரு சிவபக்தர் இருந்ததாகவும் அவர் சிவபக்தர்களுக்கு அவர்கள் விரும்பிய எல்லாவற்றையும் மகிழ்ச்சியோடு கொடுத்து வந்தபடியால் ஒருநாள் திருக்கயிலாசபதியானவர் ஒரு தூர்த்த பிராமண வடிவங்கொண்டு அவர் வீட்டிற்குச் சென்று உம்முடைய மனைவியை விரும்பிவந்தேனென்று சொல்ல இயற்பகை நாயனுர் மிகமகிழ்ந்து கற்பிலே சிறந்த தம் மனைவியாரை அவருக்குக்கொடுத்து விட்டதாகவும அங்குவந்த சிவனடியார் நாயனுரின் மனைவியுடன் செல்லும்போது, அவருடைய பந்துக்கள் ஊரவர்கள் அவருக்கு ஓர் இடையூறுஞ்செய்யாவண்ணம் அவருக்குத் துணையாக இயற்பகை நாயனுர் போனதாகவும் அப்படிச்செல்லுகையில் தங்களுடைய சுற்றத்தவர்கள் அவர்களை வளைந்துகொண்டு தடுத்ததாகவும் அதுகண்ட நாயனுர் கோபங்கொண்டு வாளினுலே இடசாரி வலசாரியாக மாறிமாறிச்சுற்றிவந்து அவர்களுடைய தோள்களையும் கால்களையும் தலைகளையும் துணித்து விழுத்திவிட்டு எதிர்ப்பார் ஒருவருமின்றி யுத்தகளத்தில் உலாவிக்கொண்

டிருந்து பின்பு சிறிதுதூரஞ்சென்று திருச்சாய்க்காடு என்னும் சிவஸ்தலத்துக்குச் சமீபத்திலே போனபின் நாயனார் திரும்புகையில் பிராமண வடிவங்கொண்டுவந்த ஐயர் இயற்பகையே இங்கு வாவென்று கூப்பிட்டதாகவும் நாயனர் அவரை நோக்கிப்போக அவர் மறைந்தருளினதாகவும் பின்பு ஆகாயத்திலே பார்வதி சமேதராய் இடபவாகனத்தில் திருக்கைலாசபதி எழுந்தருளி வந்து காக்ஷிகொடுத்ததாகவும் சேக்கிழார் நாயனார் புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இதற்கு முதல்நூலாகிய திருத்தொண்டத்தொகையில் இல்லையே யென்னாத இயற்பகைக்குமடியேன் என்று மட்டும் சொல்லப்பட்டிருக்கிறது. நம்பியாண்டார் நம்பி அருளிச்செய்த திருத்தொண்டர் திருவந்தாதியில்

"செய்தவர்வேண்டிய தியாதுங்கொடுப்பச் சிவன்றவனுக்
கைதவம்பேசி நின்காதலியைத் தருகென்றலுமே
மைதிகழ் கண்ணியை யீந்தவன்வாய்ந்த பெரும்புகழ்வந்
தெய்திய காவிரிப்பூம் பட்டினத்துளியற்பகையே".

என்று மட்டும் இயற்பகைநாயனாரைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. திருநீலகண்ட நாயனாரைப்பற்றி ஆராயுங்கால் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் ஸ்தோத்திரத்தையும் நம்பியாண்டார் நம்பி யருளிச்செய்த திருத்தொண்டர் திருவந்தாதியையும் பற்றிச் சொல்லிய விஷயங்களில் இயற்பகை நாயனார் சம்பந்தமாய்க் கூறக்கூடிய விஷயங்களை யூகித்துத் தெரிந்துகொள்ளலாம். திரும்பச் சொல்வது அவசியமன்று.

இந்தப் பாட்டில் ஈஸ்வரன் இயற்பகை நாயனாருக்கு அனுக்கிரகிக்கும்பொருட்டு பார்வதி சமேதராய் ஆகாயத்தில் இடபவாகனத்தில் எழுந்தருளிவந்த அற்புதக்கருணைச் செயலைப்பற்றி யொன்றுஞ்சொல்லவில்லை. அப்படியிருக்க சேக்கிழார் நாயனார் அருளிச்செய்த புராணத்தில் சொல்லியபடி ஈஸ்வரன் பார்வதி சமேதராய் இடபவாகனத்தில் எழுந்தருளிவந்து காக்ஷிகொடுத்தாரென்று நம்புவது எப்படி?

மேலே பிரஸ்தாபித்திருக்கிறபடி சரித்திரங்கிடையாத நம் தேசத்தில் வெகுகாலத்துக்குமுன் நடந்ததாகச் சொல்லுகிற சங்கதியைப்பற்றி அக்காலத்துக்கு வெகுகாலத்துக்குப் பின்னர் தோன்றிய சில மதாபிமானிகள் தங்களுடைய கொள்கைகளை விளங்கச்செய்யும்பொருட்டுச் சொல்லுகிற சரித்திரங்களைவைத்து இவ்வித அற்புதம் நடந்ததாக நம்பலாமானால் எதைத்தான் நம்புதல் கூடாது எதைத்தான் நம்புதல கூடும்.

வெகு சொற்பகாலத்துக்குமுன் நடந்த சங்கதிகளைப்பற்றி அந்தக்காலத்தில் அவைகளைப்பற்றி எழுதப்பட்ட சரித்திரமில்லாமல் எழுத முயன்றால் எவ்வளவோ வித்தியாசப்பட்டுவிடுகின்றன. அப்படியிருக்க வெகுகாலங்களுக்குமுன் நடந்தவைகளைப் பற்றி எவ்வித சரித்திரமுமின்றி வெகுகாலத்திற்குப்பின் சில மதாபிமானிகள் தாங்கள் உண்மையென்று நம்பி எழுதினபோதிலும் அவைகளை வேறுவித ருசுவின்றி நம்புதல் கூடுமா?

மேலும் இவ்வித அற்புதங்கள் சாதாரணமாக நடக்கக்கூடியனவல்ல, ஏதோ சிற்சில காலங்களில் நடந்ததாக சில மதாபிமானிகளால்மட்டும் சொல்லப்படுகிறது. அவ்வித அற்புதச் செய்கைகள் கடவுள் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு ஒவ்வொரு உயிர்தோறும் உயிர்க்குயிராய்த் தழைத்து நின்று செய்துவரும் கருணைச்செயல்களுக்குப் பொருத்தமுடையனவாய்க்காணப்படவுமில்லை. இவ்வித அற்புதச் செய்கைகள் கடவுளாலேயே நடத்தப்பட்டிருந்தால் சந்தேகத்துக்கு இடங்கொடாமல் யாவரும் எளிதில் நம்பி உய்யும்படியான விதமாக நடைபெற்றிருக்குமென்பது திண்ணம். கடவுள் கருணையே திருமேனியாகக்கொண்டு ஓரோர்காலத்தில் ஓரோர் அன்பர்க்கு அனுக்கிரகித்தார் என்று சொல்லப்படுகிற சரிதைகளில் மற்ற அன்பருடைய சரித்திரமும் மேலே நாம் ஆராய்ந்துள்ள சரிதைகளைப்போலவே இருக்குமென்று யூகித்தறியலாம். ஆகவே ஆலயங்களிலுள்ள விக்கிரகங்கள் கடவுளுடைய திருவருட்காக்ஷிகளின் பிரதிமாரூபங்களென்று சொல்வது எவ்வளவுதூரம் நம்பத்தக்கதென்று விளங்கவில்லை. சுருங்கச் சொல்லில் ஆலயவழிபாடு அன்பர்களுக்கு

கருணையே திருமேனியாகக்கொண்டு எழுந்தருளிவந்து அனுக்கிரகிக்கு முன்னரே ஏற்பட்டதாகத் தெரியவருகிறது. அவ்விதம் திருமேனிகொண்டு அனுக்கிரகித்ததாகச் சொல்லுகிறதற்குப் போதுமான ருசுவுமில்லை. ஆலயங்களிலுள்ள எல்லா வடிவங்களும் சிவாகமங்களில் விபரமாகக் கடவுளாலேயே கூறப்பட்டுள்ளனவாகச் சொல்லப்படுகிறது. கடவுளே அப்படிக் கூறியுள்ளாரென்பதற்கு ருசுவே கிடையாது. கடவுளாலேயே நேரில மகமது நபிக்குக்கூறப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிற "கோரான்" என்னும் மகமதிய வேதப்புஸ்தகத்தில் விக்கிரக ஆராதனம் கண்டிக்கப்பட்டிருக்கிறது.

கடவுளாகத்தன் அடையாளக்குறியினை உணர்த்தினல் அது கொண்டு அவரை உணரலாமன்றி எத்தகைய ஆன்றோர் ஏற்படுத்திய அடையாளக்குறிகொண்டும் கடவுளைஉணர ஒருசிறிதும் முடியாதென்றும் சகளோபாசனை அதாவது அன்பர்களுக்கு அனுககிரகிக்கும்பொருட்டு கருணையே திருமேனியாகக்கொண்டு எழுந்தருளிவந்த திருக்கோலக்குறிப்பு விளங்க அமைத்து நிறுத்திய ஆலய வழிபாடு, நம்முணர்வை இழுத்துச்சென்று ஈஸ்வரன் மாட்டுப்பதியவைக்கும் கருவியாகுமேதவிர தத்தமக்கு அறிவு சென்றவாறெல்லாம் கல்லானும் செம்பானும் இயற்றிக்கொண்டு வழிபடும் வழிபாடு ஈஸ்வரன் உண்மைக்கருணைக்கோலத்தின் கண் அவர் அறிவைப் பதிக்கமாட்டாதென்றும் அவர் செய்யும் வழிபாடு சகளோபாசனையின் இலக்கணம் பொருந்தாத பிரயோஜன் மற்ற விக்கிரக ஆராதனையாய் முடியுமென்றும் மேலே குறிப்பிட்ட நண்பர்கள் கூறுகின்றனர். ஆதலின் கடவுளே தன் அடையாளக்குறியினை சிவாகமங்களில் உணர்த்தியிருக்கிறார் என்றும் அன்பர்களுக்கு கடவுள் கருணையே திருமேனியாகக்கொண்டு காக்ஷிகொடுத்திருக்கிறாரென்றும் நம்பினலொழிய விக்கிரக ஆராதனை பிரயோஜனப்படமாட்டாதென்று ஏற்படுகிறது. அப்படி நமபுவதற்கோ போதுமான ருசுவில்லை. இருக்கிற ருசு போதுமென்று நினைத்தால் எவ்விதமான மதக்கொள்கைகளுக்கும் அவ்வித ருசு இருப்பதால் இந்து, கிறிஸ்தவ, மகமதிய மத

லிய எல்லா மதங்களின் கொள்கைகளையும் நம்பவேண்டியதாய் ஏற்படும். அக்கொள்கைகளோ ஒன்றுக்கொன்று மாறுபட்டன வாய் இருக்கின்றன. ஆதலின் எல்லாம் சரியென்று நம்பமார்க்க மில்லை. இந்த ஸ்திதியில் விக்கிரக ஆராதனை ஆன்ம வளர்ச்சிக்கு சாதனமாயிருந்தாலொழிய அவ்வித வழிபாட்டைக் கைவிடலே நன்றென்று தோன்றுகிறது. ஆதியில் விக்கிரக ஆராதனையை ஏற்படுத்தியவர்கள் அன்பிற்சிறந்த மகான்களாயிருந்திருக்கலாம். நல்ல எண்ணத்தோடும் ஜீவகாருண்ணியச் சிந்தையோடும் ஏற்ப டுத்தியிருக்கலாம். அநுபவத்தில் நன்மையுண்டாகவில்லை யென் றும் கெடுதிக்கு ஏதுவாயிருக்கிறதென்றும் கண்டால் "பழையன கழிதல் வழுவல" என்னும் விதியின்படி அவ்வித வழிபாட்டைக் கைவிடுதல் முறையேயாம்.

ஒரு விதையிலிருந்து, மதுரமான பழத்தைக் கொடுக்கிற மரம் உண்டாகுமென்று நம்பி நமது தோட்டத்தில் அவ்விதை யைப்போட்டு ஒரு மரத்தை வளர்த்து வருகையில் அந்த மரம் நச்சுமரமென்றும் அந்த மரத்திற்பட்டு வருங்காற்று விஷக்காற் றென்றும் அநுபவத்தில் காணப்பட்டால் அந்த மரத்தை அப் புறப்படுத்திவிடுவது அவசியமல்லவா. ஆதலின் விக்கிரக ஆரா தனையினால் ஏதாவது பயனுண்டா, பயன் உண்டாகாமற் போனா லும் கெடுதலில்லாமலாவது இருக்கிறதாவென்று ஆராயவேண்டி யது அவசியமாயிருக்கிறது.

"ஊனக்கண் பாசமுணரா ப்பதியை
ஞானக்கண்ணினிற் சிந்தை நாடி"

என்று சிவஞானபோதத்தில் மெய்கண்ட தேவர் திருவாய்மலர்ந் தருளியிருக்கிறபடி கடவுள் ஊனக்கணணுக்குப் புலப்படமாட் டார். ஆதலின் சர்வகாருண்ணியம், பேராற்றல் முற்றறிவு முத லிய கடவுளுடைய திவ்விய கலியாண குணங்களை ஒரு சிறிதும் விளங்கச்செய்யாததும் ஊனக்கண்ணுக்குமட்டும் புலப்படுகிறது மாகிய விக்கிரகங்கள் ஆன்மவளர்ச்சிக்கு எவ்விதமேனும் சாதன மாகுமென்று தோன்றவில்லை.

கடவுளை அகக்கண்ணாகிய ஞானக்கண்ணினாலேயே அறிதல் வேண்டும். கடவுளை அறியும்படியான மேற்குறித்த அகக்கண்ணாகிய ஞானக்கண்ணுடன் அறிவு, மனச்சாக்ஷி, அன்பு, என மூன்று அகக்கண்களும் மானிடராகிய நமக்கு கருணாநிதியாகிய கடவுளால் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஷெ நான்கு அகக்கண்களாலும் கடவுளையும் கடவுளுக்கும் நமக்கும் உண்டாகிய சம்பந்தத்தையும், நாம் ஒருவருக்கொருவர் இவ்விதமாய் சம்பந்தப்பட்டிருக்கிறோமென்பதையும் அறிந்து ஷெ நான்கு அகக்கண்களாலும் உணர்த்தப்படும் உணர்வு ஒன்றுமொன்று சிதைவுபடாமல் எல்லாம் ஒத்து நிகழ்ந்து கடவுளை வழிபட்டு கடவுள் நமக்குப் பிதாவெனவும் அவருடைய பிள்ளைகளாகிய நாமெல்லாரும் சகோதரரெனவும் அறிந்து ஒருவருக்கொருவர் சகோதரவாஞ்சையுடன் கடவுள் ஷெ நான்கு அகக்கண்கள்வாயிலாகவும் உணர்த்திய வாறு ஒழுகுதலே ஆன்மவளர்ச்சிக்குரிய சாதனமெனத் தோன்றுகிறது. கடவுளுடைய குணங்களையும் கடவுளுக்கும் நமக்கும் உண்டாகிய சம்பந்தத்தையும் நாம் ஒருவரோடொருவர் எவ்விதமாய்ச் சம்பந்தப்பட்டிருக்கிறோமென்பதையும ஒரு சிறிதும் காட்டாத விக்கிரகங்கள் எவ்விதமாயும் ஆன்மாபிவிர்த்திக்கு பயன்படுமென்று தோன்றவில்லை. பயன்படாதென முன்னமே காட்டப்பட்டிருக்கிறது.

இது நிற்க. விக்கிரக ஆராதனையினால் ஆன்மவளர்ச்சிக்கு கெடுதல் இல்லாமலாவது இருக்கிறதாவென்று சற்று ஆராய்வோம். நமது இந்தியா தேசமானது அனேக ஆயிர வருஷங்களுக்குமுன் மேல்நாடுகளெல்லாம் நாகரீகமில்லாமல் மிலேச்ச தேசங்களாய் இருந்தகாலத்திலேயே வெகு நாகரீகமுள்ளதாயும் நம்முடைய தேசத்தவர்கள் பக்தியிலும் அறிவிலும் அன்பிலும், ஒழுக்கத்திலும் வெகு தேர்ச்சியுள்ளவர்களாகவும் இருந்தார்களென்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அந்தககாலத்தில் பெண்கள் படித்து அவர்களில் அநேகர் ஔவையாரைப் போல வித்துவசிரோன்மணிகளாயிருந்தார்கள். நாலடியார் சீவகசிந்தாமணி திருக்குறள், முதலிய அரிய நூல்கள் அக்காலங்களில் உண்டாயின. ஜாதி வகுப்பு கிடையாது. விதவைகள்

மறு விவாகஞ்செய்து சந்தோஷமாய் இல்லறவாழ்க்கையை நடத்திவந்தனர். பாலிய விவாகமென்பது கிடையாது. அந்தக் காலத்தின் தன்மையையும் இப்பொழுது நாமிருக்கிற ஸ்திதியையும் ஒப்பிடில் மற்றத் தேசத்தவர்கள் முன்னிருந்த ஸ்திதியிலிருந்து வரவர அபிவிருத்தியடைந்துகொண்டுவருகிறார்கள் என்பதுபோல நாம் அபிவிருத்தியடைந்துகொண்டுவரவில்லை யென்பது மாத்திரமல்ல. முன்னிருந்த ஸ்திதியிலும் நாம் இப்பொழுது இருப்பதாகத் தெரியவில்லை. அதற்கு எவ்வளவோ தாழ்ந்த ஸ்திதியில் நாம் இப்பொழுது இருக்கிறதாகத் தெரியவருகிறது. இதற்குக்காரணம் என்னே?

ஏதோ நமது துரதிர்ஷ்டம், பெண் கல்வியின்மை, ஜாதிப் பருப்பு, பாலிய விவாகம் முதலிய சில கொடிய வழக்கங்கள் எவ்விதமாகவோ ஏற்பட்டுப் பரவிவிட்டன. பெண்களை நம்முடைய உயர்ந்த ஸ்திதிக்கு நாம் கொண்டுவராவிட்டால் அவர்களுடைய தாழ்ந்த ஸ்திதிக்கு அவர்கள் நம்மை இழுத்துக்கொள்வார்களென்று ஒரு பேராசிரியர் சொல்லியிருக்கிறார். அவர் சொல்லியபடி நாம் எவ்வளவு தூரம் உன்னியேறினும் நம்மை ஏறவொட்டாமல் நமது கல்வியறிவிலாப் பெண்கள் நம்மைக் கீழே யிழுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மானிடர் யாவரும் சகோதரர் என்கிற உண்மை சாதிப்பிரிவால் மனதுக்குப் புலப்படாமலே மறைந்துகிடக்கின்றது.

"சாதியிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதிவழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோரி டாதாரிழி குலத்தோர்
பட்டாங் கிலுள்ளபடி".

என்று ஆதிகாலத்தில் உத்தமசிரோன்மணியாகிய ஔவையாரம்மாள் அருளியிருக்கிறபடி ஆன்மகுணங்களின் தாரதம்மியத்துக்கு ஏற்றபடி மனிதர்களுள் உயர்வுதாழ்வு நோக்கப்படாமல் பிறப்பினால் உயர்வு தாழ்வு ஏற்பட்டு ஆன்மகுணங்களின் மேன்மையும் சகோதர வாஞ்சையும் மறைய ஏதுவாயிற்று. ஆன்மவளர்ச்சி

குன்றும்படி செய்கிற வழக்கங்களில் விக்கிரக ஆராதனையும் ஒன்றெனச்சொல்லலாம்.

விக்கிரக ஆராதனை பின்வருகிற கெடுதல்களுக்கு ஏதுவாயிருக்கிறதெனத் தோன்றுகிறது

விக்கிரக ஆராதனை :

1. ஆன்ம ஸ்வரூபியாகிய பரம்பொருளை அசேதனப்பொருள்போல் பாவிக்கும்படி தூண்டுகிறது.

2. சர்வவியாபியாகிய பரம்பொருளை சில சில இடங்களில் மட்டும் இருப்பவர்போல் நினைக்க ஏதுவாயிருக்கிறது.

3. முற்றறிவு, பேராற்றல். பேரின்பம், சர்வகாருண்ணியம் முதலிய குணங்கள் நிறைந்த கடவுளை குறைவுபட்ட மனித குணங்கள் உடையவர்போல்பாவித்து வழிபடும்படி தூண்டுகிறது.

4 கடவுளை அறிதற்குரிய அகக்கண்களின் பார்வையைக் குறைத்து புறக்கண்ணுக்குப் புலப்படுகிற கிரியைகளைப் பிரதானமாக நினைக்க ஏதுவாயிருக்கிறது.

5. சிவபுண்ணியம் வேறு பசுபுண்ணியம் வேறு எனப் பிரித்து இவ்விரண்டு புண்ணியங்களும் ஒன்றையொன்று முரணுதலின்றி ஒன்றும் தன்மையுடையதென்ற உண்மையை மறைத்து சிவபுண்ணியத்துக்கு இடையூறானபோது பசுபுண்ணியத்தை சிதைக்க ஏதுவாகிறது.

இவ்விக்கிரக வணக்கம் இன்னும் பலவித ஆட்சேபனைக்கு இடங்கொடுக்கிறது.

மேற்கண்ட விஷயங்களில் 1, 2 இலக்கமிட்டவைகளைப்பற்றிச் சற்று விசாரித்துப் பார்ப்போம். கடவுளை வணங்குவதற்கென்று ஒரு விக்கிரகம் ஏற்படுத்தி அந்த விக்கிரகம் அமையப் பெற்றிருக்கும் ஆலயத்துக்குப் போய் ஒழுங்காய் வழிபட்டுவருகிறவர்களுக்கு கடவுளை நினைக்கும்போதெல்லாம் ஆலயத்திலுள்ள அவ்விக்கிரக சொரூபந்தானே அவர்கள் ஞாபகத்தில் வரும்.

அந்த விக்கிரகங்கள் இல்லாத மற்ற விடங்களில் கடவுள் இருக்கிறார் என்னும் மெய்யுணர்வு குன்றுமல்லவா?

வழக்கமாய் இரவில் சிவாலய தரிசனஞ்செய்து அப்படிச் செய்தபின் இராப்போஜனம் செய்துகொண்டு வந்த ஒரு பக்தன் ஒருநாள் இரவு சிவாலயமில்லாத ஓர் இடத்தில் தங்கும்படி நேரிட்டதில் கடவுளை வழக்கம்போல் தரிசனஞ்செய்ய மார்க்கமில்லாததால் அன்றிரவு பட்டினிகிடந்ததாக ஓர்வதந்தியுண்டு. இது எவ்வளவுதூரம வாஸ்தவமோ தெரியவில்லை. இது எப்படியிருந்தபோதிலும் கன்றூப்பூர் என்னும் ஸ்தலத்தில் ஒருகாலத்தில் சிவாலயமில்லாதிருந்ததாகவும் இரவில் சிவாலய தரிசனஞ்செய்துகொண்டு சாப்பிடுவது வழக்கமாயிருந்த ஓர் அரசன் அவ்விடத்தில் இரவில் தங்கும்படி நேரிட்டதில் அவருடைய வேலையாட்கள் அவ்விடத்தில் சிவாலயமில்லாததால் அரசன் அன்று சிவதரிசனஞ்செய்ய மார்க்கமில்லாமல் பட்டினியாயிருப்பானென்று நினைத்து கன்றுக்குட்டி கட்டுவதற்காக பூமிமேல் நாட்டப்பட்டிருந்த ஓர் ஆப்பின்மேல் மரக்காலைக் கவிழ்த்தி வைத்து அதை அலங்கரித்து வைத்திருந்ததாகவும் அதை அரசன் கண்டு சிவலிங்கமெனத் தெரிசித்ததாகவும் அந்த மரக்கால் உண்மையில் சிவலிங்கமாய்விட்டதாகவும் அந்த ஸ்தலத்துக்கு அதற்குப்பின் கன்றூப்பூர் என்று பெயர் வந்ததாகவும் தெரிய வருகிறது.

இதனால் சிவலிங்க விக்கிரகம் இல்லாதவிடத்து அந்த அரசன் தெய்வவணக்கம் செய்ய மார்க்கமில்லாதிருந்தது விளங்குகிறது. அந்த அரசன் சாமானிய அரசனுமல்லன். உண்மையான பக்தன். அவன் தரிசனஞ்செய்தவுடனே ஆப்புமேல் கவிழ்த்தியிருந்த மரக்கால் சிவலிங்கமாய்விட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆதலின் இந்த அரசனுடையவும் அவனைச்சேர்ந்த வேலைக்காரருடையவும் செய்கையினால் ஒரு விக்கிரகத்தை ஓர் இடத்தில் அமைத்து வைத்து கடவுளை வழிபடுதலினால் ஆன்மஸ்வரூபியாகிய கடவுளை அசேதனப்பொருளாகப் பாவித்து அந்த அசேதனப்பொருள் இல்லாதவிடத்து கடவுள் இல்லாததுபோல்

கடவுள் எங்கும் இருக்கிறார் என்கிற உண்மையை மறந்து சிவ லிங்க விக்கிரகமில்லாதவிடத்து ஒரு பக்தன் கடவுளை தரிசனஞ் செய்ய மார்க்கமில்லாமல் திகைக்கும்படி நேரிடுகிறதென்பது விளங்கவில்லையா?

மகமதியர்களுக்குள் ஒருநாளில் கடவுளை ஐந்து காலம் வணங்கவேண்டுமென்று ஏற்பட்டிருப்பதில் குறிப்பிட்ட காலம் வந்தவுடன் ஒரு பக்தியுள்ள மகமதியன் எவ்விடத்திலிருந்தாலும் அவ்விடத்தில் துணியை விரித்து கடவுளை வணங்கி நிற்பதை நாம் அடிக்கடி பார்க்கிறோம். இவ்விதமான ஏற்பாடிருந்தால் கடவுள் ஆன்ம ஸ்வரூபியாய் எங்கும் நிறைந்திருக்கிறார் என்கிற உண்மை அடிக்கடி ஞாபகத்துக்கு வரும்படி இருக்குமல்லவா?

கடவுளை வணங்கவேண்டுமென்று விக்கிரகங்களை ஏற்படுத்தி அவ்விக்கிரகங்களுக்கு அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம், தீபாராதனை முதலியஉபசாரணைகள் செய்து வணங்கும்படி ஏற்பட்டிருப்பதில கடவுளைப்பற்றிய ஞாபகம் விக்கிரகங்களின் பேரிலேயே வைக்கப்பட்டு அந்த விக்கிரகங்களும் அந்த விக்கிரகங்களில் இயங்கிக்கொண்டிருக்கும் ஒருசேதனப்பொருளும கடவுள் என்று நினைத்து வழிபடுவதில் கடவுள் எங்கும் நிறைந்தவர், விக்கிரகங்களைத்தவிர மற்றெங்கும் நிறைந்துளார் என்ற உண்மையை மறக்கும்படி செய்யுமல்லவா?

ஒழுங்காய் சிவாலய தரிசனஞ்செய்துவருகிற சில நண்பர்களை விக்கிரகங்களின் முன்னின்று தரிசனஞ்செய்யுங்காலத்தில் கடவுளை எவ்விதமாய் நினைத்து நீங்கள் வழிபடுகிறீர்கள் என்று கேட்டதில் விக்கிரகங்கள் பேரிலேயே தங்கள் ஞாபகம் சென்று கொண்டிருக்குமேதவிர அதற்கு வேறாக வேறொன்றையும் நினைத்ததாக இல்லையென்று விடைபகர்ந்தனர். மனிதருடைய இயற்கை சுபாவம் இப்படியே தூண்டுமெனத் தோன்றுகிறது.

கோர்ட்டுகளில் சர்வவல்லமையுள்ள தெய்வத்துக்கு முன்பாக நான் மெய்சொல்லுகிறேன் என்று பிரமாணஞ்செய்து

கொண்டு எத்தனையோ பொய்களைச் சொல்லுகிறார்கள். அப்படிப் பொய்சொல்லுகிறவர்களை இலைவிபூதி முதலிய கடவுளின் சின்னமென்று எண்ணப்படுகிற பொருள்களை வைத்துக்கொண்டாவது ஓர் கோவிலின்முன் நின்றுகொண்டாவது நீங்கள் சொல்லுகிறது மெய்யெனப் பிரமாணம்பண்ணுங்களெனக் கேட்டால் செய்ய மறுக்கிறார்கள். கோவிலின் முன்னிற்குங்காலத்திலும் இலைவிபூதி முதலிய சின்னங்களை வைத்துக்கொண்டிருக்குங் காலத்திலும் கடவுள் முன்னின்றும் கடவுளுடைய விசேஷ சின்னங்களை வைத்துக்கொண்டும் பிரமாணஞ்செய்கிறோமென்று உணர்தலினாலும் மற்றவிடங்களில் சர்வவல்லமையுள்ள தெய்வத்தின் முன்பாக என்று வாய் சொன்னபோதிலும் அப்படிச் சொன்னவிடத்தில் கடவுள் இருக்கிறார் என்ற உண்மையை மறந்திருப்பதினாலுமல்லவா அப்படிச்செய்கிறார்கள்.

கோவில்களில் ரத உற்சவ காலங்களில் ஸ்வாமி எழுந்தருளி வரும் ரதம் சில தினங்கள் நிலையத்துக்குவராமலிருந்தால் நிலையத்துக்கு வரும்வரை மூல விக்கிரகங்களுக்கு நித்திய பூஜைகள் வழக்கம்போல ஒழுங்காய் நடக்கிறதில்லையென்றும் நிலையத்துக்கு வந்தபின் பாக்கிவிட்ட எல்லாக்கால பூஜைகளையும் சேர்த்து நடத்துவதாகவும் தெரியவருகிறது. ஏன் அப்படிச் செய்யவேண்டும். கடவுள் எங்குமிருக்கிறார் என்கிற உண்மையை மறந்து உற்சவ விக்கிரகம் வெளியில் இருக்குங்காலத்தில் சுவாமி அவ்விடத்திலிருப்பதாகவும் கோவிலுக்குள் இல்லாததுபோலவும் நினைத்து அவ்வித ஏற்பாடு உண்டாயிருக்கவேண்டுமென்று விளங்கவில்லையா?

எத்தனையோ பேர்கள் கோவிலுக்குள் வைத்து பொய், கொலை, கள், களவு, காமம், முதலிய பாதகச்செயல்களைச்செய்ய அஞ்சுகிறார்கள். ஆனால் அவர்கள் வெளியில் வந்தபின் அவ்விதச் செயல்களைச் சாதாரணமாய்ச் செய்கிறார்கள். இப்படிச் செய்வது கடவுள் கோவிலில் மட்டும் இருக்கிறாரென்று நினைத்து எங்குமிருக்கிறார் என்கிற உண்மையை மறந்ததினாலல்லவா?

ஓர் நண்பரிடத்தில் கடவுளைத் தரிசனஞ்செய்ய வென்று கோவிலுக்குப்போவானேன், மற்ற விடங்களிலிருந்து செய்யலாகாதா என்று கேட்டதில் "கடவுள் எங்குமிருக்கிறார் என்று உணர்ந்துவிட்டால் எந்த விடத்திலும் தீச்செயல்கள் செய்யமுடியாதே. இந்த உலகத்தில் பொய் முதலிய எந்தவிதமான தீச்செயல்களும் செய்யாமலிருக்கமுடியுமா? கோவிலுக்குப் போய்த் தரிசனஞ்செய்கிறதென்று ஏறபட்டால் அவ்விடத்தில் அந்தக்காலத்திலாவது தீச்செயல்கள் செய்யாமலிருக்கலாம். ஆதலின் தீச்செயலகள் செய்யாமலிருக்கிறதற்குப் பழக்கமுண்டாக ஆலய வழிபாடு ஓர் வழியாயிருக்கிறது." என்று விடைபகர்ந்தனர். இப்படிச் சொல்லுவது கோவிலில் கடவுள் இருக்கிறார் என்று நினைத்து கோவிலிலிருப்பதுபோல் மற்றவிடங்களிலுமிருக்கிறாரென்கிற உண்மையை உணராததினாலல்லவா?

சுந்தரமூர்த்திநாயனார் ஒரு ஸ்திரீ இருக்கும்போது வேறொரு ஸ்திரியை மணஞ்செய்ய முயன்றகாலத்தில் அந்த ஸ்திரீ, நாயனாரிடத்தில் முதலாவது ஸ்திரீ வீட்டுக்குப்போகிறதுமில்லை அவளிடத்திற் பேசுகிறதுமில்லையென்று ஓர் சிவலிங்கத்தின் பேரில் பிரமாணஞ்செய்து கொடுக்கச் சொல்ல அவர் சம்மதித்து சுவாமியை வில்வமரத்தடிக்குப் போகச்சொல்ல சுவாமி அதற்கிணங்க அப்பால் சிவலிங்கத்தின்மேல் பிரமாணஞ்செய்யப்போகையில் சுவாமி தான் சிவலிங்கத்தில் இல்லாததையும் வில்வமரத்தடியிலிருப்பதையும் அந்த ஸ்திரீக்குச் சொல்லி அவள் அதையறிந்து வில்வமரத்தடியில் வைத்து பிரமாணஞ்செய்து கொடுக்கச்சொல்ல அவர் அப்படிச் செய்தாரெனத் தெரியவருகிறது.

விக்கிரக வணக்கத்தால் அந்த விக்கிரகத்திலேயே சுவாமி இருக்கிறாரென்றும் அதை விட்டுப்போய் வேறோரிடத்திலும் இருத்தல் கூடுமென்றும் அப்படிப் போய்விட்டகாலத்தில் சுவாமி அந்த விக்கிரகத்தில் இல்லையென்றும் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளைப்போலொத்த அறிஞர்கள்கூட நினைக்கும்படி நேரிடுகிறதல்

லவா? கடவுள் எங்குமிருக்கிறாரென்கிற உண்மையை மறக்கச் செய்யவில்லையா?

சுமார் 11 வயது உடையவனும் இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தில வாசித்துக்கொண்டிருந்த ஒரு வாலிப நண்பனிடம் கடவுள் எங்கேயிருக்கிறாரென்று கேட்டதில் அவன் கடவுள் கோவிலில இருக்கிறாரென்று சொல்ல அப்படியல்ல கடவுள் எங்கும் இருக்கிறாரென்று அவனுக்குச் சொன்னதில் அப்படியானால் அவன் தன் பக்கத்திற கிடந்த செருப்பைக் காட்டி இந்தச் செருப்பிலும் இருக்கிறாராவென்று கொஞ்ச ஊக்கத்துடன் கேட்டான். அதிலும் இருக்கிறார் என்று சொல்லும்படி நேரிட்டது.

விக்கிரகங்களை வைத்து வணங்குவதினால் கடவுள் கோவிலில் இருக்கிறார் என்ற நினைப்புப் பதிந்து அவருடைய சர்வ வியாபகத்தைப்பற்றி விசாரிக்க மனம் தூண்டப்படாமல் அறிவு குன்றினதினால் இவ்விதம் அவன் கேட்கும்படி நேரிட்டதல்லவா? கடவுள் எங்கும் இருக்கிறார் என்கிற உண்மையை அவனுக்கு அடிக்கடி போதித்து மகமதியர்களைப்போல கடவுள் வணக்கத்துக்குச் சில ஏற்பாடுகள் செய்திருந்தால் கடவுள் சர்வவியாபி என்கிற உண்மையை அவன் விசாரித்து அவன் அறிவு விசாலிப்பதற்கு ஏதுவாயிருக்குமல்லவா?

கோவிலில் ஓர் விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்யுங்காலத்தில் அல்லது அஷ்டபந்தனஞ் செய்யுங்காலத்தில் சில கிரியைகள் செய்து ஜபஞ்செய்து பிரதிஷ்டை செய்யப்படுகிற அல்லது அஷ்டபந்தனஞ் செய்யப்படுகிற விக்கிரகத்தில் சுவாமியை ஆரோபிக்கும்படி செய்கிறார்களல்லவா? இதனால அப்படி ஆவாகனஞ்செய்யுமுன் சுவாமி அந்த விக்கிரகத்தில இல்லையென்றும் அப்படி ஆவாகனஞ்செய்தபின் தான் அவ்விக்கிரக வாயிலாகக் கடவுளை வணங்கும்படி. அவ்விக்கிரகங்களில் அவர் வந்து தங்குகிறாரென்றும் நினைக்கும்படி ஏற்படுகிறதல்லவா?

விக்கிரகங்கள் சுயம்புலிங்கமென்றும் தேவர்களால் பிரதிஷ்டைசெய்யப்பட்ட விக்கிரகங்களென்றும் முனிவர்களாலும் மனி

தர்களாலும் பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரகங்களென்றும் வேறுபாடுடையனவாய் அவற்றில் முனிவர்களாலும் மனிதர்களாலும் பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரகங்களில் கடவுள் சிலகாலமிருந்து பின்பு அதை விட்டு நீங்கிவிடுகிறாரென்னும் கொள்கை ஏற்பட்டு அப்பேர்ப்பட்ட விக்கிரகங்களுக்கு இடைஇடையே அஷ்டபந்தனங்கள் நடத்தப்பட்டுவருகின்றனவே.

சில ஸ்தலங்கள் பாடல் பெற்ற ஸ்தலங்களென்று அவைகளுக்கு விசேஷ மகிமையுண்டாகியும் சில ஸ்தலங்கள் பாடல் பெறாத ஸ்தலங்களாயிருப்பதால் அவைகளுக்கு மகிமை குறைந்தும் இருப்பதாக சிலர் சொல்லுகின்றனர். சமயாசாரிகள் ஸ்தலங்கள் தோறும் சென்று தரிசனஞ்செய்துவருகையில் சில ஸ்தலங்களில் தரிசனஞ்செய்தும் பக்கத்திலுள்ள சில ஸ்தலங்களில் தரிசனஞ்செய்யாமலும் போனதாகவும ஆதலின் சில பாடல் பெற்றும் சில பாடல் பெறாமலும் இருப்பதாகவும் அப்படிச் செய்யாமற்போனதற்குக் காரணம் அந்த ஸ்தலங்களிலுள்ள விக்கிரகங்கள் முனிவர்கள் மனிதர்களால் ஸ்தாபிக்கப்பெற்று ஸ்தாபித்துச் சில வருஷங்கள் சென்றபின் கடவுள் அந்த விக்கிரகங்களை விட்டு நீங்கி அப்படித் தரிசனஞ்செய்யப் போகுங்காலத்தில் கடவுள் அவ்விக்கிரகங்களில் இல்லாமையாலென்றும் சிலர் சொல்லுகின்றனர்.

மேற்கூறிய காரியங்களால் கடவுள் விக்கிரகங்களில் தான் இருக்கிறாரென்றும் சிலகாலத்தில் அவைகளைவிட்டு நீங்கியும் விடுகிறாரென்றும் கொள்வதால் கடவுள் எங்கும் இருக்கிறார் என்கிற உண்மையை மறந்து பேசும்படி நேரிடுகிறதல்லவா? பாடல் பெற்ற ஸ்தலங்களுக்கு மகிமையும் மற்றஸ்தலங்களுக்கு மகிமைக் குறைவும் ஏற்படுவானேன்? கடவுள் ஓர் இடத்தில் அதிகமாயும் ஓர் இடத்தில் குறைவாயும் இருக்கிறாரா? இது நிற்க.

மேலே 3 இலக்கமிட்ட விஷயத்தைப்பற்றிச் சற்று விசாரிப்போம். அந்த விஷயமாவது:— முற்றறிவு பேராற்றல் பேரின்பம், சர்வகாருண்ணியம் முதலிய குணங்கள் நிறைந்த கடவுளை குறைவுபட்ட மனித குணங்களுடையவர்போல் பாவித்து வழிபடும்படி தூண்டுகிறது.

கடவுளுக்கு விக்கிரகத்திருமேனியைக் கற்பித்து வழிபடுத லினால் கடவுளுக்கு மனிதனுக்கொப்பந்தம் ஸ்நானம், அலங்கா ரம் நைவேத்யம் முதலியன அவசியமென நினைத்து விக்கிரகங் களுக்கு அபிஷேகம் அலங்காரம் நைவேத்யம் முதலியன நடந்து வருகிறது. விக்கிரகங்களுக்கு அபிஷேகம் செய்வானேன்? கட வுளுக்கு அது தேவையா? அதில் அவர் பிரியப்படுகிறாரா? அபி ஷேகம் பிம்பசுத்தி செய்வதற்காக என்று சிலர்சொல்லுகிறார்கள். அப்படியானால் சுத்தமான ஜலத்தைவிட்டு மட்டும் சுத்திசெய்யா மல் எண்ணெய், பால், தயிர், பஞ்சகவ்வியம்முதலிய சாமான்களைக் கொண்டு அபிஷேகம் செய்வானேன். சிவபூஜை செய்கிறவர்கள் சந்தன முதலிய கரைந்துபோகக்கூடிய பொருள்களைக்கொண்டு உருவத்திருமேனி செய்து பூஜை செய்யுங்காலத்தில் அந்த உரு வத்திருமேனிகளுக்கு அபிஷேகஞ்செய்தால் கரைந்துபோகக் கூடுமாகையால் அந்த உருவத்திருமேனிகளின் மேல் அந்த அபி ஷேக ஜலம் விழாமல் அபிஷேகம் செய்த பாவனையாக அதன் பக்கத்தில் அபிஷேகஞ்செய்வானேன்?

> "ஆனினம் ஐந்தினுள் உவந்து நின்றாடுவன்"
>
> என்றும் "பால் நெய் சேரானஞ்சு மாடி
>
> கண்டாய்.................................
>
> மணக்காட்டுனாயு மணாளன்றானே."

என்றும் நாவுக்கரசு சுவாமிகள் ஸ்தோத்திரம் செய்திருப்பதாக தெரியவருகிறது. ஆதலின் கடவுளுக்கும் மனிதனுக்கொப்பந்தம் பலவகை ஸ்நானம் வேண்டியிருத்தல் போலும் அதில் அவர் பிரி யப்படுகிறது போலும் நினைக்கும்படி நேரிடுகிறது.

விக்கிரகங்களுக்கு விலையுயர்ந்த ஆபரணங்களையும் புஷ்பங் களையும் போட்டு அலங்காரஞ்செய்வானேன்? மனிதனைப்போல் ஆபரணங்கள் அணிவதில் கடவுள் பிரியப்படுகிறாரா? ஆனி உற்ச வத்தில் 4வது உற்சவ இரவில் உற்சவ விக்கிரகங்கள் விசேஷமாய் அலங்கரிக்கப்பட்டு வீதியில் எழுந்தருளிவருங்காலத்தில் சுவாமி தரிசனஞ்செய்ய விசேஷ கூட்டங்கள் கூடுகின்றன. ஏன் அப்ப டிக் கூடுகின்றன? சுவாமி தரிசனஞ்செய்யவா? அலங்காரத்தைப்

பார்க்கவா? இடபவாகனதரிசனம் விசேஷமென்று ஒருக்கால் சொன்னால் சுவாமி பவனிவருவதில் சுவாமிக்கு வாகனத்தால் மகிமை கூடுதல் குறைதல் ஏற்படுமா? அப்படியானால் ஐந்தாவது உற்சவதினக் காலையில் சுவாமி இடபத்தில் எழுந்தருளிவரும்போது கூட்டம் இல்லாதிருப்பானேன். இவைகளினால் மனிதனுக்கொப்பந்தம் கடவுள் அலங்காரத்தில் பிரியப்படுவதுபோலும் அலங்காரத்தன்மையை வைத்து மனிதனுக்கொப்பந்தம் அவருக்கு மகிமை கூடுகிறதுபோலும் குறைகிறதுபோலும் நினைக்கும்படி ஏற்படுகிறதல்லவா?

கடவுளுக்கு நைவேத்யம் செய்வானேன்? கடவுள் அன்னம் சாப்பிடுவதில் பிரியப்படுகிறாரா? அபிஷேகந்தான் பிம்பசுத்திக்கென்று வைத்துக்கொள்வோம். அலங்காரந்தான் சுவாமியை வழிபடுதற்கென்று ஏற்பட்ட விக்கிரகம் பார்வைக்கு நன்றாயிருப்பதற்கென்று வைத்துக்கொள்வோம். சுவாமிக்கு ஆகாரம்பண்ணவேண்டியது அவசியந்தானா? இதைப்பற்றி விசாரித்ததில் அன்னமானது பக்குவப்படுத்தப்பட்டு அதிலுள்ள தேகத்துக்கு வேண்டிய சாமான்கள் அதை உட்கொண்டபின் இரத்தத்திற் கலப்பதற்குத் தயாராயிருப்பதுபோல் ஆன்மாவைப் பக்குவப்படுத்தி சுவாமியுடன் கலந்துகொள்ளும்படி சுவாமிக்கு அற்பணஞ்செய்யவேண்டுமென்ற கருத்துடன் அதற்கு அறிகுறியாக நைவேத்யஞ்செய்கிறதாகச் சொல்லுகிறார்கள். இந்த அருத்தம் விக்கிரக ஆராதனை செய்கிறவர்களில் எத்தனைபேர்களுக்குத் தெரியும்?

நம்பியாண்டார் நம்பியின் தகப்பனர் கோவில் பூஜை செய்துகொண்டிருந்ததாகவும் ஒருநாள் அவர் பூஜைக்குப்போக மார்க்கமில்லாமல் அவர் பையனாகிய நம்பியாண்டார் நம்பியை பூஜை செய்யக் கோவிலுக்கு அனுப்பினதாகவும் அவர் நைவேத்யம் செய்யும்போது சுவாமி அந்த நைவேத்ய சாதத்தை உண்ணாதிருத்தல் கண்டு மனம் வருந்தினதாகவும் சுவாமி அவருக்கு இரங்கி உடனே சாப்பிட்டுவிட்டதாகவும் அதற்குப்பின் சில தினங்கள் அப்படியே சாப்பிட்டுவந்ததாகவும் கூறப்படுகிறது. இதனால்

னைவேத்யம் சுவாமி சாப்பிடுவதற்காக என்று தானே ஜனங்கள் அருத்தம்பண்ணுகிறதாகத் தெரியவருகிறது. "நேருக்குநேரே சாப்பிடுகிறதை நாம் பாராததால் சுவாமி சாப்பிடுகிறதில்லை என்று நினைக்கக்கூடாது அந்த நைவேத்யத்தின் ரசத்தைக் கிரகித்துக் கொள்ளுகிறார்" என்று ஜனங்கள் பேசுகிறார்களல்லவா? நைவேத்யத்தை ஏற்படுத்தினவர் கருத்து எப்படியிருந்த போதிலும் சுவாமிக்கு அன்னம் தேவையென்று தானே பொதுவாக ஜனங்கள் நினைக்கிறார்கள்.

மேற்குறித்த கருத்துடன் நைவேத்யம் ஏற்பட்டிருந்தால் வழிபடுகிற ஒவ்வொருவரும தாங்களே நைவேத்யம் தயார் செய்து விக்கிரகங்களின் முன்வைத்து மேற்குறிப்பிட்ட பக்குவ நிலைமையை ஞாபகப்படுத்திக்கொண்டு தரிசனஞ்செய்தால் பிரயோஜனப்படுமேதவிர பிரதிஷ்டை செய்யப்படுகிற ஒவ்வொரு விக்கிரகத்துக்கும் நித்திய நைவேத்யத்துக்கு ஏற்பாடு செய்து பூஜை செய்கிற பட்டமார் மட்டும் நைவேத்யம் ஒழுங்காய்ச் செய்துவரும்படி ஏற்பாடு செய்துவிட்டால் நைவேத்யம் சுவாமிக்குத் தேவையென்று நினைக்கும்படி நேரிடுமேதவிர மேற்குறித்த பக்குவ நிலையை ஞாபகப்படுத்துவதற்கு ஏதுவாகுமா?

ஓர் கோவிலில் ஒரு விக்கிரகத்தைப் பிரதிஷ்டைசெய்து நித்திய நைவேத்யத்துக்கு ஏற்பாடு செய்யாமலிருந்தால் சுவாமிக்கு நைவேத்யமில்லாமலிருப்பது குறைபாடுபோல் பேசுகிறார்களே! நைவேத்யத்துக்கு ஏற்பாடு செய்யாததால் சுவாமிக்கு என்ன குறை. பக்குவ நிலையை ஞாபகப்படுத்தவென்றால் தரிசனஞ்செய்யப்போகிறவர்கள் அவரவர் வீட்டில் பக்குவஞ்செய்த அன்னத்தை ஸ்வாமி முன்வைத்து அந்த நிலையை ஞாபகப்படுத்திக் கொள்ளக்கூடாதா? அப்படிச்செய்தால் உண்மையான பிரயோஜனம் உண்டாகாதா? அவ்விதம் ஏற்பாடு செய்யாமல் நித்திய நைவேத்யத்துக்கு நிலையான ஏற்பாடுசெய்து ஒரு பூசாரியைக் கொண்டு நித்திய நைவேத்யம் ஒழுங்காய்ச் செய்யும்படி ஏற்பாடு செய்திருப்பதினாலேயே மனிதனுக் கொப்பந்தம் சுவாமிக்கும்

அன்னம் தேவையென்றும் அந்த அன்னத்தின் இரசத்தை சுவாமி கிரகித்துக்கொள்ளுகிருரென்றும் நினைக்கும்படி விக்கிர கங்களுக்குச் செய்கிற அன்ன நைவேத்யம் தூண்டுகிறதல்லவா? நைவேத்தியப்பொருள்களை விக்கிரகத்தின் முன்வைத்து அப் பொருள்களின் பெயருடன் "சமர்ப்பியாமி" என்பதைச் சேர்த் துச் சொல்வதாகிய மந்திரத்துக்கு அருத்தம் என்ன? நான் தரு கிறேன் என்பதன்ருே? இதில் ஆன்மாவைப் பக்குவப்படுத்தி ஒப் பிக்கிறதென்றும் அருத்தம் காணவில்லையே!

இது நிற்க. சுவாமிக்கு கலியாணஞ்செய்வானேன்? சுவா மிக்கு மனைவி வேண்டுமோ? சுப்பிரமணியனைப்போலொத்த சில சுவாமிகள் ஒரு ஸ்திரீக்கு மேற்பட்ட ஸ்திரீகளைக் கலியாணம் செய்திருக்கிருர்களே "சுவாமிக்கு ஸ்திரீ வேண்டுமென்பது கிடையாது, சுவாமியினுடைய திருவருட் சக்தியை பெண்ணுக உருவகப்படுத்தி கலியாணஞ்செய்திருப்பதுபோல் பாவனையேத விர உண்மையில் கடவுளுக்கு ஸ்திரீ என்பது கிடையா"தென்று சிலர் சொல்லுகின்றனர். கைலாசத்தில் சிவபெருமானுக்கும் உமாதேவிக்கும் கலியாணம் நடந்ததாகவும் அந்த சமயத்தில் தேவர் முனிவர் முதலானவர்கள் வந்து கூடின நிமித்தம் வடபா கம் தாழ்ந்து தென்பாகம் உயர்ந்து நிற்க அகஸ்தியமகாமுனிவர் பொதியமாமலையில் வந்துநின்று பூமியைச் சமப்படுத்தினதாகவும் சொல்லுவதின் உண்மை எப்படி? சிவபெருமானுக்கும் உமாதே விக்கும் கலியாணம் நடக்கவில்லையா? கலியாணத்தின் கருத்து மேற்கூறிய உருவகம் என்றே வைத்துக்கொள்வோம். இந்த அருத்தம் விக்கிரக ஆராதனை செய்கிறவர்களில் எத்தனைபேர் களுக்குத்தெரியும், கடவுளை வணங்க ஒரே ஒரு விக்கிரகம் மாத் திரம் ஏற்படுத்தி பெண் விக்கிரகத்தை ஏற்படுத்தாமல் கடவுள் அருட்சக்தியுடையவர் என்று போதித்தால் போதாதா? அந்த சக்தியை பெண்ணுக உருவகப்படுத்தி பெண் விக்கிரகம் பிரத்தி யேகமாக ஏற்படுத்தி மனிதர்கள் கலியாணத்துக்கொப்பந்தம் திருக்கலியாண தினத்தன்று திருமணச் சடங்குகள் எல்லாம் நடத்தி திருமங்கலியதாரணமுஞ்செய்து விட்டு சுவாமிக்கு ஸ்திரீ

கிடையாது என்று சொல்வதில் பயனென்ன? மனிதர்களுக்கொப் பந்தம் சுவாமிக்கும் ஸ்திரீ வேண்டியிருக்கிறது என்கிற நினைப்புத் தானே அடி கிரியைகளினால் மனிதனுக்கு உண்டாகும். ஓர்வித மான நினைப்பு உண்டாகும்படி ஒரு ஏற்பாட்டைச் செய்துவிட்டு அந்த நினைப்புக்குரிய சங்கதி ஒன்றுமில்லை யென்றும் அதற்கு வேறுபாடான உண்மைக்கு அது அறிகுறியென்றும் சொல்வதில் என்னபயனுண்டாகும்? மனதுபறறும்படி நேரானவழியில் ஓர் உண்மையைப் போதிக்காமல் மாறான அருத்தங்கொள்ளும்படி யான சிலசடங்குகளைச் செய்து உண்மையை மறக்கும்படி செய்து பின்பு அந்த உண்மையைப் போதிக்க முயன்றால் அந்த உண்மை எளிதில் கிரகிக்கப்படுமா? ஏற்படுத்தியவர்கள் கருத்து எவ்வித மாயிருந்தபோதிலும் மேற்குறித்த ஏற்பாடுகளும் சடங்குகளும் மனிதனுக்கொப்பந்தம் கடவுளுக்கும் ஸ்திரீ வேண்டியிருக்கிற தென்று நினைக்க இடங்கொடுக்கிறதல்லவா? கோவில்களில் பள்ளி யறையென்று ஏற்பட்டு ஸ்வாமியையும் அம்மனையும் இரவுகாலங் களில் ஒன்றுசேர்த்து வைக்கிறார்களே! இதனால் ஜனங்களுக்கு என்னவிதமான அபிப்பிராயம் உண்டாகும். மனிதர்களைப்போல் சுவாமிக்கு காம இச்சையிருக்கிறதென்று தானே நினைக்க இடங் கொடுக்கும்? "இதற்கு அருத்தம் அப்படியன்று. சங்காரகாலத் தில் சகலமும் அழிக்கப்பட்டு கடவுளுடன் சேர்ந்து கடவுள் தனிப்பொருளாய் நிற்குந்தன்மையைக் காட்டுகிற" தென்று சிலர் சொல்லுகிறார்கள். ஏற்படுத்தினவருடைய கருத்து அப்படியி ருந்தாலும் இருக்கலாம். அதினால் பிரயோஜனம் இப்போது என்னை?

ஆண் விக்கிரகத்துக்கும் பெண் விக்கிரகத்துக்கும் மனிதர் களுக்கொப்பந்தம் திருமணச்சடங்குகள் நடத்தி கலியாணஞ் செய்வித்து இராத்திரி காலங்களில் பள்ளியறையை மனிதர்கள் பள்ளியறைக்கொப்பந்தம் அலங்காரஞ்செய்து பட்டுமெத்தை தலையணை திண்டு முதலியவைகள் போட்டு படுக்கை விரித்து அவ்விரண்டு விக்கிரகங்களையும் ஒன்றுசேர்த்து வைத்துப் பால் பழம் பலகாரங்களை பக்கத்தில் வைத்திருப்பதைப் பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்? கடவுளுக்கு சிற்றின்பபோகம் உண்டென நினைக்க இடம்தரும் அன்றோ?

சில விஷ்ணு ஸ்தலங்களில் சிலகாலத்துக்குமுன் வரை ஸ்வாமி மலஜலம் கழித்தல்போல் பாவனைசெய்து அதிகாலையில் திருக்குண்டிப்பிரசாத மென்று 'பெயர் வைத்து அதை எடுத்து வினியோகஞ்செய்து வந்ததாகக் கேள்வி. இத்துணை விபரீதமான செய்கைகளுக்கெல்லாம் விக்கிரக ஆராதனையே காரணமன்றோ!

இந்த ஜில்லா குற்றாலத்தில் குற்றாலநாதருக்கு இடைவிடாது தலைநோய் இருப்பதுபோலவும் "குற்றாலநாதருக்கு வற்றாக்குடினீர்" என்று இடைவிடாமல் குடினீர் போட்டு அவருக்கு அபிஷேகஞ்செய்கிறார்களே! இதென்ன விபரீதம்! சுவாமிக்குத் தலைநோவுமுண்டா? இதற்கு அருத்தம் சுவாமிக்குத் தலைநோவு என்பது அல்ல, ஒரு பக்தன் தலைநோவினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்ததாகவும் குற்றாலநாதனைத் தரிசனஞ்செய்து ஒரு குடினீர் போட்டு ஸ்நானஞ்செய்ததில் அது சௌக்கியமாய்விட்டதாகவும் அதற்கு அறிகுறியாக அந்தப்பக்தன் அந்தக்குடினீரை சுவாமிக்கு அபிஷேகஞ்செய்து தன் பக்தி விசுவாசத்தைக் காட்டினதாகவும் சிலர் சொல்லுகின்றனர். இப்படிச்சொல்வது விபரீதமே என்று தோன்றுகிறது. ஒரு மனிதனுக்கு ஒரு வியாதி ஒரு ஔஷதத்தால் சௌக்கியமானால் அவனைப்போலொத்த மனுஷனுக்கு அதே மாதிரி வியாதிகண்டால் அந்த ஔஷதத்தைக் கொடுக்கச்சொல்வது கிரமமாயிருக்கிறது. அது காருண்ணியச் செயலாயும் ஆகும். சுவாமியைத் தரிசனஞ்செய்து சௌக்கியமானால் அந்த ஔஷதத்தை சுவாமிக்குக் கொடுக்கும்படி செய்வானேன். சுவாமிக்கும் வியாதி உண்டாகுமா? நன்றியறிதலாகிய பக்திவிசுவாசத்தை எவ்விதம் காட்டுகிறது? மற்ற ஸ்தலங்களில் தரிசனஞ்செய்து வியாதி சௌக்கியமாகவில்லையா? அப்பேர்ப்பட்ட ஸ்தலங்களில் இவ்வித ஏற்பாடுகள் ஏன் செய்யவில்லை. குற்றாலநாதர் மலையடிவாரத்திலிருப்பதால் வெயிற்காலத்தில் உஷ்ணம் அதிகமாயும் மழை பனிக்காலங்களில் குளிர் அதிகமாயும இருப்பதை உத்தேசித்து அவருக்குத் தலைநோவு உண்டாகக்கூடுமென்று ஒரு பக்தன் குடிநீர்போட்டு அபிஷேகஞ்செய்து வந்ததை முன்னிட்டு அந்த ஏற்பாடு நிலைநின்று வருகிறதென்று கொள்வதே பொருத்தம் எனத் தோன்றுகிறது.

கண்ணப்பநாயனர் மலையில் ஒரு சிவலிங்க விக்கிரகத்தைக் கண்டு அன்புசெலுத்துகையில் சுவாமி பசியாயிருப்பாரென்று எண்ணி மாமிசத்தைக் கொடுத்துப் பசிதீர்க்க முயன்றதாயும் சுவாமி தனித்து இருப்பாரேயென்று பயந்து அந்த விக்கிரகத்தைத் தனித்துவைத்து விட்டு வெளியேபோக மனமில்லாமல் திகைத்து இருந்ததாயும் சுவாமி கண்ணிலிருந்து இரத்தம் புறப்பட்டதாயும் கண்ணப்ப நாயனர் தன் கண்ணைக்கொடுத்து சௌக்கியம்பண்ணினதாயும் சொல்லப்படுகிறதே! இதனால் கண்ணப்ப நாயனர் சுவாமியும் மனிதனைப்போல் பசியுடையவராய் இருந்தாரென்றும், தனித்திருந்தால் அவருக்கு அபாயம் நேரிடுமென்றும், அவருக்குக் கண் வியாதி உண்டாயிருக்கதென்றும் அதை தான் சௌக்கியமபண்ணக்கூடுமென்றும் நினைத்தாரென்றும் ஏற்படுகிறதே? இவ்வித குணங்கள் மனிதனுடைய குணங்களா? சுவாமியினுடைய இலட்சணங்களா? இவையெல்லாம் அந்தோ! விக்கிரக வணக்கத்தால் நேர்ந்த விபரீதமன்றோ?

சில வருஷங்களுக்குமுன் திருச்செந்தூரில் பழைய விக்கிரகத்திருமேனி பின்னப்பட்டுப்போனதின் நிமித்தம் புது விக்கிரகப் பிரதிஷ்டை செய்து அஷ்டபந்தனஞ் செய்யுங்காலத்தில் பழய விக்கிரகத்திருமேனியை அதை வைக்கப்பட்டிருந்த இடத்திலின்றும எடுத்து அந்த விக்கிரக ஸ்வாமி இறந்துபோனதாக எண்ணி அபரகிரியைகள் செய்து துஷ்டி கொண்டாடினதாகத் தெரியவருகிறது. இவ்வித விபரீதமான செய்கைகளுக்கும் விக்கிரக வணக்கமல்லவோ இடங்கொடுத்தது!

இது நிற்க. கடவுள் சர்வவியாபியாய் எங்கும் நிறைந்திருக்கிறவராகையால் விக்கிரக வணக்கம் விக்கிரகவாயிலாக வழிபடுவதற்கு ஏறபட்ட ஒரு பக்திமார்க்கமென்று வைத்துக்கொண்டால் எல்லா ஸ்தலங்களுக்கும மகிமை ஒரே தன்மையாகத்தானே இருக்கவேண்டும். பக்திசெய்பவர்களுடைய பிரார்த்தனைக்கு அனுகூலமும் பிரதிகூலமும் கிடைப்பது பக்திசெய்பவருடைய மனப்பக்குவத்தையும் பிரார்த்தனை செய்யும் தன்மையையும் பொறுத்து நிற்குமேயன்றி ஆலயங்களைப் பொறுத்ததன்றே!

அப்படிக்கிருக்க மூர்த்தி தலம் தீர்த்தங்களுள் மகிமைகூடுதலும் குறைதலும் ஏற்பட்டிருப்பதற்குக் காரணமென்ன? சுப்பிரமணிய ஸ்வாமியைத் தரிசனஞ்செய்வதில் திருச்செந்தூரில் செய்தாலென்ன? குறுக்குத்துறையில் செய்தாலென்ன? திருச்செந்தூரில் தரிசனஞ்செய்தால் பலன் அதிகமென்றும் மற்றவிடங்களில் குறைவென்றும் ஏற்பட்டு திருச்செந்தூரில் ஏராளமான பணம் காணிக்கையாய்ச் சேர்வதற்கும் மற்றவிடங்களில் வெகு குறைவாயிருப்பதற்கும் காரணமென்ன?

இதுபோலவே சிவலிங்கதரிசனம்பண்ணுவதிலும் இவ்வித வித்தியாசங்கள் ஏற்பட்டு சங்கரநயினார்கோவிலில் ஏராளமான காணிக்கைப் பணம் சேர்வதற்கும் மற்றவிடங்களில் குறைவாயிருப்பதற்கும் காரணமென்ன? ஒரு ஊரிலேயே இரண்டு சிவஸ்தலங்களில் ஒரு சிவஸ்தலத்துக்கு மேன்மையும் மற்றொரு சிவஸ்தலத்துக்குத்தாழ்மையும் ஏற்பட்ட காரணமென்ன? திருநெல்வேலியில் நெல்லையப்பருக்கும தொண்டர்நயினாருக்கும் எவ்வளவுவித்தியாசம் ஏற்பட்டிருக்கிறது. நெல்லையப்பரைத் தரிசனஞ்செய்ய வருகிற ஜனங்களுக்கு தொண்டர்நயினாரைத் தரிசனஞ்செய்யவருகிற ஜனங்கள் எவ்வளவோ குறைவாயிருப்பானேன். மனிதர்களுக்கொப்பந்தம் ஆலயங்களுள்ளும் பணத்தை முன்னிட்டும், நகைகளை முன்னிட்டும், விசேஷங்களின் ஆடம்பரத்தை வைத்தும் மற்றும் சில சங்கதிகளை முன்னிட்டும் தாரதம்மியம் ஏற்பட்டிருப்பதுபோல் விளங்கவில்லையா?

திருநெல்வேலியில் ஆனி உற்சவ தினங்களில் ஒரு தினம் நெல்லையப்பரை வீதியில் விட்டுவிட்டு அம்மன் கோவிலுக்குள் போய் கதவை அடைத்துக்கொள்வதுபோலவும் அவ்விதம் செய்வதற்குக் காரணம் நெல்லையப்பர், காமஇச்சையால் தவறுதலுற்றதுபோலவும் பின்பு சமாதானப்பட்டு கதவைத் திறந்துவிடுவதுபோலவும் ஒரு விசேஷம் நடக்கிறதாகத் தெரியவருகிறது. இவ்வித இழிவும் சுவாமிக்குக் கற்பிக்க விக்கிரக வணக்கமல்லவோ இடங்கொடுக்கிறது.

சுவாமிக்கு விநாயகர் சுப்பிரமணியர் என்று இரண்டு குழந்தைகள் இருப்பதுபோலவும் அதில் விநாயகருக்குக் கலியாணம் ஆகவில்லையென்றும் சுப்பிரமணியருக்கு இரண்டு ஸ்திரீகள் கலியாணம் ஆயிருப்பதாகவும் நம்புகிறார்களே; கடவுளுக்கு மனிதர்களுக்கு ஒப்பாந்தம் ஸ்திரீ இருப்பது போதாதென்று பிள்ளைகளும் உண்டென நினைக்க விக்கிரக வணக்கமல்லவோ இடங்கொடுக்கிறது. ஏதாவது ஒரு சாமானைக் காணாமற் போனாலும் அல்லது வியாதி முதலிய துன்பங்கள் நேரிட்டாலும் காணாமற்போன சாமான் அகப்படும்பொருட்டும் வியாதி முதலிய துன்பங்கள் நீங்கும்பொருட்டும் அல்லது நினைத்த வேறு காரியங்கள் அனுகூலமாகும்பொருட்டும் அப்படி நினைத்த காரியம் அனுகூலமானால் பிள்ளையாருக்கு இத்தனை தேங்காய் விடலை போடுகிறோம் என்றும், கோமதி அம்மனுக்கு இவ்வளவு ரூபாய் காணிக்கை கொடுக்கிறோம் அல்லது வேறு சாமான்கள் செய்து அல்லது வாங்கி காணிக்கையாய்க் கொடுப்பதாகவும், இடபவாகனத்தில் எழுந்தருளச்செய்வதாகவும் இன்னும் இதுபோன்ற விதமாக விக்கிரக வணக்கஞ்செய்கிறவர்கள் பிரார்த்தனை செய்துகொள்ளுகிறார்களே!

ஒரு மனிதனிடத்தில் ஒரு காரியம் ஆகவேண்டியிருந்தால் அவனுக்குவேண்டியவற்றைக் கொடுத்து அவனைத் தாக்ஷிண்ணியப்படுத்த முயலுவதுபோல தேங்காய் முதலிய சாமான்களை கடவுளுக்குக் கொடுத்து கடவுளைத் தாக்ஷிண்ணியப்படுத்த முயலுவது போல் ஆகவில்லையா? கடவுள் நமக்குச் செய்கிற உதவிக்குக் கைம்மாறாக நாமும் கடவுளுக்குச் செய்யக்கூடியது ஏதேனும் ஒன்று உண்டோ! தேங்காய் பழம் இடபவாகன எழுந்தருளல் முதலியவற்றில் கடவுளும் பிரியப்படுகிறாரோ! அவ்வித பிரார்த்தனை கடவுளுக்கு லஞ்சங்கொடுத்து கடவுளைக் கைவசப்படுத்த முயலுவதுபோல ஆகவில்லையா? இவ்வித பிரார்த்தனைக்கு விக்கிரக வணக்கமல்லவோ இடங்கொடுக்கிறது. இன்னும் இவைபோன்ற எத்தனையோ விஷயங்கள் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றால் கடவுளுக்கு மனிதர்களுடைய குறைகுற்றங்களைக் கற்பிக்க இடங்கொடுத்தது விக்கிரக வணக்கம் என்று விளங்கவில்லையா? இது நிற்க.

இனி, மேலே 4 வது இலக்கமிட்ட விஷயத்தைப்பற்றி விசாரிப்போம். அறிவு மனச்சாக்ஷி, அன்பு ஞானக்கண் என்று சொல்லப்பட்ட நான்கு அகக்கண்களைக் கடவுள் நமக்கு அருளியிருக்கிறார். அவருடைய அற்புதமான சிருஷ்டிப்பொருளை நாம் கவனித்துப்பார்த்து அறிவுவிருத்திசெய்து நீதியாயும் அன்பாயும் நடந்து நல்லொழுக்கத்திறபழகி அன்பைப்பெருக்கி இந்த அகக்கண்களால் கடவுள் நமக்கு உணர்த்திபவாறு நடந்து அவ்வுணர்ச்சிக்கு மாறுபடாமல் ஞானக்கண்ணினால் கடவுளைக்கண்டு வழிபட்டு நாம் பேரின்ப வீட்டிற்குப் பாத்திரராகும்படி நம்மைக கடவுள் வளர்த்துவர அதற்கு மாறாகப் புறக்கணகளுக்கு விசேஷமாகத்தோன்றும் விக்கிரகங்களை அமைத்து அலங்கரித்து உற்சவங்கள் நடத்திக் கடவுளை வழிபடும்படி செய்திருக்கிற ஏற்பாடுகள் அகக்கண்களின் பார்வையைக் குறைத்து புறக்கண்ணுக்குப் புலப்படக்கூடிய கிரியைகளை விசேஷித்துக் கவனிக்கும்படியான நிலைமைக்குக் கொண்டுவந்து விடுகின்றன.

திருநெல்வேலியில் ஆனி உற்சவ 4 வது 7 வது தினங்களிலும் தேரோட்ட தினத்திலும் திருக்கலியாண முதலிய விசேஷங்களிலும் ஜனங்கள் ஏராளமாய்க் கூடுவதும் மற்ற தினங்களில் அப்படிக் கூட்டாமலிருப்பதும் வெளி அலங்காரத்தைப் பொறுத்தல்லவோ! சுவாமியினுடைய குணங்களைப்பற்றி மற்ற உற்சவ தினங்களைவிட இந்த உற்சவ தினங்களில் ஏதாவது அதிகமாய்க் கிரகிக்கிறார்களோ! அனேக மாதங்களில நடக்கிற சிறு தேரோட்டதினங்களில், யாதொரு கூட்டமும் இல்லாதிருப்பானேன்! புறக்கண் பார்வைக்கு ஆனந்தமாக இருக்கும்படி நடக்கிற ஆனி உறசவ தேரோட்ட தினத்தில் எள்ளுப்போட இடமில்லாமல் ஏராளமான ஜனங்கள் கூடுவானேன்? தேரோட்ட உற்சவங்களுக்குள் ஒன்றுக்கொன்று அவ்வளவு வித்தியாசப்படுவானேன்.

விக்கிரகங்களின் சிகை கடவுளுடைய ஞானத்தைக் குறிக்கிறதென்றும் முகம் சர்வவியாபகத்துவத்தைக் குறிப்பிடுகிறதென்றும் இவைபோல மற்ற அங்கங்களும் கடவுளுடைய வெவ்வேறு குணங்களைக் குறிப்பிடுகிறதென்றும் கடவுளுக்குக் கலியாணஞ்

செய்வது கடவுளுடைய அருட்சக்தியை உருவகப்படுத்தி விசே ஷித்துக்காட்டும் குறியென்றும், இன்னும் இதுபோல விக்கிரக வணக்கத்தில் நடைபெறும் அனேக கிரியைகளுக்கு உட்பொருள் இருக்கிறதென்றும் சிலர் சொல்லுகிறார்களெனவும் அப்பொருள் கள் விக்கிரகவணக்கஞ் செய்பவர்களில் பெரும்பாலார்க்குத்தெரிந் திருக்கவில்லை என்றும் முன்னமே சொல்லியிருக்கிறோம். இப்ப டித் தெரியாமற்போவது எதனால்:—

அகக்கண்களுக்குப் புலப்படும்படியான விதமாய் அல்லாமல் புறக்கண் பார்வைகளுக்குத் தெளிவுபடும்படி ஏற்பட்டிருக்கிற சடங்குகளினால் அகக்கண்பார்வை குன்றி புறக்கிரியைகளை விசே ஷித்துப் பார்க்க விக்கிரக வணக்கம் இடங்கொடுத்ததினாலல் லவோ! விக்கிரகங்களுக்கு அபிஷேக அலங்கார நைவேத்யஞ் செய்து உற்சவங்கள் நடத்திவருவதில் அகக்கண்களின் பார்வை எவ்விதமாயாவது வளர மார்க்கமிருக்கிறதா? இல்லவேயில்லை. யோசிக்க யோசிக்க அறிவு பெருகும். நல்லொழுக்கத்திற் பழகப் பழக நல்லொழுக்கம் சிறக்கும். நேசிக்க நேசிக்க அன்பு விரியும். கடவுளுடைய திவ்விய கலியாண குணங்களைப்பற்றி முன் குறிப் பிட்ட மூன்று அகக்கண்களின் உணர்ச்சிக்கு மாறுபடாமல் ஞான க்கண்ணினால் கடவுளைச் சிந்திக்கச் சிந்திக்க கடவுளுடைய திவ் விய கலியாண குணங்கள் நமக்கு வெளிப்படும். இவ்விதமாய் அகக்கண்களின் பார்வைகள் விருத்திபடைய ஏற்பாடு செய்யாமல் புறக்கண்களைப் பற்றும்படியான புறக்கிரியைகளைக் கொண்டு கடவுளை வழிபடும்படி செய்திருப்பது மனிதருடைய அகக்கண் களின் உணர்ச்சி குன்றுவதற்கு இடங்கொடுக்கவில்லையோ! விக் கிரகவணக்கம் காரணமாக எத்தனைபேர் கடவுளுடைய திவ்விய கலியாண குணங்களைப்பற்றி அறிந்திருக்கிறார்களென்று விசாரித் துப்பார்த்தால் உண்மை வெளிப்படும். இது நிற்க. மேலே 5வது இலக்கமிட்ட விஷயத்தைப்பற்றிச் சற்று ஆராய்வோம்.

விக்கிரகாராதனை சிவபுண்ணியம் வேறு பசு புண்ணியம் வேறு எனப் பிரித்து இவ்விரண்டு புண்ணியங்களும் ஒன்றோ

டொன்று முரணுதலின்றி ஒன்றுந்தன்மையுடையதென்ற உண்மையை மறைத்து சிவபுண்ணியத்துக்கிடையூறானபோது பசுபுண்ணியத்தைச் சிதைக்க ஏதுவாகிறது.

கடவுள் முற்றறிவுடையவர், சர்வசக்தர், சர்வகாருண்ணியர், பேரின்பம் நிறைந்தவர். அவருக்கு நாம் செப்பக்கூடியது ஒன்றுமில்லை. கடவுள் நம்மை இந்த உலகத்தில் சிருஷ்டித்து நம்மை வளர்த்து வருவது நம்முடைய ஆன்மவளர்ச்சியின் பொருட்டேயன்றி வேறல்ல. இந்த உலகத்தில் கடவுளால் அமையப்பெற்றிருக்கும் எல்லாவித ஏற்பாடுகளும் நம்முடைய ஆன்மவளர்ச்சிக்கு ஏற்றவிதமாகவேயிருக்கின்றன.

அறிவு வாயிலாகவும் மனச்சாக்ஷி வாயிலாகவும் அன்புவாயிலாகவும் கடவுள் நாம் செய்யவேண்டியது இன்னதென்பதை அறிவித்து மேல் நெறியெல்லாம் நமக்குப் புலயாக்கி நாம் இன்னவிதம் நடக்கவேண்டுமென்று நமக்கு அவர் உணர்த்துவது நாம் அபிவிருத்தியடையும்பொருட்டேயன்றி அவரைத் திருப்திசெய்வதற்காக அல்ல, அவர் உணர்த்தியவாறு நாம் நடந்தோமானால் அதுவே அவருக்குத் திருப்தி. அதுவே நமது ஆன்மவளர்ச்சிக்கு ஏற்ற சாதனம். அவர் உணர்த்தியதற்கு விரோதமாய் நாம் நடப்பின் அதுவே அவருக்கு அதிருப்தி. அதுவே நமது ஆன்மவளர்ச்சி குன்றுவதற்கும் ஏதுவாகும். இவ்விதம் அவர் உணர்த்தியவாறு நாம் நடந்து ஆன்ம பக்குவமடைந்து பேரின்ப வீட்டை அடையவேணுமென்ற ஒரே நோக்கத்துடன் யாதொரு கைம்மாறும் எதிர்பாராமல் நம்மை வளர்த்துவருகிற பகவானிடத்தில் நாம் அன்புசெலுத்தி அவர் பெயரைச் சொன்னமாத்திரத்திலும் கேட்டமாத்திரத்திலும் நம்முடைய மெய் அரும்பி விதிர்விதிர்த்து கண்ணீர்ததும்பி நன்றியறிதலால் உள்ளம நெகிழ்ந்து அறிவு முதலிய அகக்கண்களினால் அவர் நமக்கு உணர்த்தியவாறு ஒழுகுதலே கடவுள் வழிபாடென்று நினைக்கிறோம்.

கடவுளிடத்தில் அன்பு செலுத்தலும் அவர் பெயரைக் கேட்டமாத்திரத்திலும் சொன்னமாத்திரத்திலும் நன்றியறித

...உள்ளம் நெகிழ்ந்து மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து நிற்பது சிவபுண்ணியமென்றும் அவர் நமது அகக்கண்களின் வாயிலாக உணர்த்திபவாறு மனிதர்கள் யாவரையும் சகோதர வாஞ்சையுடன் நேசித்து நீதியாய் நடந்து பரோபகாரசிந்தை யுடன் நேசித்து நீதியாய் நடந்து பரோபகார சிந்தையுடன் வளர் வதே பசு புண்ணியமென்றுஞ் சொல்லலாம். சிவபுண்ணியத் துக்கும் பசுபுண்ணியத்துக்கும் முரணுதல் ஒன்றுமில்லை. கட வுளிடத்தில் அன்புசெலுத்துகிறவன் கடவுளுடைய பிள்ளைகளா கிய நமது சகோதரர்களிடத்திலும் அன்புசெலுத்துவான். மானி டர் யாவரும் சகோதரரென அன்புசெலுத்துகிறவன் நமது பிதா வாகிய கடவுளிடத்திலும் அன்பு செலுத்துவான். கடவுளுக்கு நம்மால் ஆகவேண்டியது ஒன்றுமில்லாததால் கடவுள் நமக்கு செய்துவரும் உபகாரத்தை உன்னி நன்றியறிதலாகிய உளநெ கிழ்ச்சியோடு நம்முடைய சகோதரர்களுக்கு பரோபகாரம் புரி தலே கடவுளிடத்தில் அன்புசெலுத்துதலாய் முடியும்.

உண்மை இப்படியிருக்க கடவுளை வணங்குவதற்கென்று விக்கிரகத்திருமேனிகள் ஏற்படுத்தி அவைகளுக்கு அபிஷேக அலங்கார நைவேத்ய முதலிய சில கிரியைகளைச் செய்து கடவுளை வழிபடுதலினால் சிவபுண்ணியமும் பசுபுண்ணியமும் வேறென்று பிரித்து நினைக்க இடங்கொடுத்து இரண்டும் முரணக்கூடியது போல் நினைத்து சிவபுண்ணியத்துக்கெதிரில் பசுபுண்ணியத்துக்கு இடையூறுவருவிக்க ஏதுவாயிருக்கிறதென்று தோன்றுகிறது.

சண்டேசுர நாயனார் பசுக்களை மேய்த்துப் பரிபாலனஞ் செய்து அந்தப் பசுக்களின் பாலை, சிவபெருமானின் உருவத்திரு மேனி என்று குவித்துவைத்த மணலில் அபிஷேகஞ்செய்யுங் காலத்தில் அவருடைய தகப்பனார் சண்டேசுர நாயனார் செய்த அபிஷேகப் பால் அவருக்குச் சொந்தமாயில்லாமல் அப்பசுக்க ளின் சொந்தக்காரருடையதாய் இருந்ததினால் அப்படிச்செய்தது தகாத செய்கையென்று நினைத்துத் தடுக்க சண்டேசுர நாயனார் தன் தகப்பனார் காலை வெட்டிவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

ஒருவன் தன் தகப்பன் காலை வெட்டுவதும் கருணையாகுமோ? கொடிய செய்கையல்லவோ? அப்பேர்ப்பட்ட செயலையும் ஒரு உண்மையான சிவபக்தன் செய்யலாமோ? கடவுளுக்கு அபிஷேகம் வேண்டியிருப்பது போல் ஒரு கிரியை ஏற்படுத்திக்கொண்டதினாலல்லவா அவ்வித கிரியையாகிய சிவபுண்ணியத்துக்கு எதிரில் பசு புண்ணியத்தின் தன்மை இன்னதென்று யோசியாமல் இந்தக் கொடிய செய்கையைச் செய்யும்படி நேரிட்டது.

சிவகாமியாண்டார் குடலையில் பத்திரபுஷ்பம் எடுத்துக்கொண்டுபோகுங்காலத்தில் ஒரு யானையின் பக்கத்திற்போக அந்த யானை அந்தக் குடலையைப்பிடித்து இழுக்க எறிபத்தநாயனர் சிவபுண்ணியப் பணிவிடைக்குப் பங்கஞ்செய்த யானையின் துதிக்கையை வெட்டினதாகவும் அதைத்தடுக்கவந்த யானைப்பாகனையும் வெட்டினதாகவும் சொல்லப்படுகிறது. அந்தோ! யானைக்கு சிவபணிவிடைக்குப பத்திரங்கொண்டு போவதாகவுந் தெரியுமோ? பச்சிலையென்றுதானே இழுத்தது. தெரிந்தாலும் அந்தக்குற்றத்திறகாக அதன் துதிக்கையையும் அதைத்தடுக்கவந்த யானைப்பாகனையும் வெட்டுதல் முறையோ? ஜீவகாருண்ணிய மற்ற இந்த விபரீத செயலுக்கு விக்கிரக வணக்கமன்றோ காரணமாயிருந்தது. ஷ எறிபத்தநாயனர் சரித்திரத்தை எழுதிய ஒரு பெரியவர் அந்தச்சரித்திர ஆரம்பத்தில் "கருவூரிலே ஆனிலை என்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற பரமசிவனை வழிபடுகின்றவரும் அவருடைய அடியார்களுக்குத் திருத்தொண்டு செய்கின்றவரும் அவ்வடியார்களுக்கு ஆபத்துவந்தகாலத்தில் வெளிப்பட்டு அவ்வாபத்துக்குக் காரணமாயிருந்தவர்களை மழுவினுல் வெட்டுகின்றவருமாகிய எறிபத்த நாயனர் ஒருவர் இருந்தார்" என்று எழுதியிருக்கிறர். ஆகவே சிவபக்தராகிய இந்த எறிபத்தநாயனர் சிவபணிவிடைக்கு இடையூறு செய்தவர்களை மழுவினுல் வெட்டுகிறதே தொழிலாக வைத்துக்கொண்டிருந்ததாகத் தெரியவருகிறது. இதென்ன விபரீதம். அப்படி இடையூறு செய்தவர்களை மழுவினுல் வெட்டுகிறதும் சிவப்பணிவிடையா? கடவுள் வணக்கம்வேறு, பசு புண்ணியம் வேறு, என்று பிரத்தியேகப்படுத்திக்கொண்ட

தினுல் அல்லவோ இப்படி ஜீவகாருண்ணிய மற்ற செயலை சிவ பணிவிடைபோல் நினைக்கும்படி நேரிட்டது.

இம்மாதிரியாக சிவபுண்ணியத்துக்கு எதிரென்று நினைத்து ஜீவகாருண்ணியமற்ற செயலைச்செய்த சிவபக்தர்களுடைய சரித்திரங்கள் அனேகம் இருக்கின்றனவென்று நினைக்கிறேம். விரிக்கிற் பெருகும். ஆதலின் இவ்விரண்டு சிவபக்தர்களுடைய சரித்திரமே இந்த விஷயத்தின் தன்மை இன்னதென்று விளக்கப் போதுமெனத் தோன்றுகிறது.

இது நிற்க, விக்கிரகவணக்கம் இன்னும்பலவித ஆட்சேபனைகளுக்கு இடங்கொடுக்கிறதென்றுநினைக்கிறேம். சிறுத்தொண்டர் ஓர் சிவனடியார்க்கு அமுதளிக்க அவரைத் தன் வீட்டுக்கு அழைத்த காலத்தில் அந்த சிவனடியார் சிறுத்தொண்டருடைய பிள்ளையை அறுத்துக் கறிசமைத்து வைத்தால் தான் அமுது புசிப்பதாகச் சொன்னதாகவும் அப்படியே சிறுத்தொண்டரும் செய்ததாகவும் சொல்லப்படுகிறது. ஓர் மனிதனுக்குத் தன் பிள்ளையைக் கொல்வதற்கு என்ன சுதந்தரமிருக்கிறது. அப்படிச் செய்வது ஜீவகாருண்ணியமும் நீதியுமற்ற செயலாகாதா? சிவ சின்னங்கள் அணிந்த ஒரு சிவ பக்தனுனுலும் இப்பேர்ப்பட்ட செய்கையைச் செய்யச்சொன்னல் செய்யலாமா?

ஒரு விஷ்ணுபக்தர் கொள்ளையடித்தும் திருடியும் அவ்விதம் அபகரித்த திரவியங்களை விஷ்ணு பணிவிடையில் உபயோகித்த தாகச் சொல்லப்படுகிறது.

மேற்கண்ட மகான்களுடைய சரித்திரங்களினுல் சிவபுண்ணியம் வேறு நீதி சத்தியம் முதலிய பசுபுண்ணியம் வேறு என்று மகான்கள் நினைத்து நடந்ததாகத் தெரியவருகிறதல்லவா?

மேலும் மெய்ப்பொருள் நாயனுரை அவருடைய எதிரியாகிய ஓர் அரசன் வெல்ல சக்தியற்றவனுயிருந்ததால் சிவவேடந் தரித்து ஓர் சிவ பக்தனைப்போல் மெய்ப்பொருள் நாயனுரிடத்திற் சென்று அவருக்கு உபதேசஞ்செய்யப் போவதுபோல் பாவனை

செய்து அவனைக்கொன்றுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. சிவ சின்னங்களுக்குப் பொதுவாக மரியாதையும் விசுவாசமும் ஏற்பட்டிருப்பதை உத்தேசித்து சில மனிதர்கள் விபூதி உருத்திராக்கம் முதலிய சிவசின்னங்களைத் தரித்துக்கொண்டும் காவிவேஷ்டி தரித்துக்கொண்டும் அனேக கபடச்செய்கைகளைச்செய்து ஜனங்களை வஞ்சிக்கிறார்களென்பது யாவருக்குந் தெரிந்த விஷயம். கடவுள் வழிபாட்டிற்கு உள்ளன்பு பிரதானமே தவிர கிரியைகளிலும் சின்னங்களிலும் பிரயோஜனமில்லை என்பதை வற்புறுத்தத் தக்க ஏற்பாடு செய்யாமல் கிரியைகளுக்கும் சின்னங்களுக்கும் விசேஷங்கற்பிக்கும்படி ஏற்பட்டிருப்பதினாலல்லவோ இவ்வித அநீதிச் செய்கைகளுக்கு இடமுண்டாகிறது.

உலக நடையில் நற்குணமும் விசுவாசமுமுள்ள சில ஜனங்கள் தங்களுடைய முன்னோர்களை சமாதிவைத்து அவர்கள் சிவபதம் அடைந்ததாகப்பாவித்து அச்சமாதிக் குழிகளின்பேரில் சிவலிங்கங்களைவைத்து ஆலயங்கட்டி நித்தியபூஜைகளுக்கும் ஏற்பாடுசெய்து விடுகிறார்கள். இப்பேர்ப்பட்ட சமாதிக்கோவில்களை சிலகாலங்களுக்குப்பின் சிவாலயங்களாக நினைத்து அவைகள் சமாதி ஸ்தலங்கள் என்பதைமறந்து அனேகர் வழிபடுகிறார்களென்பது யாவருக்குந் தெரிந்தவிஷயம். இவ்வித சமாதி ஸ்தலங்களையும் சிவாலயங்களாகப்பாவித்து வழிபடும்படி நேரிடுகிறது, விக்கிரக வணக்கத்தினால் நேரிடுகிற காரியமல்லவோ ?

யாவரும் யாதொருவிதமான சந்தேகமுமின்றி சிவாலயங்களென வழிபடும் திருநெல்வேலி ஸ்ரீ நெல்லையப்பர் காந்திமதி சிவாலயமும் மதுரை ஸ்ரீ சொக்கலிங்கர் மீனாக்ஷி சிவாலயமும் சுயம்புலிங்க சிவாலயங்களா ? அல்லது தேவர் முனிவர் மனிதர் இவர்களுள்யாராலாவது பிரதிஷ்டைசெய்யப்பட்டசிவாலயங்களா? அல்லது சமாதி ஸ்தலங்களா ? என யோஜிக்குங்கால் இன்னவித சிவாலயங்களென்று தெளிவாகத் தீர்மானிக்க இடமில்லையென்று நினைக்கிறோம்.

ஸ்ரீநெல்லையப்பருடைய மனைவியாகிய ஸ்ரீகாந்திமதியம்மாள் செட்டிப்பெண்ணென்றும் திருக்கலியாண காலத்தில் செட்டிமார் வகுப்பைச் சேர்ந்தவர்கள் தங்கள் குடும்பப்பெண்ணுக்குக் கலியாணம் நடப்பதுபோல் பாராட்டுவதும் அவர்கள் சருள் மறுவீட்டுப் பலகாரம் முதலியன வைப்பதும் ஆகிய சடங்குகளை இது விஷயமாய்க் கவனித்துப்பார்க்கவேண்டும்.

ஸ்ரீசொக்கலிங்கருடைய அம்பிகையாகிய ஸ்ரீமீனாக்ஷியம்மாள் ஓர் குறிப்பிட்ட பாண்டியஇராஜாவினுடைய புத்திரியென்று சொல்வதையும் இதுவிஷயமாய்க் கவனித்துப் பார்க்கவேண்டும்.

பாம்பே ஐக்கோர்ட்டு நியாயாதிபதியாயிருந்த "மகா தேவ கோவிந்தரானடே" என்பவர் விக்கிரக வணக்கத்தால் வருந்தீமைகளைப் பின்வருமாறு கூறியுள்ளார்:

"Idol worship materialises. localises, humanises,
and sptupifies the conceptions of God"

மேற்கூறிவந்த முகாந்திரங்களால் அவர் கூற்றுப்பொருத்தமாகக் காணப்படுகிறது.

இது நிற்க. இந்து சமயத்தைச்சேர்ந்த பல பிரிவினர்களாலும் தவறுதலில்லாத தங்களுடைய சமய நூலென்று ஒப்புக்கொள்ளப்படுகிற வேதங்களில் விக்கிரகவணக்கத்துக்கு ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை. வேதங்களையே தங்களுடைய கொள்கைகளுக்கு ஆதாரமாகக் கைக்கொண்டிருக்கிற ஆரிய சமாஜத்தார் வேதங்கள் விக்கிரக வணக்கத்தைக் கண்டிக்கிறதாகத் தெரிந்து விக்கிரக வணக்கத்தைக் கைவிட்டதுமல்லாமல் அப்பேர்ப்பட்ட வணக்கத்தைக் கண்டித்தும் பேசுகின்றனர்.

உத்தரகீதையில்

அக்நிர் தேவோ த்விஜா தீநாம்;
முநீநாம் ஹ்ருதி தைவதம்;
ப்ரதிமா ஸ்வப் ரபுத்தாணும்;
ஸர்வத்ர ஸமதர்சிந:—

15

துவிஜர்களுக்குத் தெய்வம் அக்கினியில், முனிவர்களுக்குத் தெய்வம் ஹிருதயத்தில, புத்தி குன்றியவர்களுக்குத் தெய்வம் விக்கிரகத்தில், சமதிருஷ்டியுடையவர்களுக்குத் தெய்வம் எங்கு மென்றும்.

சாதாதப வசனத்தில்

அப்ஸு தேவா மநுஷ்யாணாம்;
திவி தேவா மநீஷிணாம்:
காஷ்டலோஷ்டேஷு மூடானாம்
யுக்த ஸ்யாத்ம நிதேவதாம்:—

சாதாரண ஜனங்களுக்குத் தெய்வம் நீரில், சற்றுத் தெரிந்தவர்களுக்குத் தெய்வம ஆகாசத்தில், மூடர்களுக்குத்தெய்வம் கல்லிலும் கட்டையிலும், யோகிகளுக்குத் தெய்வம் அவர்கள் உள்ளே யென்றும்,

பாகவதம் 3-வது ஸ்கந்தம் 29வது அத்தியாயத்தில்.

அஹம் ஸர்வேஷு பூதேஷு பூதாத்மாவஸ் திதஸ்ஸதா தமவக் ஞாயமாமர்த்ய! குருதேர்ச்சா விடம்பநம் யஸ்து ஸர்வேஷு பூதேஷு ஸந்தமாத்மா நமீச்வரம் ஹித்வார்ச்சாம்பஜதே மௌட்யாத் பஸ்மக்யேவ ஜுஹோதி ஸ: அஹமுச்சவசைர்த்ரவ்யை: க்ரியயோத்பம் நயாநகே நைவதுஷ்யேர்ச்சிதோ அர்ச்சாயாம் பூதக்ராமா வமாநிந:

நான் எப்போதும் சகல பூதங்களிலும் ஆத்ம ஸ்வரூபமாயிருக்கிறேன். அப்படிப்பட்ட என்னை மனிதன் அவமதித்து அர்ச்சையாகிய பரிகாசதனைத் செய்கிறான், சகல பூதங்களிலும் ஆத்ம ஸ்வரூபமாயுள்ள ஈஸ்வரனாகிய என்னை விட்டுவிட்டு முட்டாள் தனத்தினால் அர்ச்சையை யார் தொழுகிறானோ அவன் செய்யும் பூஜை சாம்பலிற்கொட்டிய நெய்யிற்கொப்பாம். ஓ! நிர்த்தோஷமானவனே சகல பூதங்களுக்கும் அவமானம் விளையும்படியாக என்னை அர்ச்சையாக்கி உயர்ந்த பதார்த்தங்களைக்கொண்டு பூஜிப்பவனிடத்தில் நான் சந்தோஷமடையவேமாட்டேன் என்றும் சொல்லியிருப்பதாகத் தெரிகிறது.

மேற்கூறிய வாக்கியங்களில் விக்கிரக வணக்கமானது கடவுளை அவமதித்துப் பரிகாசித்தலாகுமென்றும் விக்கிரக வணக்கஞ் செய்கிறவர்கள் புத்திகுன்றியவர்களென்றும் மூடர்களென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

மேலும் சில சைவசமய மகான்கள் அடியிற்கண்டபடி விக்கிரக வணக்கத்தைக் கண்டித்துப் பாடியிருப்பதாயும் தெரியவருகிறது.

"காணவேணுமென்று நீர்கடல் மலைகளேறுவீர்
ஆணவமதல்லவோ வறிவிலாத மாந்தரே
வேணுமென்றவ்வீசர் பாதமெய்யுளே தரிப்பரேல்
தாணுவாக நின்றசீலன் றன்சிவமதாகுமே."

"தீர்த்தலிங்க மூர்த்தியென்று தேடியோடுந் தீதரே
தீர்த்தலிங்க முள்ளினின்ற சிவனைத் தெளியுமோ
தீர்த்தலிங்க மும்முளே தெளிந்துகாண வல்லிரேல்
தீர்த்தலிங்கந் தானதாய்ச் சிறந்ததே சிவாயமே."

"ஆடுகொண்டு கூடுசெய்த மாந்திருக்கும் வாறுபோல்
தேடுகின்ற செம்பினைத் திடப்படப் பரப்பியே
நாடுகின்ற தம்பிரானு நம்முளே யிருக்கவே
போடுபத்திர பூசையென்ன பூசையென்ன பூசையே."

"நட்டகல்லு தெய்வமென்று நாலுபுட்பம் சாற்றுவார்
சுற்றிவந்து முணமுணென்று சொல்லுமந்திர மேதடா
நட்டகல்லு பேசுமோ நாதனுள்ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை யறியுமோ."

—சிவாக்கியம்.

மேற்கண்ட பாட்டுகளில் கடைசியான பாட்டு விக்கிரகவணக்கத்தைக் கண்டிக்கவில்லையென்றும் கடவுளை விக்கிரகத்தை அறிகுறியாக வைத்துக்கொண்டு விக்கிரகவாயிலாக வணங்கவேண்டியிருக்க விக்கிரகத்தையே தெய்வமெனப்பாவித்த ஒரு அறிவின

னைக் கண்டித்ததாகவும், சுட்டசட்டி கறி சமைத்தற்கும் சட்டுவம் கறியைக் கிண்டுவதற்கும் எவ்வளவு அவசியமோ அதுபோல விக்கிரகமும் கடவுளை வணங்குவதற்குக் கருவியாக உபயோகப்படுகிறதென்றும், எப்படி சுட்டசட்டியும் சட்டுவமும் கறியின் ருசியை அறியாதோ அதுபோல விக்கிரகம் கடவுளின் இலட்சணத்தை அறியாதென்றும், கடவுளுமாகாதென்றும் ஆதலின் விக்கிரகத்தைக் கடவுளாக வணங்குதல் குற்றமென்று ஷை பாட்டினால் விளங்குகிறதென்றும் சிலர் சொல்லுகின்றனர். ஷை பாட்டுக்கு இப்படிப் பொருள்கொள்ளுதல் பொருந்தாது. ஷை பாட்டு விக்கிரக ஆராதனையை ஆதரிப்பதாயிருந்தால் கடவுள் வழிபாட்டிற்கு வாயிலாகஇருக்கிற விக்கிரகத்தை "நட்டகல்" என்றுவாய்கூசாது இழிவுபடக்கூறுர் ஆன்றோர். சட்டியும் சட்டுவமும் சமைத்தற்கு கருவியாயிருப்பது மெய்யே. ஆயினும் அவை உணவின் சுவை உணரா. கடவுள் வழிபாடு ஆன்ம வளர்ச்சியின் பொருட்டேயாம். "நட்டகல் பேசவும்செய்யாது; ஆன்ம இயல்பை அறியவுமாட்டாது. ஆகையால் சட்டி சட்டுவங்களைப்போல் வழிபாட்டின்கருவியாக உபயோகப்படத்தக்கதன்று. ஆன்மாவின் உள்ளிருக்கும் நாதனே ஆன்மாவின் தன்மையை அறியத்தக்கவனுகையால் அவனே நேரில் வழிபடற்குரியன், என்பது பொருளாம் என்று நினைக்கிறோம்.

பட்டினத்தடிகள் இதனடியிற்கண்ட பாட்டினால் விக்கிரக வணக்கத்தைக் கண்டித்திருப்பது மாத்திரமல்லாமல் கடவுளுடைய குணங்கள் எங்கெங்கே வெளிப்படுகிறது; எவவும் எந்தெந்த இடத்தில் வைத்துச சிந்தித்து அவர்குணங்களைக் கிரகிக்க வேண்டும்? எனவும் தெளிவாய்ச் சொல்லியிருப்பதாகத் தெரிய வருகிறது.

"சொல்லினுஞ் சொல்லின் முடிவினு வேதச்சுருதியினு
மல்லினு மாசுற்றவாகாயந் தன்னினு மாய்ந்துவிட்டோ
ரில்லினு மன்பரிடத்தினு மீசனிருப்ப தல்லாற்
கல்லினுஞ்செம்பினுமோ விருப்பானெங்கள் கண்ணுதலே".

கடவுள் சர்வ வியாபியாய் எங்கும் வியாபித்திருப்பினும் அவருடைய திவ்விய கலியாண குணங்கள் எங்கும் ஒரேவிதமாய் விளங்கவில்லையென்றும் பாலிலிருக்கப்பட்ட நெய்யைக் கடைந்தெடுப்பதுபோல் கடவுளுடைய திவ்விய கலியாண குணங்கள் விளங்குகிற இடங்கள் அல்லது பொருள்களில் நம்முடைய மனதைச் செலுத்தி கடவுளைச் சிந்தித்தல வேண்டுமெனவும் முன்னமே விவரித்துச் சொல்லியிருக்கிறோம்.

பட்டினத்தடிகளுடைய இந்த வாக்கினால் மேற்கண்ட விதந்தான் கடவுளுடைய குணங்களைக் கிரகித்தல் வேண்டுமெனத் தெளிவாய்ப் புலப்படுகிறது. தேவாரம் முதலிய ஆன்றோர்களுடைய ஸ்தோத்திர வாக்குகளையும் வேதங்களையும் ஒருவன் படித்துச் சிந்தித்தாலும் நள்ளிருளில் ஒருவன் தனிமையாயிருந்து கொண்டு கடவுளைச் சிந்தித்தாலும் வானசோதிகளடங்கிய ஆகாய வெளியை உற்று நோக்கினாலும் முற்றத்துறந்த முனிவர்களிடத்தும் அன்பரிடத்தும் கடவுள் என்னவிதமாய் விளங்குகிறாரென்று சிந்தித்தாலும் கடவுளுடைய திவ்விய கலியாண குணங்களை நன்கு அறியலாமென்பது யாவரும் எளிதில் தெரியக்கூடிய விஷயம்.

அவ்விதம் கடவுளுடைய திவ்விய கலியாண குணங்களைத் தெரிந்து கடவுளை வழிபடவேணுமே தவிர கடவுளுடைய குணங்கள் வெளிப்படாத கல்லிலும் செம்பிலும் மனதை நாட்டிக் கடவுளை தியானிப்பது சரியன்றென பட்டினத்தடிகள் ஷ பாட்டினால் வற்புறுத்தியிருப்பதாகத் தோன்றுகிறது.

ஷ பாட்டுக்கு மேற்கண்டவிதம் அருத்தம்தெளிவாயிருக்க கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் என்பதில உள்ள ஒ காரம் எதிர்மறை ஒகாரமல்லவென்றும் வியப்பு ஒகாரமென்றும் சொல்லிலும் வேதச்சுருதியிலும் அன்பருளத்திலும் இருப்பதுமல்லாமற் கடவுள் கல்லிலும் செம்பிலும் இருக்கிறானென வியந்து கூறினதாக அருத்தங்கொள்ள வேணுமென்றும் அப்படிக்கொள்ளாமல் கல்லிலும் செம்பிலும் கடவுள் இல்லையென அருத்தங்

கொண்டால் கடவுள் எங்குமிருக்கிறார் என்கிற உண்மைக்குவிரோதமாகு மாகையால் அவ்விதம் அருத்தங் கொள்ளுவோர் கடவுள் இல்லாத இடத்தைக்கண்டு பிடித்துக்கொண்ட தான்றோன்றிகளாவார்களென்றும் சிலர்சொல்லுகின்றனர். இந்தப்பாட்டானது கடவுளுடையகுணங்களைக் கிரகிக்கவேண்டிய விதத்தைப்பற்றியும் கடவுளை வழிபடவேண்டிய விதத்தைப்பற்றியும் வற்புறுத்திச் சொன்னதாகத் தெரிகிறது. கடவுளுடைய வெறும் இருப்பைப் பற்றிமாத்திரம் சொல்லவந்த செய்யுளன்று.

கடவுள் எங்குமிருக்கிறாரென்கிற மூகாந்தரத்தை வைத்து கடவுளை எந்தப்பொருளைவைத்தும் வழிபடலாமென்று சொன்னால் அப்படிச் செய்வது தவறென்று சைவசமய ஆன்றோர்களே சொல்லுகின்றார்கள். ஆகமங்களில் விதித்த விதிப்படிக்கும் கடவுள் ஓர்காலத்தில் அன்பர்களுக்குக் காக்ஷிகொடுத்த உருவத்திருமேனிகளின் பிரதிமாரூபங்களாகவும் விக்கிரகங்களைச் செய்து வழிபட்டாலொழிய பயனில்லையென சைவசமய ஆன்றோர்கள் சொல்வதாக முன்னமே பிரஸ்தாபித்திருக்கிறோம். ஆதலின் எந்தப்பொருளையும் வைத்து கடவுளை வழிபடுதல் விக்கிரக ஆராதனை செய்பவர்களுக்கு உடன்பாடன்றென நினைக்கிறோம். அப்படி வழிபடுதல் சரியென்றால் குப்பைகளிலும் மற்ற அசுத்தங்களிலுங் கூடக் கடவுள் இருக்கிறாராகையால் அப்பேர்ப்பட்ட அசுத்த பதார்த்தங்களைவைத்தும் அவைகளுக்கு அலங்கார நைவேத்ய முதலியவைகள் செய்து வழிபடுதல் சரியென ஏற்படும். அவ்விதம் வழிபட விக்கிரக ஆராதனை செய்கிறவர்கள் உடன்படுவார்கள் எனத் தோன்றவில்லை.

கடவுள் எங்கும் வியாபித்திருக்கிறார் என்கிற உண்மை "கடவுள் இருக்கிறார்" என நம்புகிறவர்களெல்லாம் யாதொரு தர்க்கமுமின்றி ஒப்புக்கொள்ளுகிற விஷயமாதலால் கடவுளை வணங்கவென்று கல்லாலும் செம்பாலும் செய்யப்பட்ட உருவத் திருமேனியைக் குறிப்பிட்டு கடவுளுடைய திவ்விய கலியாண குணங்கள் விளங்குகின்ற மற்றப் பொருள்களையுஞ் சொல்லி அதன்

பின்னர் கல்லிலும் செம்பிலும் கடவுள் இருக்கிறாரென்று வியந்து சொல்லவேண்டிய அவசரம் ஒன்றுமில்லை. வியந்து சொல்லவந்தவராயின் கல்லென்றும் செம்பென்றும் இழிவுபடக்கூறுவரோ. ஆதலின் மேற்படி பாட்டிலுள்ள ஓகாரம் எதிர்மறைஓகாரமென்று அருத்தங் கொள்ளுகிறவர்களே கடவுள் இல்லாதவிடத்தைக்கண்டு பிடித்துக்கொண்ட தான்தோன்றிகள்போல் நிந்தித்துப் பேசுவது அவர்கள் கருத்தை இன்னதென்று தெரிய முயலாமல் சொல்லுவதாகத் தெரிகிறது.

கடவுளுடைய திவ்விய கலியாண குணங்கள் விளங்கக்கூடிய பலபொருள்களைச் சொல்லி அதன் பின்னர் அக்குணங்கள் விளங்காத கல்லையும் செம்பையும் குறிப்பிட்டுப் பேசுவதினால் கடவுளை வணங்கவேண்டிய விதம் இன்னதென்றுகாட்டி சாதாரணமாய் வழிபட்டுவருகிற கல்லையும் செம்பையும் வழிபடுதல் தவறென வற்புறுத்திச் சொன்னதாகவே தோன்றுகிறது. ஆகையால் ஓகாரம் எதிர்மறைப் பொருளது என்பதில் ஐயமில்லை.

பட்டினத்தடிகள் விக்கிரக வணக்கம் செய்தவர்கள் ஆகையால் அவ்விதங் கண்டித்ததாய்ச் சொல்லுவது தவறெனச் சிலர் சொல்லலாம். தொன்றுதொட்டு வழங்கிவந்த விக்கிரக வணக்கத்தை பட்டினத்தடிகள் சிலகாலம் அதன் தன்மையை இன்னதென ஆராய்ந்து பாராமலே அதன்படி வழிபட்டு வந்திருக்கலாம். அதைப்பற்றி யோசிக்கும்படியாய் நேரிட்டகாலத்தில் யோசித்துத் தெளிந்து அந்தவழிபாட்டைக் கண்டித்திருக்கலாம். இந்தப்பாட்டு எந்தக்காலத்தில் பாடினது என்பதற்காவது அதன் பின்னர் அவர்கள் விக்கிரகவாயிலாகக் கடவுளை வழிபட்டுவந்தார்கள் என்பதற்காவது ருஜு இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் அப்படி வழிபட்டிருந்தாலுங்கூட ஒரு விஷயத்தை உண்மையெனக் கைக்கொண்டு பின்பு அதன் விஷயமாகச் சந்தேகம் ஏற்பட்டகாலத்தில் மனதின் நிலையானது மாறுபட்டு வரக்கூடியது சகசமாகையால் அவ்விஷயமாய் ஆராய்ந்துகொண்டிருக்குங் காலத்தில் சந்தேகம் ஜனித்து இந்தப்பாட்டைப் பாடியிருக்கலாம் ஆதலின் விக்கிரக ஆராதனை செய்துவந்த பட்டினத்தடிகளே

ஓர் சமயம் இவ்விதம் பாடியிருப்பதால் விக்கிரக வணக்கமானது சரியான வணக்கமில்லையென்பதற்குத் தகுந்த ஆதாரமெனநினைக்க ஏதுவாயிருக்கிறது.

இது நிற்க, விக்கிரகமன்னியில் மனதை ஒர்மைப்படுத்தி கடவுளை வணங்குவதற்கு ஆன்றோர்களுடைய ஸ்தோத்திரப் பாடல்களே போதுமான கருவிகளாக இல்லையா? கடவுளை வணங் கவென்று ஒரு விக்கிரகத்தை வார்த்துப் பிரத்தியேகப்படுத்தி வையாமல் கடவுளுடைய சிருஷ்டிப்பொருள் ஒவ்வொன்றையும் மனதில் நினைத்து அந்த சிருஷ்டிப்பொருளிலெல்லாம் கடவுள் விளங்கிநிற்பதை அறிந்து வழிபடல் உண்மையான பக்தியை அபி விருத்திசெய்ய மிகுந்த அனுகூலமாயிராதா!

"தீயாகி நீராகித திண்மையாகித் திசையாகி அத்திசைக்கோர் தெய்வமாகி
தாயாகித் தந்தையாகி சார்வுமாகித் தாரகையும் ஞாயிறுந் தண் மதியுமாகிக்
காயாகிப் பழமாகி பழத்தினின்ற விரதங்கள் நுகர்வானுந் தானே யாகி
நீயாகி நானாகி நேர்மையாகி நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்ற வாரே".

என்று நாவுக்கரசு ஸ்வாமிகள் கடவுளைத் தியானித்திருக்கிறவாறு சிருஷ்டிப்பொருள்களை முன்னிலையாய்த் தியானித்தால் பக்தி அபிவிருத்திக்கு மிகுந்த அனுகூலமாயிருக்குமல்லவா?

தீயாயும், நீராயும், தாயாயும், தந்தையாயும், தாரகையா யும், தண்மதியாயும், காயாயும், பழமாயும், விளங்கிநிற்பது பர மாத்மாவேயல்லாமல், பரமாத்மாவை வணங்கவென்று கற்பிக்கப் படுகிற விக்கிரகம் அல்லவே! புறக்கண்ணுக்குப் புலப்படுகிற ஒரு சிருஷ்டிப்பொருளை முன்னிலையாக வைத்து கடவுளைத் தியானிக் கையில் அப்பொருள் மனதைக் கவர்ந்து நிற்கையில் அத்துடன் விக்கிரகத்தையும் சேர்த்துக்கொண்டால் அப்படித் தியானிப்ப தற்கு இடையூறாய் முடியுமேதவிர அனுகூலமாய் முடியாதே!

தீயை எரியும்படி செய்வதும், நீரை நமக்கு உபகாரப்படும் படி செய்வதும் தாரகைகள் முதலிய அண்டகோடிகள் அந்தரத்

தில் நின்று நமக்கு ஆனந்தத்தையும் வெளிச்சத்தையும் கொடுக்கும்படி செய்வதும் கடவுளெனப் பொருள்படும்படி தீயாகி நீராகி எனக் கடவுளைத் தியானிப்பதில் கல்லினாலும் செம்பினாலும் செய்யப்பட்ட விக்கிரகம் என்னவிதமாய் உதவிசெய்யும்?

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் என்று தியானிக்கும்போது அண்டகோடிகள் நிறைந்துள்ள, மனதிற்கும் வாக்குக்கும் எட்டாத தூரங்களில் மனதும் வாக்கும் எவ்வளவுதூரம் எட்டுமோ அவ்வளவு தூரம் எட்டி நினைத்து கடவுள் எங்கும் பிரகாசமாயிருக்கிறாரென்று தியானிப்பது முறையே தவிர ஓர் இடத்தில் தங்கியிருந்து மனிதனால் தூக்கிவைத்தாலொழிய வேறோர் இடத்திற்கு நகரக்கூடாத ஓர் விக்கிரகம் அப்படித் தியானிப்பதற்கு என்னவிதமாக உபயோகப்படும்.

உயிர்க்குயிராய்த் தழைத்துநின்றது எதுவென்று தியானிக்கும்போது இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எண்ணிறந்த ஜீவாத்மாக்களில் மனது எவ்வளவுதூரம் எட்டுமோ அவ்வளவு தூரம் எட்டி நினைத்து மனது எட்டக்கூடிய உயிர்களில் ஒவ்வொரு உயிரையும் மனதில் நினைத்து அந்தந்த உயிரைக் கடவுளுக்கு உருவத்திருமேனியாக மனதில் பதித்து ஒவ்வொரு உயிர்தோறும் அவன் தழைத்து நிற்கின்றான் என்று தியானிப்பது முறையேதவிர உயிர்களுக்கு யாதொருவிதமான சம்பந்தமில்லாததும் உயிர்களுக்குப் புறத்ததுமான ஒரு விக்கிரகத்தை வைத்து தியானித்தல் அவ்விதத் தியானத்துக்கு இடையூறாய் முடிகின்றதன்றோ? இதனடியிற் கண்ட பாட்டினால் கடவுளுடைய உருவத்திருமேனிகள் இன்னதென்பதையும், கடவுளைக் காணவேண்டிய விதம் இன்னதென்பதையும், கடவுளுக்குச் செய்யவேண்டிய பூஜை இன்னதென்பதையும், கடவுளை ஸ்தோத்திரஞ்செய்யவேண்டிய மந்திரம் இன்னதென்பதையும் வெகு தெளிவாய் தாயுமான ஸ்வாமிகள் விளக்கியிருக்கின்றார்கள்.

“கண்ணிற் காண்பதுன் காக்ஷிகையாற் றொழில்
பண்ணல் பூசை பகர்வது மந்திரம்

மண்ணோ டைந்தும் வழங்குயிர் யாவுமே
அண்ணலே நின்னருள் வடிவா குமமே"

இந்த உலக முதலிய சிருஷ்டிப்பொருள் யாவும் கடவுளுடைய அருள் வடிவங்களாயிருக்கிறதென்றும், ஷெ சிருஷ்டிப்பொருள் களில் முன்னமே குறிப்பிட்டிருக்கிறபடி தீ, நீர், தாரகை, ஞாயிறு, தண்மதி, தாய்தந்தையர் முதலிய நம் கண்ணுற் காண்ப தெல்லாம் கடவுளுடைய காக்ஷியெனவும், கடவுள் நமக்கு மனச் சாக்ஷி, அன்பு, அறிவு, என்னும் அகக்கண்களைக் கொடுத்து ஷெ அகக்கண்கள் வாயிலாக நமக்கு உணர்த்தியவாறு யாவரையும் சகோதரராக நேசித்து நாம் செய்யும் பரோபகாரச் செயல்கள் முதலிய, கடவுளுடைய கட்டளைக்கிணங்கிச் செய்யுஞ்செயல்க ளெல்லாம கடவுளுக்கு நாம் செய்யும் பூசை யெனவும், கடவுளு டைய கட்டளைக்கிணங்கி அன்புடன் நாம வாயால் பேசும் இனி யவை கூறல் முதலிய சொற்களெல்லாம் கடவுளை நாம் ஸ்தோத் தரிக்கும் மந்திரங்களென்றும் வரையறுத்துக் கூறியிருக்கின்றனர்

ஆதலின் கடவுள் நமக்குக் கொடுத்திருக்கிற ஞானக்கண்ணி னால் கடவுளுடைய இருப்பை நாம் அறிந்து அவர் இமைப்பொழு தும் நம் நெஞ்சை விட்டு நீங்காது நின்று நாம் பேரின்பவீட்டை அடையும்படியான விதமாக நம்மை வளர்த்துவருவதை மனதில் நினைத்து கடவுளிடத்தில் அன்புசெலுத்தி ஞானக்கண்ணினால் நாம் பார்க்கும பார்வையானது அறிவு, அன்பு, மனச்சாக்ஷியாகிய மற்ற அகக்கண்களின் உணர்ச்சிக்கு முரணுதலின்றி நான்கு அகக்கண்களும் ஒற்றுமையாக நின்று கடவுள் உணர்த்தியவாறு நடந்து அறிவு அன்பு மனச்சாக்ஷியாகிய நம்முடைய குணங்களை நாளுக்குநாள் அபிவிருத்திசெய்துகொண்டு வருதலே கடவுளுக்கு நாம் செய்யும் வணக்கமென வெகு தெளிவாய்ப் புலப்படுகிறது.

ஆதலின் கடவுளை வணங்கவென்று கல்லினாலும் செம்பினா லும் விக்கிரகத்திருமேனிகளைக் கற்பித்துக்கொண்டு அவைக ளுக்கு அபிஷேகம் அலங்காரம் முதலிய வெளிக்கிரியைகளைச் செய்து கடவுளை வணங்குவதில் கடவுள் வணக்கம் வேறு, பசு

புண்ணியம் வேறு என நினைக்கும்படி நேரிட்டு இதற்கு முன் விவரித்திருக்கிற நமமுடைய அகக்கண்களின் உணர்ச்சிகள் ஒன்றுக்கொன்று ஒற்றுமைப்படாமல் முரணி நம்முடைய அறிவு குன்றி நம்முடைய ஆன்மவளர்ச்சிக்கு இடையூறு நேரிடுமெனத் தோன்றுகிறது.

விக்கிரக வணக்கத்தைக் கைக்கொண்டிருந்த தாயுமான ஸ்வாமிகள், மாணிக்கவாசக ஸ்வாமிகள், நாவுக்கரசு ஸ்வாமிகள் முதலிய சில மகான்கள் பேரின்பவீடு அடைந்திருக்கலாம். அப்படியிருக்க அப்பேர்ப்பட்ட மகான்கள் கைக்கொண்டிருந்த விக்கிரகவணக்கத்தைத் தவறுதலான வணக்கமென்று சொல்லுவது சரியன்றெனச் சிலர் சொல்லலாம். பாவியம்முதல் பழகிவருகிற எந்தக் கொள்கையும் தவறுதலாயிருந்தாலும் நன்றாய் ஆராய்ந்தாலொழிய தவறான கொள்கையெனத் தோன்றாது. ஆதலின் அதனால் தாக்கப்படாமல் ஆன்மவளர்ச்சியடைதல்கூடும்.

இடகாத்திரமுள்ள ஒருவன் கல்கரடு முள் முதலியவை அடர்ந்த காட்டில் போகுங்கால் கொஞ்சம் காயப்பட்டாலும் அந்தக் காயங்கள் அவனுடைய தேக செள்க்கியத்துக்கு இடையூறு ஒன்றுஞ்செய்யாமல் அவன் அந்த வழியே போகுதல் கூடும். ஆனால் அப்படிப்போவது சரியன்று. சாதாரண ஜனங்கள் அப்படிப்போனால் தீர்மானமாய்க் கெடுதல் விளைவிக்கும். அதுபோல சில மகான்கள் விக்கிரக வணக்கத்தை அனுசரித்திருந்தாலும் அப்படி அனுசரித்திருந்தும் அந்த வணக்கத்தின் கெடுதிகள் அவர்களைத் தாக்காமல் அவர்களுடைய தீவிர பக்குவத்தால் அவர்கள் மேற்சென்றார்கள் என்று சொல்லவேண்டுமே தவிர விக்கிரக வணக்கத்தால் அவர்கள் மேற்சென்றார்கள் என்று சொல்லுதல் பொருந்தாது.

இதுபோல சைவசமயிகள் தவறான கொள்கைகள் எனச் சொல்லுகிற கிறிஸ்தவ கொள்கைகளைக் கைக்கொண்டு சிலமகான்கள் பேரின்பவீடு அடைந்திருக்கலாம். அவர்களும் அந்தத் தவ

ரான கொள்கைகளால் தாக்கப்படாமல் அவர்களுடைய தீவிர பக்குவத்தால் பேரின்பவீடு அடைந்தார்களென்றே சொல்லவேண்டும்.

ஆதலின் விக்கிரக வணக்கத்தின் தன்மை இன்னதென மேலே குறிப்பிட்டிருக்கிற விஷயங்களைக் கவனித்து ஆராய்ந்து அறிதல்வேண்டும்.

கடவுளுடைய பிள்ளைகளாகிய நாம் ஒவ்வொருவரும் ஆன்ம வளர்ச்சிக்குத் தகுந்தவிதமாய் கடவுளை வழிபடவேண்டிய விதம் இன்னதென்று ஆராய்ந்து அறிந்துகொள்ளல்வேண்டுமென்றும் அவ்விதம் ஆராய்ந்து அறிவதில் உண்மையான வழி இன்னதென்று எல்லாம் வல்ல இறைவன் ஒவ்வொருவருக்கும் உணர்த்தவேண்டுமென்றும் நமது பரமபிதாவாகிய பகவானைப் பல்காலும் பிரார்த்திக்கிறோம். அருள்புரிவாராக!

கற்றதனாலாய பயனென் கொல்வாலறிவன்
நற்றாழ் தொழாஅ ரெனின்.

அதிகாரம் 8.

"சமய நூல்"

"மக்களில் குற்றம் ஒரு சிறிதும் இல்லாதவர் ஒருவருமே இலர்; நூல்களும் அது. ஆதலால் மக்களில் எவரையும் நூலுள் எதனையும் முத்தி பெறுதற்கு ஏற்கும் ஏக சாதனமாகக் கொள்ள லாகாது. ஆனல் யாவர் எது போதிக்கினும் எந்நூல் எது கூறி னும் அவற்றிற் காணப்படும் மெய்ப்பொருள்களைத் தேசபேதம் சமய பேதம் பாராட்டாது, மிக்க பக்தி சிரத்தையோடு ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.":—"பிரம சமயக் கொள்கை"

இவ்வுலகில் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத கிறிஸ்து சமயம் மகமதுமார்க்கம் புத்தசமயம் இந்து சமயம் முதலிய பல சமயங்களிருப்பதில் அந்தந்த சமய ஸ்தாபகர்களான கிறிஸ்து நாதர், மகமது நபி, புத்தமகா ரிஷி இந்து மஹாரிஷிகள் முத லிய மஹான்கள் இறைவன் திருவருள் பெற்ற ஒரு சிறிதும் குற்றமில்லாத மகான்களென்றும் ஜீவன்முக்தர்களென்றும்சொல் லப்படுகிறார்கள். அந்தந்தச் சமயத்துக்கு ஆதாரமாயுள்ள சமய நூல்கள் கடவுளாலேயே அருளப்பெற்ற நூல்களென்றும், அவைகள் ஒரு சிறிதும் குற்றமில்லாதவைகளென்றும் சொல்லப் படுகின்றன. கிறிஸ்துநாதர் முதலிய சில மகான்களை கடவுளு டைய அவதார புருஷர்கள் என்றும்கடவுளே என்றும் சொல்லு கிறார்கள்.

அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் உயிர்க்குயி ராய்த் தழைத்து நின்று தன் திருவுளக்கருத்தை வெகு எளிதில் நிறைவேற்றிக்கொண்டு வருகிற முற்றறிவும் பேராற்றலுமுள்ள இறைவற்கு சில சமயங்களில் அப்படிச்செய்ய முடியாமல் தமது கருத்தை நிறைவேற்றும்பொருட்டு மானிடச் சட்டை போர்த்து நம்மைப்போல் பசி, மலஜலங் கழித்தல் முதலிய உபாதிகட்குட்

பட்டு உழன்றுதிரியும்படியான அவசியம நேரிட்டதெனக்கொள்வது கடவுள் மகிமைக்கு குறைகூறலாகவே முடியும். அவ்விதஞ் செய்ததாகச் சொல்வது அவருடைய திவ்ய கலியாண குணங்களுக்குப் பொருத்தமாயுமில்லை. அப்படிச்செய்தார் என்பதற்கு போதுமான ஆதாரமுமில்லை. ஆகையால் கடவுளே மனுஷாவதாரம் எடுத்திருப்பாரா என்னும் விஷயத்தைப்பற்றி விவரித்துப் பேசவேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறோம். ஆயினும் இவ்வுலகின் கண் சீர்படுத்தப்படவேண்டிய அநேக வழக்கங்கள் பரவிநின்று, அவைகளைச் சீர்திருத்தும் பொருட்டு கடவுளுடைய விசேஷ அருள்பெற்ற மகான்கள் அப்போதுக்கப்போது தோன்றி, சீர்திருத்தஞ் செய்திருக்கிறார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனாலும் அவ்வித விசேஷ அருள் பெற்றுத் தோன்றிய மகான்களும் மனிதர்களே. கடவுள்ஒருவரே முற்றறிவுடையவர்; குற்றம் ஒரு சிறிதுமில்லாதவர். மனிதர் எவரும் முற்றறிவுடையவரல்லர். ஆகவே எவரை ஏனும் குற்றம் ஒரு சிறிது மில்லாதவர் எனச் சொல்லல் முறையன்று. மேற்குறிப்பிட்ட மகான்கள் மற்ற மனிதர்களை நோக்க மேலான அறிவுடையோர்கள்தான். ஆயினும் அவர்களுடைய இயற்கைச் சுபாவத்தையும் பயிற்சியையும் அவர்கள் தோன்றிய காலத்துள்ள வழக்கங்கள் முதலியவற்றையும் பொறுத்து அவர்களிடத்தில் சில குறைபாடுகள் இருத்தல் கூடும். இதை உத்தேசித்தே தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனர்.

“அரியகற் றாசற்றார்கண்ணுந் தெரியுங்கால்
இன்மை யரிதே வெளிறு”

என்று திருவாய் மலர்ந்தருளி இருக்கின்றனர். ஆகவே மக்களில் எவரையும், எவ்வளவு உயர்ந்த மகான்களாயிருந்தாலும், குற்றம் ஒரு சிறிது மில்லாதவர் எனக்கொள்ளாது, அவர்கள் சொல்வதை எல்லாம் மிகுந்த பயபக்தியுடன் கேட்டுச் சிந்தித்து

“எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினு
மப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு”

என்று அவர் சொல்லியிருக்கிறபடி அவற்றிலுள்ள மெய்ப் பொருள்களை அறிதலே அறிவாம். இது நிற்க.

ஒவ்வொரு சமயத்துக்கும் ஆதாரமாயுள்ள சமய நூல்கள் குற்றம் ஒரு சிறிது மிலாதனவெனவும் அவைகளிற் சொல்லிய வற்றை எவ்வித ஆக்ஷேபனையுமின்றி நம்பி, கடவுளை வழிபட்டு முத்தி பெறல் வேண்டுமெனவும் அவ்வச்சமயத்தோர் சொல்லு கின்றனர். கோரான் அனாதியாயுள்ளதென்றும், அதில் அடங்கிய வற்றை கேபிரில் Gabril என்னும் தேவதூதன் கடவுளுடைய ஆக்ஞைப்படி மகமது நபிக்கு வெளியிட்டார் என்றும் மகமதி யர் சொல்லுகின்றனர் இந்துவேத ஆகமங்கள் அவ்விதமாகவே கடவுளாலேயே வெளியிடப்பட்டனவென்று சொல்லப்படுகின் றன. இவ்வுலகின்கண் சமயங்கள் பலவாயும் சமயநூல்களும் பல வாயுமிருப்பதால், சமயநூல்களெல்லாம் கடவுளால் அருளப் பெற்று குற்றம் ஒரு சிறிது மில்லாதவைகளாயிருந்தால் எல்லாச் சமய நூல்களிலுமுள்ள கொள்கைகளெல்லாம் ஒன்றுக்கொன்று பொருத்தமுடையனவாய் இருத்தல் வேண்டும். கடவுளாலேயே அருளப்பெற்ற பலநூல்களில் முரணுதலிருப்பதற்கு இடமிராது. ஆனால், உண்மையில் இச்சமய நூல்களெல்லாம் ஒன்றுக்கொன்று பொருத்தமிலாதனவாயிருக்கின்றன. சிலநூல்கள் ஜீவான்மாக்கள் சிருஷ்டிக்கப்பட்டனவெனவும், சில நூல்கள் ஜீவாத்மாக்கள் தங் கள் தங்கள் செய்கைக்குத் தாங்களே உத்திரவாதியாயிருந்து அவைகளுக்குத் தகுந்த இன்ப துன்பங்களை நுகர்ந்து தங்களு டைய குற்றங்களை அறவே கைவிட்டு கடவுளோடு ஒன்றுபட்டு நடந்து முத்தி பெறல் வேண்டுமென்றும், சில நூல்கள் ஜீவ ஆன்மாக்களுக்கு தங்கள் குற்றங்களுக்கேற்ற பரிகாரத்தைத் தாங்க சக்தியில்லை என்றும் கடவுளே மனிதாவதாரமெடுத்து குற்றமற ஒழுகி ஜீவ ஆன்மாக்களுடைய குற்றங்களுக்கேற்ற தண்டனையைத் தான் ஏற்றுக்கொண்டார் என்றும், இன்னும் பற்பலவாறாய் முரணிக்கொண்டிருக்கின்றன. கடவுளால் அரு ளப்பெற்ற உண்மைகளாயிருந்தால் முரணுதலின்றியே இருத்தல் வேண்டும். அப்படி இல்லாததால் எல்லாச் சமய நூல்களும்

கடவுளால் அருளப்பெற்றதெனச் சொல்லமுடியாது. ஆகவே இவைகளில் எதாவதொன்று கடவுளால் அருளப்பெற்றதாயிருக்குமாவென ஆராய்தல்வேண்டும். ஒவ்வொரு சமயமும் தன் தன் சமய நூல் கடவுளால் அருளப்பெற்றதெனச் சொல்வதாலும், அந்தந்தச் சமயத்தோர் அவ்விதம் நம்பி கடவுளை வழிபடுதலாலும் இவைகளில் எவை தள்ளத்தக்கன? எது கொள்ளத்தக்கது? சரித்திரவாயிலாக விசாரிக்குங்கால், எல்லாச் சமய நூல்களும் ஒரே விதமான சாட்சியங்களை ஆதாரமாகக்கொண்டிருக்கின்றனவென்றும், ஒன்றேனும் கடவுளால் அருளப்பட்டதெனச் சொல்ல இடமில்லையென்றும் சரித்திர ஆராய்ச்சியில் தேர்ந்த ஆன்றோர்கள் சொல்லுகின்றனர். அவர்கள் சொல்வது அறிவிற்கும் பொருத்தமாகவே இருக்கின்றது. உலகந்தோன்றி அநேகாயிரம் வருஷங்களாக மனிதர்கள் எழுத்துப் படிப்பில்லாமல் தங்கள் தங்களுக்குத் தெரிந்த உண்மைகளை ஞாபகத்திலேயே வைத்திருந்தும் பிறருக்கு வாய்மொழியாய்ச் சொல்லியும் அப்படிக் கேட்டவர்கள் மற்றவர்களுக்குச் சொல்லியும் இவ்விதமாக சமயக்கொள்கைகள் அநேகம் வழங்கி வந்திருத்தல் வேண்டும். அப்பால் வெகுகாலம் வரையும் அச்சுப் பிரதிகளில்லாமல் ஏடு முதலிய கையெழுத்துப் பிரதிகளிலேயே சமயக்கொள்கைகள் எழுதப்பட்டுவந்தன. எந்தச் சமயக்கொள்கைகளையும் கடவுளே நேரில் ஒரு ஏட்டிலாவது அச்சுப் புஸ்தகத்திலாவது எழுதிவைத்தாரென்று எவரும் சொல்லத்துணியமாட்டார்கள் என நினைக்கிறோம். கடவுள் அருளால் மகான்கள் தங்கள் பக்குவத்திற்குத் தக்கபடி அவர்கள் அறிந்ததை உடனேயோ, சிலகாலம்சென்றோ பிறருக்குச் சொல்லியேனும் எழுதியேனும் அக்கொள்கைகள் வழங்கி வந்திருத்தல்வேண்டும். ஒருண்மைக் கொள்கையை கடவுளே ஒரு மகானுக்கு நேரிற்சொல்லியிருப்பாரென நம்ப இடமில்லை. கடவுள் அருளினாலோ நேரிற்சொல்லியோ எவ்விதம் அறிந்திருந்தாலும் அப்படி அறிந்த மகான்கள் அந்த உண்மையை தங்களுடைய சுபாவத்திற்கும் பக்குவத்திற்கும் அறிவிற்கும் தங்களுடைய முந்திய கொள்கைகளுக்கும் ஏற்றபடிதான் கிரகித்தல் கூடும். ஒரு மகான் கிரகிக்கிறபடி இன்னொரு மகான் கிரகி

யாமல் வேறுவிதமாய்க் கிரகித்தலும் இயல்பே. ஒரே வாக்கியத்துக்குப் பலபேர் பலவிதமாய்ப் பொருள்கொள்கிறார்கள். வேதத்தில் " ஏகமேவாத்விதீயம பிரஹ்மம் " என்று சொல்லப்பட்டு இந்துக்களெல்லாராலும் மகாவாக்கியமென நன்கு மதிக்கப்பெற்று தங்கள் தங்கள் கொள்கைகளுக்கு ஆதாரமெனக் கொள்ளப்படுகிற இந்த வாக்கியத்திற்கு கேவலாத்வைத சமய ஸ்தாபகரான சங்கராச்சாரியாராகிய மகான் ஒருவித அர்த்தமும், த்வைத சமய ஸ்தாபகரான மாத்வாச்சாரியாராகிய மகான் வேறொரு அர்த்தமும், விசிஷ்டாத்வைத சமய ஸ்தாபகரான ராமாநுஜாச்சாரியாராகிய மகான் மற்றொரு அர்த்தமும் சுத்தாத்வைதிகளாகிய சைவ சித்தாந்த மகான்கள் இன்னொரு அர்த்தமும் கொள்ளுகின்றார்கள். கிறிஸ்துவேதப்புத்தகத்தில், கிறிஸ்துநாதர் தன்னை சுவாமி என்று சொன்னார் என்பதற்கு ஆதாரமில்லை என்று சில ஆன்றோர்கள் சொல்லுகின்றனர். கிறிஸ்தவர்கள், " என் பிதாவும், நானும் ஒன்று " என்று கிறிஸ்துநாதர் சொல்லியிருப்பதாகவும், அதற்கு கிறிஸ்துநாதர் தன்னை சுவாமி என்று சொன்னதாக அர்த்தமென்றும் சொல்லுகிறார்கள். மேற்குறித்த ஆன்றோர்கள் அதற்கர்த்தம் அப்படி அல்ல என்றும் மன ஒற்றுமைபற்றி அப்படிச் சொன்னதாகவுஞ் சொல்லுகிறார்கள்.

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்
டன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே,"

இச்சூத்திரத்தில் இரண்டாவது அடிக்கு, வெவ்வேறு கொள்கையுடையவர்கள் தங்கள் தங்கள் கொள்கைப்படி அர்த்தம் செய்கிறார்கள். "தம்முதல் குருவமாய் உணர்த்துவார்" என்பதற்கு கடவுளே மானிடச் சட்டை போர்த்து வந்து உணர்த்துவார் என்று நம்புகிறவர்கள் அவ்விதம் கடவுள் மனுஷாவதாரமெடுத்து வந்து உணர்த்துவாரென்றும், அவ்விதம் நம்பாதவர்களிற் சிலர் கடவுளே குருவாக உயிர்க்குயிராய் நின்று உணர்த்துவாரென்றும், வேறு சிலர் கடவுள் மானிடக் குருக்களாகிய ஆன்றோர்கள் மூலமாக நமக்கு உணர்த்துவார் என்றும் அவ்விதம் உணர்த்தி

யதை கடவுளே குருவாக நின்று உணர்த்தியதாக நாம் கொள்ளல்வேண்டுமென்றும், பொருட்படுத்துகிறார்கள். 'தவத்தினில்' என்பதற்கு, விக்கிரக ஆராதனை முதலிய சிவபுண்ணியங்களில் நம்பிக்கையுடையவர்கள் சரியை கிரியை யோகம் முதலிய தவத்தாலென்றும், அவ்விதம் நம்பிக்கை இல்லாதவர்கள் ஜீவஆத்மாக்களை சகோதரர்களென நேசித்து ஊழியஞ்செய்து மனச்சாட்சிவாயிலாக கடவுள் நமக்கு உணர்த்தியவாறு ஒழுகி சத்தியம் தயை சாந்தம் முதலிய நறகுணங்களில் பெருகி நிற்றலாகிய 'தவத்தினில்' எனவும் பொருள் கொள்வார்கள். ஆகவே ஒரு மகான் ஒரு உண்மையை எவ்வழியில் அறிந்தாலும் அந்த மகான் அந்த உண்மையை தன்னுடைய சுபாவத்திற்கும் அறிவிற்கும் முன் கொள்கைகளுக்கும் ஒப்பவே கிரகித்தல் கூடுமாகையாலும், அவ்வாறு அவர் கிரகித்தலிலும் ஞாபகத்தில் வைத்திருப்பதிலும் பிறருக்குச் சொல்வதிலும் எழுதுவதிலும் எழுதினதை பிறர் அர்த்தம் கொள்வதிலும், பலவித மாறுதலுக்குட்படக் கூடுமாகையாலும் ஏதோ ஒரு கொள்கை ஏதோ ஒரு புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறதென்கிற ஆஸ்பதத்தை வைத்துகடவுளால் அருளப்பட்டதெனக்கொள்ளுதல முறையன்று. மேலும் சில மதாபிமானிகள் தங்கள் தங்கள் கொள்கைகளை பரவும்படி செய்வதற்காக ஆன்றோர்கள் வாக்கைத் திருத்தியும் அவைகளுடன் சில வார்த்தைகளைச் சேர்த்தும் பலவிதமாக ஆதி வாக்குகளுக்குச் சிதைவு உண்டுபண்ணி விடுகிறார்களென்பது உலகப்பிரசித்தம். மேலும் சமய நூல்களை சமயாபிமானமின்றி கவனித்துப் பார்வையிடுங்கால் அந்தந்தச் சமய நூல்கள் தோன்றிய காலத்திலுள்ள வழக்கங்களுக்கும் மதக்கொள்கைகளுக்கும் அந்தந்த நூல்களிற் குறிப்பிட்டிருக்கிற மகான்களுடைய இயற்கை சுபாவங்களுக்கும் குணங்களுக்கும் பொருத்தமாக, அநேக வாக்கியங்கள் காணப்படுகின்றன. கடவுளுடைய திவ்விய கலியாண குணங்களுக்கு மாறாகவும் சில வாக்கியங்கள் காணப்படுகின்றன. கடவுளுடைய அவதாரமென்று சொல்லபபடுற கிறிஸ்துநாதர் ஓர் சமயம் பசியாயிருந்தபொழுது தான் சாப்பிடுவதற்காக ஓர் அத்திமரத்தில்

கனிகள் இருக்கிறதா என்று பார்த்ததில் கனிகள் இல்லாமை கண்டு அம்மரத்தைச் சபித்தார் எனக் கிறிஸ்தவ வேதப் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, கனி இல்லாதது அத்திமரத்தின் குற்றமா? தனக்குப் பசிவேளையில் ஒரு மரத்தில் கனி இல்லை என்றால் அந்த மரத்தைச் சபிப்பது தெய்வத்தன்மைக்குப் பொருந்துமா? ஓர் சமயம் பத்துக் கற்பனைகள் அடங்கிய ஒரு பேழையை பட்டணப்பிரவேசமாகக் கொண்டுவருங்காலத்தில் அந்தப்பேழையை வைத்திருந்த சப்பரம் அசைந்ததாகவும் அதை இரண்டுபேர்கள் உடனே பிடித்ததாகவும் அவர்களை சுவாமி கோபங்கொண்டு கொன்றுவிட்டதாகவும் கிறிஸ்தவ வேதப்புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சப்பரம் அசைந்த உடன் பிடித்தது அதிலுள்ள பேழை விழுந்துவிடக்கூடாதென்ற நல்ல நோக்கத்துடன் அன்றோ? அப்படிச் செய்தவர்களைக் கொன்றுவிடுதல் கடவுளுடைய திவ்விய கலியாண குணங்களுக்குப் பொருத்தமாகுமா? இப்படிப்பட்ட பல உதாரணங்கள் கிறிஸ்தவ வேதப் புத்தகத்தில் எடுத்துக்காட்டல் கூடும். மகமது நபி ஒரு மனிதனுக்கு ஏககாலத்தில் நாலு மனைவிகள் இருக்கலாமென்று கோரானில் சொல்லியிருக்கிறார். இந்த விதியும் கடவுளாலேயே அனுமதியாக அமைக்கப்பெற்ற விதி எனக் கொள்ளத்தகுமா? இவ்விதி மகம்மது நபி தோன்றிய காலத்தில் விபசாரமும் அநேகம் பெண்களைக் கலியாணம் பண்ணுகிற வழக்கமும் இருந்துவந்தபடியால் அவைகளை ஒருவாறு நிறுத்தும் பொருட்டு நாலு ஸ்திரீகளோடாவது நிற்கட்டுமென்று ஷை நபி தான் கருதியபடி ஏற்படுத்திய சட்டம் என்றறிவது நியாயமல்லவா? இன்னும் இவ்விதமாக கடவுளுடைய திவ்விய குணங்களுக்குப் பொருத்தமில்லாத அநேக விதிகள் கோரானில் எடுத்துக் காட்டல் கூடும். இந்துவேதத்தில இந்திரன் முதலிய பல தேவதைகளை நாடி தங்கள் ஆடுமாடுகள் விருத்தியாகவேண்டுமென்றும் எதிரிகளைக் கொல்லவேண்டுமென்றும் அநேக பிரார்த்தனைகளிருப்பதாகத் தெரியவருகிறது. இவ்வித பிரார்த்தனைகள் மிகுந்த பலவீனமுள்ள சாதாரண மனிதர்களுடைய இயற்கை குணங்களுக்கும் அந்தக்காலத்திலிருந்த பழக்கங்க

ளுக்கும் பொருத்தமான பிரார்த்தனைகளாகுமே தவிர கருணாகர மூர்த்தியாகிய எல்லாம் வல்ல இறைவனால் ஆன்ம விருத்தியின் பொருட்டு நேருக்குநேர் அருளப்பட்ட நன்மொழிகள் ஆகுமோ? ஆகவே உண்மை ஆராய்ச்சியில் சமய நூல்களில் எதனையும் எல்லாம் வல்ல இறைவனால் அருளப்பெற்ற ஒரு சிறிதும் குற்றமில்லாத நூல் எனக்கொள்ளல் பொருந்தாது. ஆயினும் இச்சமய நூல்கள் ஆன்ம அபிவிர்த்திக்குப் பொருந்தாத நூல்களெனத் தள்ளிவிடுதலும் சரியன்று. இந்நூல்கள் எழுதிய மகான்களும் அந்நூல்களில் சமயாச்சாரிகளாகவும் போதகர்களாகவும் குறிப்பிட்டிருக்கிற மகான்களும் கடவுளை நோக்க குறைவுபட்டவர்களாயும் சிற்றறிவுடையவர்களாயுமிருந்தாலும் சாதாரண மனிதர்களை நோக்க மிகுந்த அறிவும் பக்தியுமுடையவர்களாகவும் கடவுளுடைய விசேஷ அருள்பெற்றவர்களாகவுமே இருந்திருக்கிறார்கள். எல்லாம் வல்ல இறைவன் தேசபேதம் மதபேதமின்றி ஆன்மாக்கள் தோறும் உயிர்க்குயிராய் விளங்கிநின்று அவரவர்கள் பக்குவத்திற்குத் தகுந்தபடி உணர்த்திவருகிறாராகையால் மேற்குறித்த மகான்கள் கடவுளாலேயே உணர்த்தப்பெற்று அப்படி உணர்த்தப்பெற்ற கொள்கைகளிலும் விதிகளிலும். அந்தந்த மகான் சுபாவத்தாலும் தேச வழக்க முதலியவற்றாலும் மற்றும் காரணங்களாலும், சில சிதைவுபட்டு ஆன்றோர்கள் அறிவிற்குப் பொருத்தமில்லாதவைகளாகப் போனபோதிலும், மேற்படி சமய நூல்களில் ஆன்ம அபிவிருத்திக்கேற்ற அநேக பொது நெறிகளும் கொள்கைகளும் மேற்படி மகான்களுடைய ஜீவ சரித்திரங்களும் காணப்படுகின்றன. இதை உத்தேசித்தே, ஆன்ம அபிவிருத்திக்கேற்ற உண்மைக் கொள்கைகளை ஆராய்ச்சி செய்யுங்கால் அவைகள் சுருதி யுக்தி அநுபவம் மூன்றுக்கும் பொருத்தமாக இருக்கின்றனவா என்று பார்க்கவேண்டுமென்று மூன்று அளவைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆன்றோர்கள் வாக்குகளிலும் தவறுதல் இருத்தல்கூடுமென்பதை உத்தேசித்தே

"அரியகற்றுஆசற்றார் கண்ணுந்தெரியுங்கால்
இன்மையரிதே வெளிறு என்றும்"

"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினு
மப் பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றும்
"எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றும்

நாயனார் கூறியிருக்கின்றனர். ஆதலின் சமயநூல்களில் காணப்படுகிற ஆன்றோர்களின் வாக்குகளும் நெறிகளும் கொள்கைகளும் யுக்திக்கும் அநுபவத்திற்கும் பொருத்தமில்லாவிடில் சரி எனக்கொள்ளாது, யுக்திக்கும் அனுபவத்திற்கும் பொருத்தமாகக் காணப்படில் கடவுளுடைய விசேஷ அருள் பெற்ற மகான்களுடைய விசேஷ வாக்குகளாக நாம் பயபக்தியுடன் ஏற்றுக் கொண்டு அவைகளின்படி நடக்க முயலவேண்டும். சுருங்கச் சொல்லில், "மக்களுட் குற்றமில்லாதவர் ஒருவருமே இலர்; நூல்களும் அது. ஆதலால் மக்களுள் எவனையும் நூலுள் எதனையும் முத்திபெறுதற்கு ஏற்கும் ஏகசாதனமாகக் கொள்ளலாகாது. ஆனால் யாவர் எது போதிக்கினும் எந்நூல் எது கூறினும் அவற்றிற் காணப்படும் மெய்ப்பொருள்களைத் தேசபேதம் சமயபேதம் பாராட்டாது மிக்கப் பக்தி சிரத்தையோடு ஏற்றுக் கொள்ளல்வேண்டும்."

அதிகாரம் 9.

முத்திநெறி

"கடவுளிடத்தே செய்யப்படும் பிதுர்பத்தியும் மனிதர்களிடத்தே காட்டப்படும் சகோதரவாஞ்சையும் ஜீவகாருண்யமுமே சற்சமய சாரமாம்." (பிரமசமயக்கொள்கை)

இவ்வுலகிலுள்ள பல சமயங்களுள் ஒவ்வொரு சமயத்திலும் மனிதர்கள் நம்பவேண்டிய கொள்கை இன்னதெனவும் மனிதர்கள் நடக்கவேண்டிய நடை இன்னதெனவும் விவரித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. இக்கொள்கைகள் பதிபசுபாசத்தின் இலட்சணங்களைப்பற்றியும் அவைகளில் ஒன்றுக்கொன்றுள்ள சம்பந்தத்தைப்பற்றியும் சொல்லுகின்றன. ஜீவான்மாக்கள் தங்களிடத்திலுள்ள குறைபாடுகள் நீங்கி இன்பநிலையாகிய முத்தியடைதற்பொருட்டே ஒவ்வொரு சமயத்திலும் பலவிதக்கொள்கைகளும் அவ்வான்மாக்கள் ஒழுகவேண்டிய விதிகளுமேற்பட்டிருப்பதாக அவ்வச்சமயத்தில் வற்புறுத்திச்சொல்லப்படுகின்றது. ஆகவே சமயக்கொள்கைகள் விதிகள் இவைகளின் நோக்கம் ஜீவான்மாக்கள் முத்தியடையவேண்டியதேயாம். சில சமயங்கள் ஜீவான்மாக்கள் அனாதி எனவும் சில சமயங்கள் ஜீவான்மாக்கள் இடையிலே கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டனவெனவும் கூறுகின்றன. ஜீவான்மாக்களின் உற்பத்தி எப்படியிருந்தபோதிலும் அவைகள் குறைவுள்ளன எனவும் வரவர அபிவிர்த்தியடைந்து இன்ப நிலையாகிய முத்தி நிலையை அடையும்படியான தகுதியுடையனவாம் எனவும் அப்படி அடைதற்பொருட்டு சிலசில விதிகளுக்குட்பட்டு அவைகளில் பழகி அபிவிர்த்தியடையவேண்டுமெனவும் எல்லாச் சமயங்களும் முறையிடுகின்றன. இவ்வித முயற்சி ஜீவான்மாக்கள் ஏன் செய்யவேண்டும்? யாதொரு முயற்சியும் இன்றியே ஜீவான்மாக்கள் முத்தியடையும்படி கடவுள்

செய்துவிடலாகாதா? ஜீவான்மாக்கள் தீச்செயல்களில் பழகாமல் நல்வினைகளையே யாதொரு தவறுதலுமின்றிச் செய்யும்படி கடவுள் செய்யலாகாதா? என்னும் வினாக்கள் அடிக்கடி ஜீவான்மாக்கள் மனதில் உதயமாகின்றன. ஜடவஸ்துக்களெல்லாம் தங்கள் தங்களுக்கு ஏற்பட்ட விதிகளுக்குள்பட்டு யாதொருவிதமான தவறுதலுமின்றி நடைபெற்றுவருகின்றன. பூமியின் ஆகர்ஷண சக்தி (Gravitation) ஒரேவிதமாகத் தனக்கு ஏற்பட்ட விதியினின்றும் ஒரு சிறிதும் தவறுதலின்றி நடைபெற்று வருகின்றது. அக்கினி ஒளியைக் கொடுத்துக்கொண்டு தன்னைச் சேர்ந்தவற்றை பஸ்பஞ்செய்து வருகின்றது. இதுபோலவே ஒவ்வொரு ஜடவஸ்துவும் அதற்கு ஏற்பட்ட விதியினின்றும் வழுவாது நடந்துகொண்டு வருகின்றது. ஜீவப்பிராணிகளும் தங்கள் தங்களுக்கேற்பட்ட விதிகளை அநுசரித்து நடந்துவருகின்றன. இதுபற்றியே "மீன் குஞ்சுக்கு நீந்தப்படித்துக்கொடுப்பவர் ஒருவருமிலர்" என்ற பழமொழியும் ஏற்பட்டிருக்கின்றது. சமுத்திரப் பக்கம் வசிக்கும் சில பறவைகள் குளிர்காலம் சமீபித்த உடன் அநேக மைல்களுக்கப்பாலுள்ள தாங்கள் வசிப்பதற்கு வசதியான வேறோர் இடத்திற்குச் சென்றுவிடுகின்றன. இன்ன இடத்திற்குப் போகவேண்டுமென்றும் இன்னகாலத்தில் போகவேண்டுமென்றும் முன்னறிவு அவைகளுக்குக்கிடையாது. அப்படியிருந்தும் வெகு திட்டமாய் அவைகளுக்கு வேண்டிய காரியத்தை அவைகள் செய்துகொள்ளுகின்றன. இவ்விதமாக ஜடவஸ்துக்களையும் மனிதர்களைத் தவிர மற்ற ஜீவப்பிராணிகளையும் நடத்திவருகிற எல்லாம் வல்ல இறைவன் மனிதர்கள் சம்பந்தப்பட்டமட்டில் அவர்கள் தாங்களாகவே அநுசரிக்கவேண்டிய சில விதிகளுக்குட்பட்டு நடந்துவரும்படி ஏற்பாடு செய்திருக்கிறார். ஏன் அப்படிச் செய்திருக்கிறார்? ஜீவான்மாக்கள் சம்பந்தப்பட்டமட்டிலுங்கூட அவைகளுக்கு வேண்டிய அநேக காரியங்களை அவைகளின் முயற்சியின்றியே நடைபெறும்படி செய்திருக்கிறார். மனிதர்களுக்கு வேண்டிய காற்று ஒளி தண்ணீர் முதலியவை அவைகளின் முயற்சியின்றி ஏராளமாய் எங்கும் அமைக்கப்பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு ஜீவான்மாவுக்கும்

இவ்வுலகத்தில் வசிக்கும்படி மானிட தேகமாகிய ஒரு அற்புத யந்திரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த அற்புத யந்திரம் வெகு அழகாய் ஒவ்வொரு அங்கமும் தன் தன் வேலையை வெகு திருப்தியாய்ச் செய்யும்படியானவிதமாக அமைக்கப்பட்டிருக்கின்றது, இவ்விதம் அமைக்கப்பட்டிருப்பதில் சுவாசப்பை இருதயம் ஜீரணக் கருவிகள் முதலியன மனிதனுடைய எவ்வித முயற்சியுமின்றி வெகு எச்சரிக்கையாயும் ஒழுங்காயும் தங்களுக்கு ஏற்பட்ட வேலையைச் செய்துவருகின்றன. இந்த அற்புத யந்திரத்தின் போஷிப்புக்காக வெகு சொற்பமாய் வேண்டிய உணவுக்கும் உடைக்குமட்டும் மனிதன் முயற்சிசெய்து பெற்றுக்கொள்ளும்படி எல்லாம் வல்ல இறைவன் அமைத்திருக்கிறார். இவ்விதம் அமைத்திருப்பதில், மனிதன் மற்ற மனிதர்களோடு சம்மந்தப்பட்டு அளவளாவி நடந்து ஒருவரையொருவர் சார்ந்து நின்று முயற்சி செய்யும்படியான முறையில் அமைத்திருக்கிறார். மனிதனுக்கும் மற்றப்பிராணிகளுக்கும் ஜீவனுண்டு என்பதாகிய ஒற்றுமை இருந்தபோதிலும், மற்ற ஜீவப்பிராணிகளைவிட மனிதன் உயர்ந்த தன்மையுடையவனென்பதிற் சந்தேகமில்லை. தனக்கு மேலான பரம்பொருள் ஒன்றுண்டென அறியும்படியான ஞானக்கண்ணாகிய (Religious sense) அகக்கண் ஒன்று; அறிவு, மனச்சாட்சி, அன்பு (Intellect, conscience, affection,) என்பவையாகிய அகக்கண்கள் மூன்று; ஆகநான்கு அகக்கண்கள் மனிதனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வகக்கண்கள் மற்றப்பிராணிகளுக்கு இல்லை. இவ்வகக்கண்கள் வாயிலாக மனிதன் தனக்கு சிருஷ்டி கர்த்தாவாகிய பரம்பொருள் ஒன்று உண்டெனவும், அப்பொருளை வழிபடவேண்டுமென்றும், கடவுள் இந்தப் பிரபஞ்சத்தை இன்னவிதமாய் நடத்திவருகிறார் எனவும், பிரபஞ்சத்தின் தன்மை இன்னதெனவும் நன்மை தீமை இன்னதென அறிந்து தீமையை விலக்கி நன்மையிற் பழகவேண்டுமெனவும் கடவுள் பிதா எனவும் மனிதர்களெல்லாம் சகோதரர்கள் எனவும் அறிந்து, நேசித்து அறிவிலும் ஒழுக்கத்திலும் அன்பிலும் பெருகி ஆன்ம அபிவிர்த்தியடையவேண்டுமென்றும் தெரிந்துகொள்கிறான். இவன் அவ்விதம் நடப்பதில் தனக்கு

சுவாதீனப்புத்தி இருக்கிறதெனவும், ஜடவஸ்துக்கள் மற்றப்பிராணிகளுக்கொப்பந்தம் தனக்கு ஏற்பட்ட விதிகளுக்கு விலகாமல் நடக்கும்படியான ஏற்பாடின்றி தனக்கு ஏற்பட்ட விதிகளுக்கு விலகியும் உள்ப்பட்டும் நடக்கும்படியான சுதந்தரம் தனக்கு இருப்பதாகவும் தெரிந்துகொள்கிறான். இவ்விதம் தீமையைத் தானாகவே ஒழித்து நன்மையைத் தானாகவே கைக்கொண்டு அன்புபாராட்டி நடக்கும்படியான விதமாய் அவனுடைய சுபாவம் அமையப்பெற்றிருப்பதால் கடவுளுடைய கலியாண குணங்களாகிய அன்பு அறிவு முதலிய சில குணங்கள் அவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றும் அவன் கடவுளுடைய சாயலிலேயே அமைக்கப்பெற்றிருக்கிறான் எனவும் தான் கடவுளுடைய அருமையான பிள்ளை எனவும் தெரிந்துகொள்ளுகிறான். இவன் தன் முயற்சியாலும் சுய அனுபவத்தாலும் அடையும் அபிவிருத்தியின்றி, தவறுதலுக்கிடமில்லாதபடி நடக்குமாறும் இன்பம் அடையுமாறும அமைக்கப்பெற்றிருந்தால், அவன் ஜடவஸ்துக்களையும் மற்றப் பிராணிகளையும்போல மெய் அறிவும் உண்மையான இன்ப நுகர்ச்சியுமில்லாத சூத்திரப்பாவையாயிருப்பானே தவிர சுதந்தரமும் சுய அறிவும் உண்மையான இன்ப நுகர்ச்சியுமுள்ள கடவுளுடைய பிள்ளையாக ஒருநாளும் ஆகமாட்டானென்பது திண்ணம். இம்முகாந்தரம் பற்றியே கடவுள், மனிதனை மற்ற மனிதனோடு சம்பந்தப்பட்டு அளவளாவி முயற்சி செய்து அறிவு ஒழுக்கம் அன்பு முதலிய குணங்களில் பெருகி வளரும்படி இவ்வுலகத்தை ஒரு பெரிய பள்ளிக்கூடமாக அமைத்திருக்கிறார். இவ்விதம் தன்னுடைய குணங்களைப் பெருக்கி இன்ப நுகர்ச்சியாகிய முத்தி நிலையை அடையும்பொருட்டே எல்லாச் சமயங்களிலும் அவ்வச் சமய ஸ்தாபகர்கள் தங்கள் புத்திக்கு எட்டியமட்டில் மனிதர்கள் அநுசரிக்கவேண்டிய சில கொள்கைகளும் விதிகளும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். கடவுள் நமக்கு சிருஷ்டி கர்த்தாவாகவும் நாம் ஆன்ம அபிவிர்த்தியடைந்து முத்திநிலையை யடையும்படி வளர்த்துவருகின்ற பிதாவாகவும் இருப்பதால் அவரிடத்தில் நாம் மிகுந்த நன்றியறிவுடையவர்களாய் அன்புசெலுத்தவேண்டியது நமது முதன்மையான கட

மையாகிறது. இக்கடமையை நன்குணர்ந்தே கடவுள் வணக்கம் பல சமயங்களிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. கடவுளுக்கு ஸ்தோத்திரஞ்செய்வதும், கடவுளுடைய திவ்விய கலியாண குணங்களைப்பற்றித் தியானிப்பதும், கடவுளுக்குப் பூஜை செய்வதும், கூட்டங்கள்கூடி அநேகர் ஒன்றுசேர்ந்து தேவோபாசனை செய்வதும் கடவுளுடைய திவ்விய கலியாண குணங்களைப் பாடிக்கொண்டு நகர்வலம் வருவதும், கடவுள் வணக்கமே ஆகும். ஆனால் இவ்வித வணக்கம், உண்மையில் கடவுளிடத்தில் மன ஓர்மைப்பட்டு அன்புசெலுத்தாமல் வாய் ஸ்தோத்திரமாகவும் கால்நடையாகவும் தேகசம்பந்தமான கிரியைகளாகவும் முடியுமானால் அக்கிரியைகள் முதலிய புறச்செய்கைகளால் எவ்வித பயனும் இல்லை என்று சமயங்கள் தோறும் வற்புறுத்திக் கூறப்பட்டிருக்கின்றது. இதுபற்றியே

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்பன் பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்பன் அவர்தமை நாணியே.

என்று ஆன்றோர்கள் அருளியிருக்கின்றனர். ஆகவே கடவுளிடத்து உள்ளன்பில்லாவிடில் வெளிக் கிரியைகளால் எவ்விதப் பயனுமில்லை. உள்ளன்பை வளர்த்தற்கு வெளிக்கிரியைகள் பிரயோஜனப்படுமாயின் அந்த அளவில் பிரயோஜனமேதவிர வேறு எவ்விதப் பிரயோஜனமுமில்லை. வெளிக்கிரியை ஒன்றுமில்லாவிட்டாலும் கடவுளிடத்தில் உள்ளன்பிருந்தால் அதுவே போதுமானது. வெளிக்கிரியை வேண்டற்பாலதன்று. ஓர்காலத்தில், ஒரு கத்தியினால் ஒரு மனிதனுக்குக் காயமுண்டானால் அந்தக் காயத்தில் ஈரத்துணியைச் சுற்றி மூன்றுநாள் கட்டவிழாமலும், காயப்படுத்தின கத்தியிலும் ஈரத்துணியைச் சுற்றி மூன்று நாள் கட்டவிழ்க்காமலும் வைத்திருப்பது வழக்கமாயிருந்தது. காயத்திலுள்ள துணியை மூன்று நாள் வரை அவிழ்க்காதிருக்கும்பொருட்டு மனதில் பயமு உண்டாக்கும்படி கத்தியிலும் துணி சுத்திவைத்ததைத்தவிர கத்தியில் துணி சுத்துவ

னால் யாதொரு பிரயோஜனமுமில்லை என்பது அறிவுடையோர்க்கு எளிதில் விளங்கத்தக்கது. அதுபோல கடவுளிடத்தே செய்யப்படும் உண்மை அன்பே பிரதானம். வெளிக் கிரியைகள் மேற்சொன்ன கத்தியில்ச் சுற்றிய துணியேபோலாகும். ஜீவான்மாக்களுக்கு வேண்டிய சகல காரியங்களையும், உதவிகளையும் கடவுளே நேருக்குநேர் செய்ய வல்லவராய் இருக்கிறார். ஆயினும் கடவுள் சில சில விஷயங்களில் அவ்விதஞ்செய்யாது மனிதர்கள் ஒருவர்க்கொருவர் சார்ந்துநின்று உதவிபுரியும்படி ஏற்பாடு செய்திருக்கிறார். மனிதர் ஒருவர்க்கொருவர் சார்ந்து நின்று கடவுள் உயிர்க்குயிராய் நின்று மனச்சாட்சிவாயிலாக உணர்த்தியபடி நீதிதவறாது நடத்தலினாலேயே ஒழுக்கம் பெருகுகின்றது. மனிதர் ஒருவர்க்கொருவர் அளவளாவி நேசித்துப் பழகுவதிலேயே அன்பு பெருகுகின்றது. அவ்வித நேசம் அதிகரிக்க அதிகரிக்க நன்மை இன்னது தீமை இன்னதெனக் கடவுள் உணர்த்தியபடி நாம் உணர்ந்து நடப்பதில் நமக்கு சிரமம் தோன்றாமல் இன்பம் உண்டாகிறது. ஆதலின் அறிவு ஒழுக்கம் அன்பு முதலிய நமது குணங்கள் அபிவிருத்தியடைதற்கு, கடவுளுடைய பிள்ளைகளாகிய மனிதர்களிடத்தில் நாம் சகோதர வாஞ்சை காட்டலே முக்கிய சாதனமாகிறது. கடவுள் முற்றறிவுடையவராயும் தனக்கென்றொன்றுவேண்டாதவராயும் இருப்பதாலும், ஸ்தோத்திரப்பிரியரல்லராகையாலும், அன்பே சிவமாய் இருந்துகொண்டு உயிர்க்குயிராய்த் தழைத்து நின்று நமது நன்மையின் பொருட்டே நமது ஆன்ம குணங்களை அபிவிர்த்தி செய்து வளர்த்துவருகின்றாராகையாலும், அவரிடத்தில் உள்ளன்புள்ளவன் ஆன்ம அபிவிர்த்திக்கு முக்கிய சாதனமாகிய சகோதரவாஞ்சையைக் காட்டி நடவாமலிருக்கமுடியாது. சகோதர வாஞ்சையில் பெருகப் பெருக அந்த சகோதரவாஞ்சைக்குக் காரணராயும் அதற்கு அநுகூலஞ்செய்துகொண்டிருப்பவராயுமுள்ள நமது பிதாவாகிய கடவுளிடத்தில் உள்ளன்பின்றி ஒழுகலும் முடியாது. கடவுள் உயிர்க்குயிராய்த் தழைத்து நின்று ஜீவான்மாக்கள் உய்தற்பொருட்டே இடைவிடாது அவர்களுக்கு அறிவைப் புகட்டி, மேல்நெறியெல்லாம் புலமாக்கி வளர்த்துக்

கொண்டு வருகிறார். அவ்விதம் ஜீவான்மாக்களை நேசித்து வளர்த்து வருதலையே அவர் தொழிலாகக்கொண்டு அத்தொழிலிலேயே நித்தியானந்தத்தை அடைந்து கொண்டிருக்கிறார். இக்கருத்துக்கொண்டே "அன்பே சிவம்" என்பர் பெரியோர். ஆகையால் முத்திநிலை என்று சொல்லப்படுவதாகிய பேர் இன்ப நிலையானது கடவுளிடத்தே செய்யப்படும் பிதுர்பத்தியிலும் மனிதர்களிடத்தே காட்டப்படும் சகோதரவாஞ்சையிலும் முதிர்ச்சியடைதலேயாம். கடவுளிடத்திலும் மனிதர்களிடத்திலும் அன்பைப்பெருக்கிப் பழகுதலே முத்திநெறியாம். ஜீவகாருண்யம் அன்பின் பெருக்கத்திற்கு அவசியம் வேண்டற்பாலதாயிருப்பதால் ஜீவகாருண்யமும் ஆன்ம அபிவிர்த்திக்கு ஒரு முக்கிய சாதனமாய் ஏற்படுகிறது. பல சமயங்களிலும் ஏற்பட்டிருக்கிற வழிகளெல்லாம் ஆன்ம அபிவிர்த்தியின்பொருட்டேயாதலாலும், அவ்வித ஆன்ம அபிவிர்த்திக்கு கடவுளிடத்தே செய்யப்படும் பிதுர்பத்தியும் மனிதர்களிடத்தே காட்டப்படும் சகோதர வாஞ்சையும் ஜீவகாருண்யமுமே முக்கிய சாதனங்களாகையாலும், இவ்வித சாதனங்களின் முதிர்ச்சியே ஆன்ம அபிவிர்த்தியின் பயனாகிய பேரின்பமாகையாலும் பல சமயங்களிலும் ஏற்பட்டிருக்கிற வெளிக் கிரியைகள் இவ்வித சாதனங்களுக்கு அநுகூலமாயிருக்கிறமட்டில் பிரயோஜனமேதவிர மற்றப்படி பிரயோஜனமில்லையாகையாலும், வெளிக்கிரியைகள் எவ்வளவு அதிகமாயிருந்தபோதிலும் கடவுளிடத்தில் பத்தியும் மனிதர்களிடத்தில் அன்பும் ஜீவகாருண்யமுமில்லாவிடில் ஒரு சிறிதும் பயன் இல்லாமற் போய்விடுமாகையாலும், கடவுளிடத்துப் பிதுர்பத்தியும் மனிதர்களிடத்து சகோதரவாஞ்சையும் ஜீவகாருண்யமுள்ளவிடத்து வெளிக்கிரியைகள் ஒரு சிறிதும் வேண்டியதில்லையாகையாலும், அன்பே சிவமாய் இருத்தல்போல அன்பே ஜீவான்மாவாக இருத்தற்கு சாதனங்களாகிய "கடவுளிடத்தே செய்யப்படும் பிதுர்பத்தியும் மனிதர்களிடத்தே காட்டப்படும் சகோதரவாஞ்சையும் ஜீவகாருணயமுமே சற்சமய சாரமாம்." இதுவே முத்திநெறியாம்.

அதிகாரம் 10.

கடவுள் நீதி உடையவர்.

"கடவுள் நல்வினைக்கேற்ப இன்பத்தையும் தீவினைக்கேற்பத் துன்பத்தையும் அருள்கின்றார். துன்பம் தருவது நம்மைச் சீர் திருத்துதற்கு வேண்டப்படும். அம்மாத்திரையேயன்றி வரையறையின்றி நிகழ்வதன்று."—பிரம சமயக்கொள்கை.

"கடவுள் நீதியுடையவர் அளவில்லாத அன்புடையவர்" என்று ஆஸ்திகர் யாவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். கடவுள் நீதியுடையவரென்னும் விஷயத்தை ஆராயுங்கால் கடவுள் அளவில்லாத அன்புடையவரா யிருத்தலினால் நமக்கு ஏன் துன்பத்தைக் கொடுக்கவேணும், நம்முடைய தப்பிதங்களை யெல்லாம் யாதொரு துன்பத்தையும் கொடாமலே மன்னித்து விடலாகாதா அல்லது தீவினையே செய்யாமல் நல்வினையே செய்யும்படி செய்யலாகாதா என்னும் ஆசங்கைகள் நிகழ்கின்றன. கடவுள் முடிவில்லாத ஆற்றலுடையவரா யிருந்தாலும் ஒன்றுக்கொன்று நேர் விரோதமான சங்கதிகளை அவராலும் செய்யமுடியாது. திருஷ்டாந்தமாக ஒரு வட்டஉருவத்தில் சதுர உருவத்தைப் பொருந்தி நிற்கும்படி செய்ய முடியாது. ஒரு பொருளுக்கு சமமாயுள்ள வேறு இரண்டு பொருள்களை அவைகள் ஒன்றுக்கொன்று சமமா யில்லாமல் செய்ய முடியாது. இதுபோலவே கடவுளாலும் அவரைப்போல் முற்றறிவு முடிவில்லாத ஆற்றல்முதலிய குணங்களை யுடைய வேறொரு கடவுளை உண்டாக்க முடியாது. ஆகவே அறிவு, ஆற்றல், அன்பு முதலிய குணங்களுள்ள ஒரு பொருளை சிருஷ்டிக்குங்கால் சிற்றறிவுள்ள பொருளாகவே சிருஷ்டித்தல் கூடும். அவ்விதம் சிருஷ்டிப்பதிலும் அப்படி சிருஷ்டிக்கப்பட்ட சிற்றறிவுப்பொருள்கள் ஆரம்பத்தில் அறிவு, ஆற்றல், அன்பு

முதலிய குணங்கள் இயக்கமில்லாமல் அக்குணங்கள் வளரும்படியான தன்மையிலேயே சிருஷ்டித்தல் கூடுமென நினைக்கிறோம். சிற்றறிவுப் பொருள்கள் இவ்விதம் சிருஷ்டிக்கப் படுகிறபடியால் மெல்ல மெல்ல படிப்படியாய் வளரவேண்டிய பொருள்களாய் இருக்கின்றன. அவ்விதம் வளர்வதில் தவறுதல் அவசியம் நேரிடும். அப்படி நேரிடாதபடி கடவுள் வளர்த்து வருவாரானால் அப்படி வளர்க்கப்பட்ட பொருள்கள் அறிவு, அன்பு முதலிய குணங்கள் தங்களுடைய சொந்தக் குணங்களாயில்லாமல் கடவுள் ஆக்கினைப்படி நடக்கிற சூத்திரப்பாவைகளாகவேயிருக்கும். சடப் பொருள்கள் கடவுளால் இயற்றப்பட்ட ஆக்கினைக்குள்பட்டு யாதொரு தவறுதலுமின்றி நடந்து வருகிறது. அதுபோலவே மனிதனைத் தவிர மற்ற ஜீவப்பிராணிகளும் நடந்து வருகின்றன. மனிதனோவென்றால் கடவுளால் தன் சொந்தப்பிள்ளையாக வளர்க்கப்படுகிறான். கடவுள் சாயலில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். கடவுளிடத்தில் அமைந்துள்ள அறிவு, அன்பு முதலிய குணங்கள் இவனுக்கு ஒரு சிறிது கொடுக்கப்பட்டு அந்தக் குணங்கள் தன் சொந்த குணங்களாகவாகும்படி வளர்க்கப்பட்டு வருகிறான். அறியப்படவேண்டியவற்றைத் தானாகவே அறிந்து நன்மை யிது தீமை யிது வென, தானாகவே அறிந்து தீமையைவிலக்கி நன்மையைச்செய்து மனிதர்கள் யாவரும் சகோதரர்களென தானாகவே உணர்ந்து அவர்களை தன் உயிர்போல் நேசித்து இவைகளுக்கெல்லாம் காரணராகிய கடவுளைப் பரமபிதாவெனத் தானாகவே உணர்ந்து அவரிடத்தில் நன்றிகாட்டி அவரை விசுவாசித்து அவரை முழு மனதோடும் பூரண அன்போடும் வழிபட்டு, இவ்விதமாய் வளர்ந்து இக்குணங்களில் பெருகி நம்மைவிட்டு இமைப்பொழுதும் நீங்காமல் இருந்து நமக்கு வேண்டியவற்றை உணர்த்திவருகிற கடவுளுடைய ஆக்கினைக்கு மாறாது நடந்து முத்திநிலையை அடைய வேண்டியவனாக இருக்கிறான். இவ்விதம் வளர்க்கப்பட்டு வருவதால் நம்முடைய தப்பிதங்களை யெல்லாம் யாதொருவிதமான துன்பத்தையும் கொடாமல் மன்னித்துவிடல் இயலாது. தீவினையே செய்யாமல் நல்வினையே செய்யும்படி செய்விக்கவும் இயலாது. அவ்விதம் செய்வது நமது ஆன்ம வளர்ச்சிக்கு கெடு

தலாய் முடியும். நம்மைச் சிருஷ்டித்த நோக்கம் நிறைவேறாமல் போய்விடும். இது நிற்க.

நீதியென்றாலென்ன? இதின் உண்மையான தன்மையை அது நிகழும் பற்பல இடங்களிலும் வைத்து அறியமுயல்வோம். ஒருவன் நமக்கு கெடுதல் செய்தால் அந்தக்கெடுதலைப்பற்றிக் கோபங் கொள்ளாமல் அவனை மன்னித்து விடலாம். அவ்விதம் மன்னிப்பதே தகுதி. மன்னுயிரையும் தன்னுயிர்போல் நேசி. இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல். என்று நாயனார் அருளியிருக்கிறபடி நமக்கு கெடுதல் செய்தவர்க்கு நன்மை செய்து அவரை நாணும்படி செய்தலே நமது கடமை. இவ்விதம் மன்னித்துவிடுவதினால் நமக்கு கெடுதல் செய்தவனுடைய குற்றம் நீங்கிப் போய்விடுகிறதா. அவன் மனதில் கெடுதல் செய்யாதிருந்ததற்கொப்பாந்தம சமர்தானமிருக்குமா? நாம் மன்னித்து விடுவதினால் அவனுக்கு அரசர் முதலியோரது தெண்டனை இல்லாமல் போகுமே தவிர அவன் மனதை அக் கெடுதலானது வாட்டிக்கொண்டே யிருக்கும். இது நிற்க.

தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ளக்கூடாத ஒரு ஏழைப் பையன் அல்லது ஒரு ஏழைப் பெண்முதலியோரை ஒரு வலிமையுள்ள மூர்க்கன் காரணமின்றி துன்பப்படுத்தினால் அதனைப் பார்த்துக்கொண்டிருக்கும் நமக்கு மனவேதனையும் அவன்மேல் கோபமும் உண்டாகும். அந்தக்கோபத்தை அடக்கி மனவேதனையைத் தணித்து அப்படித் துன்பம் செய்தவனை நாம் மன்னித்து விடலாமா? ஒருக்காலும் மன்னித்தல் கூடாது. நாம் மன்னித்ததினால் அவன் செய்த கெடுதல் குற்றம் நீங்கவே நீங்காது. அவனுக்கு வேண்டிய தெண்டனை கிடைக்கும்படி செய்ய வேண்டியதே நமது கடமை. இது நிற்க.

ஒருவன் தனக்குத்தானே கெடுதல் செய்து கொள்கிறான். சூது விளையாடல் குடி விபசாரம் முதலிய துர்ச்செய்கைகளைச் செய்து தன்சம்ரக்ஷணைக்கு ஐவேசில்லாமல் கஷ்டப்படுவதுமன்றி தன்னுடைய உடம்பையும் கெடுத்து பலவீனனாயும் வியாதி

பஸ்த்தனும் ஆகியிருந்த துன்பம் அடைகிறான். இவனுடைய குற்றங்கள் தனக்குத்தானே செய்துகொண்ட குற்றங்களாகையால் அவ்வளவு குற்றங்களையும் அவன் மன்னித்து விடல்கூடும். பிறருக்கு உத்திரவாதியுமல்லன். இந்த நிலைமையில் அவன் குற்றம் அவனை விட்டு நீங்கி விடுகிறதா. நீங்கவில்லை யென்பது அவன் மனதுக்கே தெரியும். அவனுடைய மனவேதனைக்கும் சுயவெட்கத்துக்கும் அளவில்லை.

ஆகவே மனிதர் செய்யும் குற்றம் அக்குற்றம் எத்தன்மைத்ததாயினும் அக்குற்றம் முழுதும் நீங்கும்படியானவிதமாக எவராலும் மன்னிக்கத்தகும் தன்மையுடையதன்று.

இனி கடவுளால் பூராவும் மன்னிக்கத்தகும் தன்மையுடையதாகுமா என்று பார்ப்போம். கடவுள் சர்வ காருண்யர் கோபம் என்பது ஒருசிறிதும் அவருக்கு கிடையாது. மனிதர் யாவரும் அவருடைய அருமையான பிள்ளைகள், அவசியமின்றி அவர்களை ஒரு சிறிதும் துன்பப்படுத்தார். ஆதலின் மனிதருள் எவரேனும் எது குற்றம் செய்தாலும் தன் கட்டளையைமீறிச் செய்த குற்றமாகக் கருதி அவர் கோபம் கொள்ளமாட்டார் அப்படிக் கருதி தெண்டிக்கவுமாட்டார். நமது ஆன்ம வளர்ச்சியின் பொருட்டு ஏற்பட்டிருக்கிற விதிகள் கடவுளாலேயே ஏற்படுத்தப்பட்டு அவைகளை விலக்கவும் மாற்றவும் வேறு விதிகள் செய்யவும் அவரால் கூடுமானால் அவ்விதம் செய்து மன்னித்துவிடுவாரென்பதில் சந்தேகமில்லை. ஆனால் இவ்விதிகள் அவரால் ஏற்படுத்தப்பட்டவைகளல்ல, அனாதியாகவேகடவுளிடத்தில் அமைந்துள்ளன. அவ்விதிகளுக்கு உட்பட்டே கடவுளும் நடந்து வருகிறார். இன்ப நிலை கிட்டி தன்னைப்போல பேரானந்த நுகர்ச்சி அடையும்படி தனது பிள்ளைகளாகிய மனிதர்களுக்கும் தான் உள்ப்பட்டு நடந்து வருகிற விதிகளையே விதிகளாக ஏற்படுத்தி அவ்விதிகளின்படி நடந்துவர அவர்களைத் தூண்டுகிறார். அவ்விதம் நடந்துவருவதில் தவறுதல் நேரிட்டால் அந்தத் தவறுதல்களை உணர்ந்து நீக்கும்படிக்கான பரிகாரமின்றி அக்குற்றங்களை

மன்னித்துவிட்டால் முன்னமே சொல்லியிருக்கிறபடி அவர்கள் ஆன்ம வளர்ச்சி குன்றிவிடும்; அவர்களை சிருஷ்டித்த நோக்கமும் நிறைவேறாமல் போய்விடும். கடவுள் நம்முடைய சிருஷ்டிகர்த்தா வாகவும் பிதாவாகவுமிருப்பதால் நமது ஆன்ம வளர்ச்சி குன்றாமல் பேரின்பநிலையை அடையும்படியான விதமாகவே நம்மை வளர்க்கக் கடமைப்பட்டுள்ளார். அப்படி வளர்த்தலே நீதியாம். அப்படிக்கின்றி வேறுவிதமாக வளர்த்தால் நீதியுடையவராக மாட்டார் பிதாவுமாகார். "பள்ளிக்குவைத்தானில்லையே என்பிதா வாகிய பாதகனே" என்று மனிதரும் தன்பிள்ளையை படிப்பிக்காத ஒருமனிதனை பாதகனென்று சொல்வதுபோல் கடவுளைக் குறைகூறுதலுக்கும் இடமாகும்.

ஒரு மனிதன் குற்றம் செய்தால் அவனை அதைஉணர்ந்து கைவிடும்படி தண்டித்தலே தகுதியாம். நீதியுமாகும். அப்படி தண்டித்தலில் அக்குற்றம் நீங்கும்படிசெய்ய எவ்வளவு அவசியமோ அம்மட்டேதான் தண்டித்தல் வேண்டும். அதற்கு அதிகமாகத் தண்டித்தல் அநீதியாம். கடவுள் நமக்கு மிகுந்த ஜீவகாருண்ணியமுள்ள பிதாவாகையால் ஒருபோதும் அவ்விதம் செய்யார். மனிதர் யாவரும் அவருடைய பிள்ளைகளாகையால் அவர்களை அவரவர் பக்குவத்துக்கு தகுந்தபடி உணர்த்தவேண்டியவற்றை உணர்த்தி பாரபட்சமின்றி அவர்களையெல்லாம் சமமாக நடத்தி அவர் உணர்த்துகிறபடி நடந்தால் தன்நடக்கைக்குத் தக்க இன்பத்தைக் கொடுத்து தவறி நடந்தால் வரையறையின்றி நிகழ்வதாயல்லாமல் அக்குற்றம் நீங்குவதற்கு வேண்டப்படும் அளவிலேயே துன்பத்தைக்கொடுத்து வளர்த்து வருகிறார். ஆகவே கடவுள் நீதியுடையவர். "நல்வினைக்கேற்ப இன்பத்தை யும் தீவினைக்கேற்ப துன்பத்தையும், அருள்கின்றார். துன்பம்தருவது நம்மைச் சீர்திருத்துதற்கு வேண்டப்படும். அம்மாத்திரையேயன்றி வரையறையின்றி நிகழ்வதன்று."

அதிகாரம் 11.

"முத்தி நிலை"

"ஒருவர் தம் குற்றத்தைத் தமக்குத் தாமே உணர்ந்து உண்மையாகவே மனம் வருந்தி அக்குற்றத்தை அறவே கைவிட்டொழிதலே அக்குற்றத்திற்குக் கழுவாயாம். அறிவினுலும் நற்குணத்தினுலும் தூய்மையினுலும் கடவுளோடுஒன்றுபடுதலே முத்தியாம்." (கழுவாய் பிராயச்சித்தம்) பிரமசமயக்கொள்கை:—

மனிதர் யாவரும் குற்றமுடையவர்களெனவும் அவர்கள் குற்றத்துக்குத் தகுந்த பரிகாரத்தை நுகர்ந்து அக்குற்றத்தினின்று நீங்கி மனத்தூய்மையுடையவர்களாகி முத்திநிலையடைய வேண்டுமென்றும் அப்படி அடைதற்பொருட்டே இவ்வுலகின்கண் நாம் சீர்திருத்தப்படுவதாகவும் பல சமயத்தாரும் ஒப்புக்கொளகிறுர்கள். குற்றம் என்றுலென்ன? அதிலிருந்தும் நீங்கி முத்தியடைதலாவதென்ன? என்னும் விஷயத்தில் பற்பல பேர்கள் பலபலவிதமாய் அபிப்பிராயப்படுகிறுர்கள். கடவுள் முதலில் ஆதாம் ஏவாளை சிருஷ்டித்து அவர்களை இன்ப நிலையில் வைத்திருந்ததில் சாத்தான் என்னும் ஒரு பிசாசால் தூண்டப்பட்டு கடவுளுடைய கட்டளைக்கு இணங்கி நடவாமல் தவறியதாகவும், அதனுல் அவர்கள் பாவிகளாகி அந்தப் பாவம் அவர்களோடு நில்லாமல் அவர்களுடைய சந்ததிகளாகிய மானிடர் எவரையும் தொடர்ந்ததாகவும் அளவிறந்த நற்குணங்களுடைய (Infinite God) கடவுளுக்கு விரோதமாய்ச் செய்த குற்றமாகையால் அந்தக் குற்றத்திற்குத் தகுந்த பரிகாரத்தை மனிதர்கள் தாங்க சக்தியற்றவர்களாய் இருப்பதாகவும் அதனுல் கடவுளே மனிதாவதாரமெடுத்து மனித நிலைமையில் குற்றமற ஒழுகி மனிதர்களுடைய குற்றங்களுக்குரிய தண்டனையைத் தான் ஏற்றுக்கொண்டதாகவும், அதனுல் மனிதர்கள் பாவமன்னிப்புப் பெற்றிருப்ப

தாகவும், அவ்விதம் பெற்றிருப்பதை விசுவாசித்து தங்கள் குற்றங்களைக் கைவிட்டு பாவமன்னிப்புக்கேட்டால் அவர்கள் பாவத்தை மன்னித்து இன்பநிலையாகிய முத்தி என்னும் பேரின்ப வீட்டைக் கடவுள் அவர்களுக்கு அருள்வார் என்றும், சிலர் சொல்லுகின்றனர். இக்கொள்கைகள் இதனடியில் வரும் சில ஆக்ஷேபனைகளுக்கு இலக்காகின்றன. குற்றமின்றி சிருஷ்டிக்கப்பெற்ற ஆதிமனிதர்களுக்கு, ஒரு பிசாசால் தூண்டப்பட்டாலும், குற்றஞ்செய்யும்படியான சுபாவம் எப்படி வந்தது? கடவுளுடைய திவ்விய கலியாண குணங்களை அறிந்து கடவுளோடு ஐக்கியப்பட்டு இன்ப நிலையில மூழ்கி இருந்துகொண்டிருந்த தேவதூதர்களில் ஒருவனாகிய சாத்தான் என்னும் பிசாசானவன், ஏன் அந்த உயர்ந்த நிலையை விட்டு குற்றமுள்ளவனாய்ப் பிசகி நடந்தான்? ஆதாம் ஏவாளுடைய தேகங்களுக்கும் அவர்களுடைய பின்சந்ததியார்களுடைய தேகங்களுக்கும் ஓர்வித சம்பந்தமிருந்தபோதிலும் ஆதாம் ஏவாளுடைய ஆன்மாக்களுக்கும் பின் சந்ததியாருடைய ஆன்மாக்களுக்கும் சம்பந்தமென்னை? அவர்கள் பாவம் இவர்களைப் பிணிப்பானேன்? இவர்கள் ஜென்மப் பாவிகளாவானேன்? ஒருவருடைய பாவத்துக்கு மற்றொருவர் உத்தரவாதியாவானேன்? அப்படி உத்தரவாதி ஆகும்படி செய்வது கடவுளுடைய நீதிக்குப் பொருந்துமா? ஆதாம் ஏவாள் சந்ததியார்களாகையால், அப்படி உத்தரவாதியாகவேண்டியதவசியந்தான் என்று ஏற்பட்டால், அதற்கிடங்கொடாமல் ஆதாம் ஏவாளை குற்றமற சிருஷ்டித்ததுபோல வேறொரு ஆணையும் பெண்ணையும் குற்றமற சிருஷ்டித்து ஜென்மப் பாவம் பீடிக்காமல் மனிதர்கள் இவ்வுலகில் பரவும்படி செய்யலாகாதா? மனிதன் பாவியானாலும் அவனுடைய நிலைமைக்கும் குற்றத்திற்குந்தகுந்தவாறு தண்டனை ஏற்படுத்தவேண்டுமேதவிர எல்லையில்லாத குணங்களையுடைய கடவுளுக்கு விரோதமாய்ச் செய்த குற்றமென்று அவன் தாங்கத்தகாத தண்டனைக்கு அவனை உள்ளாக்குவது நியாயமா? குற்றத்தின் நிமித்தம் மனிதன் இன்பநிலைக்குத் தகுதியற்றவனாய்ப்போய்விட்டானானால், எல்லா மனிதர்களுடைய குற்றத்திற்குமுள்ள பரிகாரத்தை கடவுளே மனிதாவதாரமெடுத்து

ஏற்றுக்கொண்ட பிற்பாடு எந்த மனிதனையும் மறுபடியும் தண்டித்தல் நீதியா? அப்படிப் பாவமன்னிப்புப் பெற்றதை விசுவாசித்தவனுக்குமட்டும் பாவமன்னிப்புச் செய்வானேன்? இவ்விதந்தான் மனிதர்களுடைய குற்றத்திற்காக கடவுளாகிய மனிதனைத் தண்டித்தல் நீதியா? அவ்விதம் பாவமன்னிப்புப் பெறறதை விசுவாசித்தவன் தூய்மையுடையவனாகாமல் குற்றமுள்ளவனாகவேயிருந்தால் அவனுக்கு முத்திநிலை கிட்டுமா? கிட்டுமானால் குற்றமுள்ள ஒரு ஜீவாத்மாவும் பேரின்ப நுகர்ச்சியை எய்தக்கூடுமோ? விசுவாசித்தாலும், பின்பு குற்றமற ஒழுகி தூய்மையுடையவனானல் மட்டும் அவனுக்கு முத்திநிலை கிட்டும் என்று சொன்னால், பேரின்ப நிலைக்குத் தகுதியுடையவனான தூய்மையுள்ளவனது முன் குற்றங்களுக்காக வேறொருவனைத் தண்டித்தல் நீதியோ? இது நிற்க.

பசு, பதி, பாசம் என்னும் முப்பொருளும் அனாதி என்றும், பசு ஆகிய ஜீவாத்மாக்கள் அனாதியாகவே ஆணவமலத்தால் பீடிக்கப்பட்டிருக்கின்றனவென்றும், அந்த ஆணவமலத்தால் மறைக்கப்பட்டிருக்கிறவரை ஜீவான்மாக்கள் குற்றமற ஒழுகமுடியாதென்றும், ஆணவ மலம் நீங்குகிறவரை ஜீவான்மாக்கள் தங்களுடைய நல்வினை தீவினைக்கேற்ப இன்பதுன்ப நுகர்ச்சிக்குட்பட்டு மாறி மாறி பிறக்குமென்னும் இவ்வாணவமலம் நீங்கி இறைவனோடு ஐக்கியப்பட்டு நிற்றலே முத்தியென்றும் கூறுவர் ஒருசாரார். ஆணவமலம் சித்துப்பொருளா? அசித்துப்பொருளா? ஆணவமலத்தால் மறைக்கப்படாதிருப்பின் ஜீவான்மாக்கள் பூரண இன்பநிலையிலிருக்கத்தக்க பொருளாயிருக்குமா? பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களில் பதிப்பொருளாகிய இறைவன் முற்றறிவு பேராற்றல் முதலிய எண் குணமுள்ளவனென்றும், ஜீவான்மாக்கள் அறிவுப்பொருளென்றும், பாசம் அசித்துப் பொருள் எனவும் ஆணவம் ஓர்வகைப் பாசமென்றும், இவர்கள் சொல்வதாகத் தெரியவருகிறது. ஜீவான்மாக்கள் முற்றறிவுடைய பொருள்களா சிற்றறிவுடைய பொருள்களா? முற்றறிவுப் பொருளாயிருந்தாலும் சிறறறிவுப் பொருளாயிருந்தாலும் அறிவில்லாத

பொருளாகிய பாசம் அவர்களைப் பீடிப்பதெப்படி? எல்லாம் வல்ல இறைவனுக்கு ஒரு அறிவில்லாத பொருள் ஒரு அறிவுப் பொருளைத் தாக்காமல் அடங்கிக்கிடக்கும்படி செய்வது அரிதா? எல்லாம் வல்ல இறைவன் அனாதியாகவே ஜீவான்மாக்களின் பேரில் கருணைவைத்துச் செய்துவருவதெல்லாம் ஒரு அறிவில்லாத பொருள் ஒரு அறிவுப்பொருளைத் தாக்கி நிற்பதை தடுப்பது மட்டுந்தானா? ஆன்மாக்கள் அனாதியாகவேயிருந்தால், அவைகள் பொருட்டு இறைவன் செய்துவருகிற ஜீவகாருண்யத தொழிலும் அனாதியாகவே நடந்துவரவேண்டுமல்லவா? அப்படிக் காலவரையறையின்றி நடத்திவந்தும், மனிதர்களாகிய ஜீவான்மாக்கள் அம்மலம் நீங்கப்பெறாது இதுவரை கடவுளோடு ஐக்கியப்பட்டு பேரின்பம் எய்தாமல் இருப்பானேன்? நம்மை உய்வித்தற்கு எல்லையில்லாத இதுவரையுள்ள காலம் போதாதானால் இனி வரையறைக்குட்பட்டகாலத்தில் நம்மைக் கடைத்தேற்றுவார் என்பதை நம்புவதெப்படி? இது நிற்க.

பரம்பொருளாகிய ஒரே பொருள்தான் உண்மையாகிய பொருள் என்றும், ஜீவான்மாக்களென்று சொல்லப்படுகிற பிரத்தியேகப்பொருள்கள் கிடையாதென்றும்; "மாயை" என்னும் ஓர் சக்தியால் ஜீவான்மா தான் பரம்பொருளுக்கு வேறுபட்ட தனித்த பொருளெனத் தன்னை நினைப்பதாகவும், கயிற்றை பாம்பென்றும் கானலை நீர் என்றும் ஒரு மனிதன் மயங்கிக் கொள்வதுபோல அறியாமையால் பரம்பொருளாகிய தன்னை ஜீவாத்மா என்னும் பிரத்தியேகப்பொருளென மயங்கிக்கொள்வதாகவும், அவ்விதம் மயங்கிக்கிடப்பதுதான் குற்றமென்றும், அவ்வித மயக்கம் தீரும்வரை கஷ்டமுண்டென்றும், அவ்வித மயக்கந்தீர்ந்த உடன் நிற்குணவஸ்துவாகிய பரம்பொருளோடு ஒன்றுபட்டு தற்போதம் இழந்து நிற்குண வஸ்துவாகிய பரம் பொருளாகவே இருக்குமென்றும், கூறுவர் மற்றொருசாரார். இக்கொள்கைகளும் பலவித ஆக்ஷேபனைகளுக்கு இடங்கொடுக்கின்றன. பரம்பொருளாகிய ஒரே பொருள்தான் உண்மைப் பொருளானால் மயக்கம் யாருக்குவந்தது? பரம்பொருளுக்குத்

தானே வந்திருக்கவேண்டும்? பரம்பொருளே மயங்குகிறதெனச் சொல்லல் பொருந்துமா? மனிதன் கானலை ஜலமென்று மயங்கிக் கொள்ளுகிறகாலத்தில் மனிதனாகிய ஒரு பொருள் கானலாகிய ஒருபொருளை நீராகிய வேறொரு பொருளாக மயக்கத்தினால் கொள்ளுகிறான். ஆனதால் ஒரு பொருளை இன்னொரு பொருளாக மயங்கிக்கொள்ளுகிற காலத்தில் முப்பொருள்கள் இருத்தல்வேண்டும். கடவுளாகிய ஒரே பொருள்தான் உள்ளதென்றால், எந்தப்பொருளை, எந்தப்பொருளாக எந்தப்பொருள் மயங்கிக்கொள்ளுகிறதென்று சொல்வது? இவ்விதஞ்சொல்வது ஒரு மலட்டுக்காக்காய் தன் குஞ்சுக்குக் கொடுக்கக் கல்லிலிருந்து மாமிசத்தை உரித்துக்கொண்டுவந்தது எனச் சொல்வதற்கொப்பாகும். இது நிற்க.

இனி, மனிதனுடைய உற்பத்தி எப்படியிருந்தபோதிலும், மனிதன் ஞானக்கண் (Religious sense,) அறிவு, (Intellect,) மனச்சாட்சி, (Conscience,) அன்பு (Affections) என்னும் நான்கு அகக்கண்களையுடையவனாகவிருக்கிறான். இவ்வகக்கண்களால் தனக்கு மேலான பரம்பொருள் ஒன்றுண்டெனவும், கடவுளுக்கும் நமக்குமுண்டாகிய சம்பந்தமின்னதென்றும், கடவுள் இப்பிரபஞ்சத்தை எவ்வளவு விசித்திரமாகச் செய்திருக்கிறார் என்றும், இப்பிரபஞ்சத்தை என்னவிதமாய் நடத்திவருகிறாரென்றும் அவர் உயிர்க்குயிராய் உடனின்று நன்மையின்னது தீமையின்னதென உணர்த்துகிறபடி நடக்கக் கடமைப்பட்டிருப்பதாகவும், தன் பிதாவாகிய கடவுளிடத்தில் பிதிர்பக்தியுடனும் தன் சகோதரராகிய ஜீவான்மாக்கள் அனைவரிடத்தும் சகோதரவாஞ்சையுடனும் நடக்கவேண்டுமென்றும் தெரிந்துகொள்கிறான்.

இவ்விதமாய், முழுமுதற்பொருளை தான் விட்டுப் பிரிந்திருக்க ஒண்ணாதென்பதை உணரினும் தான் அம்முழுமுதற்பொருளல்லவென்றும் அப்பரம் பொருள் தனக்கு நாயகனென்றும் பிதா என்றும், அப்பரமபிதாவின் அறிவு அன்பு முதலிய சிறந்த

குணங்கள் தன்னிடத்திலும் உண்டென்றும் அறிகிறான். அக் குணங்கள் மனிதனிடத்துளதெனினும் குறையுற்றனவாக இருக்கின்றன. சகல குணங்களும் பூரணமாய் நிறைந்துள்ள முற்றறிவுப் பொருளாகிய கடவுள் ஒருவரே தவறுதலின்றி நடத்தல் கூடுமேதவிர தனக்குள்ள குணங்கள் பூரணமாயில்லாமல் அனுபவ உணர்ச்சியால் வளரவேண்டியதாயுள்ள சிற்றறிவுடைய மனிதன் தவறுதலின்றி நடத்தல்முடியாது தவறுதலின்றி நடக்கும்படி எதிர்பார்ப்பது குருடனை ராஜவிழி விழிக்கச்சொன்னது போலாகும். செய்கை சம்பந்தமாய் ஒரு மனிதனை நல்வழியிலேயே நடக்கும்படி செய்தல் கடவுளுக்கு அரிதன்று. வெகு எளிதில் அவர் செய்யக்கூடும். குற்றமென்பது புறச்செய்கையைப் பொறுத்து நிற்பதன்று. ஒரு மனிதன் மற்றொருவனுக்குத் துன்பஞ்செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் அவன் தேகத்தில் ஏதாவது ஒரு பாகத்தைக் காயப்படுத்தினால் அது குறறமாகும். ஆனால் அந்த மனிதனிடத்திலுள்ள வியாதியை சௌக்கியப்படுத்த வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் காயப்படுத்தினால் அது குற்றமன்று. புண்ணியமே ஆகும். மெய்யல்லாத சங்கதியை மெய்யென்று நம்பி ஒருவன் சொன்னால் அது குறறமாக மாட்டாது. மெய்யான சங்கதியாயிருந்தாலும் அதைப் பொய்யென்று நம்பிய ஒருவன் மெய் என்று சொல்வது குற்றமே ஆகும். ஆதலின் குற்றமென்பது மனதிலுள்ள நோக்கத்தைப் பொறுத்து நிற்கின்றது. ஆதலின் கடவுள், மனிதன் மனதில் யாதொருவிதமான நோக்கத்தையும் நிகழவிடாமல், எதையும், தாம் கருதிய வண்ணமே அவன் செய்யுமபடி அவர் ஏற்பாடு செய்துவிட்டால் மனிதன் அறிவற்ற சூத்திரப்பாவையாயிருப்பானேதவிர அவருடைய அறிவுள்ள பிள்ளையாக விருக்க மாட்டான். ஆதலின் அவரிடத்து நிறைந்துள்ள சிற்குணங்களில் சிலவற்றிற்கு வித்தாகிய சில தன்மைகளை நமக்குக் கொடுத்து அக்குணங்களிலப் பழகிப்பழகிப் நாமாகவே அபிவிர்த்தி செய்யும்படி சுவாதீனம் என்னும் சுதந்தரத்தை நமக்குக்கொடுத்து அவருக்கு ஏற்ற பிள்ளைகளாக நாம் வளரும்படி அவர் ஏற்பாடு செய்திருக்கிறார். நாம் சிற்றறிவுடையவர்களாக இருப்பதாலும்

நம் குணங்கள் ஆதியில் அவைகளின் வளர்ச்சிக்குரிய ஆரம்ப நிலைமையிலிருப்பதாலும், நாம் இன்னவிதஞ் செய்யவேண்டுமென்று கட்டாயப்படுத்தாமல், நாமாகவே தெரிந்து செய்யும்படி சுவாதீன சித்தத்தை கடவுள் நமக்குக் கொடுத்திருப்பதாலும், நம்முடைய குணங்கள் வளருவதில் நாம் வளரவேண்டிய விதமென்னவென்றும் நாம் செய்யவேண்டிய செய்கை இன்னவென்றும், நாம் நினைக்கவேண்டிய நினைப்பு இன்னவென்றும், நாம் சொல்லவேண்டிய சொற்கள் இன்னவென்றும் கடவுள் நமக்கு உயிருக்குயிராய் நின்று உணர்த்திய போதிலும், தவறுதலின்றி அவர் உணர்த்தியவாறு நடத்தல் அரிதாம். ஒரு சிறு குழந்தை நடக்கப் பழகும்போது அடிக்கடி தவறிவிழுதல் போல அறிவில் சிறுவர்களாகிய நாம் கடவுள் உணர்த்தியவாறு நடப்பதில் அடிக்கடி தவறுதல் கூடும். அப்படித் தவறுதலைத்தான் குற்றமென்கிறோம். பிள்ளைகள் நடக்கப் பழகுவதில் கீழேதவறிவிழுதல் பின்பு அவர்கள் ஜாக்கிரதையாக விருப்பதற்கு உதவியாயிருப்பதுபோல நம்முடைய குற்றமும் அந்தக் குற்றம் நம்மிடத்திலிருந்து நீங்குவதற்கு உதவியாயிருக்கும். பகவானால் நமக்குக்கொடுக்கப்படுந் துன்பமும் நமது ஆன்ம அபிவிர்த்திக்கு உதவியாயிருக்கும். ஓர் குழந்தை ஒரு தீச்சுடரைத் தொட முயலுங்கால், அந்தக் குழந்தையின் மாதா தடுத்தும் அது நில்லாது அந்தத் தீச்சுடரைத் தொட்டு அதனால் வரும் துன்பம் இன்னதென சுய அநுபவத்தால் தெரிந்த பின்பு அப்படிச்செய்யாது விடுவதுபோல ஒரு குற்றமான செய்கையை நாம்செய்ய முயலுங்கால் கடவுள் நம்மைப் பலவிதமாய் எச்சரிக்கிறார். அப்படி எச்சரித்தும்பயனில்லையானால் அந்தக் குற்றத்தையே நாம் செய்து அதனால் நேரிடும் துன்பத்தை நாம் அநுபவித்து அந்தக் குற்றத்தின் தன்மை இன்னதென நம் சுயஅனுபவத்தில் தெரிந்து விலகும்படி கடவுள் ஏற்பாடு செய்திருக்கிறார். ஆகவே நமது ஆன்ம வளர்ச்சியில் அறியாமையினாலும் அனுபவமின்மையினாலும் நேரிடும் தவறுதல் தான் குற்றமே ஒழிய வேறல்ல. அந்தக் குற்றத்தை நாமாகவே அறிந்து நீக்கி குற்றம் நீங்கியிருப்பதினாலும் நன்மை செய்வதினாலும் உண்டாகிய இன்பத்தை

நாம் நுகரவேண்டுமென்பது கடவுளுடைய நோக்கமே தவிர நம்மிடத்தில் கடவுளுக்குக் கோபமென்பது எந்தக் காலத்திலும் ஒரு சிறிதும் கிடையாது. கோபத்தினால் அவர் நம்மைத் தண்டிக்கிறதுமில்லை. நமக்கு இடையிடையே நேரிடும் துன்பம் நம்மை சீர்ப்படுத்துவதற்காக கடவுளால் மிகுந்த கருணையுடன் அருளப்படுகின்றது. நம்முடைய குற்றத்தினின்று நாம் நீங்கி விட்டால் பின்பு துன்பமென்பது நமக்குக் கிடைக்கவே கிடையாது. ஆகவே குற்றத்திற்குப் பரிகாரம் அந்தக் குற்றத்தின் தன்மையை உணர்ந்து மனம்வருந்தி அதைக் கைவிட்டொழித்தலேயாம். இவ்விதம் ஒழிக்கும் வரை

"அறிவிலாதவெனைப் புகுந்தாண்டு கொண்டறிவதை யருளிமேல்
நெறியெலாம புலமாக்கிய எந்தையைப் பந்தனை யறுப்பானை
பிறிவிலாத இன்னருள்கள் பெறறிருந்தும் மாறுடிதிபிணநெஞ்சே!
கிறியெலாம்..

என்று மாணிக்கவாசக சுவாமிகள் அருளியிருக்கிறபடி கடவுள் நமக்கு உணர்த்துகிற உணர்ச்சிக்கும் நம்முடைய நடைக்கும் மாறுதலிருந்துகொண்டே யிருக்கும். இவ்வித மாறுதல் நீங்கினபின் கடவுள் நமக்கு உணர்த்தியவாறு நாம் மிகுந்த மகிழ்ச்சியோடு ஒழுகுவோம். நாம் தூய மனத்தினராய் கடவுளிடத்தில் முதிர்ந்த பிதுர்பத்தியும் மனிதர்களிடத்தில் சிறந்த சகோதரவாஞ்சையும் உடையவர்களாயிருப்போம். முத்திநிலை என்பது சில சமயத்தோர் சொல்லுகிறபடி ஏகதேச இடமன்று. அதாவது, காலத்தாலேனும் இடத்தாலேனும் வரையறுக்கப் படுவதன்று. ஆன்ம பரிபக்குவ நிலையேயாம். அறிவினாலும், நற்குணத்தினாலும், மனத்தூய்மையினாலும கடவுளோடு ஒன்று பட்டு அமைந்தொழுகும் நிலையே முத்திநிலையாம். சுருங்கச் சொல்லில், "ஒருவர் தம்குற்றத்தைத் தமக்குத்தாமே உணர்ந்து, உண்மையாகவே மனம் வருந்தி, அக்குற்றத்தை அறவே கைவிட்டொழிதலே அக்குற்றத்திற்குக் கழுவாயாம். அறிவினாலும் நற்குணத்தினாலும் தூய்மையினாலும் கடவுளோடு ஒன்றுபடுதலே முத்தியாம்".

அதிகாரம் 12.

தேவோபாசனை.

கனவான்களே,

இன்று தேவோபாசனை யென்னும் விஷயத்தைப் பற்றிக் கொஞ்சம் பேசலாமென்று நினைக்கிறேன். "அரிது, அரிது, மானிடராதலரிது" என்று ஔவைப்பிராட்டியார் அருளியிருக்கின்றனர். இவ்வுலகின்கண் ஊர்வன, நடப்பன, பறப்பன முதலிய ஜீவஜந்துக்கள் எல்லாவற்றிற்கும் ஜீவான்மாக்கள் உண்டெனவும். அவைகளுள் மானிடப்பிறவியே உயர்ந்த பிறவி யென்றும் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். மனிதன் தவிர மற்ற ஜீவப்பிராணிகளுக்கு ஜீவான்மாக்கள் கிடையாதென வேறு சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். இவ்விஷயத்தின் உண்மை எப்படியிருந்தபோதிலும், மனிதப்பிறவி உயர்ந்தபிறவி யென்பதிலும் "அரிது, அரிது, மானிடராதலரிது" என்ற ஔவையார் வாக்கு உண்மையான வாக்கென்பதிலும் எவ்வித சந்தேகமுமில்லை. இவ்வித உயர்ந்த பதவியை அடைந்திருக்கிற மானிடர்களாகிய நாம் இவ்வுலக வாழ்க்கையில் செய்யவேண்டிய காரியமென்ன, நாம் அடையவேண்டிய பயனென்ன என்பதை மறந்து, இவ்வுலக ஆடம்பரத்திலேயே மூழ்கி, மனைவி. மக்கள் உறவினர், இஷ்டர் முதலியோரிடத்தில் நாம் எவ்விதமாய் அன்புசெலுத்த வேண்டுமென்பதை நன்கு தெரிந்துகொள்ளாமல் அவர்களிடத்தில் தகுதியற்ற பற்றுதலை வைத்தும் பொருள் சேர்ப்பதிலும் நமது தேகத்தை வளர்ப்பதிலும் அதை பாதுகாத்தலிலும் நமது சகோதரர்களாகிய பிறரை நம் கைவசப்படுத்தி அவர்கள்பேரில் அதிகாரம்செலுத்துவதிலும் இன்னும் பலவிதமாய் நிலையற்ற காரியங்களிலேயே நமது வாழ்நாட்களை வீண் நாட்களாக கழிக்கின்றோம். இவ்விதம் மனம்போன போக்கின்படி நாம் நடந்து வருவதில் நமது முயற்சி அடிக்கடி தடைப்படுகிறது; நாம் எடுத்த காரியங்கள்

கைகூடுகிறதில்லை, நமது இஷ்டப்படி நடப்பதில் பற்பல கஷ்டங்களும் இடையூறுகளும் நேரிடுகின்றன. இவ்வித இடையூறுகளினாலும் அசந்தர்ப்பங்களினாலும் நமது மனது தத்தளித்து சோர்வுறுகின்றது. இவ்வித நிலைமையில் நம்மனதை நாம் கொஞ்சம் அடக்கி ஆராய்ந்தால் நம்மால் ஆகக்கூடியது ஒன்றுமில்லையென்றும் நமக்கு மேலான பரம்பொருள் ஒன்று உண்டெனவும் அப்பரம்பொருள் நம் மனம்போன போக்கின்படி நடக்க நமக்கு இடந்தராதென்றும் இந்த உலகத்தில் நடக்கிற செயல்களெல்லாம் அப்பரம்பொருளின் செயலேயென்று சொல்லும்படியான விதமாக நடைபெறுகிறதென்றும்,

"பாராதி தனிலுள்ள செயலெல்லாம் முடிவிலே
பார்க்கின் நின்செய லல்லவோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரண னந்தமே"

என்று தாயுமானசுவாமிகளும்.

'ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்
ஒன்றை நினையாது முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்"

என்று ஒளவைப் பிராட்டியாரும் அருளியிருக்கின்ற வாக்குகள் ஆன்றோர்களுடைய சுயானுபோகத்தில் தெளிவாய் புலப்பட்டுணர்ந்த சங்கதிகளை வெளிப்படுத்தும் வாக்குகளென்றும் நமக்கு புலப்படுகிறது. இதுபற்றியே மேல்நாட்டு ஞானிகளும்.

"There is a Divinity that shapes our ends
Rough hew them, how we may."

என்றருளியிருக்கின்றனர். அதாவது நமது காரியங்களை நாம் எவ்வித தாறுமாறாய் நடத்திவந்தபோதிலும் அவைகளை தன் கருத்துக்கிணங்க சரிப்படுத்தி நடத்தும் பரம்பொருள் ஒன்றுண்டு

என்பதாம். இவ்விதமாய் நம் மனம்போன போக்கின்படி போக இடமில்லாமல் முட்டுப்பட்டு அவைகளை சரிப்படுத்தும் பரம்பொருள் ஒன்று உண்டென நாம் உணரும்போது, அவரை நாடி நின்று அவரிடத்தில் நம்முடைய கருத்தைத் தெரிவித்து அவருடைய கருத்து இன்னதென நாம் தெரிந்து அவரிடத்தில் நம்முடைய குறைகளைக் கூறி அவருடைய உதவியைப் பெற்று நாம் மன அமைதியோடு சந்தோஷமாய் நமது காலத்தைக் கழிக்க வேண்டுமென்கிற அவாவு நமக்குண்டாகிறது இவ்வித அவாவால் தூண்டப்பட்டு நமக்கு மேலான பரம்பொருளிடத்தில் நம் கருத்தைத் தெரிவித்து அவர் கருத்தை அறிந்து அவரிடத்தில் நமது குறையைக் கூறி அவருடைய சகாயத்தை நாம் பெறுதற் பொருட்டு அவரிடத்தில் நாம் பேசும் பேச்சே அவரிடத்தில் நாம் சம்பாஷிக்கும சம்பாஷணையே உபாசனையென்று சொல்லப்படும். இந்த இடத்தில் உங்களுக்கு ஒரு ஐயம் உண்டாகலாம். கடவுளிடத்தில் நாம் பேச முடியுமா? கடவுள் நம்மிடத்தில் பேசுவாராவென்று சந்தேகம் ஜனிக்கலாம். கனவான்களே:—இதைப்பற்றி யாதொரு சந்தேகமும் வேண்டாம். நாம் ஒருவருக்கொருவர் எவ்விதம் பேசிக்கொள்ள முடியுமோ, அவ்விதம் கடவுளிடத்திலும் நாம்பேசலாம். மனிதனுடைய இயற்கை சுபாவம். கூட்டுறவை விரும்பும சுபாவம். சகோதரர்களாகிய நாம் ஒருவருக்கொருவர் பேசவும் கருத்தைத் தெரிவிக்கவும் இடமில்லாமல் அவரவர்கள் பிறர் சம்பந்தமன்னியில் தனித்து வாழும்படி நேரிட்டால் அதைப்போல் துர்ப்பாக்கியம் வேறொன்றுமில்லை. சந்தோஷமே யிராது. சிற்றறிவுடையவர்களாகிய நாம் ஒருவருக்கொருவர் பேச இடமில்லாத விடத்து நமக்கு எவ்வித சந்தோஷமும் கிடையாதென்றால், எல்லாம்வல்ல இறைவனும் நமக்கு பரமபிதாவும் நமது குறைகளை யெல்லாம் தீர்த்து நமக்கு இன்பநிலை கிட்டும்படியாகச் செய்யக்கூடியவனுமாகிய பகவானிடத்தில் நாம் கலந்துகொள்ள முடியாவிடில் நமக்கு எவ்விதம் இன்பம் உண்டாகும்; அவ்விதம் கலந்துகொள்ளக்கூடாத நிலைமையில் நாமிருந்தால் கடவுள் கடவுளாக மாட்டார்; நாம் அவருக்குப் பிள்ளைகளாகவும் மாட்டோம்; ஆனால் கனவான்களே:—நாம் இவ்வித துர்ப்

பாக்கிய நிலைமையிலிருக்கவில்லை. கடவுள் நமக்கு உயிர்க்குயிராய்த் தழைத்து நின்று எப்பொழுதும் நம்மிடத்தில் கலந்து பேசிக்கொள்ளத் தயாராக இருந்துகொண்டேயிருக்கிறார். நாம் எப்பொழுதும் அவரிடத்தில் கலந்துபேசிக்கொள்ளலாம். ஆனால் கலந்து பேசிக்கொள்ளுதலின் தன்மை இன்னதென்பதையும் நாம் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளுவதின் தன்மை இன்னதென்பதையும் ஆராய்ந்து தெளிவு படுத்திககொள்ளாததினால் தான் இவ்விஷயத்தில்நமக்கு சந்தேகமும்வியப்பும் உண்டாகிறது. நாம் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் தன்மையை சற்று ஆரோய்வோம். நமது நண்பன் ஒருவன் நம்மிடத்தில் பேசுகிறான், பேசும்போது என்ன செய்கிறான், தனது நாவை ஒரு விதமாய் அசைக்கிறான். உடனே அவனுக்கும் நமக்கும் மத்தியிலுள்ள ஆகாயத்தில் அதாவது காற்றில் ஓர்வித அசைவு உண்டாகிறது. அப்படி அசைகிற காற்று காதிலுள்ள நரம்புகளைத் தாக்கவே காது நரம்புகள் அசைந்து மூளைக்குச் செல்லுகிறது, உடனே சில வார்த்தைகளைக்கேட்டதாக உணர்ச்சியுண்டாகிறது. அவ்விதம் நம்மனதில் தோன்றுகிற உணர்ச்சிக்கும் நாம்பு அசைதலுக்கும் சம்பந்தமென்ன ? நரம்பு அசைதல் மனதின் உணர்ச்சியாகுமா. இவ்விதமாகவே ஒரு பொருளைப் பார்க்கும்பொழுது கண்ணிலிருந்து மூளைக்குப்போகிற நரம்பு அசைந்து அந்த அசைவு மூளைக்குச் செல்லவும் ஒரு பொருளைப் பார்த்ததாக உணர்ச்சியுண்டாகிறது, நரம்பு அசைதல் பார்த்ததாகுமா? ஐம்பொறிகளின் நரம்பு அசைதலுக்கும் அந்தக்காலத்தில் நம் மனதில் தோன்றுகிற உணர்ச்சிக்கும் சம்பந்தமென்னவென்று ஒருவராலும் சொல்லமுடியாது. ஜடப்பொருளாகிய நரம்பு அசைதலுக்கும், மனதில் தோன்றுகிற உணர்ச்சியாகிய ஆன்ம உணர்ச்சிக்கும் எவ்வித சம்பந்தம் இருத்தல் கூடும், பகவானுக்குத்தான் தெரியும். ஆயினும் அவ்வித உணர்ச்சியினால் வெளிப்பொருளைப் பார்த்ததாகவும் நமது நண்பரோடு நாம் பேசுவதாகவும் நாம் தீர்மானித்துக் கொள்ளுகிறோம். நமது நண்பரோடு நாம் பேசுதலென்றால் நம் மனதில் தோன்றுகிற உணர்ச்சியால் நாம் அறிகிற அறிவென்றே பொருள்படும். இவ்விதமாக கடவுளிடத்திலும்

நாம் பேசலாம். கடவுள் நமக்குச் சொல்வதை நாம் அறியலாம் நாம் வழியில் போகும் பொழுது ஒருவன் ஓர் மரத்திலிருந்து கீழே விழுந்து அவஸ்தைப்படுகிறான்; அவனைப் பார்த்தவுடன் அவனுக்கு உதவிசெய்யென்று நம்மிடத்தில் ஒருஉணர்ச்சியுண்டாகிறது; இந்த ஏவல் குறித்த உணர்ச்சி எவ்விதமாய் உண்டாயிற்று; இந்த உணர்ச்சியினால் நமக்கு மேலான பரம்பொருள் நம்மை உதவிசெய்யும்படி தூண்டுகிறதாய் நாம் அறிகிற அறிவுக்கும் நம்முடைய ஐம்புலன்களால் வரும் உணர்ச்சியால் உண்டாகிற அறிவிற்கும் வித்தியாசமென்ன; ஒருவன் சில பொருளை யார்க்குந் தெரியாமல் நம்மிடத்தில் வைத்துவைக்கும்படி சொல்லுகிறான். அதைத்திரும்ப வாங்கிக்கொள்ளுமுன் அவன் இறந்துபோகிறான். அந்தப்பொருளை நாம் எடுத்துக்கொண்டால் கேட்போர் ஒருவருமில்லை. அப்படி எடுத்துக்கொள்ள வேணுமென்று ஒரு எண்ணம் தோன்றினால் அந்த எண்ணம் துர் எண்ணமென்றும் அவன் மகனிடத்தில் அந்தப்பொருளை நாம் ஒப்புவித்துவிடவேணுமென்றும் ஓர் உணர்ச்சியுண்டாகிறது. இவ்வித உணர்ச்சி எவ்விதம் உண்டாகிறது. இவ்வித உணர்ச்சி பரம் பொருளின் தூண்டுதலாகியஉணர்ச்சியல்லவா? சர் ஐசக்நியூட்டன் என்பவர் ஓர் மரத்தடியில் உட்கார்ந்துகொண்டிருக்கிறார். அந்த மரத்திலிருந்து ஓர் பழம் கீழே விழுகிறது; இந்தப்பழம் கீழே விழுவானேன். மேலே ஏன் போகவில்லை என்று ஒரு ஐயவினாத் தோன்றுகிறது. சிறிது ஆராய்ச்சி நிகழ்ந்தபின் ஜடவஸ்துக்களுக்கு ஒன்றை ஒன்று இழுக்கும் கவர்ச்சியாகிய சக்தியிருக்கிறதென்று அறிகிறார்; இந்த சக்தியை ஒருவரும்பார்த்ததும்இல்லை. கேட்டதுமில்லை. ஆனாலும் அந்தச்சக்தி இத்தன்மையதெனநமது அறிவால் அறிகிறோம். மனிதன் இவ்வுலகின்கண் எவ்வளவு சம்பத்துடையவனாயிருந்தபோதிலும் அதில் திருப்தியடையாமல் தனக்கு மேலான பரம்பொருளைநாடி நிற்கின்றான்; இவ்வித உணர்ச்சி யெப்படி யுண்டாகிறது. ஐம்பொறிகளினால் தூண்டப்படும் உணர்ச்சியை வைத்து நாம் வெளிப்பொருள்களை எவ்விதம் அறிகிறோமோ அவ்விதமே பகவானால் நமக்குக்கொடுக்கப்பட்டிருக்கிற அகக்கண்களின் உணர்ச்சியை வைத்து கடவுளுக்கும்

நமக்கும் உண்டாகிய சம்பந்தம் இன்னதென்பதையும் ஆன்ம குணங்களின் தன்மை இன்னதென்பதையும் அறிகிறோம். இவ்வித அகக்கண்கள் நான்கு வகைப்படுமென்று சொல்லலாம். அவைகளாவன அறிவு, (Indellect) மனச்சாட்சி. (Conscience) அன்பு. (Affections) ஞானக்கண் (Religions sense). அறிவு வாயிலாக ஜடப்பொருள்களுக்கு ஒன்றை ஒன்று இழுக்கும்படியான சக்தியிருக்கிறதென்றும், மனச்சாட்சி வாயிலாக ஒருவன் நம்மிடத்தில் கொடுத்தபொருளை யாரும்பார்க்காவிடினும் அவன் மகனிடத்தில் ஒப்புவித்து விடவேணுமென்றும், அன்பு வாயிலாக ஒரு மரத்திலிருந்து கீழே விழுந்து உதவியற்றுக்கிடக்கிற மனிதனுக்கு நாம் வேண்டிய உதவிசெய்ய வேண்டுமென்றும் ஞானக்கண் வாயிலாக நமக்கு மேலான பரம்பொருள் ஒன்று உண்டென்றும், அதையே நாம் நாடி நிற்க வேண்டுமென்றும், இன்னும் இவைபோன்றவைகளையும் அறிகிறோம். மேலும் இவ்வகக்கண்களால் உண்டாகும் உணர்ச்சி நமக்கு மேலான பரம்பொருளால் தூண்டப்படும் உணர்ச்சியெனவும் அறிகிறோம். இவ்வகக்கண்களின் உணர்ச்சிக்கும் ஐம்பொறிகளின் உணர்ச்சிக்கும் ருஜூவின் தன்மையில் வித்தியாசம் இல்லவேயில்லை. இதில் ஒன்றுக்கொன்று மேலானது என்று சொல்லவேண்டுமானால் அகக்கண்களின் உணர்ச்சியே மேலானது என்று சொல்லவேண்டும். ஐம்பொறிகளின் உணர்ச்சியைவைத்து ஜடப்பொருள்களின் இருப்பை நாம் அறிகிற அறிவை மறுத்து ஜடப்பொருள்களை இல்லையென சிலர் சாதிக்கின்றனர்; ஆனால் அகக்கண்களின்உணர்ச்சியை மறுப்பார் ஒருவருமிலர். கனவான்களே:—அகக்கண்களின் தன்மை இவ்விதமாயிருப்பதால் ஐம்பொறிகளின் உதவியால் நாம் நமது நண்பர்களிடத்தில் பேசுவதுக்கு ஒப்பந்தம் இன்னும் கொஞ்சம் ஆராய்ந்து சொன்னால் அதற்கு மேலாகவே அகக்கண்களின் உதவியால் நமது பரமபிதாவாகிய பகவானிடத்தில் நாம் பேசுதல் கூடும். சம்பாஷித்தல் கூடும். நம் கருத்தை அவருக்குத் தெரிவிக்கலாம். அவர் கருத்தை நாம் அறியலாம். நம் குறையை அவரிடத்தில் கூறலாம். நாம் செய்யும் விண்ணப்பத்துக்கு அவர் கொடுக்கும் மறுமொழி யின்னதென்று நாம் தெரிந்து

அவர்செய்யும் நன்மையை அவர்தான் செய்கிறார்என்ற உணர்ச்சியோடு பெற்றுக்கொள்ளலாம். இவ்விதம் கடவுளிடத்தில் நாம் பேசுவது, சம்பாஷிப்பது, நம் கருத்தைத் தெரிவித்து, அவர் கருத்தை அறிவதுதான் உபசானேயாகும். இவ்விதமாய் கடவுளே நாம் உபாசனே செய்ய ஆரம்பித்ததும், கடவுளுடைய பேராற்றல், முற்றறிவு, அளவிறந்த ஜீவகாருண்ணியம்முதலிய கடவுளுடைய திவ்விய கலியாண குணங்கள் நம்மனதில் தோன்றி அவரை ஸ்தோத்தரித்து புகழும்படி நம்மனது தூண்டுகிறது. முன்னமே சொல்லியிருக்கிறபடி, மனிதன் கூட்டுறவை விரும்புகிற, அறிவுப்பொருள். இவ்வுலகில் தனிச்சிறையே பெருந்தண்டனையென்பதும், நிர்மானுஷியமான காட்டில் ஒருவனே விட்டுவிட்டால், அது அவனுக்குப் பெரும் துர்ப்பாக்கியமான நிலேயென்பதும், யாவருக்கும் தெரிந்தவிஷயம். ஒரு பெரியவரை நாம சந்தித்துப் பேசும்படி நேரிடும்பொழுது, மகாராஜா, மகாப்பிரபு, இவ்வுலகில் உமக்கு நிகர் ஒருவருமில்லேயென்று அவருடைய உயர்ந்த பதவியைச் சொல்லிப் புகழ்வது, மனிதனது இயற்கை. ஒரு பையன், ஒரு பரீட்சையில் முதல்வகுப்பில் மேலாகத்தேறி விட்டால், அவனேக்கண்டு அப்பா, நீ நல்ல சமர்த்தன், கெட்டிக்காரன், நீ நன்றாய் படித்தாய், பிள்ளேயிருந்தால் உன்னேப்போல் இருக்கவேண்டும். நீ இவ்விதமாகத் தேறுவாயென்று எனக்கு முன்னமே தெரியும் என்று பலவாருக புகழ்ந்து, அவனுடன் சந்தோஷிப்பது சகஜம். அவ்விதம் செய்வது மனிதனது சுபாவம். இதுபோல், கடவுளே நாம் சந்தித்து அவரிடத்தில் பேச, அதாவது அவரை உபாசனேசெய்யத் தொடங்கினதும், அவருடைய அபார சக்தியையும், அளவில்லாத கருணையையும், அற்புதச்செயல்களேயும் எடுத்துக்கூறி, அவரை நம்மனதாரப்புகழும்படி, நம்முடைய இயற்கை சுபாவத்தினால், நாம் தூண்டப்படுகிறேம். நித்தியனுய், சத்தியமே உருவாகக்கொண்டவனுய், இப்பிரபஞ்சத்துக்குக் காரண பூதனுய், இதிலுள்ள எல்லா உயிர்களுக்கும் உயிராய் விளங்குகின்ற, உனக்கு நமஸ்காரம் செய்கிறேமென்றும், நித்தியனுப், நிர்மலனுப், நிட்களனுப், பரிபூரணனுப், மகானுப், மகிமையுள்ளவனுப்; எங்

களுக்குத் தந்தையாய், தாயாய், விளங்குகின்ற கருணா நிதியே! உனக்கு நமஸ்காரம் செய்கிறோமென்றும்; இன்னும் இவ்விதமாகக் கடவுளுடைய அளவுக்கடங்காத குணங்களையும்; அற்புதச் செயல்களையும்; கடவுளிடத்தே சொல்லி மனமகிழ்ச்சி அடைகிறோம். இதுபற்றியே

"அங்கிங் கெனாதபடி யெங்கும் ப்ரகாசமா
யானந்த பூர்த்தி யாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடி யெல்லாந்
தங்கும்படிக் கிச்சைவைத் துயிர்க்குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினிற்
தட்டாம னின்றதெது சமயகோடிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வமென்
றெங்குந்தொடர்ந் தெதிர்வழக் கிடவுநின்றதெது
வெங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ள தெதுமேல்
கங்குல் பகலறநின் றவெல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்த ததுவே
கண்டனவெலாமோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ் சலிசெய்குவாம்."

என்றும்,

"தீயாகி நீராகித் திண்மையாகித் திசையாகி யத்தி
சைக்கோர் தெய்வமாகித்
தாயாகித் தந்தையாய்ச் சார்வுமாகித் தாரகையு
ஞாயிறுந் தண்மதியுமாகிக்
காயாகிப் பழமாகிப் பழத்திநின்ற இரதங்கள் நுகர்
வானுந்தானே யாகி
நீயாகி நானாகி நேர்மையாகி நெடுஞ்சுடராய் நிமிர்
ந்தடிகள் நின்றவாறே."

என்றும், இன்னும் இவ்விதமாக, ஆன்றோர்கள் கடவுளை ஸ்தோத்தரித்து நமஸ்கரிக்கின்றனர். இவ்வித ஸ்தோத்திரமே, உபாசனையின் முதலாவது அங்கமாகும். இவ்விதம் ஸ்தோத்தரிக்கும்போது, கடவுள் நமக்குயிர்க்குயிராய் நின்று, நமக்குச்செய்து வருகிற எண்ணிறந்தகோடி நன்மைகள், நம்மனதில்உதயமாகிறது. இவ்வுலகில் நம்மை வாழும்படிசெய்து, நமக்கு வேண்டிய சகல பதார்த்தங்களையும், இவ்வுலகின்கண் அமைத்துவைத்திருக்கிறார். நமக்கு வெளிச்சத்தையும், உஷ்ணத்தையும் கொடுக்கும்படி, பகலில் சூரியனைப் பிரகாசிக்கும்படி செய்திருக்கிறார். நாம் இளைப்பாறும்படி, நித்திரை செய்வதற்கு ஏற்றகாலமாக, இரவை ஏற்படுத்தியிருக்கிறார். இராக்காலங்களில், நாம் சிலநேரம் சந்தோஷம் அடைந்திருக்கும்படி, குளிர்ந்த வெளிச்சத்தைத்தரும்படியாய், சந்திரனைப் பிரகாசிக்கும்படி செய்திருக்கிறார். கடவுளுடைய அபார சக்தியையும், அற்புதச் செய்கைகளையும், நாம் அறிந்து, வியப்படைந்து, அவன் தனக்குஉவமையில்லாதானென நாம் தெளிந்து, நாம் அவனைநாடி நிற்கும்படி, எத்தனையோ கோடி நட்சத்திரங்களை, சிருஷ்டித்துப் பிரகாசிக்கும்படி செய்திருக்கிறார். யாதொரு உதவியுமற்று, கருப்பையில், நாம் நமது அங்கங்கள் பூர்த்தியடையாமல் உழன்றுகொண்டிருந்தகாலத்தில், நம்மைப் போஷித்துவந்திருக்கிறார். நம்மை நாமே காப்பாற்றிக் கொள்வதற்கு சக்தியன்னியில், நாம் நமது தாய்வயற்றில்நின்று வெளியாகிறோம். அப்படிவெளியாகுமுன்னமே, நம்வரவைவெகு ஆவலுடன் எத்தனையோ பேர் எதிர் பார்த்திருக்கும்படி செய்து, நாம் சிசுவாயிருந்தகாலத்தில் நமதுமலஜலங்களை அகற்றி, ஸ்நானம் செய்வித்து, போதுமான உடைஉடுத்தி நமக்குவேண்டியஆகாரத்தைச் சமயம்பார்த்துக்கொடுத்து, நமக்கு வியாதி நேரிட்டகாலத்தில், இராப்பகல் நித்திரைஇன்றி, நமக்குவேண்டிய பக்குவங்கள் செய்து, இவ்விதமாய் நாம் வளரும்படி, வெகு அற்புதமான ஏற்பாடுகளைச்செய்திருக்கிறார். நாம், நமக்குவேண்டிய காரியங்களைப் பார்த்துக்கொள்ளும்படியான வயசுவந்த பின்னும், நமக்குப்பிறர் செய்யவேண்டிய உதவிகளைச் செய்யும்படிசெய்து, நம்முடைய ஆன்ம வளர்ச்சியே முக்கியமாகக்கொண்டு, நம மனம்போன

போக்கில் போகவொட்டாமல் தடுத்து, வேண்டிய காலங்களில் போதுமான எச்சரிக்கை செய்து, அவசியம் நேரிட்டால் நம்மை துன்பத்துக்குள்ளாக்கி, நம்முடைய ஆன்மாவைச் சீர்ப்படுத்திக் கொண்டே வருகிறார். ஒரு பெரியவர் நமக்கு ஏதாவது நன்மை செய்தால், அந்த நன்மையை அவரிடத்தில் சொல்லி, ஐயா, நான் முன்னுக்கு வந்தது உங்களாலேயே, உங்களைத் தவிர இந்தப் பேருதவியை யார் செய்தல் கூடும் என்று பலவாறாக அவருக்கு வந்தனம் செய்வது, நமது இயற்கையாகிய சுபாவம். ஒவ்வொரு வனும் தனக்குப் பிறர்செய்த நன்றி தினைத்துணையாயிருப்பினும் பனைத்துணையாகப் பாவித்து, விசுவாசிக்க வேண்டுமென்றும், நன்றியறிதற் சுபாவம் இல்லாத மனிதனுக்கு,

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற குறளின்படி, உய்வே யில்லை என்றும் ஆன்றோர் அருளி யிருக்கின்றனர். இவ்விதமாக நன்றியறிதற் சுபாவம், நமது இயற்கை சுபாவமாதலால், மேற்குறித்தபடி, இடைவிடாது நமக்கு, யாதொரு கைமாறும் எதிர்பாராது, எண்ணிறந்த நன்மைகளைச் செய்துவருகிற, பகவானுக்கு வந்தனம் செய்யும்படி, நமது மனது தூண்டுகிறது. இவ்வித தூண்டுதலினால், ஸ்தோத்திரம் சொல்லி முடிந்தபின், அபார சக்தியுள்ள கருணாநிதியே! நீ, எங்களுக்கு இடைவிடாது செய்துவருகிற நன்மைகளுக்கு அளவேயில்லை. எங்களுடைய தேக சம்ரக்ஷணையின்பொருட்டு, எங்களுக்குவேண்டிய சகல வஸ்துக்களையும், இவ்வுலகின்கண் அமைத்து வைத்திருக்கின்றாய். நாங்கள் இவ்வுலகின்கண் வருமுன்னமே எங்கள் பெற்றோர் முதலியோர், எங்கள் வரவை, எவ்வளவோ ஆவலுடன் எதிர் பார்த்திருக்கும்படி செய்து, நாங்கள் சிசுவாயிருந்த காலத்தில், தங்களுக்கு நேரிடும் எந்தக் கஷ்டத்தையும் பாராட்டாமல், எங்கள் போஷிப்பிலேயே கண்ணாயிருந்து, எங்கள் பெற்றோரையும், மற்ற உறவினர் முதலியோரையும் கொண்டு, எங்களை ஆதரிக்கும்படி செய்து வந்திருக்கிறாய். எங்கள் ஆன்ம வளர்ச்சியே, உனதுபிரதான நோக்கமாய்க்

கொண்டு, அதற்குவேண்டிய சகல ஏற்பாடுகளும் செய்திருக்கிறு யென்றும், இன்னும்பலவிதமாயும், நமது விசுவாசத்தைக்காட்டி கடவுளுக்கு வந்தனம் செய்கிறோம். இது பற்றியே,

"முத்திநெறி யறியாத மூர்க்கரோடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே"

"நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்று மில்லாத கூத்தன்றன் கூத்தையெனக்
கறியும்வண்ண மருளியவா றார்பெறுவா ரச்சோவே"

யென்றும், இன்னும் பலவிதமாயும், ஆன்றோர்கள், கடவுளிடத்தில் தங்களுடைய விசுவாசத்தைக் காட்டி வந்தனம் செய்கின்றனர். ஆகவே, கடவுளிடத்தில் நமது விசுவாசத்தைக்காட்டி வந்தனம் செய்தல், தேவோபாசனையின் இரண்டாவது அங்கமாகும். இவ்விதம் கடவுளுக்கு ஸ்தோத்திரமும், வந்தனமும் செய்து வருகையில், கடவுளுடைய திவ்விய கலியாணகுணங்கள், நம் மனதில் அழுந்திப் பதியும்படிக்கும், நமது விசுவாசம் அதிகரிக்கும்படிக்கும், கடவுளுக்கும் நமக்கும் உள்ள சம்பந்தத்தில், நமக்குத் தெளிவாயில்லாதது தெளிவு படும்படிக்கும், கடவுளுடைய திவ்விய கலியாண குணங்களைக் குறித்துச் சிந்தனை செய்யும்படி நமது மனது தூண்டுகிறது. இதுபற்றியே,

"யாதுமனம் நினையும் அந்த நினைவுக்கு நினைவாகி
யாதின் பாலும்
பேதமற நின்றுயிருக் குயிராகி யன்பருக்கே
பேரானந்தக்
கோதில்அமு தூற்றரும்பிக் குணங்குறியொன் றறத்தன்னை
க்கொடுத்துக் காட்டும்
தீதில் பராபரமான சித்தாந்தப் பேரொளியைச்
சிந்தை செய்வாம்"

என்றும், இன்னும் பலவாறாகவும், கடவுளுடைய திவ்விய கலியாண குணங்களைப்பற்றி, ஆன்றோர்கள் சிந்தனை செய்கின்றனர். ஆகவே, இவ்விதம் சிந்தித்தல், உபாசனையின், மூன்றாவது அங்கமாகும். நாமோ சிற்றறிவுடையவர்கள். அற்ப சக்தியுள்ளவர்கள். நமக்கு இன்ன வேளையில், இன்ன ஆபத்து வருமென்று தெரிகிறதில்லை. நமக்கு சஞ்சலமும் கஷ்டமும், அடிககடி நேரிடுகிறது. நாம் எந்த முயற்சிசெய்தாலும், அடிக்கடி தடை நேரிடுகிறது. நாம் எடுத்த காரியங்கள் அடிக்கடி கைகூடாமல், தவறிப் போகிறது. நமக்கு, எவ்வளவு பொருள் உதவியும், எவ்வளவு உறவினர் இஷ்டர்கள் உதவியும் இருந்தபோதிலும், நம்முடைய கஷ்டத்தை நீக்கமுடியாமல் போய்விடுகிறது. இந்த ஸ்திதியில் பகவானே நமக்குக் கதியென்று, அவரையே நாடிநின்று, நம்முடைய குறைகளை அவரிடத்தில் சொல்லி, நம்முடைய குறைகளை நீக்கும்படி அவரிடத்தில் விண்ணப்பம் செய்யும்படி நேரிடுகிறது. இவ்விதம் விண்ணப்பம் செய்தலே உபாசனையின் நாலாவது அங்கமாகும். உபசானையின் பாகமாகிய, இந்த விண்ணப்ப விஷயமாய், சில சந்தேகங்களும், விவகாரங்களும் உண்டாகின்றன.

(1) கடவுள் இயற்கைச் சட்டங்களை ஏற்படுத்தி அந்த இயற்கைச் சட்டங்களின்படி நடத்தி வருகின்றார். ஆகையால் அவரால் நம்முடைய பிரார்த்தனைகளை ஈடேற்ற முடியுமா?

(2) நம்முடைய பிராத்தனையை ஈடேற்ற அவரால் முடியுமானால், நாம் அவரிடத்தில் விண்ணப்பம் செய்து கொள்ளாமலே நமக்கு வேண்டிய காரியங்களை அவர் செய்யலாகாதா? என் அப்படிச் செய்கிறதில்லை? நாம் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டியதற்கு அவசியம் என்ன?

(3) நாம் விண்ணப்பம் செய்துகொண்டாலும், நம்முடைய பிரார்த்தனையை அவர் ஈடேற்றுகிறாரா? நாம் ஒருவிதமாய் விண்ணப்பம்செய்ய, அந்த விண்ணப்பத்தின்படி அனுகூலம் ஆகாமல் அடிக்கடி நமக்குத் துன்பமும் கஷ்டமும் நேரிடுகிறதல்லவா? இதற்குக் காரணமென்ன?

(4) எவ்வித விண்ணப்பத்தையாவது அவர் திட்டமாய் நிறைவேற்றுவாரா? இவ்வித வினாக்களைப்பற்றி சற்று விரிவாய் ஆராய்ந்து பார்ப்போம். கடவுள் சில இயற்கைச் சட்டங்களை ஏற்படுத்தி அச்சட்டங்களுக்குப் பொருத்தமாகவே, சகல சங்கதிகளையும் நடத்தி வருகிறார் என்பதில் சந்தேகமேயில்லை. சில மகான்கள், இறந்துபோனவர்களை பிழைப்பித்தார்களென்றும், குருடர்களுக்குக் கண்களைத் தொட்டமாத்திரத்திலேயே பார்வையுண்டாகும்படி செய்தார்களென்றும், ஏடுகளை ஓடுகிற தண்ணீர்க்கு எதிராகச் செல்லும்படி செய்தார்களென்றும், இன்னும் இவ்விதமாக, பலவித அற்புதங்கள் செய்திருக்கிறார்களென்றும், சொல்லியிருப்பது, எவ்வளவுதூரம் வாஸ்தவமோ தெரியவில்லை. இயற்கைச் சட்டங்களுக்குப் பொருத்தமாக, சில அற்புதங்கள் செய்யப்பட்டிருக்கலாம். ஆனால் இயற்கைச் சட்டங்களுக்கு விரோதமாக நடந்திருப்பதாகச் சொல்லுகிற அற்புதங்கள், அவ்விதம் நடந்திருக்குமென்று நம்ப இடமில்லை. இயற்கைச் சட்டங்கள், கடவுளாலே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவ்விதச் சட்டங்களை சில சில சமயங்களில் மாற்றி, அல்லது நிறுத்திவைத்து, அவைகளுடைய சாதாரண ஒழுங்குக்கு விரோதமாக, சில அற்புதங்கள்செய்ய, கடவுளுக்குச் சக்தியில்லையென்று நான்சொல்லவரவில்லை; ஆனால், அவ்விதம் இயற்கைச் சட்டங்களுக்கு விரோதமாக அற்புதங்கள்செய்ய அவசியமும்இல்லை; அவர் செய்கிறதுமில்லை. அப்படிச் செய்ததாய் சொல்லுவது, அவருடைய அளவில்லா ஆற்றலுக்குக் குறைகூறுதலாகவே முடியும். இயற்கைச் சட்டங்கள் ஏற்படுத்தி அவைகளின்படி கடவுள் நடத்தி வருவது, ஜீவான்மாக்களுடைய அறிவுவிர்த்திக்காக. நெருப்பானது மகான்கள் கால்வைத்தால் குளிர்ந்தும் நம்மைப்போலொத்த மற்றவர்கள் கால்வைத்தால் சுட்டுக்கொண்டும் இருந்தால் நெருப்பின் தன்மையை அறிவதெப்படி? அதை உபயோகப்படுத்துவது எப்படி? ஒரு நதியின் மேல் கட்டப்பட்டிருக்கிற இருப்புப் பாலமானது, மகான்களைத்தாங்கியும் ஓர் திருடன் அதன்மேலே ஓடிப்போகுங்கால் அவனைத் தாங்காமல் அவனைக் கீழேவிழும்படியும் செய்தால், யாவருக்கும் உபயோகப்படும்படி, ஒரு பலமான

பாலம் கட்டுவதெப்படி ? எவ்வளவு லேசான மரக்கலத்தின் மேலேறியும், மகான்கள் அபாயமின்றி சமுத்திரத்தைக் கடக்கலாமென்றும், எவ்வளவு பலமான கப்பலேறிப்போனாலும், நம்மைப்போலொத்தவர்கள் போகமுடியாதென்றும் ஏற்பட்டால்; யாவரும் சமுத்திரத்தூடே செல்லும்படி மரக்கலம் செய்வதெப்படி ? இயற்கைச் சட்டங்களின் தன்மைகளை இப்பொழுது நாம் எவ்வளவோ அதிகமாய் அறிந்திருக்கிறோம். ஒரு மணிக்கு 60 மைல் வீதம், புகைவண்டி மார்க்கமாய் செல்லுகிறோம். தந்திக் கம்பி மூலமாயும்; தந்திககம்பியன்னியிலும்; 1000-க் கணக்கான மைல்தூரத்திலுள்ள, ஒருவனிடம் ஒருநிமிஷத்தில் பேசுகிறோம். பகலுக்கு சமானமான வெளிச்சம் கொடுக்கும்படி மின்சார வெளிச்சம் (Electric light) போட்டுக்கொள்ளுகிறோம். ஆகாயக் கப்பலில் செல்லுகிறோம். இன்னும் இவைபோன்ற அற்புதமான செய்கைகளுக்குக் கணக்கேயில்லை இயற்கைச் சட்டங்கள் ஒழுங்காய் நடந்தேறி வராவிட்டால்; இவ்வித அற்புதச்செய்கைகள் எப்படி நடைபெறும் ? மனிதர்களுக்கு இவ்விஷயமாய் உண்டாயிருக்கிற அறிவின் அபிவிர்த்தி எப்படி அடைதல் கூடும ? ஒருபழம் ஓர் மரத்திலிருந்து கீழே விழ; அதை வைத்து ஜடவஸ்துக்களின் கவர்ச்சிச் சக்தியை சர் ஐசக் நியூட்டன் (sir Isac newton) எப்படி கண்டுபிடித்தல் கூடும் ? கனவான்களே ! இயற்கைச் சட்டங்களின் விதிகள், ஒழுங்குதப்பி நடந்தால், அறிவு விர்த்திக்கு இடமேயிராது. ஆதலின், கடவுள் இயற்கைச் சட்டங்களுக்கு விரோதமாய், ஒருநாளும் ஒரு விஷயத்திலும், நடக்கும்படி செய்யார். அப்படிச் செய்யவேண்டியது அவசியமும் இல்லை. நம்மைப்போலொத்த சிற்றறிவுடையவர்களுக்குத்தான் சில விதிகளை ஏற்படுத்திக்கொண்டால் அவ்விதிகளின்படி நடந்து நம்முடைய காரியங்களை முடித்துக்கொள்ள முடியாமல் போகலாம். காலையில் ஆறுமணிக்கு எழுந்து; ஏழு மணிக்குள் நதியில் ஸ்நானம் செய்துகொள்ளவேண்டுமென்று நாம் ஒரு ஏற்பாடு செய்துகொண்டால்; நாம் அடிக்கடி தவறிப்போதல்கூடும். இன்னும் இவ்விதமாக எந்த விஷயத்திலும் நம்முடைய தீர்மானப்படி நடக்க நமக்கு சக்தியில்லாமல் போகலாம். ஆனால், அளவில்லாத

ஆற்றலுடைய பகவானுக்கு, அவருக்கு வேண்டிய காரியங்களை முடித்துக்கொள்ள அவர் ஏற்படுத்திய இயற்கைச் சட்டங்களை விட்டு ஏன் விலகவேண்டும்? அவர் அப்படி விலகி சில சமயம் நடந்தார் என்று சொல்வது; அப்படி விலகாமல் தன் காரியத்தை முடிக்க, அவருக்குச் சக்தியில்லை என்று சொல்வதாக ஏற்படு மல்லவா? ஆதலின், இயற்கைச்சட்டங்களுக்கு விரோதமாக; அவர் சில அற்புதங்கள் செய்தார் என்று சொல்வது; அவருடைய அளவில்லாத ஆற்றலுக்குக் குறைகூறுதலாய் முடியும். இது நிற்க. இயற்கைச் சட்டங்களுக்குப் பொருத்தமாக, நம்முடைய பிரார்த்தனைகளை, எவ்விதம் ஈடேற்றுகிறாரென்று சற்று ஆராய்ந்து பார்ப்போம். மனிதன் என்று சொல்லப்படுகிற நாம் இருவகைப்பொருள்கள் சம்பந்தப்பட்ட ஓர் பொருள். அறிவுப் பொருளாகிய ஜீவான்மாவும்; ஜடப்பொருளாகிய தேகமும் சேர்ந்து, மனிதனென்று உருவெடுத்து வாழ்கிறோம். ஜடப்பொருளின் இயற்கைச் சட்டங்கள்; ஜடப்பொருளாகிய தேகத்தை வாதிக்குமே தவிர; ஜீவான்மாவை ஒரு பொழுதும் வாதிக்க மாட்டா. நாம் இந்த உலகத்துக்கு வந்திருக்கிற பிரதானகாரியம்; ஆன்ம வளர்ச்சியே தவிர தேக வளர்ச்சியன்று. மனிதன் சிசுவிலும்; பாலியத்திலும்; முதிர்ந்த வயதிலும்; மரண மடைகிறான். எவ்விதமாயாவது எந்தக்காலத்திலாவது தேகம் அழிந்துபோகிறது. தேக சம்பந்தமாகிய பொருள் முதலிய உதவிவஸ்துக்களும் அடிக்கடி மாறி மாறி வந்து; ஒருகாலத்தில், அவைகளுக்கும் நமக்கும் உண்டாகிய சம்பந்தம் முற்றிலும் நீங்கிப்போகிறது. தேகம் உள்பட இவ்வழிவுப்பொருள்கள் சம்பந்தப்பட்டமட்டிலுந் தான் ஜடப்பொருளின் இயற்கைச் சட்டங்கள் வாதிக்கின்றன. இவ்வழிவுப்பொருள்கள் எப்படியானாலென்ன? அவைகள்சம்பந்தமாய் நம்முடைய பிரார்த்தனைகள் ஈடேறினால் என்ன? ஈடேறா விட்டால் என்ன? இவைகள் சம்பந்தமாய் நேரிடும் சில காரியங்களை வைத்துக்கொண்டு, கடவுளுக்கு நம்முடைய பிரார்த்தனைகளை ஈடேற்ற முடியுமா? முடியாதா? வென்று சந்தேகம் உண்டாவானேன்? ஜீவான்மாவோ அறிவுப்பொருள். கடவுளும் அறிவுப் பொருள். ஜட வஸ்துக்கள் சம்பந்தப்பட்டமட்டில் நான்

இவ்விதம் நடப்பேனென்று கடவுள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறாரேதவிர ஜடப்பொருள் சம்பந்தமில்லாமல், அறிவுப்பொருளாகிய அவருக்கும் அறிவுப்பொருளாகிய ஜீவான்மாக்களுக்கும், உள்ள சம்பந்தந்தை எவ்விதமும் கட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. ஆதலின், ஆன்மவளர்ச்சி சம்பந்தமாய், ஜடப்பொருள் சம்பந்தமன்னியில், நாம் அவருக்கு நேருக்குநேர் செய்துகொள்ளும் விண்ணப்பத்தை, அவர் நிறைவேற்றுவதில், அவருக்கு எவ்வித தடையுமில்லை. இது நிற்க.

ஜடவஸ்துக்கள் சம்பந்தப்பட்ட விண்ணப்பத்தை அவர் நிறைவேற்றினாலும் சரி,—நிறைவேற்றாவிட்டாலும் சரி என்று நாம் நினைப்பது, உசிதமாயிருந்தபோதிலும், அவரால் நிறைவேற்றமுடியாதோவென்றால் முடியாது என்று சொல்லவிடமில்லை. அவ்வித விண்ணப்பங்களையும், அவரால் இயற்கைச் சட்டங்களுக்கு விரோதமன்னியில், நிறைவேற்றல் முடியும். இவ்வுலகத்தில், நடைபெறும் காரியங்கள் எல்லாம், ஜடவஸ்துக்களின் காரியங்களாகவில்லை. மூன்று பொருள்கள் சேர்ந்து உண்டாகிற காரியங்களாயிருக்கின்றன. ஜடவஸ்துக்கள், அறிவுப்பொருளாகிய நாம், அறிவுப்பொருளாகிய கடவுள், ஆக மூன்று பொருள்களும் சேர்ந்து இவ்வுலக காரியங்கள் நடைபெறுகிறது. நம்முடைய நண்பன் ஒருவன் காய்ச்சலினால் கஷ்டப்படுகிறான். நாம் பக்கத்திலிருந்து பிரார்த்தனைபண்ணினால் காய்ச்சல் விடாதுதான். ஆனால் நாம பிரார்த்தனை செய்த உடன், அந்த வியாதியை சௌக்கியம்பண்ணக்கூடிய டாக்டர் ஒருவரைக்கொண்டு, சௌக்கியம்பண்ணவேணுமென்று, நம்முடைய மனதில் படும்படி கடவுள் செய்யலாம். அந்த வைத்தியன் வந்த உடன், இன்னமருந்து கொடுத்தால் சௌக்கியமாகுமென்று சரியான மருந்து இன்னின்னதென்பதை, அந்த டாக்டர் மனதில் உதயமாகும்படி கடவுள் செய்யலாம். அந்த மருந்தைக் கொடுத்தவுடன், இயற்கைச் சட்டத்துக்குப் பொருத்தமாகவே, இயற்கைச் சட்டங்களின் விதிப்படியே, அந்த வியாதி சௌக்கியமாய் விடலாம். நம்மை நோக்கி வந்துகொண்டிருக்கிற புயல்க்காற்றை, உடனே நிறுத்தவேணு

மென்று பிரார்த்தனை செய்தால் நில்லாமல் போகும். இவ்வித சில சங்கதிகள் தவிர, நாம சம்பந்தப்பட்டு, நாம் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டியதாயிருக்கிற அளவிறந்த சங்கதிகளில், ஜீவான்மாக்களின் மூலமாகவே, இயற்கைச் சட்டங்களுக்கு விரோதமன்னியில், நாம் மேலே குறிப்பிட்டிருக்கிற நண்பரின் வியாதியை சௌக்கியம்பண்ணினதுபோல், நம்முடைய பிரார்த்தனையை கடவுள் ஈடேற்றமுடியும்.

ஆதலின், — கனவான்களே! — நம்முடைய பிரார்த்தனையை ஈடேற்றுவதற்கு, இயற்கைச் சட்டங்கள் தடையாகமாட்டா. — அச்சட்டங்களுக்குப் பொருத்தமாகவே, நம்முடைய பிரார்த்தனைகளை ஈடேற்றமுடியும். ஆதலின், இவ்விஷயமாய் எவ்வித ஐயமுமின்றி, கடவுளிடத்தில் நமது குறைகளைக் கூறி, விண்ணப்பம்செய்துகொள்ளலாம். கடவுள், நம்முடைய பிரார்த்தனைகளை, எவ்வித தடையுமின்றி ஈடேற்றமுடியுமானால், நாம் விண்ணப்பம் செய்துகொள்ளாமலே, நமக்கு வேண்டிய காரியங்களை, அவர் செய்யமாட்டாரா? நாம் விண்ணப்பம் செய்யவேண்டிய அவசியம் என்ன? கடவுள் நமக்குப் பிதா, — நாம் அவருக்குப் பிள்ளைகள். பிள்ளைகளுக்கு வேண்டிய சங்கதிகளைப் பிதா, தானே செய்ய மாட்டாரா? பிள்ளைகள் கேட்டுத்தான் செய்யவேண்டுமென்று வைத்துக்கொள்ளுவாரா? இவ்விதமாக விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டிய அவசியத்தைப்பற்றிச் சிலர் சந்தேகிக்கின்றனர். கடவுள், நமக்கு வேண்டிய சங்கதிகளில் அனேகத்தை நாம் கேளாமலே செய்திருக்கிறார். அற்புத யந்திரமாகிய இந்த உடலை, நாம் கேளாமலே நமக்குக்கொடுத்திருக்கிறார். அதன் போஷிப்புக்கு ஆகவேண்டிய, பதார்த்தங்களை இவ்வுலகில் அமைத்துவைத்திருக்கிறார். நமக்கு ஒரு விநாடிகூட இல்லாமல் தீராதென்கிற, காற்றை நாம் போகுமிடமெல்லாம் இருக்கும்படி இவ்வுலகத்துக்கு, அது ஒரு போர்வையாக அமைத்துவைத்திருக்கின்றார். நமது தேகத்தில், இருதயமானது நாம் பிறந்தது முதல் மரணம்வரை, இடைவிடாது தன் வேலையைச் செய்துகொண்டிருக்கும்படி செய்திருக்கிறார். சுவாசப்பைகளும், ஜீர

ணக்கருவிகளும், அவ்விதமே தங்கள் வேலைகளைச்செய்துகொண்டிருக்கும்படி செய்திருக்கிறார்.

இவ்விதம், நாம் கேளாமலே, அநேக நன்மைகளைச் செய்திருக்கிற கடவுள், அவசியமில்லாமல் சில சங்கதிகளில் நாம் கேட்டுத்தான் செய்யவேணுமென்று, வைத்துக்கொள்ளுவாரா? அவசியம்பற்றியே, அவ்விதம் செய்திருக்கிறார். சிற்றறிவுடையவர்களாகிய நாம், நமது ஆன்ம வளர்ச்சியின் பொருட்டு, கடவுள் நமக்குச் செய்துவருகிற நன்மைகளாலும், ஏற்பாடுகளாலும் உண்டாகும் பயன்களை, நாம், சுயானுபோகத்தில் அறிந்து, நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அறிவு, அன்பு, மனச்சாட்சி, தெய்வ நாட்டம் முதலிய ஆன்ம குணங்களில் அபிவிர்த்தியடைந்து, நாம் இன்பநிலை எய்தவேண்டுமென்பதே, அவர் நோக்கம். அவ்வித நோக்கத்தோடேயே, அவர் நம்மை வளர்த்துவருகின்றார். கேளாமல் கொடுக்கிற எவ்வித நன்மைகளும், கேட்டுக்கொடுக்கிற நன்மைபோல, அவ்வளவு பிரயோசனத்தைக் கொடுக்கிறதில்லை. இதை நமது சுயானுபோகத்தில் வெகு தெளிவாய்த் தெரியலாம்.

பணக்காரர்வீட்டுப் பிள்ளைகள் படிக்கிறதில்லையென்றும், எளியபிள்ளைகள்தான் சுறுசுறுப்பாய் படிக்கிறதென்றும, நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோம். இதற்குக் காரணமென்ன? படிப்பின் பிரயோஜனம் பணம் சம்பாதிப்பதற்கு என்று நினைப்பதினால், பணக்காரர் வீட்டுப் பிள்ளைகள், தங்களுக்குப் பணம் இருப்பதால் படிப்பு அவசியமில்லையென்று நினைத்துவிடுகிறார்கள். ஆதலால் படிப்பில் அவர்களுக்கு அவாவுமில்லை, நாட்டமுமில்லை. ஆதலின் அவர்கள் பெற்றோர்கள் அந்தப்பிள்ளைகளை படிக்கும்படி எவ்வளவுதான் சொன்னாலும், எவ்வளவு சௌகரியம் செய்து கொடுத்தாலும், எவ்வளவு பணத்தை செலவழிக்கத் தயாராயிருந்தாலும், பெற்றோர்கள் முயற்சி பயன்படுகிறதில்லை. எளியபிள்ளைகளோ என்றால், படிப்பில் அவாவுடையவர்களாயிருக்கிறார்கள். பொருளில்லாமல் அவர்கள் ஆவல்நிறைவேறத் தடைப்படுகிறது.

தங்கள் கஷ்டநிலைமையை தங்கள் பெற்றோரிடத்திலாவது வேறு யாரிடத்திலாவது சொல்லிப்பொருள் உதவிகிடைத்துவிட்டால், தங்கள் அவாவை வெகு தீவிரமாப் நிறைவேற்றிக்கொள்கிறார்கள். ஒரு மனிதனுக்கு ஒரு வியாதி யிருக்கிறது. அந்த வியாதி யிருப்பதாய், அவனுக்குத் தெரியவில்லை; தெரிந்தாலும் அதை சௌக்கியம்பண்ணிக் கொள்ளவேணுமென்ற ஆத்திரம் அவனுக்கு இல்லை. இந்த நிலைமையில், ஒரு டாக்டர், அவனுக்கு, அவனுடைய பிரியமும் வேண்டுதலும் இல்லாமல், அவனுக்குள்ள வியாதியைச்சொல்லி, மருந்து சாப்பிடும்படி சொன்னால், செவிடன்காதில் சங்கூதினதுபோல்த்தானிருக்கும். வியாதியைச் சவுக்கியம்பண்ணிக்கொள்ள எவ்வித முயற்சியும் செய்யான். இவ்விதமாய், கேளாமல் செய்கிற உதவி, பயன்படுகிறதில்லை யென்பது யார்க்கும் தெளிவாய்த்தெரியம். ஆன்ம வளர்ச்சியே, கடவுளுடைய பிரதான நோக்கமாயிருப்பதால், அவ்வளர்ச்சிக்கு வேண்டிய காரியங்களில், அவாவும், வேண்டுதலுமில்லாத ஒருவனுக்கு, அந்தக் காரியங்களைச் செய்தால், பயன்படாதாகையால், வேண்டுதலின்றி அவர் செய்கிறதில்லை. ஆன்ம வளர்ச்சிக்கு ஏற்றகாரியங்களில், அவாவும், வேண்டுதலும உடையவனுக்கு, அவன் வேண்டுதலின்பேரில் அவர் செய்யும் நன்மைகள் மிகுந்த பயனைக் கொடுப்பதால், கடவுள், சில விஷயங்களில் விண்ணப்பம்செய்து கொள்ளுவதின்பேரில், அவ்வித நன்மைகளைச் செய்யும்படி நேரிடுகிறது. நாம் விண்ணப்பம் செய்துகொண்டபோதிலும், நமது பிரார்த்தனைகள் ஈடேறாமல், நமக்கு அடிக்கடி துன்பமும், கஷ்டமும நேரிடுகிறதே. இதற்குக்காரணமென்னவென்று சிலர் கேட்கின்றனர். நாம் சிற்றறிவுடையவர்கள். நமக்கு வேண்டிய காரியம் இன்னதென்று நமக்குத் தெரிகிறதில்லை. கடவுளுடைய பிரதான நோக்கமாகிய ஆன்ம வளர்ச்சியை, நாம் நம்முடைய பிரதான நோக்கமாகக் கொள்கிறதில்லை. நாம், இந்த உலக ஆடம்பரத்தில் மூழ்கி இந்த உலக சம்பந்தமான, நிலையற்ற காரியங்களிலேயே, நாம் கண்ணுயிருந்து, அவைகளைத் தேடுதலிலேயே, நமது வாழ்நாளைச் செலவழிக்கிறோம்.

"அறிவிலாதவெனைப் புகுந்தாண்டு கொண்டறிவதை யருளிமேல்
நெறியெலாம் புலமாக்கிய எந்தையைப் பந்தனை யறுப்பானை
பிறிவிலாத இன்னருள்கள் பெற்றிருந்தும் மாறுடிதிபிணநெஞ்சே"
கிறியெலாம் ... ...

என்று மணிவாசகப்பெருமான், அருளியிருக்கிறபடி, அறிவின் வாயிலாக, நாம் அறியவேண்டியதை நமக்குத்தெரிவித்தும், மனச்சாட்சி வாயிலாக நன்மை யின்னது தீமை யின்னது என்று நமக்குப் புலமாக்கி, நன்மையே செய்யும்படி தூண்டியும், அன்பின் வாயிலாக, பிறர் உயிரைத் தன்னுயிர்போல நேசிக்கவேண்டுமென நமக்குத் தெளிவுபடுத்தியும், ஞானக்கண்வாயிலாக அவனையே சதமென்ன நாடி நிற்கும்படி, நமக்கு வழிகாட்டிக்கொண்டும், நமக்குயிர்க்குயிராய் ஒரு க்ஷணமும் நம்மை விட்டுப்பிரியாமலிருக்கிற, பகவானுடைய கட்டளைகளுக்கு, நாம் செவி கொடாது, மனம்போன போக்கிலேயே போகிறோம். ஆன்ம வளர்ச்சிக்கு இடையூறும், உலக ஆடம்பரமே நோக்கமாயுமுள்ள, அனேக விண்ணப்பங்களை நாம் செய்து கொள்கிறோம். இந்த ஸ்திதியில் இவ்வித விண்ணப்பங்களை, கடவுள் நிறை வேற்றுதல் தகுதியாகுமா? நிறை வேற்றினால். நமது ஆன்ம வளர்ச்சி குன்றிவிடாதா?

ஆதலின், இவ்வித பிரார்த்தனைகளை, நிறைவேற்றவே மாட்டார். நமது, ஆன்ம வளர்ச்சிக்கேற்ற காரியங்கள், இன்னதென கடவுளுக்குத்தான் நன்றாய்த்தெரியும். அதற்கு விரோதமாய், நாம் விண்ணப்பம்செய்து கொண்டால், அந்தப்பிரார்த்தனை நிறைவேறாமல், தடைபடும். இவ்விதம் தடைபடுவது நமது நன்மைக்கே. இவ்வித பிரார்த்தனைகளை ஈடேற்றாமல், ஒரு மனிதனுக்கு பிழவையுண்டானால், அதையறுத்து, வைத்தியன் சௌக்கியம் பண்ணுவது போலவும், கசப்பு மருந்துகளைக் கொடுத்து, பிள்ளைகளின் வியாதிகளைச் சௌக்கியம் பண்ணுவது போலவும், படிக்காமலிருக்கிற பிள்ளைகளைப் பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் அடித்துப்படிக்கும்படி செய்வதுபோலவும், கருணாகர மூர்த்தியாகிய பகவான், சில சமயங்களில், நமக்கு மிகுந்த துன்பமும்,

கஷ்டமும், கொடுத்து நாம் மனம்போன போக்கில்போக ஒட்டாமல் தடுத்து, நமது ஆன்மவளர்ச்சியில், நம்மை அபிவிர்த்தி செய்து வருகிறார். இவ்வித துன்பங்களும், தடைகளும், கடவுளுடைய பெருங்கருணையாலேயே நேரிடுகிறது. நமது ஆன்ம வளர்ச்சியின் பொருட்டு நேரிடுகிறபடியால், ஆன்றோர்கள், இவ்விதத் துன்பங்களை, ஒருபொருட்டாக பாராட்டுகிறதில்லை.

"நரகம் புகினும் எள்ளேன் உன் திருவருளாலே
இருக்கப் பெறின்"

என்று, மாணிக்கவாசக சுவாமிகள் அருளி யிருக்கின்றனர். நரக வேதனைக்கு ஒப்பந்தமான துன்பம்உண்டானாலும் சரிதான், அதை நான் கவனிக்கிற தில்லை. உன் திருவருள் ஒன்றிருந்தால் போதும் என்பது, இதன் பொருள்.

"ஓறுத்தால் ஒன்றும் போதுமே"

என்றும், ஆன்றோர்கள், அருளியிருக்கின்றனர். இவ்விதமாக, நமது பிரார்த்தனைகள், சில விஷயங்களில் ஈடேறுமல் போவதும், நமக்குத் துன்பம் நேரிடுவதும், கடவுளுடைய அனுக்கிரகமே. ஆதலால், ஆன்றோர்கள், தங்களுக்கு நேரிடும் துன்பங்களை, ஒரு சிறிதும் கவனியாமல், கடவுளுடைய திருவருளையே நாடி நிற்கின்றனர். ஆதலின் நமது பிரார்த்தனைகள், சில விஷயங்களில் ஈடேறுமல் போவது, அவ்வித பிரார்த்தனைகள், நம்முடைய ஆன்மவளர்ச்சிக்கு ஏற்ற பிரார்த்தனைகளல்லவென்றும், அப்படி நிறைவேறுமல் போவதே, நமக்கு நன்மையை உண்டாக்குமென்றும், அறிந்து, நமக்கு நன்மையான பிரார்த்தனைகளைக் கடவுள் திட்டமாய் நிறைவேற்றுவார், என முழு நம்பிக்கையோடு, நாம் விண்ணப்பம் செய்யவேண்டும். இனி, எவ்வித பிரார்த்தனையையாவது, யாதொரு தடையுமின்றி, கடவுள் நிறைவேற்றுவாரா என்னும் விஷயத்தைப்பற்றி சற்று ஆராய்வாம். மேலே சொல்லியவற்றால், ஆன்மவளர்ச்சிக்கு ஏற்ற பிரார்த்தனைகளை, யாதொரு தடையுமின்றி, கடவுள் திட்டமாய் நிறைவேற்றுவார் என்று புலப்படுகிறது.

கிறிஸ்துநாதர், பிரார்த்தனை விஷயமாய் பேசும்போது, கேள் கொடுக்கப்படும். தேடு கண்டுபிடிப்பாய், தட்டு திறக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். இங்கு கொடுக்கப்படலாம், கண்டு பிடிக்கலாம், திறக்கப்படலாம் என்று சொல்லாமல், கொடுக்கப் படும், கண்டுபிடிப்பாய், திறக்கப்படும் என்று சொன்னதினு லேயே, நம்முடைய பிரார்த்தனைகள், திட்டமாய் நிறைவேற்றப் படும் என்று சொல்வதாக ஏற்படுகிறது. இவ்வுலகின்கண் பிறந்த மகான்களில், கிறிஸ்துநாதர் ஒருவர்; அவர், சுயானுபோகத்தால், பிரார்த்தனைகளின் தன்மையின்னதென்று, தெரிந்தவர். அவர், சிலுவையில் அறையுப்பட்ட காலத்தில், அந்தத் துன்பத்தைச் சகிக்கமாட்டாமல், "பகவானே இந்தத் துன்பத்தை என்னை விட்டு நீக்கும், ஆயினும் உம்முடைய சித்தம் நிறைவேறக் கடவது." என்று பிரார்த்தித்தார். இதனால் தேகசம்பந்தமா யுண்டாகிய துன்பத்தை நீக்கும்படி, கடவுளுக்கு விண்ணப்பம் செய்தபோது, "ஆயினும் உம்முடைய சித்தம் நிறைவேறக்கட வது" என்று சொன்னதினாலேயே, அந்தப் பிரார்த்தனை நிறை வேறாமல் போனாலும் போகலாம் என்று தெரிந்தவராயிருக்கிறார்.

இந்த மகானே, நமது பிரார்த்தனைகள் திட்டமாய் நிறை வேற்றப்படும் என்று சொன்னதினாலேயே, அவ்விதப் பிரார்த் தனைகள். இத்தேகமும் உலகப்பொருள்களும், சம்பந்தப்பட்ட பிரார்த்தனைகளைக் குறித்து அல்லவென்றும் ஆன்ம வளர்ச்சிக் குரிய பிரார்த்தனைகளென்றும், தெளிவாய்ப் புலப்படுகிறது. அரங்க்சிப் (Aurangazeeb) என்னும் ஒரு மகமதிய சக்கரவர்த்தி பஞ்சாப் தேசத்தான் ஒருவனை, மகம்மது மார்க்கத்தை ஒப்புக் கொண்டு தன் இடதுகையிலுள்ள கொரானைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும். அப்படிச்செய்யாவிட்டால் தன் வலதுகையி லுள்ள வாளால் அவனை வெட்டிவிடுவதாயும், சொன்னபோது, அவன் இரண்டு நிமிஷம் பொறுத்துக்கொள்ளும், உம்மால் என்னை வெட்டமுடியாது என்று சொன்னான். அவ்விதம், இர ண்டு நிமிஷம் சாவகாசம் கொடுக்கப்பட்டது. இந்தக் காலத்தில், அவன் பகவானே மரணத்துக்கு நான் கிஞ்சித்தும் பயப்படாமலி

ருக்கும்படிக்கும், மரணத்துக்குப் பயந்து எனது கொள்கையை கைவிடாதிருக்கும்படிக்கும், கிருபைசெய்து, எனக்கு தைரியத்தைக் கொடும் என்று பிரார்த்தனை செய்து, ஒரு சீட்டு எழுதிக் கழுத்தில் கட்டிக்கொண்டு. இப்பொழுது என்னை வெட்டும் பார்ப்போம் என்று தைரியமாய்ச் சொன்னான். உடனே அரங்க்சிப் (Aurangzeeb) அவனை வாளால் வெட்ட, தலைவேறு தேகம் வேறாய்ப் பிரிந்துவிட்டது. உடனே அந்தச் சீட்டை அரங்க்சிப் பார்த்தான். அதில் நீர் என்னை வெட்டவில்லை, எனக்கு ஒரு கெடுதலும் செய்யவில்லை, என்றைக்காவது ஒருநாள் அழிந்து போகக்கூடிய இந்தத் தேகத்தைத்தான் வெட்டினீர்; என்று எழுதப்பட்டிருந்தது. அரங்க்சிப், வெட்கப்பட்டுப்போனான். தன்னுடைய கொள்கையை மரண துன்பத்துக்குப் பயப்படாமல் கைக்கொண்டு நடக்கும்படி தைரியம்கொடுக்கவேணுமென்று கடவுளைப் பிரார்த்தித்தபோது அவனுக்கு எவ்வளவு தைரியம்வந்தது பாருங்கள்.

இங்கிலாந்து தேசத்தில், மதசம்பந்தமாய் அபிப்பிராயபேதம் ஏற்பட்டு, ஒரு சாரார் மற்றொரு சாரானை, மரணம் முதலிய கொடுந்துன்பங்கள் செய்தகாலத்தில், கிரான்மர் (Cranmer) லாட்டிமர் (Latimur) என்ற இரு பிசபுக்களை, எரிகிற தீயில் போடும்படி தண்டனை விதிக்கப்பட்டது. இத்துன்பத்துக்குப் பயந்து, இவர்களில் ஒருவர், தன் மனம் ஒவ்வாத கொள்கைகளைக் கைக்கொண்டுவிட்டதாக, ஒரு தஸ்தாவேசில் கையெழுத்து வைத்தார். அப்படிக் கையெழுத்து வைத்ததும், தேகதுன்பத்துக்குப் பயந்து, கடவுள் கட்டளைக்கு விரோதமாய் நடந்தோமே யென்று மனவேதனையுண்டாயிற்று. உடனே அவர், தான் கையெழுத்து வைத்தது குற்றமென்றும், தான் முன் கைக்கொண்ட கொள்கைகளையே கைக்கொண்டிருப்பதாகவும் சொன்னார். இருவர்களுக்கும் விதித்த தண்டனை நிறைவேற்றப்பட்டது.

அப்படி நிறைவேற்றும்போது, பிசகாய் கையெழுத்துவைத்தவர், கையெழுத்துவைத்த கையை, முதலில் தீயில் வாட்டினார். வாட்டும்போது, நாம் இருவரும் இன்று மரணம் அடைய

வில்லை, ஜீவவெளிச்சத்தைக் கொளுத்துகிறோம், இந்த வெளிச்சமானது எப்பொழுதும் பிரகாசிக்கும், இந்தப் பிரகாசம் எப்பொழுதும் அதிகப்பட்டுக்கொண்டே வரும் என்று சொன்னார். இவர்களுடைய தைரியத்தைப் பாருங்கள். தீயினால் உண்டான மரணவேதனையும், அவர்களுக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. கடவுள் அவர்களுக்கு எவ்வளவு தைரியத்தைக் கொடுத்தார் பாருங்கள். சாக்கிரட்டிஸ் (Socrates) என்னும் மகான், தன்னுடைய கொள்கைக்கு விரோதமாய்ப் பேச மறுத்து மரணதண்டனையை, வெகு சாந்தமாயும் அமைதியாயும் ஏற்றுக்கொண்டாரன்றோ? ஆன்ம வளர்ச்சி சம்பந்தமாய், பிரார்த்தித்த காலத்தில், மேல்குறித்த மகான்களுக்கு, மரணம் பெரிதல்லவென்று அதைச் சகித்துக்கொண்டு, தங்கள் மனச்சாட்சி தூண்டினபடியே நடக்கும்படியான தைரியத்தைக் கடவுள் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறாரல்லவா? எழுந்திருக்கச் சக்தியில்லாமல், பக்கவாத முதலிய கொடும்வியாதிகளினால், படுக்கையிலிருக்கும்பொழுது, அத்துன்பங்களைப் பெரிதாக நினையாமல், எத்தனையோ மகான்கள் கடவுளையே நாடி நின்றிருக்கின்றனர். இந்த உலக சம்பத்தையும் பொருளையும், செல்வாக்கையும், ஒரு சிறிதும் பாராட்டாமல், கடவுளையே நாடி நின்று, அவர் திருவுளக்கருத்தின்படியே, அனேக மகான்கள் நடந்துவந்திருக்கிறார்கள் என்பது

"கொள்ளேன் புரந்தரன்மால் அயன்வாழ்வு, குடிகெடினும்
நள்ளேன் உனதடியாரொடல்லால் நரகம் புகினும்
எள்ளேன் திருவருளாலேயிருக்கப் பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லால் எங்கள் உத்தமனே"

என்னும் மாணிக்கவாசகசுவாமிகள் வாக்கினால் வெளியாகும். விரிக்கில் பெருகும். நமது மனம்போனபோக்கில் போகாமல், நமது ஐம்பொறிகளையும் அடக்கி, நம்முடைய அகங்காரம், கோபம், முதலிய துர்க்குணங்களை ஒழித்து, பிற உயிரைத் தன்னுயிர்போல நேசித்து, ஞானக்கண் வாயிலாக நமக்குப் புலப்ப

டும் பரம்பொருளை நாடிநின்று, அறிவு, மனச்சாட்சி, அன்பு இக்குணங்களின் வழியிலாக, கடவுள் நமக்குணர்த்தியவாறு நாம் நடந்து, நமது ஆன்மாவை அபிவிர்த்திசெய்துகொள்ளவேண்டுமென்ற அவாவுகொண்டு, அவ்விருத்திக்கு ஏற்ற காரியங்களிலேயே கண்ணாயிருந்து, அப்பேர்ப்பட்ட காரியங்கள் விஷயமாகக், கடவுளுக்கு நாம் விண்ணப்பஞ்செய்துகொண்டால், அவ்விண்ணப்பங்களைத் தடையின்றிக் கடவுள் நிறைவேற்றுவார் என்பதில் சந்தேகமேயில்லை.

இதுவரை நான் சொன்னதைச் சுருக்கிச்சொல்லுகிறேன். உபாசனை என்பது, கடவுளை நாடிநின்று, அவரிடத்தில் பேசுவது. கடவுளிடத்தில் நாம் பேசுதல் கூடும். உபாசனையென்பது ஸ்தோத்திரம்—வந்தனம்—சிந்தனை—விண்ணப்பம் என நான்கு அங்கங்களை உடையது. இவ்விதம், நாம், கடவுளுக்கு ஸ்தோத்திரமும், வந்தனமும் செய்து, சிந்தித்து, விண்ணப்பம் செய்துகொண்டால்; நம் விண்ணப்பத்தை, இயற்கைச் சட்டங்களுக்கு மாறுபடாமல், அவர் நிறைவேற்றுதல்கூடும். நாம் கேளாமல் கொடுக்கும் நன்மைகள், சிலசமயம், நமது ஆன்ம வளர்ச்சிக்குப் பயன்படாதாகையால், சில விஷயங்களில், நமது விண்ணப்பத்தை முன்னிட்டே நமக்குவேண்டிய நன்மைகளைச் செய்கிறார். நாம் விண்ணப்பம்செய்துகொள்வதில், தேகசம்மந்தமாயும், உலகப்பொருள் சம்பந்தமாயும், செய்கிற விண்ணப்பங்களில், சில விண்ணப்பங்கள், நம்முடைய ஆன்மவளர்ச்சிக்குக் கெடுதலாயிருக்கக்கூடியதாயிருப்பதால், அவ்வித விண்ணப்பங்களை, நிறைவேற்றுகிறதில்லை. ஆதலின், இப்பேர்ப்பட்ட விஷயங்களில், கடவுள் எப்படிச்செய்தாலும் சரிதான் என்று நினைத்து, அவருடைய திருவுளக்கருத்தின்படி,நடக்கும்படியான தைரியத்துடன்,அவ்விதவிண்ணப்பங்களைச் செய்துகொள்ளுதல் வேண்டும். ஆன்ம வளர்ச்சிக்கு ஏற்ற விண்ணப்பங்களையெல்லாம் தடைசிறிதுமின்றியெப்பொழுதும்நிறைவேற்றுவார். ஆதலின், நாம்கடவுளை ஸ்தோத்திரம்செய்து, அவருக்கு வந்தனம் செய்து, அவர் குணங்களைப்பற்றி சிந்தித்து; ஆன்ம

வளர்ச்சியிலேயே கண்ணுயிருந்து, இவ்வுலக சம்பந்தமான நிலை யற்ற காரியங்கள் சம்பந்தப்பட்டமட்டில், அவருடைய திருவுளக் கருத்தின்படி நடக்கும்படியான தைரியத்தைக் கொடுக்கவேண்டுமென்று பிரார்த்தித்து. அந் தைரியங்கொண்டு, ஆன்ம வளர்ச்சிக்கேற்ற விண்ணப்பங்களையே, கடவுளிடத்தில் செய்து, நமது ஆன்மாவை அபிவிர்த்திசெய்வதிலேயே, நாம் முயல வேண்டும். அவ்விதம் முயற்சிசெய்யும்படிக்கும், அவ்வித முயற்சிகள் பயன்படுமாறும், எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!